# நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்!

அதற்கு இயேசு: தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம்
வீட்டையாவது, பெற்றோரையாவது, சகோதரரையாவது,
மனைவியையாவது, பிள்ளைகளையாவது, விட்டுவிட்ட எவனும்,
இம்மையில் அதிகமானவைகளையும், மறுமையிலே
நித்திய ஜீவனையும் அடையாமற்போவதில்லை என்று
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.
(லூக்கா 18:29,30)

இம்மையிலே நிறைவான ஆசீர்வாதங்களையும்,
மறுமையிலே நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்ள
வேதாகமம் காட்டும் மாதிரி அடிச்சுவடுகள் ....

விஜயகுமார் சாமுவேல்

# Nee Aasirvathamai Iruppai
*Tamil*

First Edition : January 2021
Total Copies :

© All Rights Reserved

**Vijayakumar Samuel**
**Living Water Revival Ministries**
Email : livingwaterrevivalministry@gmail.com
livingwatersam@gmail.com
Website : www.livingwaterrevivalministry.org
Mobile : 94443 13658

# பொருளடக்கம்

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கர்த்தர் உன்னைத் தெரிந்துகொண்டார்! .......... (புதிய ஆரம்பம்) | 7 |
| 2. | கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்! ............ (தொடரும் வெளிப்பாடு) | 17 |
| 3. | உன்னை முத்திரை மோதிரமாக வைப்பார்! ...... (ஆகாய் தரிசனம்) | 31 |
| 4. | நீ சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவாய்! .......... (ஏசாயா 35) | 41 |
| 5. | கர்த்தர் சமாதானம் அருளி ஆசீர்வதிப்பார்! ........ (ஷாலோம்) | 53 |
| 6. | நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்! ................ (சுகமளிக்கும் தேவன்) | 63 |
| 7. | கர்த்தரை நம்பி நன்மைசெய்! ........................ (எசேக்கியா ராஜா) | 75 |
| 8. | ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்! ...................... (யோசபாத் ராஜா) | 87 |
| 9. | இழந்து போனதைத் தேடி இரட்சிக்கும் இயேசு! ... (கர்த்தருடைய சிட்சை) | 97 |
| 10. | ஆலோசனையில் ஆச்சரியமானவர்! ............. (கர்த்தருடைய வழிநடத்துதல்) | 107 |
| 11. | என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்து! ............. (பவுல் அப்போஸ்தலன்) | 121 |
| 12. | இயேசுவின் பிறப்பில் வெளிப்பட்ட இரகசியங்கள்! (வானம் திறக்கப்படும்) | 137 |

பக்கம்

13. கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உன் பெலன்! 151

(பண்டிகைகள்)

14. தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது! ....... 165

(உவமைகள்)

15. எழும்பிப் பிரகாசி; உன் ஒளிவந்தது! .............. 185

(செயல்பட அழைப்பு)

16. கனத்துக்குரிய பாத்திரம்! ................................ 201

(நற்கிரியைக்கு ஆயத்தம்)

17. நான் உம்மை மகிமைப்படுத்துவேன்! ............. 215

(யோவான் 17)

18. கர்த்தர் உன் வீட்டைக் கட்டுவார்! .................... 233

(சங்கீதம் 127)

# முகவுரை

சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும்
ஆட்டுக்குட்டியானவருக்கும்
ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும்
சதா காலங்களிலும் உண்டாவதாக. ஆமென்

கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்;
இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்.
இந்த ஆசீர்வாத செய்தி தொகுப்பிற்கு துவக்கமும் நிறைவும்
காரணருமான பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம் ஸ்தோத்தரிக்கிறோம்.

மனமுவந்து இப்பணியின் பலநிலைகளிலும் உற்சாகப்படுத்தி
உதவிசெய்த கிறிஸ்துவுக்குள்ளான சகோதர, சகோதரிகளுக்கு மனமார்ந்த நன்றி.
பிரியமானவர்களே, நீங்கள் நமது நாமத்திற்காகக் காண்பித்த
அன்புள்ள பிரயாசத்தை மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே!

உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய
நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு
உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர்
பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்.

நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். அல்லேலூயா!

# 1. கர்த்தர் உன்னைத் தெரிந்துகொண்டார் !

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மைஆசீர்வதித்திருக்கிறார். தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே...... தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மைஇயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்கு சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்.(எபேசியர் 1: 3,4,6). அல்லேலூயா!

## கர்த்தருடைய தெரிந்துகொள்ளுதல்

இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்ட தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், பாவத்தைக் குறித்து பரிசுத்த ஆவியானவரால் கண்டித்து உணர்த்தப் படுகிறோம். நம்முடைய பாவங்களை நாம் உணர்ந்து அறிக்கையிடும்போது, பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு இயேசுகிறிஸ்து உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது.

இவ்விதமாகப் பாவத்திலிருந்தும், வாழ்வின் அந்தகாரத் திலிருந்தும் மீட்கப்பட்ட தேவ ஜனமாகிய நம்மைக் குறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு: நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான

ஜனமாயும் இருக்கிறீர்கள் (1 பேதுரு 2:9) என்று குறிப்பிடுகிறார். நாம் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி, ராஜரீகமான ஆசாரியக்கூட்டம், பரிசுத்த ஜாதி, அவருக்குச் சொந்தமான ஜனம் எனச் சாட்சியாக அறியப்பட்டிருக்கிறோம். அல்லேலூயா!

நம்முடைய தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் ஜனத்தின்மேல் அன்புகூர்ந்ததினாலும், அவர்களுக்கு அவர் இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்காகவும், அவர்களைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார்; அடிமைத் தனத்தினின்றும் மீட்டுக்கொண்டார். தேவனுடைய தாசனாகிய மோசே இஸ்ரவேலரை நோக்கி: நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார் (உபாகமம் 7:6) என்று சொன்னார்.

## விசுவாசமார்க்கத்தார் கர்த்தருக்குச் சொந்தமான ஜனம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, விசுவாச மார்க்கத்தார் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக (கலாத்தியர் 3:7) என்று பவுல் எழுதியிருக்கிறார். மேலும், தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16) என்ற உண்மையையும் நாம் அறிவோம்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிற நம் ஒவ்வொருவரிலும் தேவன் அன்புகூருகிறார். விசுவாச மார்க்கத்தாராகிய நாமும் ஆபிரகாமின் பிள்ளைகள். நாமும் கர்த்தர் ஆபிரகாமுக்கு இட்ட ஆணைக்கு உட்பட்டு, கர்த்தருக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்த ஜனமாயிருக்கிறோம். கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் வெட்கப்பட்டுப் போவதில்லை. அல்லேலூயா!

## நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்

என் சிநேகிதனான ஆபிரகாமின் சந்ததியே, நீ என் தாசன், நான் உன்னைத் தெரிந்துகொண்டேன் (ஏசாயா 41:9) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். மேலும் கர்த்தர்: பயப்படாதே,

உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன், நீ என்னுடையவன் (ஏசாயா 43:1) என்றும்; உன்னைப் பெயர் சொல்லி அழைக்கிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நானே (ஏசாயா 45:3) என்றும் சொல்லியிருக்கிறார்.

ஆபிரகாம், மோசே, சாமுவேல், பேதுரு, பவுல் போன்ற அநேக தேவமனிதர்களைக் கர்த்தர் தமக்கெனத் தெரிந்து கொண்டார் என வேதாகமத்தில் வாசிக்கிறோம். இதைப்போன்றே, யோசேப்பு, யோசுவா, தாவீது, தானியேல், ஸ்தேவான், தீமோத்தேயு போன்ற வாலிபர்களையும் கர்த்தர் தமக்கெனத் தெரிந்துகொண்டார் என்பதாகக் காண்கிறோம். இப்பேர்ப்பட்ட தேவ மனிதர்களின் சிறப்பு, தனித்தன்மைஎன்ன? யாரைக் கர்த்தர் தெரிந்துகொள்ளுகிறார்? எப்படித் தெரிந்துகொள்ளுகிறார்? எதற்காகத் தெரிந்துகொள்ளுகிறார்? போன்ற கேள்விகளுக்கான பதில்களை, வேதாகமத்தின் அடிப்படையில், பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு ஆராய்ந்து அறிவது, இக்காலத்தில், கிறிஸ்துவின் வெகுசமீபமான வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நமக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்பது நிச்சயம்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, அழைக்கப் பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சில (மத்தேயு 20:16) என்று இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார். அந்தச் சிலரில் ஒருவராக நாமும் செயல்படுவதற்கு, காணப்படுவதற்கு,நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் ஆராய்ந்தறிந்து அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.

## யாரைக் கர்த்தர் தெரிந்துகொள்ளுகிறார்

பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்து கொண்டாரென்று அறியுங்கள் (சங்கீதம் 4:3). இந்த வசனத்தில் தாவீது, தன்னையே பக்தியுள்ளவன் என்று குறிப்பிடுகிறதைப் பார்க்கிறோம். தாவீதைக் கர்த்தர் தமது இருதயத்திற்கேற்றவனாகக் கண்டார் (1 சாமுவேல் 13:14, அப். 13:22); தாவீது தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்தான்; கர்த்தர் அவனோடேகூட இருந்தார் (1 சாமுவேல் 18:14).

திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது (யாக்கோபு 1:27) என்று எழுதப்பட்டிருக்கிறது. உலகத்தின் இச்சைகளுக்கும் பாவங்களுக்கும் உட்படாது, எளியவர்களையும் திக்கற்றவர்களையும் விசாரிக்கிற தன்மை யுடையவர்களைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்துகொள்ளுகிறார்.

தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது (யாக்கோபு 4:7). பலியை அல்ல, இரக்கத்தையும், தகனபலிகளைப் பார்க்கிலும், தேவனை அறிகிற அறிவையும் விரும்புகிறேன் (ஓசியா 6:6) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் (1 சாமுவேல் 16:7) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். இருதயத்தில் தாழ்மையுள்ளவர்களையும், கர்த்தரை அறிய வாஞ்சிப்பவர்களையும், கர்த்தருக்கென வைராக்கியமாய்ச் செயல்பட விரும்புகிறவர்களையும் கர்த்தர் அறிந்து, தமக்கெனத் தெரிந்துகொள்ளுகிறார்.

வெளித்தோற்றத்தையும், செல்வாக்கையும், பலத்தையும், ஞானத்தையும், திறமைகளையும் காணாது தாழ்மையையும், தேவனை அறிகிற வாஞ்சையையும் வைராக்கியத்தையும் அர்ப்பணிப்பையும் கர்த்தர் காண்கிறார். ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தின் இழிவான வைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார் (1 கொரிந்தியர் 1: 27,28).

தன்னுடைய இளம்பிராயத்திலேயே மெய்யான தேவனை அறிந்துகொள்ள வாஞ்சித்து, வைராக்கியமாகக் காத்திருந்த சீக்கிய வாலிபன் சுந்தர்சிங் இயேசுவே தெய்வம் என்று அறிந்து

ஏற்றுக்கொண்டதை நாம் அறிவோம். பின்னர், கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமாக, சாது சுந்தர்சிங் நேபாளத்திலும் இந்தியாவிலும் இயேசுகிறிஸ்துவைத் திட்டமும் தெளிவுமாக அறிவித்து வந்தார்.

இவரைப்போன்றே, கடவுள் இல்லை என்ற நம்பிக்கையில் வைராக்கியமாக வாழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்த சகோதரி ஒருவர் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார். அந்நாட்களில் இதைப்பற்றி மேலும் அறிய வாஞ்சித்து, அவர்கள் நாள்தோறும் மாலை வேளையில் வானத்தை நோக்கி, உண்மையான தெய்வம் இருந்தால், எனக்கு அவர் தம்மைவெளிப்படுத்தவேண்டும் என வேண்டுவாராம். ஒருநாள் இவ்விதமாக வேண்டியபின், தன்னுடைய விடுதியின் அறையிலிருந்தபோது, இயேசு ஜீவனுள்ள தேவனாகத் தம்மைஅவர்களுக்கு வெளிப்படுத்தினாராம். சில மாதங்கள் வேலூர் பகுதியில் ஆசிரியையாகப் பணியாற்றிய சகோதரி கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டுப் பின்னர் வட இந்தியாவிற்கு மிஷனரியாகச் சென்றார். அல்லேலூயா!

## கர்த்தர் எப்படித் தெரிந்துகொள்ளுகிறார்

தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ, அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்; எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியும் இருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியும் இருக்கிறார் (ரோமர் 8:29,30) என்று பவுல் எழுதியிருக்கிறார்.

முன்னறியப்பட்டவர், முன்குறிக்கப்பட்டுக் கர்த்தரால் அழைப்பைப் பெறுகிறார். அழைப்பை ஏற்றுக்கொண்டு தன்னை அர்ப்பணிப்பதும், அழைப்பை நிராகரிப்பதும் அவரவருடைய விருப்பத்திற்குட்பட்டிருக்கிறது. அழைப்பை ஏற்று அர்ப்பணிக்கையில் நீதிமான்களாக்கி மகிமைப்படுத்தப்படுகிறார். இங்கு முன்னறிதல் என்பது, கர்த்தர் உள்ளத்தை ஆராய்ந்தறிந்து நமது வாஞ்சையையும் வைராக்கியத்தையும் உண்மையான அர்ப்பணிப்பையும் கண்டறிவதைக் குறிக்கிறது.

இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார் (ரோமர் 8:27). மனுஷன் முகத்தைப் பார்ப்பான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார். அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை (எபிரெயர் 4:13). கர்த்தராகிய நானே ஒவ்வொருவருக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன் (எரேமியா 17:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மேலும், அழைக்கப்பட்டவர்கள் அநேகர்; தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர் (மத்தேயு 22:14) என்று இயேசு சொல்லியிருக்கிறார். இதனிமித்தமே அப்போஸ்தலனாகிய பேதுரு: சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள் (2 பேதுரு 1:10) என ஆலோசனை அருளியிருக்கிறார்.

## உபத்திரவத்தின் குகையிலே தெரிந்துகொண்டேன்

இதோ, உன்னைப் புடமிட்டேன்; ஆனாலும் வெள்ளியைப் போலல்ல, உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்துகொண்டேன் (ஏசாயா 48:10) என்று கர்த்தர் சொல்லுகிறார். சங்கீதக்காரனும்: நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்ளுகிறேன் (சங்கீதம் 119:71) எனச் சாட்சியாக எழுதி வைத்திருக்கிறார். நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று பவுல் சீஷருடைய மனதைத் திடப்படுத்தி விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படி புத்திசொன்னார் (அப்போஸ்தலர் 14:22).

தமஸ்கு பாதையில் சவுலுக்குக் கர்த்தர் இடைப்பட்ட சம்பவத்தில், அனனியா என்னும் சீஷனுக்குக் கர்த்தருடைய வார்த்தை வெளிப்பட்டது. அப்பொழுது அனனியா, உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் சவுல் செய்தானென்றும், தமஸ்குவிலும் இயேசுவின் நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரையும் கட்டும்படி அதிகாரம் பெற்றிருக்கிறான் என்றும் சொன்னான். அதற்குக் கர்த்தர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல்

புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார் (அப்போஸ்தலர் 9:15,16).

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் (2 தீமோத்தேயு 3:12) என்ற வசனத்தின்படி, பாடுகள், துன்பங்கள், உபத்திரவங்கள், நிந்தைகள், பரியாசங்கள் போன்றவைகளின் வழியாகவும், நாம் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்படுகிறோம்.

கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட தேவனுடைய பிள்ளைகளுக்கான அடிப்படையான போதகத்தின் முக்கிய மூன்று அம்சங்கள்: தேவனோடு உள்ள அன்பு, சக மனிதரோடு உள்ள அன்பு; பாடுகள் உபத்திரவங்களும், நிந்தைகள் பரியாசங்களும் என சகரியாஸ் என்ற தேவ மனிதர் குறிப்பிடுகிறார். கர்த்தர் நம்முடைய உள்ளத்தை ஆராய்ந்தறிந்து, அவர் மீது நாம் வைத்திருக்கும் அன்பையும், அர்ப்பணிப்பையும், வாஞ்சையையும் வைராக்கியத்தையும் கண்டறிகிறார். வாழ்வின் பாடுகள் உபத்திரவங்கள், நிந்தைகள், பரியாசங்கள் மத்தியிலும் நம்முடைய விசுவாசத்தையும் அர்ப்பணிப்பையும் சோதித்தறிந்து கர்த்தர் நம்மைத் தெரிந்துகொள்ளுகிறார். அல்லேலூயா!

## கர்த்தர் நம்மையேதற்காகத் தெரிந்துகொள்ளுகிறார்?

நம்முடைய தேவனாகிய கர்த்தர், தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப்போல நாம் மாற்றப்படும்படி நம்மைத் தெரிந்துகொள்ளுகிறார். தேவனாகிய கர்த்தர் தமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு நம்மைமுன் குறித்திருக்கிறார் (ரோமர் 8:29). மேலும் பவுல், கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களில் இருக்கக்கடவது (பிலிப்பியர் 2:5) என்றும் எழுதியிருக்கிறார்.

தேவன் இயேசுவுடனேகூட இருந்தபடியினாலே, இயேசு நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார் (அப்போஸ்தலர் 10:38). தேவனுடைய பிள்ளைகளாகிய நாமும்,

இயேசுவைப்போல மாற்றப்படவும், நன்மைசெய்கிறவர்களாகவும், இயேசுவைப்போன்று, பரிசுத்த பிதாவின் சித்தத்தைச் செய்து நிறைவேற்றவும் தேவன் நம்மைத் தெரிந்துகொள்ளுகிறார்.

## தம்மோடிருக்க நம்மைத் தெரிந்துகொள்ளுகிறார்

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மைப் போன்ற மனிதராக இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில், அவர் பன்னிரண்டுபேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம்பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும், வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கவும் அவர்களை ஏற்படுத்தினார் (மாற்கு 3:14,15).

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, கர்த்தர் நம்மைத் தெரிந்துகொள்ளுகிறதின் நோக்கம், நாம் இயேசுவோடிருக்க வேண்டும் என்பதே. உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையா யிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார் (நீதி. 3:5,6) என்று எழுதப்பட்டிருக்கிறது.

அடுத்து, இயேசு நம்மைஅனுப்பும் இடங்களுக்கெல்லாம் செல்லவும், சென்று வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படியாகவும், கர்த்தர் நம்மைத் தெரிந்துகொண்டு அதிகாரங் கொடுக்கிறார். இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது (லூக்கா 10:19) என்று இயேசு சொல்லியிருக்கிறார்.

மேலும், உன்னை நான் அந்நாளிலே சேர்த்துக்கொண்டு, உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் உன்னைத் தெரிந்துகொண்டேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் (ஆகாய் 2:23). இங்கு முத்திரை மோதிரம் என்பது கர்த்தர் நம்மைத் தெரிந்துகொண்டு நமக்கு அளிக்கும் அதிகாரத்தையே குறிக்கிறது.

நாம் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடு இருந்து, அவர் அனுப்பும் இடங்களுக்குச் சென்று, கர்த்தருடைய

வார்த்தையைப் பகிர்ந்தளித்து, நம் சுயபுத்தியின்மேல் சாயாமல், அவர் விரும்புகிறதைச் செய்யவே கர்த்தர் நம்மைத் தெரிந்துகொள்ளுகிறார். யோனாவின் சரித்திரம் மற்றும் நற்செய்தி பயணத்தை நாம் அறிவோம். திசைமாறிச் சென்ற வேளையிலும், கர்த்தர் சொன்ன நினிவே பட்டணத்திற்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டார். அங்குச் சென்று கர்த்தருடைய வார்த்தையை எச்சரிப்பாக வெளிப்படுத்தினபோது, நினிவே மக்கள் மனந்திரும்பி அழிவிலிருந்து தப்பினார்கள். அல்லேலூயா!

## கனிகொடுக்கும்படி கர்த்தர் தெரிந்துகொள்ளுகிறார்

நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன் (யோவான் 15:16) என்று இயேசு சொன்னார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நம்முடைய வாழ்வில் கனிகொடுக்கும்படியாகவும், கனி எல்லா நிலையிலும் காலங்களிலும் நிலைத்திருக்கும்படியாகவும், இயேசுவே நம்மைத் தெரிந்துகொண்டிருக்கிறார். மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள் (மத்தேயு 3:8) என்றும்; நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் (மத்தேயு 3:10) என்றும் எச்சரிக்கப்படுகிறோம். அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் போன்ற கனி நிறைந்த வாழ்வு வாழ தெரிந்துகொள்ளப்படுகிறோம். மேலும் அது வாழ்வின் நெருக்கங்களிலும் தாழ்ச்சியிலுங்கூட குறைவுபடாமல் நிறைவோடிருக்கவே கர்த்தர் நம்மைஏற்படுத்தியிருக்கிறார்.

இதையே எரேமியா தீர்க்கதரிசி: கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரையே தன் நம்பிக்கையாகக்கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத் தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல்

கனிகொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான் (எரேமியா 17:7,8) என்று எழுதிவைத்திருக்கிறார்.

### நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே, சகோதரியே, இயேசுவைச் சொந்த இரட்சகராக, தெய்வமாக, ஏற்றுக்கொண்டு பாவமன்னிப்பின் நிச்சயத்தோடு வாழும் உன்னையும் என்னையும் கர்த்தர் தெரிந்துகொண்டுள்ளார் என்பதை நீ அறிவாயா? உன் உள்ளத்தைக் காண்கிற கர்த்தர், உன்னை முன்னறிந்து, முன்குறித்து அழைத்துமிருக்கிறார்.

உன்னுடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிரு. இந்த எச்சரிப்பின் வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து, கர்த்தரின் சித்தத்தையே வாழ்வில் செய்ய உன்னை ஒப்புகொடுக்கக் கர்த்தர் அழைக்கிறார். அர்ப்பணிக்கின்ற உன்னைக் கர்த்தர் ஆசீர்வதிப்பார். அல்லேலூயா!

இந்தக் கடைசி நாட்களில் இயேசுவோடிருக்கவும்; தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்பட்டு, சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும், கர்த்தர் நம் ஒவ்வொருவருக்கும் கிருபை செய்வாராக. ஆமென்.

# 2. கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்!

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன், உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக (சங்கீதம் 143:10).

## கர்த்தருக்குப் பிரியமானவர்கள்

பிதாவாகிய தேவனுடன், நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம், தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு ஏற்படுகின்ற உறவின் நிறைவில் நாம் கர்த்தருக்குப் பிரியமானவர்கள் என்பதாக அறியப்படுகிறோம். வேதாகமத்தில் ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு போன்றோரும்; சாமுவேல், தாவீது, தானியேல் போன்றோரும்; இன்னும் அநேக தேவமனிதர்களும், அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும், பரிசுத்தவான்களும் கர்த்தருக்குப் பிரியமானவர் களாக இருந்தார்கள் என்பதாக எழுதப்பட்டிருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்றபோது, அவரோடேகூட நாங்கள் பரிசுத்த பர்வதத்தில் இருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக்கேட்டோம் (2 பேதுரு 1:17,18) என்று சாட்சியாக எழுதிவைத்திருக்கிறார்.

சாமுவேல் என்னும் பிள்ளையாண்டானோ, பெரியவனாக வளர்ந்து, கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்து கொண்டான் (1 சாமுவேல் 2:26) என்று எழுதப்பட்டிருக்கிறது. ராஜாவாகிய தாவீதும்: இப்போதும் இஸ்ரவேல் அனைத்தின்மேலும்

என்றைக்கும் ராஜாவாயிருக்க, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் என் தகப்பனுடைய வீட்டாரில் என்னைத் தெரிந்து கொண்டார்; அவர் யூதாவையும் யூதாவின் வம்சத்தில் என் தகப்பன் குடும்பத்தையும் தலைமையாகத் தெரிந்துகொண்டு, என்னை எல்லா இஸ்ரவேலின்மேலும் ராஜாவாக்க, என் தகப்பனுடைய குமாரருக்குள் என்மேல் பிரியம் வைத்தார் (1 நாளாகமம் 28:4) என்று அறிக்கையிட்டார்.

காபிரியேல் தூதனும் கர்த்தரால் அனுப்பப்பட்டு, தானியேல் தீர்க்கதரிசியை நோக்கி: நீ மிகவும் பிரியமானவன், ஆதலால், நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது. நான் அதை அறிவிக்கவந்தேன் (தானியேல் 9:23) என்றான்.

இப்படியாக, தேவனுடைய பிள்ளைகளாகிய நாமும் அநேக வேளைகளில், நம்மையும் கர்த்தருக்குப் பிரியமானவர்களாக வேதவசனங்களின் அடிப்படையில் அடையாளப்படுத்தி, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருகிறோம். மிகவும் நல்லது.

## 1. விசுவாசமுள்ளவர்கள் கர்த்தருக்குப் பிரியம்!

கர்த்தருக்குப் பிரியமானவர்கள் யார் என்பதை வேதாகமத்தின் அடிப்படையில் முதலாவது அறிந்து கொள்ளுவது அவசியமாகும். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் (எபிரெயர் 11:6) என்று எழுதப்பட்டிருக்கிறது. எனவே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாச முள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள்மேல் கர்த்தர் பிரியமுள்ளவராய் இருக்கிறார் என அறியலாம்.

இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர் களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார் (யோவான் 1:12). இந்த அதிகாரத்தைப் பிரயோகித்து தேவனுடைய பிள்ளைகளாக மாறும்படி ஒப்புக்கொடுக்கும்போது, ஓர் உன்னத உறவு ஸ்தாபிக்கப்படுகிறது.

இந்த உறவைத் தொடர்ந்து, பரிசுத்த ஆவியானவர் நம் வாழ்வில் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், நம்மைக் கண்டித்து உணர்த்துவார். கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்; தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர் களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே அவர் அவனை இவ்விதமாக சிட்சிக்கிறார் (எபிரெயர் 12:6,10).

### உ. மனம் புதிதாகிறவர்கள் தேவனுக்குப் பிரியம்!

மனம் புதிதாக்கப்பட்டவர்களாய் பரிசுத்தத்துடன் தங்களையே கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். பரிசுத்த ஆவியானவரால் கண்டித்து உணர்த்தப்பட்ட தேவனுடைய பிள்ளைகள், பாவங்களை உணர்ந்து மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி, பாவங்களை அறிக்கையிட்டால், பாவங்களை மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி சுத்திகரிப்பதற்கு தேவன் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.

தேவனுக்குப் பிரியமானவர்களாகும்படி அவரை விசுவாசித்து ஏற்றுக்கொண்டுள்ள நாம், நம்மையே பரிசுத்தமானதும், தேவனுக்குப் பிரியமுமானதுமான ஜீவபலியாக அர்ப்பணிக்க அழைப்பைப் பெற்றிருக்கிறோம். அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:1,2) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த அர்ப்பணிப்பால் உண்டாகும் உறவின் நிறைவு,

தேவனுடைய சித்தத்தைப் பகுத்தறிந்து, தொடர்ந்து கர்த்தருக்குப் பிரியமானவைகளையே வாழ்வில் செய்ய உதவுகிறது.

இதையே அப்போஸ்தலனாகிய பவுல்: இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின (2 கொரிந்தியர் 5:17) என்று எழுதிவைத்திருக்கிறார். ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார் (எபேசியர் 5:14). கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்பட்டிருந்தவர்கள், உணர்வடைந்து உயிர்ப்பிக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு, மறுரூபப்பட இங்கு ஆலோசனை அருளப்படுகிறது.

ஆகவே, மனம் புதிதாக்கப்பட்டவர்களாய் பரிசுத்தத்துடன் கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார் என்பதாக அறிகிறோம்.

## 3. வேதத்தில் பிரியமானவன் பாக்கியவான்!

விசுவாசித்து, கர்த்தருக்கென்று தங்களை அர்ப்பணித்து தேவசித்தத்தை அறிந்து செயல்பட வாஞ்சிப்பவர்களைத் தொடர்ந்து, கர்த்தருடைய வேதத்தில், கற்பனைகள் கட்டளைகளில், பிரியமாயிருந்து, பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுகிறவன்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார் என அறியலாம். மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரேமியா 9:24).

கர்த்தருக்குப் பிரியமானவர்களாய், அவருக்குப் பிரியமானதைச் செய்ய, கர்த்தருடைய வசனங்களின் மூலம், பரிசுத்த ஆவியானவர் நம்மைப் போதித்து வழிநடத்துகிறார். என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து,

நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் (யோவான் 14:26) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக (சங்கீதம் 143:10) என்றும்; உமது கற்பனைகளின் பாதையில் என்னை நடத்தும்; நான் அதில் பிரியமாயிருக்கிறேன் (சங்கீதம் 119:35) என்றும்; அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் (சங்கீதம் 112:1) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

வேதாகமத்தில் சங்கீதங்களின் புஸ்தகம், வேதத்தை நேசிக்கிற தேவனுடைய பிள்ளைகளுக்கு ஒரு பெரிய பொக்கிஷமாக இருக்கிறது. உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம் (சங்கீதம் 119:97) என்றும்; வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன் (சங்கீதம் 119:113) என்றும் சங்கீதக்காரனாகிய தாவீது எழுதிவைத்திருக்கிறார்.

மேலும் சங்கீதங்களைப் பிற்காலத்தில் தொகுத்து வரிசைப்படுத்திய வேதபாரகனாகிய எஸ்றா: கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் (சங்கீதம் 1:2,3) என்று சாட்சியிடுகிறார்.

## 4. காத்திருக்கிறவர்கள் கர்த்தருக்குப் பிரியம்!

அடுத்த நிலையில், கர்த்தருக்கென காத்திருப்பவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதையே சங்கீதக்காரன்: தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார் (சங்கீதம் 147:11) என எழுதியிருக்கிறார்.

இது ஆவிக்குரிய வாழ்வில், மேலான ஒரு பாக்கிய நிலையாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள். வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள் (ஏசாயா 40:30,31) என்று எழுதப் பட்டிருக்கிறது.

இதற்கு முன்னர் தியானித்த மூன்று நிலைகளும், விசுவாசம் மனந்திரும்புதல் வேதவாசிப்பு என்பவை, கர்த்தருக்குப் பிரியமானவர்களாய் நித்தியராஜ்யத்தைச் சுதந்தரிக்கப்போதுமானதாக இருக்கலாம். ஆனால் கர்த்தருக்குக் காத்திருத்தல் என்பது, உன்னதமான தேவமனிதர்களின் தன்மையாகவும், நம்பிக்கைக்குரிய நெருங்கிய சீஷர்களிடம், அவரை சேவிக்கிறவர்களிடம், கர்த்தர் எதிர்பார்க்கும் முக்கியமான குணாதிசயமாகவும் இருக்கிறது.

## ௫. கர்த்தரைச் சேவிப்போர் அவருக்குப் பிரியர்!

கர்த்தரைச் சேவிக்கிறவர்கள்மேல், கர்த்தருக்கு ஊழியஞ்செய்கிறவர்கள்மேல், கர்த்தர் பிரியம் வைக்கிறார். தேசத்திலுள்ள அனைவரும் என்னைச் சேவிப்பார்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; அங்கே அவர்கள்மேல் பிரியம் வைப்பேன் (எசேக்கியேல் 20:40). நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், தமக்குச் சித்தமானவர்களைத் தம்மிடத்தில் வரவழைத்தார் என எழுதப்பட்டிருக்கிறது. பின்னர் அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம்பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும், வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர் களாயிருக்கவும், அவர்களை ஏற்படுத்தினார் (மாற்கு 3:14,15)

கர்த்தருடைய பிரசன்னத்தில் அனுதினமும் காத்திருந்து அவர் விரும்புகிறதைச் செய்யும் கூட்டத்தாரே இவர்கள் ஆவர். என் குமாரரே, இப்பொழுது அசதியாயிராதேயுங்கள்; நீங்கள் கர்த்தருக்குப் பணிவிடை செய்யும்படி அவருக்கு முன்பாக

நிற்கவும், அவருக்கு ஊழியஞ்செய்கிறவர்களும் தூபங்காட்டு கிறவர்களுமாயிருக்கவும் உங்களை அவர் தெரிந்துகொண்டார் (2 நாளாகமம் 29:11) என்று எசேக்கியா ராஜா சொல்லியிருக்கிறார்.

ராஜாவின் ஆலோசனையின்படி அவர்கள், தங்கள் சகோதரரைக் கூடிவரச்செய்து, பரிசுத்தம்பண்ணிக்கொண்டு, கர்த்தருடைய வசனங்களுக்கொத்த ராஜாவினுடைய கற்பனையின்படியே கர்த்தருடைய ஆலயத்தைச் சுத்திகரிக்க வந்தார்கள் (2 நாளாகமம் 29:15) என்று எழுதப்பட்டிருக்கிறது.

## 6. எல்லாருக்காக ஜெபிப்பது தேவனுக்குப் பிரியம்!

கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மேல் பிரியம் வைக்கிறார் (சங்கீதம் 149:4) என்று எழுதப்பட்டிருக்கிறது. இதனிமித்தமே, அப்போஸ்தலனாகிய பவுல்: நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங் களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங் களையும் பண்ணவேண்டும். நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமா யிருக்கிறது (1 தீமோத்தேயு 2:1-3) என்று எழுதியிருக்கிறார்.

யோபு பக்தன் தன்னைக் குற்றப்படுத்தின தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப்பார்க்கிலும், இரண்டத்தனையாகக் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார். யார் யாருக்காக ஜெபம் பண்ணவேண்டும்? எப்படி, எதற்காக ஜெபம்பண்ணவேண்டும்? இவைகள் யாவற்றையும் கர்த்தர் பரிசுத்த ஆவியானவர் மூலம் நமக்குக் கற்றுத் தருகிறார்.

அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோமர் 8:26) என்று எழுதப்பட்டிருக்கிறது.

## தாவீது கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்தார்!

இஸ்ரவேல் அனைத்தின்மேலும் என்றைக்கும் ராஜாவாயிருக்க, தாவீதை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொண்டார். எல்லா இஸ்ரவேலின்மேலும் ராஜாவாக்க, தாவீதின்மேல் கர்த்தர் பிரியம் வைத்தார் (1 நாளாகமம் 28:4). ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவை களையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக்குறித்துச் சாட்சியுங் கொடுத்தார் (அப்போஸ்தலர் 13:22).

தாவீது தன் வாழ்நாளில் தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய வாஞ்சித்தார். என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன் (சங்கீதம் 40:8) என்றும்; உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக (சங்கீதம் 143:10) என்றும் விண்ணப்பித்துக் காத்திருந்தார்.

தாவீது தன் வாழ்வில், தேவனோடுள்ள உறவில், அவருக்குப் பிரியமானவராக நிலைத்திருப்பதைக் கர்த்தர் உறுதிசெய்வார் என விசுவாசித்து அறிக்கையிட்டார். நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார் (சங்கீதம் 37:23) என்று எழுதப்பட்டிருக்கிறது. மேலும், கர்த்தாவே, நீர் எனக்குத் துணைசெய்து என்னைத் தேற்றுகிறதை என் பகைஞர் கண்டு வெட்கப்படும்படிக்கு, எனக்கு அநுகூலமாக ஒரு அடையாளத்தைக் காண்பித்தருளும் (சங்கீதம் 86:17) எனவும் விண்ணப்பம் செய்தார்.

## நீயும் கர்த்தரைச் சேவிப்பாயா!

இந்தக் கடைசிக்காலத்தில், நித்தியராஜ்யத்தின் நிச்சயத்தோடுள்ள தேவனுடைய பிள்ளைகள், கர்த்தருக்குக் காத்திருந்து தேவனுடைய சித்தத்தை, அவர் முன்குறித்த எல்லைகளில், நேரத்தில், அவர் விரும்புகிற மக்களிடையே

செய்ய அழைக்கப்படுகிறார்கள். இதற்கென ஜாக்கிரதையாய் விழித்திருக்கவும் எச்சரிக்கப்படுகிறார்கள். கர்த்தருக்குப் பணிவிடைசெய்யும்படி அவருக்கு முன்பாக நிற்கவும், அவருடைய வார்த்தைக்குக் காத்திருக்கவும் ஆலோசனைப் பெற்றிருக்கிறோம். உலகத்துக்கு அல்ல, கர்த்தருக்கு ஊழியஞ்செய்கிறவர்களாக இருக்கவும், கர்த்தர் விரும்பும் காரியங்களுக்காக ஜெபம்பண்ணுகிறவர்களாய் இருக்கவும் கர்த்தர் நம்மைத் தெரிந்துகொண்டுள்ளார்.

தேவமனிதர் ஒருவரின் சாட்சி இந்த வசனத்தை உறுதிச்செய்கிறதாய் இருக்கிறது. பல வருடங்களாக அந்த ஊழியர் கர்த்தருக்குக் காத்திருக்கும்படியாக கர்த்தர் அவருடன் இடைப்பட்டும், அதற்கு அவர் கீழ்ப்படியாமல் இருந்தார். ஒருமுறை கர்த்தருடைய வார்த்தையைப் போதிக்கும்போது, அவர் பகிர்ந்தளித்த வார்த்தையே அவரை உருவக்குத்தியது. கர்த்தர் அவருடன் இடைப்பட்டார். கர்த்தருக்குப் பணிவிடை செய்யும்படி அவருக்கு முன்பாக நிற்க தன்னை அர்ப்பணித்தார். மிகவும் ஆச்சரியப்படும்படியாக அவர் கர்த்தரிடத்தில் பெற்ற முதல் கட்டளையே, அந்த ஜெபவேளையைக் குறித்ததாக இருந்தது. கர்த்தர் முன்குறிக்கப்பட்ட எல்லைகளிலே, தனிப்பட்ட தேவமனிதர்கள், குறிப்பிட்ட நேரங்களிலே காத்திருந்து, தேவனுடைய சித்தத்தின்படி ஜெபம்பண்ண விரும்புகிறார்.

இதைப்போன்ற மற்றொரு சாட்சியை ஒரு ஊழியர் தன்னுடைய செய்தியிலே பகிர்ந்துகொண்டார். வாரந்தோறும் எளிமையான சில சிறுபிள்ளைகளுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லி, அவர்களுக்கு அவர் ஜெபம்பண்ண கற்றுக்கொடுத்து வாந்தாராம். இவ்விதமாக சொல்லிக்கொடுத்து, அடுத்தமுறை அவர் அங்குச் சென்றபோது அவர்களுடைய ஜெப அனுபவங்களைச் சாட்சியாக சொல்லச் சொன்னாராம். ஒரு சிறுபிள்ளை: அண்ணா, நீங்கள் சொன்னதுபோல காலை 5 மணிக்கு எழும்பி ஜெபம்பண்ணுகிறேன். ஜெபத்தைத் துவங்கும்போதே இயேசு என்னருகில் வந்து, நான் ஜெபம் பண்ண குறிப்புகளைக் கொடுக்கிறார் என்றாளாம். என்னதொரு ஆச்சரியம்; ஆனால் உண்மை!

## தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய நாடுங்கள்!

கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள் (எபேசியர் 5:10) என்று பவுல் ஆலோசனையாக எழுதியுள்ளார். நம்முடைய வாழ்வு கிறிஸ்து இயேசுவுக்குள் நற்சாட்சியாக அமைய நம்மை அர்ப்பணிப்போம். விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக் கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற்போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப் படுவதற்கு முன்னமேசாட்சிபெற்றான் (எபிரெயர் 11:5) என்று எழுதப்பட்டிருக்கிறது.

தேவனுடைய பிள்ளைகள், கர்த்தருக்குப் பிரியமான வைகளைச் செய்யும்போது, தேவனாலே நற்சாட்சிபெற்று, கர்த்தருடைய இளைப்பாறுதலைப் பெற்று, அவரோடே சுகமாய் தங்கியிருப்பார்கள். தேவனுடைய மனுஷனாகிய மோசே, தான் மரணமடையுமுன்னே, இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதித்த ஆசீர்வாதத்தில் பென்யமீனைக்குறித்து: கர்த்தருக்குப் பிரியமானவன், அவரோடே சுகமாய்த் தங்கியிருப்பான்; அவனை எந்நாளும் அவர் காப்பாற்றி, அவன் எல்லைகளுக்குள்ளே வாசமாயிருப்பார் என்றான் (உபாகமம் 33:12).

யாக்கோபின் பிரியமானக் குமாரனாகிய பென்யமீனின் இந்த ஆசீர்வாதம், கர்த்தருக்குப் பிரியமாக வாழ அர்ப்பணித்திருக்கும் பிள்ளைகளுக்கும் உரியதாகும். இவ்வுலக வாழ்வின் நாட்களிலேயே, நித்திய வாழ்வின் உன்னத அனுபவங்கள் நிழலாட்டமாக, கர்த்தருக்குப் பிரியமானவர் களுக்குத் தந்தருளப்படும்.

## ராஜ்யத்தைக் கொடுப்பது தேவனுக்குப் பிரியம்!

இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்துகொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே, என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன்; அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார். அவர் கூக்குரலிடவுமாட்டார், தம்முடைய சத்தத்தை உயர்த்தவும் அதை வீதியிலே கேட்கப்பண்ணவுமாட்டார். அவர் நெரிந்த நாணலை

முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார் (ஏசாயா 42:1-3) என்று எழுதப்பட்டிருக்கிறது. இவை அந்நாட்களில் வரவிருந்த மேசியாவாம் இயேசுகிறிஸ்துவைக் குறித்ததான தீர்க்கதரிசன வார்த்தைகளாகும். இந்த வார்த்தைகளின் நிறைவேறுதல் மத்தேயு 12:18-20 வசனங்களில் பதிவுச் செய்யப்பட்டிருக்கிறது.

தேவனுக்குப் பிரியமானவர்களாக வாழ அர்ப்பணித்திருக்கும் தேவனுடைய பிள்ளைகளும், இந்த வசனங்களை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு தமதாக்கிக் கொள்ளலாம். தேவனாகிய கர்த்தர் நம்மேலும் தம்முடைய ஆவியை அமரப்பண்ணி, இயேசுகிறிஸ்துவை அறியாதோர்க்கு, அவருடைய அன்பை அறிவித்து வெளிப்படுத்தும் உன்னதப் பணியில் நம்மையும் இணைத்துக்கொள்வார்.

இவ்விதமாக ஓர் ஊழியர் எளிய கிராமசபையைப் பொறுப்பேற்றுக்கொள்ளும்படியாக கர்த்தரால் அனுப்பப்பட்ட போது கர்த்தர்: பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார் (லூக்கா 12:32) என்ற வார்த்தையின்மூலம் அந்த ஊழியத்தைக் குறித்த தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தினார். இந்த வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலை படிப்படியாக அனுதினமும் அந்தச் சிறு சபையில் கண்டுணர்ந்து சபையோரும் ஊழியரும் சாட்சிபகிர்ந்து வருகின்றார்கள்.

## பிரியமானவனுக்கு கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள்!

கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மேல் பிரியம் வைத்திருக்கிறார். இதனிமித்தம் அவர் தம்முடைய ஜனத்தைக் கைவிடாமல், நெருக்கத்திலிருந்து விசாலமான இடத்துக்கு கொண்டுவந்து தப்புவிக்கிறார். கர்த்தர் உங்களைத் தமக்கு ஜனமாக்கிக்கொள்ளப் பிரியமானபடியினால், கர்த்தர் தம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தம் தமது ஜனத்தைக் கைவிடமாட்டார் (1 சாமுவேல் 12:22) என்றும்; என்மேல் அவர் பிரியமாயிருந்தபடியால், விசாலமான இடத்திலே என்னைக் கொண்டுவந்து, என்னைத் தப்புவித்தார் (2 சாமுவேல் 22:20) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார் (சங்கீதம் 127:3). நித்திரை என்பது இங்கு சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் அருளப்படும் இளைப்பாறுதலைக் குறிக்கிறது. மேலும், அப்போஸ்தலனாகிய யோவான்; பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் (3 யோவான் 2) என்று வாழ்த்தி விண்ணப்பிக்கிறார்.

ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார் (நீதிமொழிகள் 16:7) என்று எழுதப்பட்டிருக்கிறது. காரணமில்லாமல் சத்துருக்களாவோர் அநேகர் இருக்கிற இந்நாட்களில், சத்துருக்களும் சமாதானமாகும்படி செய்வார் என்பது ஒரு மிகப்பெரிய ஆசீர்வாதமே.

கர்த்தருக்குப் பிரியமானவர்கள் வேண்டிக்கொள்ளும் போதே, கர்த்தர் பதிலளிக்கிறார். தானியேல் தீர்க்கதரிசி வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே, காபிரியேல் தூதன் தேவனால் அனுப்பப்பட்டு வந்து: நீ மிகவும் பிரியமானவன், ஆதலால் நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது. நான் அதை அறிவிக்கவந்தேன்; இப்போதும் சொல்லுகிற வார்த்தையை நீ கவனித்துக்கேட்டு தரிசனத்தை அறிந்துகொள் (தானியேல் 9:23) என்றான். உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார் (மத்தேயு 6:8) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

கர்த்தருக்குப் பிரியமானவன் அவருக்குச் சித்தமானதைப் பாபிலோனில் செய்வான் (ஏசாயா 48:14) என்று எழுதப் பட்டிருக்கிறது. இங்கு பாபிலோன் என்பது தேவனுடைய தன்மை களுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் முற்றிலும் மாறுபாடான சூழ்நிலையைக் குறிக்கிறது. இதையே, எரேமியா தீர்க்கதரிசியும்: நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப் பண்ணினார்களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ

என்னசெய்வாய்? (எரேமியா 12:5) என்கிறார். கர்த்தருக்குப் பிரியமானவன், யோர்தான் பிரவாகித்து வருகிறதும், குதிரைகளோடே சேர்ந்து ஓடுகிறதும்போன்ற கடினமான சூழ்நிலைகளிலும்,சோர்ந்து போகாமல் தேவனுடைய சித்தத்தைச் செய்வான்.

கர்த்தருக்குப் பிரியமானவர்களின் தேசம் பாழான கைவிடப்பட்ட நிலையிலிருந்து வாழ்க்கைப்படும். நீ இனிக் கைவிடப்பட்டவள் என்னப்படாமலும், உன் தேசம் இனிப் பாழான தேசமென்னப்படாமலும், நீ எப்சிபா என்றும், உன் தேசம் பியூலா என்றும் சொல்லப்படும்; கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்; உன் தேசம் வாழ்க்கைப்படும் (ஏசாயா 62:4) என்று எழுதப்பட்டிருக்கிறது.

**பிரியமான சகோதரரே மோசம் போகாதிருங்கள்!**

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்துவின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள்மேல் கர்த்தர் பிரியமுள்ளவராய் இருக்கிறார். மனம் புதிதாக்கப்பட்டவர்களாய் பரிசுத்தத்துடன் தாங்களைக் கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். கர்த்தருடைய வசனத்தில் பிரியமாயிருந்து, பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுகிறவன்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். இந்த மூன்று நிலைகளும், விசுவாசம் மனந்திரும்புதல் வேதவாசிப்பு என்பவை, கர்த்தருக்குப் பிரியமானவர்களாய் நித்திய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க அவசியமாக இருக்கிறது.

பிரியமான சகோதரரே, மோசம்போகாதிருங்கள். ஒருபுறம் பாவமன்னிப்பின் நிச்சயத்தோடு பரிசுத்தத்துடன் கர்த்தருக்கென்று வாழத் தங்களை அர்ப்பணிக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார் என்பது உண்மை. மறுபுறம், இன்னும் இரட்சிக்கப்படாமல், நித்தியராஜ்யத்தைச் சுதந்தரிப்போம் என்கிற நிச்சயம் இல்லாமல் இருப்பவர்கள், சீக்கிரமாய் வரவிருக்கும் இயேசுகிறிஸ்துவின் வருகையில் கைவிடப்படுவார்கள் என்பதும் யதார்த்தமாயிருக்கிறது.

இந்தச் செய்தியை, வாசிக்கிற நீங்கள் ஒருவேளை உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டதின் நிச்சயம் இல்லாமல் இருப்பீர்களானால், இன்றே மனந்திரும்பி சுவிசேஷத்தில் நம்பிக்கை வைக்க, இயேசுகிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள அழைக்கப்படுகிறீர்கள்.

விசுவாசம் மனந்திரும்புதல் வேதவாசிப்பு போன்ற வற்றிற்கு மேலான அடுத்த நிலை, கர்த்தரோடு இன்னும் நெருங்கி ஜீவித்து, தாவீதைப்போன்று தேவனாலே நற்சாட்சி பெறுவதற்கு ஏதுவாக அமைந்துள்ள நிலை என்பதாகத் தோன்றுகிறது. கர்த்தருக்கு காத்திருத்தல், கர்த்தருக்கு ஊழியம் செய்தல், கர்த்தர் உணர்த்தும் மற்றவர்களுக்காக ஜெபம்பண்ணுவது போன்றவை இதில் அடங்கும். இவை உன்னதமான தேவமனிதர்களின் தன்மையாகவும், நம்பிக்கைக்குரிய நெருங்கிய சீஷர்களிடம், கர்த்தர் எதிர்பார்க்கும் முக்கியமான குணாதிசயங்களாகவும் இருக்கின்றன.

பிரியமானவர்களே, தேவன்தாமே, இயேசுகிறிஸ்துவைக் கொண்டு தமக்குமுன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படிசெய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக, அவருக்கு என்றென்றைக்கும் மகிமைஉண்டாவதாக. ஆமென்.

# 3. உன்னை முத்திரை மோதிரமாக வைப்பார்!

இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி : வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28: 18 - 20).

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, இன்றும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதே அதிகாரத்துடன், நாமும் அதிகாரமுள்ளவர்களாய்த் தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய, நம் ஒவ்வொருவரையும் முத்திரை மோதிரமாக வைப்பேன் என வாக்கருளுகிறார். அல்லேலூயா!

## முத்திரை மோதிரம்

முத்திரை மோதிரம் என்பது ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமானவர், தேவனுடைய பிள்ளைகளுக்கு அளிக்கும் அதிகாரத்தையும் ஆளுகையையும் குறிக்கிறது. செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் என் ஊழியக்காரனே, உன்னை நான் அந்நாளிலே சேர்த்துக்கொண்டு, உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உன்னைத் தெரிந்துகொண்டேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார் (ஆகாய் 2:23) என வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தர் யூதாவின் தலைவனாகிய செருபாபேலைத் தெரிந்துகொண்டார். செருபாபேலை முத்திரை மோதிரமாக வைப்பேன் எனவும் வாக்கருளினார். வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இயேசுகிறிஸ்துவின் இரண்டு வம்சா வழிகளிலேயும் (மத்தேயு 1:12,13; லூக்கா 3:27), செருபாபேலின் பெயர் இடம் பெற்றுள்ளதைக் காண்கிறோம். தேவனருளிய

வாக்கில் முத்திரை மோதிரம் என்பது, இந்த இரு வம்சா வழிகளிலேயும் நமக்குத் தந்தருளப்பட்ட அவருடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவே! குமாரனாகிய அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது (கொலோசெயர் 1:14). அல்லேலூயா!

விசுவாசத்தின் முதல்நிலையில், இயேசுவின் நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்குத் தேவனுடைய பிள்ளைகளாகும்படியான அதிகாரங் கொடுக்கிறார். நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே (கலாத்தியர் 3:26) என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார்.

மேலும் கர்த்தர்; இதோ சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது (லூக்கா 10:19) என்று வாக்கருளியிருக்கிறார். இயேசு வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள் (மத்தேயு 7:28,29). இயேசுவும் தம்மைக்குறித்து: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத்தேயு 28:18) என்றார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இவ்விதமான அதிகாரங்களைக் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுச் செயல்படும்போது, உங்கள் பெயர்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை நம்மில் இருக்கும்போது, நாமும் முத்திரை மோதிரமாக, இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தைப் பெற்றவர்களாய், அவருக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வோம். அல்லேலூயா!

செருபாபேலைப் போன்று முத்திரை மோதிரமாகக் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட நாம் செய்யவேண்டியது என்ன? செருபாபேல் என்னும் யூதாவின் தலைவனுக்கும், யோசுவா என்னும் பிரதான ஆசாரியனுக்கும், சிறையிருப்பிலிருந்து மீண்டபின் ஜனத்தில் மீதியானவர்களுக்கும், ஆகாய் தீர்க்கதரிசனப் புத்தகத்தில் கர்த்தரால் கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகள் இந்தக் கேள்விக்குப் பதில் அளிப்பதைப்போல் அமைந்துள்ளன.

## பாபிலோனிய சிறையிருப்பு

இயேசுகிறிஸ்து பிறப்பதற்கு 608 ஆண்டுகளுக்கு முன்னர் (கி.மு.) கல்தேயரின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் சேனைகளினால் எருசலேம் நகரம் முற்றுகையிடப்பட்டது. பின்னர் கி.மு. 586ஆம் ஆண்டில் சாலொமோன் கட்டின தேவாலயம் முழுமையாக இடிக்கப்பட்டது. எருசலேம் நகரமும் தேசமும் எரேமியா தீர்க்கதரிசி முன்னுரைத்தபடி (எரேமியா 25:11), வனாந்தரமும் பாழுமானது. தேவஜனம் எழுபது ஆண்டுகள் சிறையிருப்பிலிருந்து பாபிலோன் ராஜாவைச் சேவித்தார்கள்.

கி.மு. 538ஆம் ஆண்டில் பாபிலோன் ராஜ்யம், கல்தேயரிடத்திலிருந்து, பெர்சியரின் ஆளுகைக்கு மாறியது. அப்பொழுது சிறையிருப்பிலிருந்த யூதர்களை, எருசலேம் தேவாலயத்தை மறுபடியும் எடுப்பித்துக் கட்டும்படியாக, கர்த்தருடைய ஜனங்கள் எவர்கள் இருக்கிறார்களோ அவர்கள் யூதாவிலுள்ள எருசலேமுக்குப்போய் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டக்கடவர்கள் (எஸ்றா 1:1-3) என்று ராஜ்யமெங்கும் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு எழுதியனுப்பி விளம்பரம் பண்ணுவித்தான்.

சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிய முதல் கூட்டத்தார் கி.மு. 536ஆம் ஆண்டில், கர்த்தருக்குப் பலிபீடம் கட்டி, பலி செலுத்தி தேவாலயம் கட்ட அஸ்திபாரம் போட்டார்கள். இதை யூதாவுக்கு விரோதமாக எழும்பின சமாரியர் போன்ற சத்துருக்கள் கேள்விப்பட்டபோது, யூதா தேசத்தினர் கைகளைத் தளரப்பண்ணி, அவர்கள் தேவாலயத்தைக் கட்டாதபடிக்கு சங்கடப்படுத்தினார்கள். எதிர்ப்பினாலும் ஏளனப் பேச்சுக்களினாலும் சோர்வடைந்ததினால் இரண்டு ஆண்டுகளில் கி.மு. 534இல், தேவாலயக் கட்டுமான பணி தடைபட்டது. காலப்போக்கில் தேவஜனத்தின் நோக்கங்களும் முக்கியத்துவங்களும் மாறிப்போயின.

தேவாலயத்தைக் கட்டியெழுப்ப விடுவிக்கப்பட்டு அனுப்பப்பட்ட தேவஜனம், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு ஏற்றகாலம் இன்னும் வரவில்லை என்று சொல்லி, தங்களுக்கென மச்சுப்பாவப்பட்ட வீடுகளைக் கட்டி குடியிருக்கத் துவங்கினார்கள். அப்பொழுது ஆகாய் தீர்க்கதரிசிக்கு கி.மு. 520 ஆம் ஆண்டில் கர்த்தருடைய வார்த்தை உண்டானது. செருபாபேல் என்னும் ஜனத்தின் அதிபதியையும், யோசுவா என்னும் பிரதான ஆசாரியனையும், ஜனத்தில் மீதியானோரையும் உற்சாகப்படுத்தி விழிப்படையச் செய்து தேவனுடைய ஆலயத்தை

மீண்டும் கட்டும்படியாகத் தீர்க்கதரிசியின் வார்த்தைகள் அவர்களைத் தூண்டியது.

## ஏற்றகாலம் இன்னும் வரவில்லை

மிகவும் ஆச்சரியமான விதத்தில் கர்த்தர் தம்முடைய ஜனத்தைப் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து மீட்டு வந்ததை வேதாகமத்தில் வாசிக்கிறோம். எருசலேமின் பாழ்க்கடிப்புகள் நிறைவேறித்தீர எழுபது வருஷம் செல்லுமென்று கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியோடே சொல்லிய வருஷங்களின் தொகையைப் புஸ்தகங்களால் அறிந்துகொண்ட தானியேல் (தானியேல் 9:2), உபவாசம்பண்ணி ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் கர்த்தரைத் தேடி, பாழாய்க் கிடந்த பரிசுத்த ஸ்தலத்தின்மேல் கர்த்தருடைய முகம் பிரகாசிக்கப்பட மன்றாடினார். ஆண்டவரே கேளும், ஆண்டவரே மன்னியும், ஆண்டவரே கவனியும், என் தேவனே, உம் நிமித்தமாக அதைத் தாமதியாமல் செய்யும். உம்முடைய நகரத்துக்கும், உம்முடைய ஜனத்துக்கும் உம்முடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறதே (தானியேல் 9:19) என்றார்.

தாமதியாமல் செய்யும் என்று திறப்பிலே நின்ற தானியேலின் விண்ணப்பத்தைக் கேட்ட தேவன், எழுபது ஆண்டு சிறையிருப்பின் காலத்தை, எருசலேம் முற்றுகையிடப்பட்ட நாள் (கி.மு. 608) துவங்கிக் கணக்கிட்டு, கி.மு.538இல் முடித்தார் என்பதாக வேதப்பண்டிதர் சொல்லுகிறார்கள். எருசலேம் நகரமும் தேவாலயமும் முற்றிலுமாகத் தகர்க்கப்பட்ட கி.மு. 586ஆம் ஆண்டு துவங்கிக் கணக்கிட்டோமேயானால், இது 22 ஆண்டுகள் முன்னதாகவே நிறைவேற்றதாகத் தோன்றுகிறது.

அடுத்து பெர்சிய ராஜாவாகிய கோரேசைக் கர்த்தர் அபிஷேகம் பண்ணி, இதற்கென முன்குறித்திருந்தார். இதற்கு சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னரே ஏசாயா தீர்க்கதரிசியினால் (ஏசாயா 45:1-5) இது முன்னுரைக்கப்பட்டிருந்தது. எருசலேமில் வாசம்பண்ணுகிற தேவனே தேவன் என்று அறிக்கையிட்டு, பெர்சிய ராஜா கோரேசு கர்த்தருடைய ஜனத்தைக் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட அனுப்பியபோது, ஏசாயா தீர்க்கதரிசியின் வார்த்தைகளைச் சிறையிருப்பிலிருந்த தேவ மனிதர் அவருக்குச் சுட்டிக்காட்டினார்கள் என்பதாகவும் சொல்லப்படுகிறது.

எவ்வகையில் நோக்கினும், சகலமும் பிதாவாகிய தேவனால் முன்தீர்மானிக்கப்பட்டு, அதனதன் காலத்தில் நேர்த்தியாய்

நிறைவுபெற்றதைக் காண்கிறோம். ஆனாலும் தேவாலயக் கட்டுமான பணியில் தேவஜனத்தின் பங்கு அறியாமையினாலே தாமதித்து நிறைவேற்றப்படாதபோது, ஆகாய் தீர்க்கதரிசியின் மூலம் கர்த்தர் அவர்களுக்கு நினைவூட்டினார். இந்த ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு ஏற்றகாலம் இன்னும் வரவில்லை என்கிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (ஆகாய் 1:2) என்று எழுதப்பட்டிருக்கிறது.

## உங்கள் வழிகளைச் சிந்தித்துப்பாருங்கள்

தேவனுடைய ஜனம் தாங்கள் கைகளின் பிரயாசத்திற்கேற்ற பலன் கிடைக்காமல் சோர்வுற்றிருந்தபோது, கர்த்தர் ஆகாய் தீர்க்கதரிசியின் மூலம், தம்முடைய வார்த்தையை அனுப்பி அவர்களுக்கு ஆலோசனை அருளினார். உங்கள் வழிகளைச் சிந்தித்துப்பாருங்கள். நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக்கொண்டு வருகிறீர்கள்; நீங்கள் புசித்தும் திருப்தியாகவில்லை; குடித்தும் பரிபூரணமடையவில்லை; நீங்கள் வஸ்திரம் உடுத்தியும் ஒருவனுக்கும் குளிர்விடவில்லை; கூலியைச் சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் அதைச் சம்பாதிக்கிறான். உங்கள் வழிகளைச் சிந்தித்துப்பாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஆகாய் 1:5-7) என்று எழுதப்பட்டிருக்கிறது.

மேலும் அவர்களுடைய நெருக்கங்களுக்கும் குறைவுகளுக்கும் காரணம், கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமற்போனதே எனக் கர்த்தர் சொன்னார். இன்னும் தெளிவாக என் வீடு பாழாய்க் கிடக்கும்போது, நீங்கள் எல்லாரும் அவனவன் தன் தன் வீட்டிற்கு ஓடிப்போகிறீர்களே, இதனிமித்தமேஎன்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (ஆகாய் 1:9). அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருந்த பணியை நிறைவேற்ற மறுபடியும் கர்த்தருடைய வார்த்தை வந்தது. நீங்கள் மலையின் மேல் ஏறிப்போய், மரங்களை வெட்டிக்கொண்டுவந்து, ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன்; அதினால் என் மகிமைவிளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஆகாய் 1:8) என்று எழுதப்பட்டிருக்கிறது.

அப்பொழுது செருபாபேலும் யோசுவாவும் ஜனத்தின் மீதியான அனைவரும் தாங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்துக்கும், தாங்கள் தேவனாகிய கர்த்தர் அனுப்பின ஆகாய் என்னும் தீர்க்கதரிசியினுடைய வார்த்தைகளுக்கும்

செவி கொடுத்தார்கள். ஜனங்கள், கர்த்தருக்கு முன்பாகப் பயந்திருந்தார்கள் (ஆகாய் 1:12). பின்பு அவர்கள் வந்து தங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தில் வேலைசெய்தார்கள்.

தேவனுடைய வார்த்தைக்கும் வழிநடத்துதலுக்கும் செவிகொடாது, தேவசித்தத்தைச் செய்ய மனதில்லாமல், தங்களையும் தங்கள் வீட்டையும், ஏன் ஊழியங்களையுங்கூட தங்கள் விருப்பத்தின்படி கட்ட விழைகிறவர்களின் முயற்சி முழுமைப் பெறுகிறதில்லை. இதற்கு மாறாக, தங்களையும் தங்கள் திறமைகளையும் உடைமைகளையும் தேவனிடத்தில் ஒப்படைத்து தேவசித்தத்திற்குட்பட்டுச் செயல்படும்போது, கர்த்தருடைய மகிமைவிளங்குகிறது; தேவஜனமும் ஆசீர்வதிக்கப்படுகிறது. அல்லேலூயா!

**இனியும் தாமதியாதிருங்கள்**

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இந்தச் செய்தியை வாசிக்கின்ற நாம் ஒவ்வொருவருங்கூட ஆகாய் தீர்க்கதரிசியின் காலகட்ட நிகழ்வுகளோடு நம்மையும் நம்முடைய சூழ்நிலைகளையும் ஒப்பிட்டுப் பார்க்க அழைக்கப்படுகிறோம். கர்த்தர் நம்மைஏன் அழைத்தார்? அழிவிலிருந்து எதற்காக நம்மைமீட்டுப் பாவத்தின் சிறையிருப்பிலிருந்து விடுவித்தார்? நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்? நம்மை நாமே கட்டுவித்துக்கொண்டு, கீழான பிழைப்பிற்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளுகிறதற் காகவா? இல்லவே இல்லை என்பதை நாம் அறிவோம்.

ஆகாய் தீர்க்கதரிசியின் நாட்களைக் காட்டிலும் தெளிவும், நடைபெற்று முடிந்த நிகழ்வுகளினால் விளக்கமும் பெற்ற தீர்க்கதரிசன வார்த்தைகள் நமக்குண்டு. இந்தக் கடைசி நாட்களில், நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் நினைவூட்டி எச்சரிக்கும் பல சம்பவங்கள் நம்மைச் சுற்றிலும் நடந்தேறி வருகிறதே. மிகவும் ஜாக்கிரதையாய்க் கர்த்தருடைய வார்த்தைக்கும் வழிநடத்துதலுக்கும் செவிகொடுத்துச் செயல்படுவோம்.

பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரவிருக்கிற உபத்திரவத்தின் நாட்களுக்கு முன்னோடியாக நம்முடைய எல்லைகளில் நடந்த மகா கொடியதான பேரழிவுகளையும் வேதனைகளையும் முந்தின நாட்களில் கண்டோம். இவை மீட்கப்பட்ட தேவஜனமாகிய நம்முடைய கண்களுக்கெதிரே நடப்பிக்கப்பட்ட ஒரு கடைசிக்கால எச்சரிப்பே என்பதை இயேசுகிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் யாரும் மறுக்கமுடியாது.

இயேசுகிறிஸ்துவையும், அவர் அருளின சத்திய வார்த்தைகளையும் அறிவிக்க அழைப்பைப் பெற்றும், நிர்விசாரமாக, இம்மட்டும் செயல்படாமல் இருந்து, ஏற்றகாலம் இன்னும் வரவில்லை என்று கர்த்தருடைய ஊழியத்தைத் துரிதமாய்ச் செய்யாமல், சுய மேன்மையை நாடித் தயங்கித் தடுமாறி நிற்போருக்கு எச்சரிப்பாகவே இந்தப் பேரழிவு வந்ததுபோல் தோன்றுகிறது. கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன் (எரேமியா 48:10) என்று எழுதப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, இம்மட்டும் கர்த்தர் உனக்கருளின பணியை உண்மையோடும் முழுமனதோடும் அர்ப்பணிப்போடும் செய்யாதிருப்பாயானால், இன்றே மனந்திரும்பி கர்த்தரிடத்தில் உன்னை அர்ப்பணிப்பாயா? ஒப்புக்கொடுக்கும் உன்னைக் கர்த்தர் மறுபடியும் கட்டுவிப்பார், ஆசீர்வதிப்பார். அல்லேலூயா!

## திடன் கொள்ளுங்கள், வேலையை நடத்துங்கள்

சத்துருக்களின் எதிர்ப்பினாலும் ஏளனப் பேச்சுக்களினாலும் சோர்வுற்றுச் செயல்படாமலிருந்த தேவஜனம், கர்த்தருடைய வார்த்தையினால் தெளிவுபெற்றுக் கர்த்தரின் ஆலயத்தில் வேலைகளைச் செய்தார்கள். ஆனாலும் பாருங்கள், சாலொமோனின் முந்தின தேவாலயத்தைக் கண்டிருந்த சில மூப்பர்களின் பார்வைக்கு இந்தப் புதிய தேவாலயக் கட்டுமான முயற்சியும் அமைப்பும் திட்டங்களும் ஒன்றுமில்லாததுபோல் காணப்பட்டது (ஆகாய் 2:3), மிகவும் அற்பமாயிருந்தது.

சில மூப்பர்களின் அறியாத இகழ்ச்சியான இந்தப் பேச்சு, இளைஞர் பலரையும், தன்னார்வத்தோடு செயல்பட்ட மற்ற அனைவரையும் உற்சாகமிழக்கச் செய்தது. தேவாலயத்தைத் திரும்பக் கட்டும்பணி தடைபட்டது. அப்பொழுது மறுபடியும் கர்த்தருடைய வார்த்தை ஆகாய் தீர்க்கதரிசிக்கு உண்டாயிற்று.

அவர்: நீங்கள் திடன்கொள்ளுங்கள், வேலையை நடத்துங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் உங்களுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்... என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலைகொண்டிருப்பார்; பயப்படாதேயுங்கள். சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன்; சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்; இந்த ஆலயத்தை மகிமையால் நிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (ஆகாய் 2:4,5,7) என்றார்.

## பெரிதான பிந்தின ஆலயத்தின் மகிமை

முதலாவது நான் உங்களுடனே இருக்கிறேன், வேலையை நடத்துங்கள் என்று உற்சாகப்படுத்திய தேவன், திரியேக தேவனின் மகிமையுள்ள பிரசன்னத்தினால் பிந்தின ஆலயத்தை நிரப்புவேன் எனவும் வாக்களித்தார். நான் உங்களுடனே இருக்கிறேன், என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலைகொண்டிருப்பார் என்ற கர்த்தர், அந்நாட்களில் வரவிருந்த மேசியாவாம் இயேசுகிறிஸ்துவும் அவ்வாலயத்தில் உலாவுவார் என்பதையும் வெளிப்படுத்துகிறதைக் காண்கிறோம். சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார், இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொன்னார்.

வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமைபெரிதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (ஆகாய் 2:8,9) என்று எழுதப்பட்டிருக்கிறது. சில மூப்பர்களின் பார்வைக்கு முந்தின ஆலயம் பொன்னும் வெள்ளியுமாகச் சீரும் சிறப்புமாகத் தோன்றியது.

பிந்தின ஆலயமோ இவையெல்லாவற்றையும் தன்னுள் கொண்டிருக்கிற பிதாவாகிய தேவனாலும், அவருடைய ஆவியானவராலும், இன்னும் சிறப்பாக அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் பிரசன்னத்தினாலும் நிரப்பப்பட்டுமகிமை யடைந்தது. இயேசுகிறிஸ்துவின் இவ்வுலக நாட்களில், அவரது வாழ்வும் போதனைகளும் பலத்த கிரியைகளும் வெளிப்பட்ட தேவாலயம் இதுவேயாகும். ஆதி அப்போஸ்தலர்களின் சாட்சிகளும் செய்திகளும் பல அற்புதங்களும் அடையாளங்களும் இந்தப் பிந்தின ஆலயத்தைச் சுற்றியே நிகழ்ந்ததை நாம் அறிவோம்.

## நான் இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பேன்!

சோர்வுற்றிருந்த தேவஜனம், கர்த்தருடைய வார்த்தை யினால், தெளிவடைந்து தேவாலயப் பணியைத் துவங்கினர். சில மூப்பர்களின் அறியாமையின் வார்த்தைகளால் ஆர்வமில்லா திருந்தபோது, பிந்தின ஆலயத்தின் மகிமைபெரிதாயிருக்கும் என்ற கர்த்தரின் வாக்கினால் உற்சாகப்படுத்தப்பட்டார்கள். ஆனாலும்,

தேவாலயக் கட்டுமான பணியில் அர்ப்பணிப்போடு கூடிய முழு பங்களிப்பைக் காண முடியாமலிருந்தது. ஒரு திருப்தியற்ற ஆர்வமில்லாத பொறுப்பற்றத் தன்மையே வெளிப்பட்டது.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட, தாங்களை அவர்கள் இணைத்துக் கொண்டபோதும், வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாத நன்மைகளை இன்னும் காணாதிருந்தார்கள். களஞ்சியத்தில் இன்னும் விதைத்தானியம் உண்டோ? திராட்சச்செடியும் அத்திமரமும் மாதுளஞ்செடியும் ஒலிவமரமும் கனிகொடுக் கவில்லையே (ஆகாய் 2:19) என்று எழுதப்பட்டிருக்கிறது.

தேவாலயத்தின் பணியைத் திரும்பத் துவக்கின நாட்களில், உடனடியாகத் துரிதமான மாற்றத்தைத் தேவனுடைய ஜனங்கள் எதிர்பார்த்தார்கள். 14 வருடக்கால தாமதம், நிர்விசாரமான செயல்களினிமித்தம் உண்டான விளைவுகள் மூன்று மாதத்தில் முழுமையாக மாறும்படி வாஞ்சித்தனர். தீட்டான அநீதியான கிரியைகளைத் தேவஜனம் துணிந்து ஆலயப்பணிகளிலேயே நடப்பித்ததினால் சகலமும் தீட்டானது.

இப்போதும் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும்படி ஒரு கல்லின்மேல் ஒரு கல் வைக்கப்பட்டது முதல் நடந்ததை உங்கள் மனதிலே சிந்தித்துப்பாருங்கள். அந்த நாட்கள் முதல் ஒருவன் இருபது மரக்காலைக் கண்ட அம்பாரத்தினிடத்தில் வந்தபோது, பத்து மரக்கால் மாத்திரம் இருந்தது; ஒருவன் ஆலையின் தொட்டியில் ஐம்பது குடம் மொள்ள ஆலையினிடத்தில் வந்தபோது இருபது குடம் மாத்திரம் இருந்தது. கருக்காயினாலும், விஷப்பனியினாலும், கல்மழையினாலும் உங்களை உங்கள் கைகளின் வேலையிலெல்லாம் அடித்தேன். ஆனாலும் நீங்கள் என்னிடத்தில் மனதைத் திருப்பாமல் போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஆகாய் 2:15-17) என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஆனாலும் கர்த்தர்; நான் இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பேன் என்றார் (ஆகாய் 2:19). தடைபட்ட தாமதிக்கிற ஆசீர்வாத நன்மைகள் பல வேளைகளில் நாம் கர்த்தரைக் கிட்டிச் சேர்ந்து நற்கிரியைகளை நடப்பிக்க ஏவினாலும், கர்த்தருடைய ஆசீர்வாதங்களை நம்முடைய கிரியைகளினால் மாத்திரம் சம்பாதிக்கக் கூடாதிருக்கிறது. கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல் கடனென்றெண்ணப்படும் (ரோமர் 4:4) என்று பவுல் எழுதியிருக்கிறார். அவை கர்த்தருடைய

கிருபையின் ஈவாக, பரத்திலிருந்து உண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது.பின்னர் கர்த்தருடைய பெரிதான கிருபையினாலே தேவாலயம் கி.மு. 516ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு நிறைவுபெற்றது. அல்லேலூயா!

**நீங்கள் முத்திரை மோதிரம்!**

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, கர்த்தர் அருளின வாக்கின் நிறைவைப் பூரணமாய்ப் பெற்றுக்கொள்ள, ஆகாய் தீர்க்கதரிசியின் மூலம் கர்த்தர் கொடுத்த ஆலோசனைகளுக்கும் செவிகொடுத்து செயல்படுவோம். நம்முடைய வழிகளைச் சிந்தித்துப்பார்த்து, கர்த்தரின் பணிக்கென நம்மை அர்ப்பணிப்போம்.

நம்மைச் சுற்றிலும் துரிதமாய்ச் சம்பவிக்கும் நிகழ்வுகளையும், அடையாளங்களையும் இம்மட்டும் உணராதிருந்தோமேயானால், கர்த்தருடைய ஒத்தாசையுடன் இன்றே விழித்தெழுந்து, தெளிவுபெற்று கர்த்தர் சித்தம் செய்ய நம்மைஒப்புக்கொடுப்போம்.

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூட கொடுக்கப்படும் என்ற வசனத்தின்படி, வாழ்வின் பணிகளை வரிசைப்படுத்தி, பிரதானமான முதல் இடத்தைத் தேவனுக்கும், தேவனுடைய ராஜ்யத்திற்கடுத்த பணிகளுக்கும் கொடுத்து தேவசித்தத்தை நிறைவேற்றுவோம்.

கர்த்தருடைய கிருபையினால் தேவஜனம், நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன் என்ற வாக்கைப் பெற்றது. ஜனத்தின் அதிபதி கர்த்தரால் முத்திரை மோதிரமாகத் தெரிந்துகொள்ளப்பட்டான். பிரதான ஆசாரியனுடைய சிரசில் கிரீடம் வைக்கப்பட்டது. ராஜரீக ஆசாரியனாக, இயேசுகிறிஸ்துவின் முன்னோடியாக அவர் விளங்கினார் (சகரியா 6:11-13).

இதை வாசித்து தியானிக்கிற நாம் ஒவ்வொருவருங்கூட அவ்விதமாகவே ஆசீர்வதிக்கப்பட்டுக் கர்த்தருடைய ராஜ்யத்திற்கடுத்த பணிகளில் அவருடைய அதிகாரத்தை நிறைவாய்ப் பெற்றவர்களாய், முத்திரை மோதிரமாகச் செயல்படுவோம்! ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாய் நம்மைஅழைத்தவருடைய புண்ணியங்களை உலகெங்கும் அறிவிப்போம்! அல்லேலூயா! ஆமென்.

# 4. நீ சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவாய்!

சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள்,
ஆறுதலடையுங்கள்; ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள்.
அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன்
உங்களோடேகூட இருப்பார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய
கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும்,
உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.
(2 கொரிந்தியர் 13:11,14).

## கர்த்தருடைய மகிமைமகத்துவம்

ஏசாயா தீர்க்கதரிசியின் நாட்களில் (கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னர்) அசீரிய ராஜ்யம் வல்லரசாக இருந்தது. அசீரியர் தாங்களையடுத்த கிழக்கத்திய நாடுகளைக் கைப்பற்றி அவர்களது கலாச்சாரத்தை அழித்து வந்தார்கள். இஸ்ரவேல் நாட்டின் வடபகுதியிலிருந்த கோத்திரங்களையும் அவ்வாறே அசீரியர்கள் சிதறடித்தனர். தென்பகுதியான யூதேயா அடுத்து இருந்த நிலையில், கர்த்தருடைய வார்த்தை ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் அவர்களுக்கு வெளிப்பட்டது.

யூதேயா தேசத்தைச் சூழ்ந்திருந்த ஆபத்துகளுக்கும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட எச்சரிப்புகளுக்கும் மத்தியிலும், கர்த்தர் அவர்களைக் கட்டுவிப்பதாக வாக்களித்தார். அவர்கள் கர்த்தருடைய மகிமையையும், நமது தேவனுடைய மகத்துவத்தையும் காண்பார்கள் என்று சொல்லப்பட்டது. ஒருபுறம் எச்சரிப்புக்கும் நியாயத்தீர்ப்புக்கும் தண்டனைக்கும் தேவஜனம் உட்படுத்தப்பட்டாலும், மறுபுறம் ஒருபோதும் முற்றிலுமாக அழிக்கப்பட கர்த்தர் அவர்களை ஒப்புக்கொடுக்கவில்லை.

தேவனுடைய பிள்ளைகளான நீங்களும் நானும் இந்நாளிலும் அழிவுக்குத்தப்பிப் பிழைத்திருப்பதும், கர்த்தருடைய கிருபையின் நிமித்தமேஎன்பதை நினைவிற்கொள்வோம். நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள் (புலம்பல் 3:22,23) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. வாக்குத்தத்தமாக அன்றைய நாளில் யூதேயாவுக்குக் கொடுக்கப்பட்ட ஏசாயா 35ஆம் அதிகாரம், இன்றைக்கு நமக்கும் முற்றிலும் அவசியமானதே என்பதைக் காணலாம்.

ஏசாயா 35ஆம் அதிகாரம் எபிரெய மொழியில் வெகுநேர்த்தியாகப் பாடல் வடிவில் தொகுத்தளிக்கப்பட்ட கர்த்தருடைய வாக்குத்தத்தம். வறண்ட வனாந்திரமான வாழ்க்கையின் சூழ்நிலையில் கர்த்தராகிய தேவன் இடைப்பட்டு, அவர்களது வாழ்வையே மறுரூபப்படுத்தித் தம்மைமீட்பராக வெளிப்படுத்தியதை இந்தப் பாடல் விளக்குகிறது. மேலும், தேவஜனம் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து செயல்படும்போது, பிரமிக்கத்தக்க அற்புதங்களும், அடையாளங்களும், ஆவிக்குரிய மாற்றங்களும் நிகழும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நிறைவாக, பெரும்பாதையான பரிசுத்த வழியிலே கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் நடந்து ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள் என்று வாக்களிக்கப்பட்டிருக்கிறது. அல்லேலூயா!

## கர்த்தர் அருளுகிற வாழ்வின் மாற்றங்கள்

வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போலச் செழிக்கும். அது மிகுதியாகச் செழித்துப் பூரித்து ஆனந்தக்களிப்புடன் பாடும்; லீபனோனின் மகிமையும், கர்மேல் சாரோன் என்பவைகளின் அலங்காரமும் அதற்கு அளிக்கப்படும்; அவர்கள் கர்த்தருடைய மகிமையையும், நமது தேவனுடைய மகத்துவத்தையும் காண்பார்கள் (ஏசாயா 35:1,2).

வனாந்தரமும் வறண்ட நிலமும் கடுவெளியும் கர்த்தருடைய செயல்களினால் களிகூர்ந்து மிகுதியாகச் செழிக்கிறது. அது மலைப்பாங்கான லீபனோனின் மகிமையான கேதுருமரங்களின்

மகத்துவத்தைப் போலவும், கர்மேல் மலையையும் அதைச்சார்ந்த சாரோான் சமவெளியின் மிகவும் அழகான தோட்டங்களின் அலங்காரத்தைப்போலவும் இருந்தது. முற்றிலும் மறுரூபப்பட்ட வாழ்வின் நிலையால் சர்வ சிருஷ்டியும் தேவஜனமும் மிகுதியாகச் செழித்துப் பூரித்து ஆனந்தக்களிப்புடன் பாடும் காட்சியாக இங்கு இது சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பின்னணியில் தேவனுடைய பிள்ளைகள் கர்த்தருடைய மகிமையையும் தேவனுடைய மகத்துவத்தையும் காண்பார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது.

இவ்வண்ணமாகவே விசுவாசிகளும் திருச்சபையும் உலகத்தின் பாடுகளினாலும் உபத்திரவங்களினாலும் துன்பத்திற்குட்பட்டு, அவர்கள் வாழ்வும் வனாந்தரமாக வறண்ட நிலம்போன்று காணப்படும்போது, இந்நாளிலும் உடன்படிக்கையின் வாக்குமாறாத தேவன், வாழ்வில் இடைபடுகிறவராக இருக்கிறார். வறண்ட தேவனுடைய பிள்ளைகளின் வாழ்வும், லீபனோனைப் போலவும், கர்மேல் மற்றும் சாரோனைப்போன்றும் கர்த்தரால் மாற்றப்படும். கர்த்தருடைய மகிமையையும் தேவனுடைய மகத்துவத்தையும் நாமும் வாழ்வில் காணும்படி கர்த்தர் செய்வார்.

இதைப்போன்றதொரு சூழ்நிலையில் தாவீது ராஜாவுங்கூட: தேவனே நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது. என் மாம்சமானது உம்மைவாஞ்சிக்கிறது. இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப் பார்க்க ஆசையாயிருந்து , உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன் (சங்கீதம் 63:1,2) என்றார். கர்த்தரைத் தேடுகிறவர்களுக்குக் கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களுக்கு, கர்த்தர் தமது மகிமையையும் மகத்துவத்தையும் வல்லமையையும் வெளிப்படுத்துகிறார். அல்லேலூயா!

## 1. தளர்ந்த கைகளைத் திடப்படுத்துங்கள்

வறண்ட வாழ்வு கர்த்தரால் வளம்பெற, நாம் என்ன செய்யவேண்டும்? முதலாவதாக, தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள் (ஏசாயா 35:3) என்று எழுதப்பட்டிருக்கிறது. அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத்

தாங்கவேண்டும் (ரோமர் 15:1) என்றும்; ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் (கலாத்தியர் 6:2) என்றும் பரிசுத்த பவுல் எழுதியிருக்கிறார்.

நம்முடைய வாழ்விலும் ஊழியத்திலும் கர்த்தர் அருளும் மாற்றங்களைப்பெற்று அனுபவிக்க, தளர்ந்துபோன தள்ளாடுகிற சக விசுவாசிகளையும் ஊழியர்களையும் கர்த்தருக்குள் திடப்படுத்த பலப்படுத்த நாம் அழைப்பைப் பெற்றிருக்கிறோம். கர்த்தரால் நமக்கருளப்பட்டிருக்கிற கிருபைகளினாலும் தாலந்துகளினாலும் வசதிகளினாலும் கர்த்தர் அருளுகிற வாய்ப்புகளில் பலவீனர் களுடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும். இப்படியாக நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம் (கலாத்தியர் 6:9) என்று பரிசுத்த பவுல் எழுதியிருக்கிறார்.

அடிமைத்தனத்தின் வீடாகிய எகிப்திலிருந்து இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்பட்டுவந்தபோது, அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணினார்கள். அப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி: நீ நமக்காக மனிதரைத் தெரிந்துகொண்டு புறப்பட்டு, அமலேக்கோடே யுத்தம்பண்ணு; நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன் என்றான். யோசுவா தனக்கு மோசே சொன்னபடியே செய்து, அமலேக்கோடே யுத்தம் பண்ணினான். மோசேயும் ஆரோனும் ஊர் என்பவனும் மலையுச்சியில் ஏறினார்கள்.

மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில், இஸ்ரவேலர் மேற்கொண்டார்கள்; அவன் தன் கையைத் தாழவிடுகையில், அமலேக்கு மேற்கொண்டான். மோசேயின் கைகள் அசந்துபோயிற்று. அப்பொழுது அவர்கள் ஒரு கல்லைக் கொண்டுவந்து அவன் கீழே வைத்தார்கள். அதின்மேல் உட்கார்ந்தான். ஆரோனும் ஊரும், ஒருவன் ஒரு பக்கத்திலும் ஒருவன் மறுபக்கத்திலும் இருந்து, அவன் கைகளைத் தாங்கினார்கள். இவ்விதமாய் அவன் கைகள் ஒரே நிலையாயிருந்தது (யாத்திராகமம் 17:8-12).

அசந்துபோன மோசேயின் கைகளை ஆரோனும் ஊரும் தாங்கினார்கள். இங்குத் தேவனுடைய மனிதனாகிய மோசேயின் கைகள், வயது முதிர்ச்சியினாலோ அல்லது சரீர பலவீனத்தினாலோ தளர்ந்து போகவில்லை. தொடர்ந்து தனிமனிதனாக தேவனுடைய கோலை அதிக நேரம் மோசே ஏறெடுத்திருக்கும்போது அசதியாகக் காணப்பட்டார். ஏனென்றால், மோசே மரிக்கிறபோது நூற்றிருபது வயதாயிருந்தான்; அவன் கண் இருளடையவுமில்லை; அவன் பெலன் குறையவுமில்லை (உபாகமம் 34:7) என்று எழுதப்பட்டிருக்கிறது.

## இணைந்து தேவசித்தத்தை நிறைவேற்றுவோம்

மோசேயின் அசந்துபோன கைகள் திடப்படுத்தப்பட்டன. இதைப்போன்று பெலவீன நேரங்களில் மாத்திரமல்ல, சரீரத்திலும் ஆவியிலும் பெலமுள்ள வேளைகளிலும் தொடர்ந்து மிகுதியான ஊழியங்களினாலும் சிரமமான சூழ்நிலைகளினாலும் வேலைப் பளுவினாலும் சோர்வடையும்போதும், தளர்ந்த தள்ளாடுகிற அசந்து நிற்கிற ஊழியர்களையும் சகவிசுவாசிகளையும் தாங்க நாம் அழைக்கப்படுகிறோம்.

அநேக தேவனுடைய மனிதர் இந்நாட்களில் தாங்களுக்குக் கர்த்தர் கிருபையாகத் தந்திருக்கிற பொறுப்புகளையும், ஊழியங்களையும், மற்ற தேவனுடைய பிள்ளைகளுடனும் ஊழியர்களுடனும் இணைந்து செய்கிறதை நாம் காண்கிறோம். ஆனாலும் இப்படிச்செய்வது "அடிமைத்தனம்" என்பதான எண்ணத்தைச் சத்துருவானவன் விதைத்து அநேகரை வஞ்சித்து வருகிறதையும் நம்மால் உணரமுடிகிறது.

இதற்கு முற்றிலும் மாறாக, என்னுடைய ஊழியம் என் சபை என் இடம் என்னுடைய எல்லை என்று சொந்தங்கொண்டாடி, தங்களது பெருமிதங்களைப் பறைசாற்றி, தங்களைத் தாங்களே உயர்த்திச் செயல்படுவதே "அடிமைத்தனம்" என்பதை உணர்ந்துகொள்வோம். ஊழியங்களும் திருச்சபையும், ஏன் பூமியும் அதின் நிறைவுங்கூட கர்த்தருடையது என்பதை நினைவிற்கொள்வோம்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே, இவ்வகையான வஞ்சகங்களிலிருந்து கர்த்தருடைய

ஒத்தாசையுடன் விடுபடுவோம்; கர்த்தர் இணைத்திருக்கிற ஊழியர்களுடனும் தேவமனிதர்களுடனும் இணைந்து இசைந்து ஒருமனப்பட்டுத் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவோம்; தளர்ந்த கைகளைத் திடப்படுத்த நம்மையே அர்ப்பணிப்போம். அல்லேலூயா!

## உ. தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள்

அடுத்து, தேவனுடைய விருப்பத்தின்படி ஜீவிக்கிறதினால் ஏற்படும் உபத்திரவங்களினாலும் துன்பங்களினாலும் போராட்டங் களினாலும் தள்ளாடுகிற தேவனுடைய பிள்ளைகளின் முழங்கால்களைப் பலப்படுத்த நாம் அழைக்கப்படுகிறோம். யோபு பக்தன், விழுகிறவனை வார்த்தைகளால் நிற்கப்பண்ணி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்தினார் (யோபு 4:4) என்று சொன்னதாக எழுதப்பட்டிருக்கிறது.

சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்கு தேவன் நல்லவராகவே இருக்கிறார். ஆனாலும் என் கால்கள் தள்ளாடுதலுக்கும் என் அடிகள் சறுக்குதலுக்கும் சற்றே தப்பிற்று (சங்கீதம் 73:1,2) என்றும்; என் கால் சறுக்குகிறது என்று நான் சொல்லும்போது, கர்த்தாவே உமது கிருபை என்னைத் தாங்குகிறது (சங்கீதம் 94:18) என்றும்; அவன் (நல்ல மனுஷன்) விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை; கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார் (சங்கீதம் 37:24) என்றும் சங்கீதக்காரன் எழுதி வைத்திருக்கிறார்.

தேவஜனம், சுத்த இருதயமுள்ளவர்கள் மற்றும் நல்ல மனுஷர், வாழ்வின் பாதகமான சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டுத் தவித்துத் தடுமாறுகிறபோது, இவ்விதமாக தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்தவேண்டும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனாலும், இவர்களை மட்டுமேபலப்படுத்த வேண்டும் என்று வேதாகமம் குறிப்பிடவில்லை. ஆகையால் பிறரும் வாழ்வில் தள்ளாடித் தடுமாறுகிற வேளைகளில், தேவனுடைய வழிநடத்துதலின்படி செயல்பட அழைக்கப் படுகிறோம்.

மரணத்துக்கு ஒப்புவிக்கப்பட்டவர்களையும், கொலை யுண்ணப் போகிறவர்களையும் விடுவிக்கக்கூடுமானால் விடுவி

என்ற ஆலோசனை நீதிமொழிகள் 24:11இல் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனாலும் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளுக்கும் கோபாக்கினைக்கும் தண்டனைகளுக்கும் உட்பட்ட நிலைகளை அறியவரும்போது தேவனுடைய ஆலோசனையின்படி அவற்றைத் தவிர்க்க முற்படுவோம்.

எசேக்கியேல் தீர்க்கதரிசியின் நாட்களில் தேவஜனத்திற்கு விரோதமாகக் கர்த்தருடைய வார்த்தை: எல்லாக் கைகளும் சலித்து, எல்லா முழங்கால்களும் தண்ணீரைப்போல் தத்தளிக்கும் (எசேக்கியேல் 7:17) என்று வெளிப்பட்டது. இதைத் தொடர்ந்து தேவனுடைய மகிமைதேவனுடைய ஆலயத்தைவிட்டு விலகியதையும், அநேகர் அழிவிற்குட்பட்டதையும் பாபிலோனுக்குச் சிறைப்பிடிக்கப்பட்டதையும் வேதாகமத்திலே காணலாம்.

இதைப்போன்றே பெல்ஷாத்சார் என்ற பாபிலோனிய ராஜா, எருசலேமிலுள்ள தேவனுடைய வீடாகிய ஆலயத்திலிருந்து எடுக்கப்பட்ட பொற்பாத்திரங்களில் குடித்து, அந்நிய தேவர்களைப் புகழ்ந்து, பரலோகத்தின் ஆண்டவருக்கு விரோதமாகத் தன்னை உயர்த்தினான். அப்பொழுது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு மனுஷ கைவிரலால் சுவரில் எழுதப்பட்டது. ராஜாவினுடைய இடுப்பின் கட்டுகள் தளர்ந்தது, அவனுடைய முழங்கால்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டது (தானியேல் 5:6).

தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்தும்போதுங்கூட தேவனுடைய சித்தத்திற்குட்பட்டே செயல்படுவோம். அநேக தேவமனிதர்களுக்கு இது ஒரு மாறுபட்ட வித்தியாசமான நிலையாகவும் ஆலோசனையாகவும் காணப்படலாம். கர்த்தருடைய வழிநடத்துதலின்படி கர்த்தருடைய விருப்பத்தை அறிந்து செயல்படுகிறவர்கள் இவ்வகையான இக்கட்டான நிலையிலும் தவறுவதில்லை. அல்லேலூயா!

**வஞ்சகங்களுக்கு இடங்கொடாதேயுங்கள்!**

பண்டிகை நாட்களில் அநேக தேவமனிதர்கள் தாங்களால் இயன்ற பரிசுகளைத் தேவையில் உள்ளவர்களுக்கும் ஊழியர்களுக்கும் கொடுத்து மகிழுகிறார்கள். ஒருசில இடங்களில், ஊழியங்களில், இவை நிர்ப்பந்திக்கப்பட்டும் வருகிறதைக் காண்கிறோம். நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவும்:

ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ நான் உங்களை அனுப்புகிறேன்; ஆகையால், சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போல் கபடற்றவர்களுமாய் இருங்கள் (மத்தேயு 10:16) என்றார். இதன் பிரதான நோக்கம், உண்மையாக தேவையில் உள்ளவரும், உற்சாகப்படுத்தப்பட வேண்டிய ஊழியரும், புறக்கணிக்கப்படக்கூடாது என்பதே. களைகளைப்பற்றிய உவமையில், களைகளைப் பிடுங்கும்போது கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள் (மத்தேயு 13:29) என்று வீட்டெஜமான் சொன்னதை நினைவிற்கொள்வோம்.

இதைப்போலொத்த பண்டிகை நாளில் தேவமனிதர் ஒருவர் தமது வழக்கத்தின்படி ஒரு ஜெபக்கூடுகைக்குச் சென்றார். அந்தப் போதகர் ஐக்கியத்தைச் சார்ந்தவர்கள், அவருக்குப் பெரிதாகக் காணப்பட்ட ஒரு தொகையை அவர்களுடைய கொண்டாட்டங் களுக்காகக் கொடுக்க நிர்ப்பந்தித்தார்கள். பரிசுகளும் சிறப்பு உணவும் பறிமாறப்பட்டது. தேவனுடைய சித்தத்தை முழுமையாக அறியாது தேவமனிதர் செயல்பட்டதின் நிமித்தம், இதைத் தொடர்ந்து இழப்புகளும் சேதங்களும் அவருடைய ஊழியத்தில் ஏற்பட்டது. உடனே அந்த மனிதர் அந்த ஜெபக்கூடுகைக்குச் செல்வதை நிறுத்தினார். மிகவும் ஆச்சரியமாக, கர்த்தர் தொடர்ந்து அவருக்கு அந்த போதகர் ஐக்கியத்தின் மற்ற முறைகேடுகளையும் வெளிப்படுத்தினது மட்டுமல்லாமல், இதனிமித்தம் தேவ மனிதருக்குத் தடைப்பட்டிருந்த ஆசீர்வாத நன்மைகளையும் திரும்பத்தர ஆரம்பித்தார்.

தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள். அதே சமயம் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும் எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் (மத்தேயு 7:15,20) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

### 3. மனம் பதறுகிறவர்களைத் தேற்றுங்கள்

மனம் பதறுகிறவர்களைப் பார்த்து நீங்கள் பயப்படாதிருங்கள், திடன்கொள்ளுங்கள். இதோ உங்கள் தேவன்

நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்; அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள் (ஏசாயா 35:4) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் பேரில் உள்ள விசுவாசத்தில் தேவனுடைய பிள்ளைகள் உறுதியாக இல்லாதபட்சத்தில், எதிர்பாராது வாழ்விலும் ஊழியத்திலும் பலவீனங்களும், இழப்புகளும் நெருக்கங்களும் அவர்களைச் சஞ்சலப்படுத்தும்போது, மனம் பதறிக் கலங்கித் தவிக்கிறார்கள். விசுவாசிக்கிறவன் பதறான் (ஏசாயா 28:16) என்றும்; விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக் கொள்ளுங்கள் (ரோமர் 14:1) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவும் மனிதராக நம்மைப்போல இந்த உலகில் வாழ்ந்த நாட்களில் நடந்த ஒரு சம்பவம் இதை விளக்குகிறது. இயேசுவின் சீஷர்கள் ஒருநாள் படகில் ஏறி நடுக்கடலிலே சென்றுகொண்டிருந்தபோது, இரவில் நாலாம் ஜாமத்திலே இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார். அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள். உடனே இயேசு அவர்களோடே பேசி: திடன்கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள் என்றார் (மத்தேயு 14:26,27).

இவ்விதமாகக் கலக்கமுற்றுப் பயத்தினால் மனம் பதறுகிறவர்களைப் பார்த்து அவர்களிலுள்ள விசுவாசத்தை வர்த்திக்கச்செய்யும் வார்த்தைகளைச் சொல்லி தேற்றும்படியாக அழைக்கப்படுகிறோம். கர்த்தரின் மாறாத பண்புகளையும் மேன்மையையும் மகத்துவத்தையும் இயேசுவில் நமக்கு அருளப்பட்டிருக்கும் விடுதலையின் நிச்சயத்தையும் சாட்சியாகச் சொல்லும்போது கர்த்தர் கிரியைகளை நடப்பிக்கிறார். அல்லேலூயா!

## கர்த்தரின் வருகையால் மாறிடும் வாழ்வு

மறுரூபப்பட்ட நம்முடைய வாழ்விலும் ஊழியங்களிலும் கர்த்தருடைய ஆசீர்வாதத்தை நிறைவாகப் பெற்று, இதில் கர்த்தரின் மகிமையையும் மகத்துவங்களையும் கண்டுணருகிற நாம் சாட்சிபகிர்ந்து மகிழுகிறோம். சாட்சியோடு நிறுத்திக்கொள்ளாமல்

தொடர்ந்து, தளர்ந்த கைகளைத் திடப்படுத்தவும், தள்ளாடுகிற கால்களைப் பெலப்படுத்தவும், மனம் பதறுகிறவர்களைத் தைரியப்படுத்தவும் கட்டளையாகப் பெற்று செயல்படுகிறோம். இப்படியாக நாம் நமக்கு நியமிக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றும்போது, கர்த்தராகிய தேவன் தனிமனிதனின் வாழ்விலும் ஊழியத்திலும் அற்புதங்களையும் அடையாளங் களையும் நடப்பித்து, ஆவிக்குரிய மாற்றங்களையும் உண்டுபண்ணுகிறார்.

அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான். ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்; வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும். வெட்டாந்தரை தண்ணீர்த்தடாகமும், வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும்; வலுசர்ப்பங்கள் தாபரித்துக்கிடந்த இடங்களிலே, புல்லும் கொறுக்கையும் நாணலும் உண்டாகும் (ஏசாயா 35:5-7) என்று எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய வார்த்தையின்படி நாம் செய்யும்போது, கர்த்தருடைய மகத்துவமும் மகிமையுமான கிரியைகள் வெளிப்படுகிறது. சீஷர்கள், கர்த்தருடைய வார்த்தையின்படி, புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து அவர்களால் நடந்த அடையாளங் களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார் (மாற்கு 16:20) என்று வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

ஒருபுறம் சரீரப்பிரகாரமாகக் குருடரும் செவிடரும் முடவரும் ஊமையரும் குணமடைகிறார்கள். மறுபுறம் தனிமனிதனின் ஆவிக்குரிய நிலையில் உருமாற்றங்கள், வனாந்தரமும் வறண்ட நிலமுமாகக் காணப்பட்ட ஆவிக்குரிய வாழ்வு, தண்ணீர்களும் தண்ணீர்த் தடாகமும் நீரூற்றுகளும் பாய்ந்தோடும் ஆறுகளுமாக மறுரூபப்படுகிறது.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் விசுவாசத்தோடு சொல்லப்படும்போது, பகிர்ந்தளிக்கப்படும்போது, இயேசுவே அவர்கள் நடுவில் வெளிப்பட்டுச் சொல்லொண்ணா அற்புதங்

களையும் அடையாளங்களையும் தனிமனிதரின் வாழ்விலே செய்கிறார். பரிசுத்த ஆவியானவரையும் அவர்களுக்குக் கர்த்தர் தந்து பெலப்படுத்தி சாட்சியாக ஏற்படுத்துகிறார்; ஆற்றித் தேற்றுகிறார், வழிநடத்துகிறார். அல்லேலூயா!

## பெரும்பாதையான பரிசுத்த வழி!

வறண்ட வனாந்திரமான வாழ்வின் நிலைகள் கர்த்தருடைய கிருபையால் உருமாற்றம் பெறுகிறது எனப் பார்த்தோம். லீபனோனின் மகிமையும், கர்மேலின் அலங்காரமும், சாரோனின் அழகும் தேவஜனத்திற்கு அளிக்கப்படுகிறது. கர்த்தரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்த தேவஜனம், தளர்ந்த கைகளைத் திடப்படுத்தியது; தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்தியது; மனம் பதறுகிறவர்களைப் பார்த்து விசுவாச வார்த்தைகளைச் சொல்லியது. கர்த்தராகிய தேவன், சர்வவல்லவர் இடைப்பட்டுக் கிரியைகளை நடப்பித்தார், நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்.

தேவஜனத்தின் கீழ்ப்படிதலினால், ஆவிக்குரிய குருட்டாட்டம் நீங்கி வாழ்வு ஒளிப்பெற்றது. கர்த்தருடைய வார்த்தைக்கு அடைக்கப்பட்டிருந்த செவிகள் திறவுண்டன. அம்மட்டும் முடங்கி நின்ற கால்கள், கர்த்தருக்குச் சேவை செய்ய மானைப்போல குதித்து விரைந்தோடின. நாவுகள் கட்டவிழ்க்கப்பட்டுத் தேவனைக் கெம்பீரித்துத் துதித்தன. கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லி அறிவித்தவரும், அதினால் விடுவிக்கப்பட்டவரும் ஒருங்கிணைந்து ஆனந்தக்களிப்புடன் பாடி, கர்த்தரின் சீயோன் பர்வதத்திற்கு செல்லுவார்கள். இதுவே ஏசாயா 35ஆம் அதிகார பாடலின் நிறைவுக் காட்சியாக ஏசாயா 35:8 முதல் 10 வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் தேவனுடைய வாசஸ்தலமாகிய சீயோனுக்குச் செல்லும்வழி பெரும்பாதையான பரிசுத்த வழி. தீட்டுள்ள பரிசுத்தமில்லாதவர்கள் ஒருவரும் அதில் நடந்து வருவதில்லை. சிங்கம் போன்ற துஷ்டமிருகங்களும் அங்கு போவதுமில்லை. மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள். அவர்கள் போகும் திசையறியாது பேதையராயிருந்தாலும் வழித்

தவறுவதில்லை. ஆனந்தக்களிப்புடன் பாடி சீயோனுக்கு வரும் அவர்கள் தலையின்மேல், நித்திய மகிழ்ச்சி இருக்கும் கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம். அல்லேலூயா!

## நீ சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவாய்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, கர்த்தர் உன்னை நேசிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மேல் விசுவாசமுள்ளவராய்ப் பாவமன்னிப்பைப் பெற்று, இயேசுகிறிஸ்துவின் திருஇரத்தத்தால் கழுவிச் சுத்திகரிக்கப் பட்டிருக்கிற உன் வாழ்வின் வறண்ட நிலைகளையும் வனாந்தரமான சூழ்நிலைகளையும் கர்த்தர் செழிப்பும் அலங்காரமுமானவைகளுமாக மாற்றுவார். நீ உன் வாழ்வில் கர்த்தருடைய மகிமையையும், தேவனுடைய மகத்துவத்தையும் காண்பாய்.

மறுரூபப்பட்ட உன் வாழ்விலும் கர்த்தர் விரும்புகிற நற்காரியங்களைச் செய்ய உன்னை ஒப்புக்கொடுப்பாயா? பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, கர்த்தருடைய ஆவியினாலேயே ஆகும் என்ற வார்த்தையின்படி, உன் சுயபெலத்தையும் ஞானத்தையும் ஆற்றலையும் வசதிகளையும் சார்ந்து செயல்பட்ட நாட்கள் போதும். இன்று முதல், கர்த்தருடைய ஆவியானவரின் ஒத்தாசையோடு, அவருடைய சித்தத்தையே செய்ய உன்னை அர்ப்பணிப்பாயா?

உண்மையாய் அர்ப்பணித்திருக்கிற உன்னைக் கர்த்தர் ஆசீர்வதிப்பார். அவரே உன் வாழ்விலும் ஊழியத்திலும் இடைப்பட்டு விவரிக்கக்கூடாத அற்புதங்களையும் அடையாளங் களையும் சரீரங்களிலும் ஆவிக்குரிய வாழ்விலும் நடப்பிப்பார். உன் செய்கையினாலும், உன் வார்த்தையினாலும் மீட்கப்பட்டவர் களும், நீயும், கர்த்தரால் மீட்கப்பட்ட மற்றவர்களோடு இணைந்து ஆனந்தக்களிப்புடன் சீயோனுக்கு, தேவனுடைய சன்னிதானத்திற்கு வருவாய். நித்திய மகிழ்ச்சி உன் தலையின் மேலிருக்கும். சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவாய்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்! அல்லேலூயா! ஆமென்.

# 5. கர்த்தர் சமாதானம் அருளி ஆசீர்வதிப்பார்!

நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணின சமாதானத்தின் தேவன், இயேசுகிறிஸ்துவைக் கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக; அவருக்கு என்றென்றைக்கும் மகிமைஉண்டாவதாக. ஆமென் (எபிரெயர் 13:20,21).

### கர்த்தர் அருளும் சமாதானம்

சமாதானம் என்ற வார்த்தை, போராட்டம் சண்டை சச்சரவு கலகம் இல்லாத அமைதியான வாழ்வின் நிலையைப் பொதுவாகக் குறிக்கிறது. எபிரெய மொழியில் "ஷாலோம்" என்ற வார்த்தை சமாதானம் என்று தமிழ் வேதாகமத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஷாலோம் என்கிற வார்த்தை, போராட்டமில்லாத அமைதியான மனநிலை, சூழ்நிலை என்பதைக் காட்டிலும் மேலான அர்த்தங்கொள்ளும், ஒரு பரிபூரண ஆசீர்வாத நிலையை வெளிப்படுத்துகிறது.

சமாதானம் என்று அநேக இடங்களில் வேதாகமத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள ஷாலோம் என்கிற வார்த்தை, வாழ்வில் சுகத்தோடும், உறவில் சமாதானத்தோடும், சகல நன்மைகளும் இசைந்து இணைந்த நிறைவும் செழிப்பும் பாதுகாவலோடும் உள்ள வாழ்வின் நிலையேயாகும்.

கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார்; கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார் (சங்கீதம் 29:11) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இயேசுவே நம்முடைய சமாதானகாரணர் (எபேசியர் 2:14).

நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (ஏசாயா 53:5) என்று எழுதப்பட்டிருக்கிறது. மேசியாவாம் இயேசு சமாதானப் பிரபு என்றும் அழைக்கப்படுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை, சமாதான காரணராக தேவன் நமக்குத் தந்தருளினார். குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கினார் (கொலோசெயர் 1:14,20) என்று எழுதப்பட்டிருக்கிறது.

அழிவுக்கேதுவான பாவத்திற்குட்பட்டு, தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டு, அவருடைய மகிமையை இழந்த மனுக்குலத்துக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம். கர்த்தர் நமக்கு பரிபூரண சமாதானத்தை அருளுகிறார். பாவங்கள் மன்னிக்கப்படுவதால் சமாதானம்; சரீரப்பாடுகள் நீங்கி சுகம் பெறுவதால் சமாதானம்; வாழ்வில் தோன்றும் பயங்கள் நீங்கி சமாதானம் எனப் பல நிலைகளில் நமக்கு விரோதமாக எதிர்த்துச் செயல்படும் சத்துருவின் வல்லமைகளை மேற்கொள்ள கர்த்தர் நமக்கு அதிகாரங்கொடுக்கிறார். அல்லேலூயா!

## பாவமன்னிப்பால் வரும் சமாதானம்

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, நம்மைப்போலொத்த மனிதராக இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில், பரிசேயன் ஒருவன் வீட்டிலே போஜனம்பண்ணும்படியாக பந்தியிருந்தார். அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு பெண், இயேசுவின் பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டிருந்தாள். இயேசுவின் பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமுடியால் துடைத்து அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து பரிமள தைலத்தைப்

பூசினாள். இயேசு அவளை நோக்கி; உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார். மேலும், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார் (லூக்கா 7:50).

இயேசுவின்மேல் மிகவும் அன்புகூர்ந்து அவரை ஏற்றுக் கொண்ட அந்தப் பெண், தன்னுடைய பாவநிலையை அறிந்திருந்தது மட்டுமல்லாமல், கர்த்தருடைய மேன்மையையும் மகிமையையும், அவருடைய மனதுருக்கத்தையுங்கூட அறிந்திருந்தாள். அவள் செய்த அநேக பாவங்களை இயேசு அவளுக்கு மன்னித்தார். பாவமன்னிப்பையும், அவள் தன் வாழ்வில் இழந்த சமாதானத்தையும் நிறைவாய்ப் பெற்றாள். இன்றும் அவளுடைய விசுவாசத்தின் கிரியை சாட்சியாக அறிவிக்கப்படுகிறது.

## சரீரப்பாடுகள் நீங்கி சமாதானம்

இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன் (எரேமியா 33:6) என்று கர்த்தர் சொல்லுகிறார். விசுவாசத்தோடு கர்த்தரை நோக்கிப் பார்க்கிற தேவனுடைய பிள்ளைகளுக்குக் கர்த்தர் பரிபூரண சுகத்தையும் சமாதானத்தையும் அருளுகிறார்.

சுகமளிக்கும் தேவன் (யெகோவா ரஃபா) என்று அறியப்பட்டிருக்கிற நம் கர்த்தர், சரீரத்தில் சர்வாங்க சுகத்தை அருளுகிறது மட்டுமல்லாமல், பரிபூரண சமாதானத்தை வாழ்வில் அருளி, சத்தியத்தையும் வெளிப்படுத்துகிறார். சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் (யோவான் 8:32) என்ற வசனத்தின்படி, கர்த்தர் சகலவிதமான பலவீனங்கள் கட்டுகள் போராட்டங்களிலிருந்து நம்மை விடுவிக்கிறார். அல்லேலூயா!

பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு பெண்ணைக்குறித்து வேதாகமத்தில் வாசிக்கிறோம். அவள் தனக்கு உண்டானவைகள் எல்லாம் செலவழித்தும், சற்றாகிலும் குணமடையாமல் வருத்தத்தோடு இருந்தாள். இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்ட அவள், தான் இயேசுவின் வஸ்திரத்தை யாகிலும் தொட்டால் சுகம் பெறுவேன் என்று சொல்லி,

ஜனக்கூட்டத்திலே இயேசுவுக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள். உடனே அவள் சுகம் பெற்றாள்; அவள் உதிரப்போக்கு நின்றுபோயிற்று. வேதனை நீங்கி ஆரோக்கிய மடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள்.

இயேசு உடனே தம்மிலிருந்து வல்லமைபுறப்பட்டதைத் தமக்குள் அறிந்து, என் வஸ்திரங்களைத் தொட்டது யார் என்று கேட்டார். அப்பொழுது அந்தப் பெண் பயந்து நடுங்கி இயேசு முன்பாக வந்து விழுந்து உண்மையை எல்லாம் சொன்னாள். இயேசு அவளைப் பார்த்து: மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடேபோய், உன் வேதனை நீங்கி சுகமாயிரு என்றார் (மாற்கு 5:34).

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, இந்நாளில் விசுவாசத்தோடு இயேசுவை நோக்கிப் பார்க்கும் உனக்கும் கர்த்தர் சர்வாங்க சுகத்தைத் தருவார்; பரிபூரண சமாதானத்தையும் வாழ்வின் எல்லைகளில் கட்டளையிடுவார். ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்புகிற கர்த்தருக்கு மகிமைஉண்டாவதாக (சங்கீதம் 35:27) என்ற வசனத்தில் "ஷாலோம்" என்ற எபிரெய வார்த்தை "சுகம்" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இயேசுவையே சார்ந்து வாழ அர்ப்பணித்திருக்கும் உனக்கும் எனக்குங்கூட, ஒரு பரிபூரண சமாதானத்தை, சுகத்தை, நிறைவான ஆசீர்வாதத்தை இன்றே கர்த்தர் கட்டளையிடுவார். அல்லேலூயா!

### வாழ்வில் பயம் நீங்கச் சமாதானம்

இயேசுகிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த வாரத்தின் முதல் நாளாகிய அன்றையதினம் சாயங்கால வேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில் யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டப்பட்டிருக்கையில், இயேசு வந்து நடுவிலே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார் (யோவான் 20:19).

இயேசுவின் சீஷர்கள், யூதர்களுக்கும் மதத்தலைவர் களுக்கும் அதிகாரிகளுக்கும் பயந்ததினால், கதவுகள் பூட்டப்பட்ட அறையில் இருந்தார்கள். அப்பொழுது இயேசு தாமேஅவர்களுக்கு இடைப்பட்டு, உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக என்று

வாழ்த்தினார். இந்த சீஷர்களே பின்னர் பயம் நீங்கி, பூரண சமாதானத்தைப் பெற்றவர்களாய், தைரியத்தோடு இயேசுவை உலகுக்கு அறிவித்தவர்கள் என்பதை நாம் அறிவோம்.

இந்நாட்களிலும், மீட்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளில் சிலருங்கூட, வாழ்வில் பலவிதமான நெருக்கங்களுக்குட்பட்டுப் பயந்து செய்வதறியாது திகைத்து, பூட்டப்பட்ட நிலைகளில் இருப்பதை நாம் அறிவோம். சரீரப் பலவீனங்களினால் பயம், மரணத்தைக் குறித்த பயம், பொருளாதாரக் குறைவினால் பயம், சமூக விரோத சக்திகளினால் பயம், உறவின் முறிவினால் வரும் பயம், ஆதரவற்ற நிலையினால் பயம் எனப் பலவிதமான சூழ்நிலைகளில் பயத்தோடே சிலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்வகையான சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டுள்ள தேவனுடைய பிள்ளைகள் அனைவரையும், கர்த்தர் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார். உம்மைஉறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர் (ஏசாயா 26:3) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இங்குப் பூரண சமாதானம் என்கிற வார்த்தைகளுக்கு, எபிரெய மொழியின் வழக்கின்படி "ஷாலோம் ஷாலோம்" என இருமுறை வசனத்தில் எழுதப்பட்டுள்ளதாம். ஷாலோம் என்ற வார்த்தையே சரீர சுகம் சமாதானத்தோடே சகல நன்மைகளும் இசைந்து இணைந்த ஆசீர்வாத நிலையைக் குறிப்பதாகப் பார்த்தோம். இருமுறை ஷாலோம் என்று குறிப்பிடுவது, தமிழில் பூரண சமாதானம் என்பது, பரிபூரணத்தின் நிறைவான சமாதானத்தைக் குறிப்பதாகும்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, கர்த்தரை உறுதியாகப் பற்றிக்கொண்ட மனதை உடையவர்களாய், நீங்கள் கர்த்தரையே நம்பியிருக்கிறபடியால், சகலவிதமான பாவங்களையும் நீக்கி, உங்களையும் பூரண சமாதானத்துடன் கர்த்தர் காத்துக்கொள்வார். சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப் போடுவார் (ரோமர் 16:20). அல்லேலூயா!

**யாருக்குச் சமாதானம்?**

கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார் (சங்கீதம் 29:11) என்று சங்கீதக்காரன் எழுதி வைத்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் பேரில் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டு, மனந்திரும்பி, பாவங்கள் மன்னிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட்டிருக்கிற கர்த்தருடைய ஜனத்திற்கு, கர்த்தர் சமாதானம் அருளி, ஆசீர்வதிக்கிறார். அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்கி, உச்சிதமான கோதுமையினால் உன்னைத் திருப்தியாக்குகிறார் (சங்கீதம் 147:14) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை (சங்கீதம் 119:165) என்று வாசிக்கிறோம். மேலும் கர்த்தர் போதித்து நடத்துகிற வழியிலே, கற்பனைகளைக் கவனித்து, அதன்படி நடக்கும்போது, சமாதானம் நதியைப் போலிருக்குமாம். ஆம் என் கற்பனைகளைக் கவனித்தாயானால் நலமாயிருக்கும்; அப்பொழுது உன் சமாதானம் நதியைப்போலும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப்போலும் இருக்கும் (ஏசாயா 48:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

வாழ்வில் நன்மைசெய்கிறவர்களும், நீதியை நடப்பிக்கிறவர்களும், சமாதானமும் சுகமும் அமரிக்கையும் பெற்றுக்கொள்ளுகிறார்கள். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் எவன் நன்மைசெய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும் (ரோமர் 2:10) என்றும்; நீதியின் கிரியை சமாதானமும் நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம் (ஏசாயா 32:17) என்றும் எழுதப்பட்டுள்ளது.

இதற்கு மாறாக, துன்மார்க்கருக்கும், பொல்லாங்கு செய்கிறவர்களுக்கும் சமாதானமில்லை என்றும்; அவர்களுக்கு வாழ்வின் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும் என்றும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் பொல்லாங்கு செய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும் (ரோமர் 2:9) என்று எழுதப்பட்டிருக்கிறது. துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார் (ஏசாயா 48:22).

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட தேவ ஜனத்திற்குக் கர்த்தர் சமாதானம் அருளுகிறார். வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு, அவருடைய கற்பனைகளின்படி செயல்பட தாங்களை அர்ப்பணித்தவர்களுக்குக் கர்த்தர் சமாதானம் தருகிறார். வாழ்வில் நீதியை நடப்பித்து நன்மைசெய்கிறவர்களுக்கு மகிமையையும் கனத்தையும் சமாதானத்தையும் தருகிறார். ஆனால் பொல்லாங்கு செய்கிறவர்களுக்கும் துன்மார்க்கருக்கும் சமாதானம் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, இச்செய்தியை வாசிக்கிற உன் வாழ்விலும் சமாதானம் குறைவுபட்டு, ஆசீர்வாதங்கள் தடைப்பட்டிருக்குமே யானால் பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு உன்னை ஆராய்ந்தறிந்து அவருடைய வழிநடத்துதலின்படி நடக்க உன்னை ஒப்புக்கொடுப்பாயா? அர்ப்பணிக்கின்ற உன்னைக் கர்த்தர் சமாதானம் அருளி ஆசீர்வதிப்பாராக.

## சமாதானமாயிருக்க அழைப்பு

கர்த்தர் அருளும் சமாதானத்தையும் ஆசீர்வாதங்களையும் அவரிடத்திலிருந்து நிறைவாகப் பெற்றுக்கொண்ட தேவஜனம், தேவனோடும் சக விசுவாசிகளோடும் தங்களைச் சுற்றி வாழும் மனிதரோடும் சமாதானமாக இருக்கும்படி அழைக்கப்படுகிறார்கள். சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மைஅழைத்திருக்கிறார் (1 கொரி. 7:15). ஆனாலும் அவிசுவாசி பிரிந்துபோனால் பிரிந்து போகட்டும் என்றும், பிரிந்துபோகிறவன் தன் இச்சையின்படி செய்யப்பார்க்கிறான், எல்லா ஞானத்திலும் தலையிட்டுக் கொள்ளுகிறான் (நீதி.18:1) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

இதனிமித்தமே அப்போஸ்தலனாகிய பவுல்: கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமா யிருங்கள் (ரோமர் 12:18) என்று எழுதியிருக்கிறார். எபிரெய நிருப ஆக்கியோனுங்கூட: யாவரோடும் சமாதானமாயிருக்கவும் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே (எபிரெயர் 12:14) என்று எழுதியிருக்கிறார்.

மேலும், தீமையை விட்டு விலகி நன்மைசெய்; சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்துகொள் (சங்கீதம் 34:14) என்ற வசனத்தின்படி, ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர் களாய் இருக்க அழைக்கப்படுகிறோம். தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது. இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதல் உள்ளவர்களாயும் இருங்கள் (கொலோசெயர் 3:15) எனப் பவுல் அறிவுறுத்துகிறார்.

சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் (மத்தேயு 5:9) என்று நம் இரட்சகர் இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார். இயேசுவைப் போன்று சமாதானத்திற்குக் காரணராக வாழ்வில் நாம் செயல்படும்போது தேவனுடைய புத்திரர் என்ற மேலான பாக்கிய நிலையில் ஆசீர்வதிக்கப்படுகிறோம்.

இதற்கு மாறாக வாழ்வில் கசப்பும் வீண் வைராக்கியமும் உடையவர்களாய்க் கலகத்துக்கும், பிரிவினைகளுக்கும் காரணராய்ச் செயல்படும்போது, தேவனுடைய கிருபையை, தேவனருளும் சமாதானத்தினால் வரும் ஆசீர்வாத நன்மைகளை இழந்துபோவோம். தேவனுடைய கிருபையை இழந்து போகாதபடிக்கும், யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள் (யாக்கோபு 3:15) என்று எழுதப்பட்டிருக்கிறது.

கடைசியாக, சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள், ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள். அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார் (2 கொரி. 13:11) என்று பவுல் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தை நிறைவுசெய்கிறார்.

### சமாதானத்தைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார். எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவைக் கொண்டு, அவர் (தேவன்) சமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறி, இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின

வார்த்தையை அறிந்திருக்கிறீர்களே (அப்போஸ்தலர் 10:36) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பிதாவாகிய தேவனால், கிறிஸ்து இயேசுவுக்குள் பூரணமாய் அருளப்படும் சமாதானத்தை, ஆத்துமஇரட்சிப்பை, சரீர சுகத்தை, வாழ்வில் பயம் நீக்கி அருளப்படும் மேலான ஆசீர்வாத நன்மைகளை, நாமும் நற்செய்தியாக அறிவிக்க அழைக்கப் படுகிறோம். சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி, உன் தேவன் ராஜரிகம்பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன (ஏசாயா 52:7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

### சமாதானம் தரும் இயேசு

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, அவரைப் பற்றிக் கொண்டோருக்குச் சமாதானத்தை வைத்துப்போனார். சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன், உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக (யோவான் 14:27) என்று இயேசு சொன்னார். நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் (ரோமர் 5:1) என்று பவுல் சொல்லியிருக்கிறார்.

இந்தச் சமாதானம் தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்குச் சுதந்தரமாகத் தந்தருளப்படுகிறது. இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் பெற்றுக்கொள்ளும் சமாதானம், சூழ்நிலைகளைக் கடந்து, உபத்திரவம் எதிர்ப்புகள் குறைவுகள் மத்தியிலும் நமக்குக் கிருபையாய்த் தேவனால் தந்தருளப்படுகிறது. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக என்ற கர்த்தர், சூழ்நிலையைப் பார்த்துப் பயப்படாமல், கலங்கித் தவிக்காமல், விசுவாசத்தினால் இயேசு நமக்கு வைத்துப்போன சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள நமக்கு ஆலோசனை அருளினார்.

தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் (2 தீமோ. 1:7). நம்மைச் சூழ்ந்து நின்று பலவீனப்படுத்தும், அச்சுறுத்தும் வார்த்தைகள் செயல்களைக் கண்டு சோர்ந்துபோகாமல், கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்த நம்முடைய விண்ணப்பங்களை, ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்த தேவ ஆலோசனையைப் பெற்றிருக்கிறோம்.

## எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம்

அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும் (பிலிப்பியர் 4:7) என்று பவுல் எழுதி வைத்திருக்கிறார். தேவ சமாதானம் என்பது முழுமையான விடுதலையை, சர்வாங்க சுகத்தை, ஆசீர்வாத நன்மைகளை உள்ளடக்கியதாக இருக்கிறது.

பலவேளைகளில், நமக்குத் தெரிந்த செய்திகளையும் தகவல்களையும், முன் அனுபவங்களையும், நம்முடைய சிந்தையில் பகுத்தறிந்து (Logical Reasoning) இந்தச் சூழ்நிலையில் இவ்விதமாக எனக்கும் நேரிடும் என்பதாகக் கணித்துக் கவலைப்படுகிறோம். ஆனால், நாம் நம்பியிருக்கும் நம் தேவன், சூழ்நிலைகளுக்கும், எல்லாப் புத்திக்கும், கணிப்புகளுக்கும் மேலாக வியாபித்து நின்று, தேவனுடைய பிள்ளைகள் வாஞ்சித்து வேண்டுகிற நற்காரியங்களைத் தந்தருளுகிறார். வாழ்வின் இக்கட்டான வேளைகளிலும் எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானத்தை இயேசு தருகிறார். அல்லேலூயா! ஆமென்.

# 6. நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்!

கர்த்தர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து,
உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு
விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி,
நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்;
கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயது போலாகிறது
(சங்கீதம் 103:3-5)

## சுகமளிக்கும் தேவன்

தேவஜனம் என்று அறியப்பட்டிருந்த இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்தபோது மிகவும் ஒடுக்கப்பட்டார்கள். எகிப்தியர் அவர்களைக் கொடுமையாய் வேலைவாங்கினார்கள். கடினமான வேலையினால் அவர்கள் ஜீவனையும் கசப்பாக்கினார்கள். இஸ்ரவேல் புத்திரர் அடிமைத் தனத்தினால் தவித்து முறையிடும் சத்தம் தேவசந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் பெருமூச்சைக்கேட்டு, இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார்; தேவன் அவர்களை நினைத்தருளினார் (யாத். 2:25) என்று எழுதப்பட்டிருக்கிறது.

அவர்களை விடுவிக்கும்படி தேவன் தம்முடைய தாசனாகிய மோசேயை அவர்களுக்குத் தலைவனாகவும் மீட்பனாகவும் அனுப்பினார். இவனே அவர்களை அங்கேயிருந்து அழைத்துக் கொண்டுவந்து, எகிப்து தேசத்திலேயும், சிவந்த சமுத்திரத்திலேயும், நாற்பது வருஷகாலமாய் வனாந்திரத்திலேயும், அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான் (அப். 7:36). அவர்கள் சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையைக் கடந்துபோவதுபோலக் கடந்து போனார்கள். மூன்று நாள் வனாந்திரத்தில் தண்ணீர் கிடையாமல் நடந்து மாராவிலே வந்தபோது, மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்தது. மாராவின் தண்ணீரை மதுரமாக மாற்றின

தேவன், அங்கே அவர்களுக்கு ஒரு நியமத்தையும், ஒரு நியாயத்தையும் கட்டளையிட்டார்.

தேவன் அங்கே தம்முடைய ஜனத்துக்கு ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார்; யேகோவா ரஃபா என்ற பெயரில் சுகமளிக்கும் தேவனாகத் தம்மைவெளிப்படுத்தினார். தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க்கேட்டு அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்தால், எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகள் ஒன்றையும் நான் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார். ஆங்கிலத்தில் இந்த வசனம் நானே உனக்குச் சுகமளிக்கும் தேவன் என்று பொருள்படும்படியாக I am the Lord who heals you என்றும்; எபிரெய மொழியில் யேகோவா ரஃபா என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நம்முடைய தேவன் நமக்குச் சுகமளிக்கிற தேவன். நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார் (யாத்.15:26). இந்த நிபந்தனையோடுகூடிய வாக்குத்தத்தத்தை உணர்ந்து; தேவனுடைய வார்த்தைகளைக்கேட்டு; அவருடைய பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்ய நம்மைஅர்ப்பணிப்போம்! பூரண சுகமடைவோம்! அல்லேலூயா!

## வசனத்தை அனுப்பிக் குணமாக்கும் தேவன்

எசேக்கியா ராஜா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல ஒருவனும் இருந்ததில்லை. அவன் கர்த்தரைவிட்டுப் பின்வாங்காமல் அவரைச் சார்ந்திருந்து, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு வந்தான். ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார்... (2 ராஜா. 18:5-7) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

எசேக்கியா அந்நாட்களில் வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான். ஏசாயா என்னும் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குபடுத்தும், நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அப்பொழுது எசேக்கியா தன் முகத்தைச் சுவர்ப்புறமாகத் திருப்பிக்கொண்டு, கர்த்தரை நோக்கி: ஆ கர்த்தாவே நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம்பண்ணினான். எசேக்கியா மிகவும் அழுதான் (2 ராஜா. 20:1-3).

இதைக்கண்ட உடன்படிக்கையின் தேவன், தீவிரமாய் ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் தம்முடைய வார்த்தையை அனுப்பி அவனைக் குணமாக்கினார். உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்; மூன்றாம் நாளிலே நீ கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவாய் என்றார் (2 ராஜா. 20:5).

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, கர்த்தர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார் (சங்கீதம் 107:20) என்று எழுதப்பட்டிருக்கிறது. எசேக்கியா ராஜாவைப்போன்று கர்த்தரைச் சார்ந்திருந்து, கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, அவருக்குப் பிரியமானவர்களாக ஜீவிக்கிற தேவனுடைய பிள்ளைகள் அநேகர் உண்டு. அவர்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டு, தேவனுடைய பிள்ளைகளாய், இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவிச் சுத்திகரிக்கப்பட்டு, அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறார்கள்.

எசேக்கியாவைப்போன்று இந்த விசுவாசக்கூட்டத்தாரிலும் சிலர், பலவீனத்தோடும் கண்ணீரோடும் இருக்க வாய்ப்பிருக்கிறது. சரீரத்திலோ அல்லது மனதளவிலோ பாதிக்கப்பட்டிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை எவ்விதமாகத் தேவன் குணமாக்குகிறார்? விசுவாசிகளாகிய நாம் எவ்வாறு நெருக்கங்களின் மத்தியில் நம்முடைய விண்ணப்பங்களை

தேவனுக்குத் தெரியப்படுத்தி, நம்முடைய விசுவாசத்தையும், இரட்சிப்பையும், சரீர சுகத்தையும் காத்துக்கொள்ளவேண்டும்? வேதவசனங்களின் அடிப்படையில், பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு இவற்றை ஆராய்ந்தறிந்து கர்த்தருக்குள் பலப்பட அர்ப்பணிப்போம்!

## முற்றும்முடிய இரட்சிப்பு – சர்வாங்க சுகம்

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார் (1தீமோ. 2:4) என்றும்; இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் (லூக்கா 19:10) என்றும் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த வசனங்களில் 'இரட்சிப்பு' என்ற வார்த்தைக்குப் புதிய ஏற்பாட்டின் மூல பாஷையான கிரேக்க மொழியில் 'சோஸோ' (Sozo) என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. சோஸோ என்ற கிரேக்கச் சொல்லுக்கு இரட்சிப்பு என்ற அர்த்தத்தோடு, சரீர சுகம் (மத்தேயு 9:22) என்றும், விடுதலை (லூக்கா 8:36) என்றும், முற்றும் முடிய இரட்சிப்பு (எபிரெயர் 7:25) என்றும், தீமையினின்று பாதுகாவல் (2 தீமோ. 4:18) என்றும், ஆவி ஆத்துமா சரீரத்தில் உண்டாகும் சர்வாங்க சுகம் (அப். 3:16) என்றும் அர்த்தங்களுண்டாம்.

நம்மைமுற்றும் முடிய இரட்சிக்கும்படியாகவும், நமக்கு சர்வாங்க சுகமளிக்கும்படியாகவும் இயேசுகிறிஸ்து நமக்கு தந்தருளப்பட்டிருக்கிறார். எல்லா மனுஷரும் சுகமாயிருக்க வேண்டுமென்று, தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார். அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (ஏசாயா 53:5) என்றும்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் (1 பேதுரு 2:24) என்றும்; நானே உனக்குச் சுகமளிக்கும் கர்த்தர் என்று பொருள்படும் நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் (யாத். 15:26) என்றும்; பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல, நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் (3 யோவான் 2) என்றும் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இரட்சிக்கப்பட்ட தேவ ஜனம் சுகமாயிருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருந்தாலும், பலவிதமான சூழ்நிலைகளில் தேவனுடைய பிள்ளைகள் சரீரப்

பலவீனங்களாலும், மனஅழுத்தம் (Depression) என்னும் நோயினாலும், விபத்துக்களினாலும் பாதிக்கப்பட்டிருக்கிறதை அறிவோம். விசுவாசிகளான நாம், இவ்விதமான சூழ்நிலைகளில், என்ன செய்ய வேண்டும்?

எளிதான முதல் நிலை, நம்மைநாமே தேவனுடைய சந்நிதானத்தில் சோதித்தறிந்து கர்த்தரிடத்தில் திரும்புவோம்; அவரே நம்மைக் குணமாக்குவார். அவருடைய இரக்கத்திற்கும் மனதுருக்கத்திற்கும், மன்னிப்பிற்கும், அவருடைய வார்த்தையும், சுகமளிக்கும் வல்லமையும் வெளிப்படுவதற்கும் காத்திருப்போம். அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை (புலம்பல் 3:22); அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார் (ஏசாயா 55:7); அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார் (சங்கீதம் 107:20). அல்லேலூயா!

## கர்த்தரிடத்தில் திரும்புவோம்

எல்லாச் சுகவீனங்களும் பலவீனங்களும் விபத்துக்களும் பாவத்தினாலும் சாபத்தினாலும் வருகிறது என்பது உண்மைக்கு புறம்பானது என்று நாம் அறிவோம். ஆனாலும், தேவஜனத்தின் வாழ்வில் காணப்படும் மன்னிக்கப்படாத பாவங்களும் சாபங்களும், அவர்களுடைய வாழ்வில் சர்வாங்க சுகத்தைப் பெற்றுக்கொள்ள தடையாகவே உள்ளது. இயேசுகிறிஸ்துவின் இவ்வுலக ஊழிய நாட்களில் நடந்த சில சம்பவங்களில், சரீர சுகத்தையருளும் முன்னர், மனுஷருடைய பாவங்களை அவர் மன்னிக்கிறதைக் காண்கிறோம்.

திமிர்வாதக்காரனின் பாவங்கள் அவனுக்கு மன்னிக்கப்பட்ட போது, இயேசுவின் மூலம் அவன் அற்புதசுகம் பெற்றான் (மத்தேயு 9:27). முப்பத்தெட்டு வருஷம் வியாதி கொண்டிருந்த மனுஷனை எருசலேமில் பெதஸ்தா குளத்தினருகே இயேசு கண்டு சுகப்படுத்திய பின்னர் இயேசு அவனைத் தேவாலயத்தில் கண்டு: இதோ, நீ சொஸ்தமானாய், அதிகக் கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்றார் (யோவான் 5:14). கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்; அவரே நம்மைக் குணமாக்குவார் என்று எழுதப்பட்டிருக்கிறது. முதல்நிலையில், பரிசுத்தமான தேவஜனம், தேவனுடைய இரக்கத்திற்காகவும்,

சுகமளிக்கும் வல்லமைவெளிப்படும்படியாகவும் காத்திருக்கையில், அறிந்த, உணர்த்தப்பட்ட பாவங்களை அறிக்கைசெய்து ஒப்புரவாக அழைப்பைப் பெற்றிருக்கிறோம்.

கர்த்தர் தயவுள்ளவரென்பதை ருசிபார்த்த பரிசுத்தவான் களுக்கு எழுதும்போது பேதுரு அப்போஸ்தலன், சகல துர்க்குணத்தையும் சகலவித கபடத்தையும் வஞ்சகங்களையும் பொறாமைகளையும் சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட ஆலோசனை சொல்லுகிறார் (1 பேதுரு 2:1-3). மேலும், பரிசுத்த பவுல் கொரிந்து சபைக்குக் கர்த்தருடைய இராப்போஜனத்தைக் குறித்து எழுதும்போதும் அபாத்திரமாய்ப் போஜனம் பண்ணுகிறவன் தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனம் பண்ணுகிறான் என்று எச்சரிக்கிறார். இதனிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள் (1 கொரி. 11:30) என்றும் எழுதியிருக்கிறார்.

கொலை களவு விக்கிரக ஆராதனை விபச்சாரம் போன்ற பாவங்கள் ஒருவேளை நமக்குள் இல்லாவிட்டாலும், புறங்கூறுதல் பொறாமை மன்னியாமை இச்சை கசப்பு வைராக்கியம் போன்றவைகள், நாம் கர்த்தரிடத்திலிருந்து சர்வாங்க சுகத்தைப் பெற்றுக்கொள்ளத் தடையாகவே செயல்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் சுகமளிக்கும் வல்லமைவிசுவாசிகளுடைய சரீரங்களில் வெளிப்பட்டு அவர்கள் குணமடைவதற்கு மாறாக, இவ்வகையான மன்னிக்கப்படாத குறைகள் அதிக ஆக்கினைக்குட் படுத்துகிறது.

அநேக ஆண்டுகளுக்கு முன்னர், தீராத கை வலியினால் பல மாதங்கள் அவதியுற்ற சகோதரி ஒருவர், ஒரு தேவமனிதரிடம் ஜெபிக்கச் சென்றார்கள். அப்பொழுது, சகோதரியின் உறவினர் அவர்களுக்கு விரோதமாகச் செய்த காரியங்களினிமித்தம் சகோதரி சஞ்சலப்பட்டு, கசப்புணர்வோடு இருப்பதைக் கர்த்தர் வெளிப்படுத்தினார். இதை உணர்ந்து கர்த்தரிடத்தில் மன்னிக்க வேண்டியபோதே, மருத்துவருக்கு அதிகம் செலவளித்தும் குணமாகாத கை வலி நீங்கி, சகோதரி உடனே அற்புதசுகம் பெற்றார்கள். அல்லேலூயா!

## பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்

நாம் சுகமாயிருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. தேவனுடைய பிள்ளைகள், வாழ்வில் பலவிதமான சரீரப்பலவீனங்களினாலும் மன நோவினாலும் பாதிக்கப்படும்போது, தாங்கள் அறிந்த தங்களுக்கு உணர்த்தப்பட்ட பாவங்களை அறிக்கையிட்டுத் தேவனோடு ஒப்புரவாகிறார்கள். கர்த்தரிடத்தில் இவ்விதமாகத் திரும்பினபோதும், நாம் விரும்பிக் காத்திருக்கிற சுகத்தைப் பெற்றுக்கொள்ளாதபோது, என்ன செய்யவேண்டும்?

மாயையயான இவ்வுலகில் பொய்யாய் நாம் நம்பியிருக்கிற வைகளையும், நம்மை நம்பப்பண்ணுகிறவற்றையும், கிறிஸ்துவுக்குள் நிதானித்தறிந்து, வஞ்சகத்திற்குத் தப்பி, கர்த்தரையே நம்பி ஜீவிக்க, செயல்பட அழைக்கப்படுகிறோம்.

அதிநவீனமான உலகில், பிசாசானவன் தந்திரமாக நம்மைநம்பப்பண்ணுகிற பொய்களையும், மாயையயான உலகத் தோற்றத்தையும், விபரீதமான கணிப்புகளின் வஞ்சகத்தையும் கண்டறிந்து, அவற்றிற்கு விலகி, தேவனுக்குக் கீழ்ப்படிந் திருப்போம்; பிசாசுக்கு எதிர்த்து நிற்போம்; அப்பொழுது அவன் நம்மைவிட்டு ஓடிப்போவான்.

நம்மில் அநேகர், பல நேரங்களில், நம் சரீரங்களில் காணப்படும் மாற்றங்களையும் அறிகுறிகளையும் (Symptoms) நாம் அறிந்த முன் நடந்த சம்பவங்களோடும் முடிவுகளோடும் ஒப்பிட்டுப் பார்த்து; பாதகமான முடிவுகள் நமக்கும் நேரிடும் என்று தவறாக எண்ணி கலங்கித் தவிக்கிறோம். இவ்விதமான எண்ணங்களைத் தவிர்த்து, கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசம் உள்ளவர்களாய்ச் செயல்பட அழைக்கப்படுகிறோம்.

பிசாசானவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமா யிருக்கிறான் (யோவான் 8:44). பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார் (1 யோவான் 3:8). ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்; அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான் (யாக்கோபு 4:7) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

## தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்

பல ஆண்டுகளுக்கு முன்னர், ஊழியர் ஒருவரின் மகன் கால்வலியுடன் சோர்வோடு காணப்பட்டான். அவனுடன் பள்ளியில் படித்த அநேக மாணவர்கள் அந்நாளில் ஒற்றம்மைஎன்று சொல்லப்படும் வியாதியால் பாதிக்கப்பட்டிருந்தனர். வாழ்வில் ஒருமுறையே அந்த நோய் வரும் என்ற செய்தியையும், தன் மகனுக்கு இதுவரை ஒற்றம்மைவந்ததில்லை என்பதையும், கால் வலியும் உடல் சோர்வும் இதற்கு அறிகுறி என்பதையும், சக மாணவர்கள் அநேகர் இதனால் தாக்கப்பட்டிருந்தனர் என்றும் ஊழியர் அறிந்திருந்தார். சூழ்நிலை மற்றும் அறிகுறிகளைக் கண்டு தன் மகனுக்கும் ஒற்றம்மைவரும் என்று ஊழியர் நம்பினார்.

அப்பொழுது ஜெபிக்கும்படியாகக் கர்த்தருடைய சந்நிதானத்தில் ஊழியர் காத்திருந்தபோது, கர்த்தர் ஊழியரின் தவறை உணர்த்தினார். பிசாசானவன் எவ்விதமாகப் பொய்யான தோற்றங்களினாலும், ஆதாரமற்ற செய்திகளாலும், ஊழியரை வஞ்சித்து, அவரே தன் மகனுக்குப் பலவீனம் வரும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கும் அவலநிலைக்குத் தள்ளினான் என்பதைக் கர்த்தர் ஊழியருக்கு விளங்கச்செய்தார். கர்த்தருடைய ஆலோசனையின்படி ஊழியர் எல்லாத் தவறான எண்ணங்களையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்தி, பிசாசின் கிரியைகளைக் கடிந்துரைத்து ஜெபித்தபோது, மகன் சோர்வுகள் நீங்கிப் பூரண சுகமடைந்தான். தவறாக எதிர்பார்த்த பாதகங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டார். அல்லேலூயா!

தேவனுடைய பிள்ளைகளாகிய நாமும், பலவேளைகளில் இவ்வண்ணமாகவே செயல்படுகிறோம். பலவிதமான சரீரப் பலவீனங்களும், பொருளாதாரப் பின்னடைவும், வேலை ஸ்தலப் பிரச்சனைகளும் நம்மைநெருக்கும்போது அவற்றால் வாழ்வில் ஏற்படவிருக்கும் விளைவுகளைத் தோற்றத்தால் நிதானித்தறிந்து கலங்கித் தவிக்காமல், அந்த எண்ணங்களையும் சூழ்நிலையையும் கர்த்தரிடத்தில் அர்ப்பணித்துக் காத்திருப்போம். இவைகள் எந்நிலையிலும், கர்த்தர் மேல் நமக்குள்ள விசுவாசத்தைப் பாதிக்காதபடி, நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து பிசாசுக்கு எதிர்த்து நிற்கக் கற்றுக்கொள்ளுவோம்.

## கர்த்தர் ஆலோசனையில் ஆச்சரியமானவர்

நம்முடைய ஆவி ஆத்துமா சரீரங்களில் சர்வாங்க சுகத்துடன் இருப்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. நம்மில் அநேகர், நாம் அறிந்த நமக்கு உணர்த்தப்பட்ட பாவங்களிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவிச் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறோம். பிசாசானவன் தந்திரமாக நம்மில் விதைத்த தவறான எண்ணங்களிலிருந்தும், அதின் விளைவாக நம்மில் தோன்றிய அவிசுவாசத்திலிருந்தும், தேவனுடைய ஒத்தாசையோடு பிசாசுக்கு எதிர்த்து நின்று ஜெயங்கொண்டிருக்கிறோம். எனினும் நம்மில் சிலர், சரீர பலவீனங்களுக்கும் சுகவீனங்களுக்கும் இன்னும் வேறு பாதகங்களுக்கும் உட்பட்டிருக்கிறோம்.

இந்நிலையில் சோர்ந்துபோகாமல், கர்த்தர் பேரில் உள்ள விசுவாசத்தில் உறுதியாய்த் தரித்திருந்து, கர்த்தரை நோக்கிப் பார்த்து, அவருடைய ஆலோசனையையும், வழிநடத்துதலையும், பாதுகாவலையும் பெற்றுச் செயல்படுவது மிகவும் அவசியம். கர்த்தரால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை - என்ற உண்மையை நினைவிற் கொள்ளுவோம். தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை (லூக்கா 1:37). இதோ நான் மாம்சமான யாவருக்கும் கர்த்தர்; என்னால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை (எரேமியா 32:27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் ஆலோசனையில் ஆச்சரியமானவர்; செயலில் மகத்துவமானவர் (ஏசாயா 28:29). நம்முடைய வாழ்வில் இக்கட்டான நிலைகளிலும் நமக்குப் போதித்து நம்மைத் தெளிவாக வழிநடத்துகிறார். நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன் (சங்கீதம் 32:8) என்றும்; நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடது புறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும் (ஏசாயா 30:21) என்றும் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தைகள் உண்மையும், நம்பத்தக்கவைகளுமாய் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். அல்லேலூயா!

**கர்த்தர் செயலில் மகத்துவமானவர்**

கர்த்தருடைய வார்த்தையும் வழிநடத்துதலும் சரியான மருத்துவ சிகிச்சைக்கு ஏற்றவேளையில் நம்மைநடத்துகிறது. சுகத்தோடும் பாதுகாவலோடும் ஆசீர்வதிக்கப்பட்ட நிலையிலிருந்த ஒரு குடும்பத்தில் சடுதியில் புயல் வீசிற்று. தகப்பனுக்குப் புற்றுநோய் என்று கண்டறியப்பட்டது. இதற்கு முன்னரே கர்த்தர் சரியான வேளையில், அவரது மகன் குடும்பத்தினரை, வேலையினிமித்தம் வேலூர் பட்டணத்திற்குக் குடிபெயரச் செய்திருந்தார். கர்த்தர் முன்குறித்தபடி, அங்குத் தகப்பன் இலகுவாக மிகச்சிறந்த சிகிச்சைபெற்றுப் பூரண சுகமடைந்தார். கர்த்தரால் தகப்பனின் ஆயுசு நாட்களில் 15 ஆண்டுகள் கூட்டிக்கொடுக்கப்பட்டது. கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, தகப்பன் அந்த நாட்களில், இயேசுவுக்குத் தன்னை முற்றிலுமாக அர்ப்பணித்துக் குடும்பமாக நற்சாட்சி பகர்ந்தார். அல்லேலூயா!

வாழ்வின் இக்கட்டான பலவேளைகளில் செய்வதறியாது நாம் தவிக்கும்போது, கர்த்தருடைய ஆலோசனை வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கும் எளிதான வழிமுறைகளை நாம் கைக்கொண்டு சுகம்பெற நம்மை வழிநடத்துகிறது. ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தின் தலைவி மருத்துவத்துறையில் அதிகாரியாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சகோதரி தீராத தலைவலியினால் பாதிக்கப்பட்டு இரவில் தூங்கமுடியாமல் மிகவும் வேதனையோடிருந்தார்கள்; அநேக மருத்துவர்களிடம் சிகிச்சைப் பெற்றும் வந்தார்கள். மருந்துக் கடையினரே எச்சரிக்கும் அளவு சக்தி வாய்ந்த தூக்க மருந்துகளை உபயோகித்தும் தலைவலியினால் தூங்க முடியாத நிலை.

அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை, வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கும் எளிதான வழிமுறையைக் கடைப்பிடிக்க ஆலோசனையாக ஊழியர் ஒருவர் மூலம் வெளிப்பட்டது. குடும்பத்தினர் அந்த ஆலோசனையை ஏற்று, சகோதரி அவதியுற்றபோது, அவர் கணவர் தலையில் எண்ணெய் பூசி அவருக்காக ஜெபித்தார். முதல் நாளில் சிறிது சுகம் கிடைத்தது. விசுவாசத்தோடு தொடர்ந்து 2, 3 நாட்கள் இவ்வாறு எண்ணெய் பூசி ஜெபித்தபோது, சகோதரி பூரண சுகம் பெற்றார்கள். அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி

அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார் (யாக்கோபு 5:14,15) என்றும்; அநேகம் பிசாசுகளைத் துரத்தி, அநேகம் நோயாளிகளை எண்ணெய் பூசிச் சொஸ்தமாக்கினார்கள் (மாற்கு 6:13) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. அல்லேலூயா!

### கர்த்தருக்கே காத்திரு

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, தேவனுடைய பிள்ளைகளாகிய நீங்களும் நானும், நம்முடைய ஆத்துமா வாழ்கிறதுபோல, நாம் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருப்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. கர்த்தரிடத்திலிருந்து பிரத்தியேகமான பாவத்தைக் குறித்த உணர்த்துதலோ அல்லது சரியான மருத்துவ சிகிச்சைக்கான ஆலோசனையோ அல்லது வேதாகமத்தின் வழிமுறைகளைக் கடைப்பிடித்து விசுவாசத்தில் சுகம்பெற ஆலோசனையோ வெளிப்படாதபட்சத்தில், பொறுமையோடு கர்த்தருடைய வேளைக்குக் காத்திருக்க அழைக்கப்படுகிறோம்.

கர்த்தரோ உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார் (2 தெச. 3:3). மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு இயேசுவானவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால், அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார் (எபிரெயர் 7:25) என்று எழுதப்பட்டிருக்கிறது.

நாம் கடந்துசெல்லும் நெருக்கமான காலங்களும் சூழ்நிலைகளும் தேவனுடைய நாமமகிமைக்காக அனுமதிக்கப்பட்டிருக்க வாய்ப்பிருக்கிறது. பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம் என்று இயேசுவின் சீஷர்கள் அவரிடத்தில் கேட்டார்கள். இயேசு பிரதியுத்தரமாக: இது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான் (யோவான் 9:1-3) என்றார். பின்னர் இயேசு அவனுக்குப் பார்வையளித்தபோது அவன்: பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்

பட்டதில்லையே (யோவான் 9:32) என்று வியந்து தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தினான்.

**நீ வெட்கப்படுவதில்லை!**

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே, சகோதரியே, நீயும் ஒருவேளை இவ்விதமாக பலவீனங்களுக்குட்பட்டு வேதனையான நிலையில் இருக்கலாம். மனங்கலங்காதே, உன் இரட்சகரும் மீட்பரும், தாயின் கர்ப்பத்திலேயே உன்னைப் பிரித்தெடுத்தவருமாகிய கர்த்தர் உன்னை நேசிக்கிறார். கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார். தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் (1 கொரி.10:13) என்று எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து கர்த்தருக்கே காத்திரு (சங்கீதம் 27:14) என்று எழுதப்பட்டிருக்கிறது. நான் கர்த்தர், எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை என்பதை அப்பொழுது அறிந்துகொள்வாய் (ஏசாயா 49:23) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆம், பிரியமானவர்களே, ஆவி ஆத்துமா சரீரத்திலே சர்வாங்க சுகம் பெற காத்திருப்பவர்கள் வெட்கப்படுவதில்லை. மேலும், காத்திருப்பின் வேளை ஓர் ஆசீர்வாதமான வேளை. இந்த வேளையில்தான், கர்த்தர் நம்மைஅவருக்கேற்ற பாத்திரங்களாக மாற்றுகிறார். விசுவாசத்தையும் பொறுமையையும் அன்பையும் கூட்டி வழங்க நம்மையும் இயேசுவைப்போலாக்குகிறார். நம்முடைய வாழ்வில் பயத்தை நீக்குகிறார். நம்மைப்போல பாடனுபவிக்கும் அநேகரைத் திடப்படுத்தி வழிநடத்த நம்மையும் உபயோகிக்கிறார். காத்திருப்பின் நாட்களில் இயேசுவோடுள்ள உறவின் நிலைகள் பூரணப்பட உதவிசெய்கிறார். இப்பேர்ப்பட்ட கிருபைகளைக் கர்த்தர் நமக்கு நிறைவாகத் தந்து, நம்முடைய விசுவாசத்தையும் இரட்சிப்பையும் சரீர சுகத்தையும் காத்துக்கொள்ள உதவி செய்வாராக. ஆமென். அல்லேலூயா!

# 7. கர்த்தரை நம்பி நன்மைசெய்!

கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன்
நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான் (எரேமியா 17:7).
பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு,
நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவிதமான
சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக
(ரோமர் 15:13) ஆமென்.

## கர்த்தர் எசேக்கியாவோடு இருந்தார்

கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னர் அசீரியா ஒரு வல்லரசாக இருந்தது. அசீரியர் தாங்களையடுத்த கிழக்கத்திய நாடுகளையும், இஸ்ரவேல் நாட்டின் வடபகுதியிலிருந்த கோத்திரங்களையும் மேற்கொண்டு அவர்களுடைய ஆளுகைக்குட்படுத்தி வந்தார்கள். அசீரிய ராஜாவாகிய சனகெரிப், யூதாவின் அரணான சகல பட்டணங்களுக்கும் விரோதமாய் வந்து அவைகளைப் பிடித்தான். யூதா தேசத்தில், எருசலேமுக்கு விரோதமாகவும் அசீரியர் எழும்பி வெளிப்படையாகத் தேவனுக்கு விரோதமாகப் பேசி அவரை நிந்தித்தார்கள்.

அந்நாட்களில் எசேக்கியா யூதாவின் ராஜாவாக இருந்தான். அவன் தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களி லெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை.

எசேக்கியா ராஜா கர்த்தரைவிட்டுப் பின்வாங்காமல் அவரைச் சார்ந்திருந்து, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தான். ஆகையால், கர்த்தர் அவனோடிருந்தார். அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு

அநுகூலமாயிற்று. அவன் அசீரிய ராஜாவைச் சேவிக்காமல், அவன் அதிகாரத்தைத் தள்ளிவிட்டான்.

### எசேக்கியா செய்ததெல்லாம் வாய்த்தது

எசேக்கியா தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நன்மையும் செம்மையும் உண்மையுமானதைச் செய்தான். எசேக்கியா செய்ததெல்லாம் வாய்த்தது (2 நாளாகமம் 32:30) என வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. எசேக்கியா ராஜா செய்த நன்மைகளும், அவனுடைய எல்லா வல்லமையும், அவனுடைய குணாதிசயங்களும் வேதாகமத்தில் நாளாகமப் புஸ்தகத்திலும் (2 நாளாகமம் 29-32 அதிகாரங்கள்), ராஜாக்களின் புஸ்தகத்திலும் (2 ராஜாக்கள் 18-20), ஏசாயா தீர்க்கதரிசன நூலிலும் (ஏசாயா 36-39) எழுதப்பட்டிருக்கிறது.

எசேக்கியா கர்த்தரை நம்பினான், கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொண்டான். ராஜாவும் ஜனங்களும் கீதவாத்தியங்களோடு கர்த்தரைத் துதித்துக்கொண்டிருந்தார்கள். எசேக்கியா, தான் கர்த்தருக்கென்று தன் ஆஸ்தியிலிருந்து எடுத்துக் கொடுத்ததுமல்லாமல், ஜனங்களும் கொடுக்கக் கட்டளையிட்டான். கர்த்தரை நம்பிச் சோர்ந்துபோகாமல் செயல்பட்டான். இப்படியாகக் கர்த்தர் எசேக்கியாவோடிருந்தபடியால், யூதா தேசமும் குடிகளும் கர்த்தரைப்பற்றிக்கொண்டார்கள்; கர்த்தரால் சத்துருக்களின் தாக்குதல்களுக்குத் தப்பி ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, இதை வாசிக்கிற நீயும் இந்நாளில், சத்துருவின் நிந்தைக்கும், தூஷணங்களுக்கும் உட்பட்டு, அனுதினமும் எதிராளியின் அச்சுறுத்தலுக்கும் ஆக்கிரமிப்புக்கும் அஞ்சி தவிக்கிறாயா? மனங்கலங்காதே! கர்த்தரை நம்பி நன்மைசெய். எசேக்கியாவைப் போன்று, கர்த்தருடைய கற்பனைகளையும் ஆலோசனைகளையும் கைக்கொண்டு, கர்த்தரை எக்காலத்திலும் துதித்து ஸ்தோத்திரி. அவர் உன் சிறையிருப்பை மாற்றுவார்; உன் கட்டுகளை அவிழ்த்துப்போடுவார். கர்த்தருக்கென உற்சாகமாய்க் கொடு; கர்த்தர் வானத்தின் பலகணிகளைத் திறந்து உன்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கப்பண்ணுவார். நன்மைசெய்கிறதில் சோர்ந்து போகாதே, தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்பாய். அல்லேலூயா!

**எசேக்கியா கர்த்தரை நம்பினான்**

எசேக்கியா ராஜா வாழ்வில் பெற்ற கர்த்தரின் வழிநடத்துதலுக்கும், வாக்குத்தத்தங்களுக்கும், ஆசீர்வாத நன்மைகளுக்கும் கர்த்தர் அவனோடிருந்ததே காரணமாகும். கர்த்தர்பேரில் எசேக்கியா வைத்திருந்த உறுதியான நம்பிக்கையினாலும், கர்த்தருடைய பிரமாணங்களை அறிந்ததோடல்லாமல், அவற்றை வாழ்வில் கைக்கொண்டு அதன்படி செய்ததாலேயும், கர்த்தரோடுள்ள அவன் உறவு பூரணப்பட்டிருந்தது.

தேவனோடுள்ள இவ்வகையான உறவு ஸ்தாபிக்கப்பட்டுப் பராமரிக்கப்படாத பட்சத்தில்; கர்த்தரைத் துதிப்பதும், கர்த்தருக்கெனக் கொடுப்பதும், கர்த்தருக்காகச் செயல்படுவதுங்கூட அர்த்தமற்ற சடங்காச்சாரமாகவும், மாய்மாலமான கிரியைகளாகவுமே இருக்கின்றன. இவைகளால் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாத நன்மைகள் தடைபடுகிறது; சிலவேளைகளில் பாதகமான கிரியைகளுங்கூட சாபங்களாக வெளிப்படுகிறது. ராஜா கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருக்கிறார். உன்னதமானவரின் தயவினால் அசைக்கப்படாதிருப்பார் (சங்கீதம் 21:7) என்று எழுதப்பட்டிருக்கிறது.

எசேக்கியா ராஜாவைப்போன்று, கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாத நன்மைகளைப் பெற்றுக்கொள்ள, முதலாவதாக நாம் கர்த்தரை நம்பி, அவரிடத்தில் அன்புகூர்ந்து, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ள அழைக்கப்படுகிறோம். இதையே நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூட கொடுக்கப்படும் (மத்தேயு 6:33) என்றார்.

கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்வது என்பது தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருக்குப் பிரியமானதைச் செய்வதேயாகும். நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம் (1 யோவான் 5:3) என்று எழுதப்பட்டிருக்கிறது. பரிசுத்தமும் உண்மையும் மனத்தாழ்மையும் சாந்தமும் உடையவர்களாய், இயேசு கிறிஸ்துவின் அன்பை நம் வாழ்வில் வெளிப்படுத்த அழைக்கப்படுகிறோம். கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

எசேக்கியா ராஜாவைப்போன்று, நம் வாழ்விலும் பணிஸ்தலங்களிலும் ஆசீர்வாத நன்மைகளை நிறைவாகப் பெற்றுக்கொள்ள, இயேசுகிறிஸ்துவின் மூலம் பரிசுத்த பிதாவோடு நமக்குள்ள உறவு பூரணப்பட நம்மைஅர்ப்பணிப்போம்.

## தேவனுடைய ராஜ்ய பணிகளுக்கு முதலிடம்

எசேக்கியா ராஜா, தன் ராஜ்யபாரத்தின் முதலாம் வருஷம் முதலாம் மாதத்தில், கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறந்து அவைகளைப் பழுது பார்த்தான் (2 நாளாகமம் 29:3). தான் பொறுப்பேற்றதும் அம்மட்டும் பூட்டப்பட்டிருந்த (2 நாளாகமம் 28:24) தேவாலயத்தைச் சீர்ப்படுத்த முற்பட்டான். தேவனுடைய ராஜ்யத்திற்கடுத்த பணிகளுக்கு முதலிடம் கொடுத்தான். ஆசாரியரையும் லேவியரையும் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளச் செய்து, கர்த்தருடைய ஆலயத்தைப் பரிசுத்தம்பண்ணி, அசுத்தமானவற்றை வெளியே கொண்டுவரச் செய்தான்.

எசேக்கியா ராஜாவின் நாட்களில் இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லாத அப்பப் பண்டிகையை ஏழுநாளளவும் மகா ஆனந்தத்தோடே ஆசரித்தார்கள். லேவியரும் ஆசாரியரும் தினந்தினம் கர்த்தருக்கென்று பேரோசையாய்த் தொனிக்கும் கீதவாத்தியங்களால் கர்த்தரைத் துதித்துக்கொண்டிருந்தார்கள் (2 நாளாகமம் 30:20,21).

அப்படியே எருசலேமில் மகா சந்தோஷம் உண்டாயிற்று; தாவீதின் குமாரனாகிய சாலொமோன் என்னும் இஸ்ரவேலுடைய ராஜாவின் நாட்கள் முதற்கொண்டு இப்படி எருசலேமில் நடந்ததில்லை. லேவியரான ஆசாரியர்கள் எழுந்து நின்று ஜனத்தை ஆசீர்வதித்தார்கள். அவர்களுடைய சத்தம் கேட்கப்பட்டு, அவர்களுடைய விண்ணப்பம் அவருடைய பரிசுத்த வாசஸ்தலமாகிய பரலோகத்தில் வந்து எட்டினது (2 நாளாகமம் 30:26,27). இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன். இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள் (ஏசாயா 43:21) என்று எழுதப்பட்டிருக்கிறது.

## கர்த்தரை எக்காலத்திலும் துதி

எக்காலத்திலும் எல்லாச் சூழ்நிலைகளிலும், துதியும் ஸ்தோத்திரமும், இரட்சிக்கப்பட்ட தேவ ஜனத்தின் அடையாளமாக

இருந்து வருகிறது. கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன். அவர் துதி எப்பொழுதும் என் வாயிலிருக்கும் (சங்கீதம் 34:1) எனச் சங்கீதக்காரன் பாடியிருக்கிறார்.

மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன் (யாக்கோபு 5: 13) என்ற வசனத்திற்கேற்ப, நன்மையான காரியங்களை வாழ்வில் பெற்றனுபவிக்கும்போது, கர்த்தரைத் துதித்து ஸ்தோத்தரித்து மகிமைப்படுத்துபவர்கள் அநேகர். அதே சமயத்தில், வாழ்வில் துன்பங்கள், நெருக்கங்கள், இழப்புகள், எதிர்ப்புகளின் மத்தியிலும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர் களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று விசுவாசித்து, அந்தச் சூழ்நிலைகளிலும் தேவனைத் துதித்து ஸ்தோத்தரிப்பவர்கள் வெகு சிலரே.

கர்த்தர் எனக்கு நன்மைசெய்தபடியால் அவரைப் பாடுவேன் (சங்கீதம் 13:6) என்று தாவீது கர்த்தரைப் பாடித் துதிக்கிறார். கர்த்தர் சிவந்த சமுத்திரத்தைப் பிளந்து, இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவே வெட்டாந்தரையிலே நடந்து போனபோது, மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரைப் புகழ்ந்து பாடினார்கள். ஆரோனின் சகோதரியான மிரியாம் என்னும் தீர்க்கதரிசி யானவளும், தன் கையிலே தம்புரை எடுத்துக்கொண்டாள்; சகல ஸ்திரீகளும் தம்புருகளோடும் நடனத்தோடும் அவளுக்குப் பின்னே புறப்பட்டுப் போனார்கள். மிரியாம் அவர்களுக்குப் பிரதி வசனமாக: கர்த்தரைப் பாடுங்கள். அவர் மகிமையாய் வெற்றிச் சிறந்தார். குதிரையையும் குதிரை வீரனையும் கடலிலே தள்ளினார் என்று பாடினாள் (யாத்திராகமம் 15: 21,22).

இவ்விதமாகக் கிறிஸ்துவுக்குள்ளான வாழ்வின் பலநிலைகளில், துதியும் ஸ்தோத்திரமும், ஆடலும் பாடலும், எக்காளத் தொனியும் ஆர்ப்பரிப்பும் வெளிப்படுகிறது. கர்த்தர் வாழ்வில் நன்மைகளைச் செய்யும்போதும், முந்தையநாட்களில் கர்த்தர் செய்த மகத்துவமான செயல்களை நினைவுகூரும்போதும் தேவனுடைய இரக்கத்தையும், மனதுருக்கத்தையும், மகிமையையும், வல்லமையையும் எண்ணி, அவரைப் பாடித் துதித்து மகிழுகிறோம். கர்த்தரைத் துதியுங்கள். அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது (சங்கீதம் 136:1). அல்லேலூயா!

## கட்டுண்டவர்களை விடுவிக்கும் துதி

தேவனுடைய பிள்ளைகள் வாழ்வில், துன்பம் நெருக்கம் இழப்புக்களின் மத்தியிலும், எதிர்ப்புகளின் இடையிலும், பலவிதமான சூழ்நிலைகளில் கட்டப்பட்ட நிலையிலும்; கர்த்தர்பேரில் உள்ள நம்பிக்கையின் நிமித்தம், தேவனை அவர்கள் துதித்துப் பாடி ஸ்தோத்தரிப்பதை நாம் காண்கிறோம். இவ்வகையான கடினமான சூழ்நிலைகளிலும், கர்த்தர் விடுவிப்பார் என்ற விசுவாசத்தில் உறுதியோடு அவர்கள் தேவனை துதித்துப் பாடினார்கள்; எக்காளம் ஊதி ஆர்ப்பரித்து மகா ஆரவாரத்தோடே தேவனை மகிமைப்படுத்தினார்கள். ஆகையால், தேவன் அவர்களுடைய தேவன் எனப்பட வெட்கப்படவில்லை.

அப்போஸ்தலனாகிய பவுலும் சீலாவும் துன்புறுத்தப்பட்டு, காவலில் வைக்கப்பட்டிருந்தபோதும், நடுராத்திரியிலே அவர்கள் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். சடிதியில் சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாகப் பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று (அப்போஸ்தலர் 16:26) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தையின்படி, தாங்களுக்கு முன்பாக அடைக்கப்பட்டிருந்த, எரிகோ பட்டணத்தைச் சுற்றி வந்து எக்காளம் ஊதுகையில், ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள். எக்காள சத்தத்தை ஜனங்கள் கேட்டு, மகா ஆரவாரத்தோடே முழங்குகையில், எரிகோ பட்டணத்தின் அலங்கம் இடிந்து விழுந்தது. உடனே ஜனங்கள் தாங்களுக்கு நேராகப் பட்டணத்தில் ஏறி பட்டணத்தைப் பிடித்தார்கள் (யோசுவா 6:20).

இதைப்போன்றே, விசுவாசிகளின் வாழ்வில் அடைக்கப்பட்ட வாசல்கள் திறக்கப்பட, நெருக்கங்கள், கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட, கர்த்தர்பேரில் உள்ள விசுவாசத்தோடு பாடித்துதிப்பதும், இயேசுவின் மனதுருக்கத்தையும், மகிமையையும், வல்லமையையும், வாக்குகளையும் நன்றியோடு நினைவுகூர்ந்து ஸ்தோத்தரிப்பதும், வாழ்வில் விடுதலையை அளிக்கிறது.

## நீ மறுபடியும் கட்டப்படுவாய்

கர்த்தர் பேரில் விசுவாசமும், பாவமன்னிப்பின் நிச்சயமும் இல்லாத பட்சத்தில், துதியும் ஸ்தோத்திரமும் பாடல்களும், மாய்மாலமான சடங்காச்சாரமாகவும், கூட்டத்தோடு சேர்ந்து அனுசரிக்கும் சம்பிரதாயமாகவும் மாற வாய்ப்பிருக்கிறது. இந்தக் கடைசி நாட்களில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகச் செயல்படுவார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே, சகோதரியே, உன் துதியும் பாடலும், ஆராதனையும் கைத்தட்டலும், ஒரு நாளும் தவறாத ஸ்தோத்திரபலிகளின் அறிக்கையும், அர்த்தமற்ற சடங்காக மாறாமலிருக்க, பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு உன்னை ஆராய்ந்தறிய ஒப்புக் கொடுப்பாயா? உன்னுடைய உள்ளத்திலிருந்து வெளிப்படும் துதியும் பாடலும் ஸ்தோத்திரமும், இம்மட்டும் நீ வாஞ்சித்த விடுதலையையும் ஆசீர்வாத நன்மைகளையும் உன் வாழ்வில் தராத பட்சத்தில், தயவாய் உன்னை இயேசுகிறிஸ்துவின் திருஇரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட அர்ப்பணிப்பாயா?

ஒப்புக்கொடுக்கிற உன்னை, பாவத்தைக் குறித்துக் கண்டித்து உணர்த்துகிற பரிசுத்த ஆவியானவர், தேற்றிப் பலப்படுத்தி ஆசீர்வதிப்பார். மறுபடியும் உன்னைக் கட்டுவிப்பேன். நீ கட்டப்படுவாய். மறுபடியும் நீ மேளவாத்தியத்தோடும் ஆடல் பாடல் செய்கிறவர்களின் களிப்புள்ள கூட்டத்தோடும் புறப்படுவாய் (எரேமியா 31:4) என்று கர்த்தர் சொல்லுகிறார். அல்லேலூயா!

## அவர்கள் கர்த்தருக்கென கொடுத்தார்கள்

எசேக்கியா ராஜா கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடியே, அந்திசந்திகளில் செலுத்தவேண்டிய சர்வாங்க தகனபலிகளுக்கும், ஓய்வுநாட்களிலும், மாதப் பிறப்புக்களிலும் பண்டிகைகளிலும் செலுத்தவேண்டிய தகனபலிகளுக்கும் தன் ஆஸ்தியிலிருந்து எடுத்துத் தன் பங்கைக் கொடுத்தான்.

மேலும், ஆசாரியரும் லேவியரும் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை உற்சாகமாய்க் கைக்கொள்ளும்படி,

அவர்களுக்குரிய பாகத்தைக் கொடுக்க ஜனங்களுக்கும் எருசலேமின் குடிகளுக்கும் கட்டளையிட்டான். இந்த வார்த்தை பிரசித்தமானபோது, இஸ்ரவேல் புத்திரர் தானியத்திலும் திராட்சரசத்திலும் எண்ணெயிலும் தேனிலும், நிலத்தின் எல்லா வரத்திலும் முதற்பலன்களைத் திரளாகக் கொண்டுவந்து, சகலத்திலும் தசமபாகத்தைப் பரிபூரணமாய்க் கொடுத்தார்கள். (2 நாளாகமம் 31:3-5). இவ்விதமாய்ச் சேகரிக்கப்பட்ட காணிக்கைகளையும் தசமபாகத்தையும், பரிசுத்தம் பண்ணப்பட்டவைகளையும் எடுத்து வைக்க, எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்தில் பண்டகசாலைகளை ஆயத்தப் படுத்தினான் (2 நாளாகமம் 31:11,12).

தேவனுடைய ராஜ்யத்திற்கடுத்த பணிகளுக்கு கொடுப்பதில் ராஜா முன்மாதிரியாகக் கொடுத்து மகிழ்ந்தான். தேவாலயம் பராமரிக்கப்படவும், தேவாலயத்தின் அன்றாட பணிகள் சிறப்பாக நடந்தேறவும், ஊழியர்களும் உற்சாகமாய்த் தாங்கள் பணிகளை நிறைவேற்றவும், கர்த்தருடைய கற்பனைகளின்படி, ராஜா தன் ஆஸ்தியிலிருந்து தன் பங்கைக் கொடுத்தான்.

## கொடுங்கள், உங்களுக்கும் கொடுக்கப்படும்

கர்த்தரைப் பாடித் துதிப்பதையும், தொழுது ஸ்தோத்தரிப்பதையும் போன்றே, கர்த்தருக்கென்று மனப்பூர்வமாயும் உற்சாகமாயும் கொடுப்பதும், மீட்கப்பட்ட தேவஜனம், கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாத நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் ஒரு வாய்ப்பாக, வழியாக வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது.

என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களை எல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள். அப்பொழுது நான், வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோ என்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (மல்கியா 3:10). என்று எழுதப்பட்டிருக்கிறது.

வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டின் கற்பனைகள், கிறிஸ்துவுக்குள்ளான புதிய வாழ்வின் நிழலாட்டம் என்றுணராது, தசமபாகம் மற்றும் காணிக்கைகளுக்கு முக்கியத்துவம்

கொடுக்காதவர்கள் உண்டு. "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என பழைய ஏற்பாட்டின் கற்பனைகளைத் தெளிவுபடுத்திய நம் நாதர் இயேசு சொன்னதுபோல, காணிக்கையைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல்: அவனவன் விசனமாயுமல்ல கட்டாயமாயுமல்ல; தன் மனதிலே நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (2 கொரிந்தியர் 9:7) என்று எழுதியிருக்கிறார். இவ்வசனத்தின் அடிப்படையில், தங்கள் வருமானத்தின் தசமபாகத்தைக் காட்டிலும் மிகவும் அதிகமாக உற்சாகமாய்க் கொடுத்து ஆசீர்வதிக்கப்பட்டவர்களும் அநேகர் உண்டு.

## உள்ளவற்றில் உற்சாகமாய்க் கொடுங்கள்

வேதாகமத்தில் தங்கள் ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியஞ்செய்து கொண்டுவந்த ஸ்திரீகள் என்று லூக்கா 8:3ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கர்த்தர் நமக்கு வாழ்வில் தந்தருளின செல்வம் மற்றும் உடைமைகளிலிருந்தும், வருமானத்திலிருந்தும், கர்த்தருக்கென மனப்பூர்வமாய்க் காணிக்கை செலுத்த அழைக்கப்படுகிறோம். செலுத்தும்போது நமக்கு உள்ளவற்றில் மேலானவைகளையும் சிறந்தவைகளையும் உற்சாகமாய்க் கொடுப்பது அவசியமாயிருக்கிறது. தேவன் நாம் கொடுக்கிற தொகை அல்லது அதன் மதிப்பைக் கவனியாமல் அது கொடுக்கப்பட்டதின் நோக்கத்தையும் அர்ப்பணிப்பையும் சூழ்நிலைகளையும் கவனித்தறிகிறார்.

இரண்டு காசுதான் என்றாலும், உள்ளவை எல்லாவற்றையும் உற்சாகமாய்க் காணிக்கைப் பெட்டியில் போட்ட ஏழை விதவை இயேசுவின் நற்சாட்சி பெற்றாள் (லூக்கா 21:4). அதே நிலையில், தங்களது காணியாட்சியை விற்றதில் கிடைத்த தொகையில் பெரும் பங்கைக் கர்த்தருக்கெனச் செலுத்தினபோதும், அதில் ஒரு பங்கை வஞ்சித்துத் தங்களுக்கென வைத்துப் பொய் சொன்னபடியால், அனனியாவும், சப்பீராளும் தங்கள் ஜீவனையே இழந்துபோக வேண்டியதாயிற்று (அப்போஸ்தலர் 5:1-10).

கிறிஸ்தவ வாழ்வு முறையில், துதி ஸ்தோத்திரங்களைப் போன்றே, காணிக்கைகளும், தசமபாகங்களும், ஆசீர்வாத நன்மைகளுக்கு வழியாக இருக்கிறது. ஆனாலும்,

இதைக்காட்டிலும் மிகவும் முக்கியமானது, நாம் இயேசு கிறிஸ்துவின் மூலமாய்ப் பரிசுத்த பிதாவோடு இணைக்கப்பட்டு இரட்சிப்பின் நிச்சயத்தோடு வாழ்ந்து, வாழ்வின் நிறைவில் நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளவேண்டும் என்பதே. இயேசுவோடு இணைக்கப்படாத பட்சத்தில், நம்முடைய துதியும் பாடலும் ஆராதனையும், காணிக்கைகளும், தசமபாகமும், மற்ற நற்கிரியைகளும் அனுசரிப்புகளுங்கூட வாழ்வில் அர்த்தமற்றதாகிறது.

## கர்த்தர் அங்கீகரிக்கும் காணிக்கை

கர்த்தருக்கென மனப்பூர்வமாய் விசுவாசத்தோடு செலுத்தப்படும் காணிக்கையைக் கர்த்தர் அங்கீகரிக்கிறார். விசுவாசத்திற்கும் அர்ப்பணிப்பிற்கும் புறம்பான காணிக்கை அங்கீகரிக்கப்படுவதில்லை. விசுவாசத்தினாலே ஆபேல், காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியைத் தேவனுக்குச் செலுத்தினான். அவனுடைய காணிக்கைகளைக் குறித்து தேவனே சாட்சி கொடுத்தார் (எபிரெயர் 11:4).

ஆபேல் தன் மந்தையில் மேலானவைகளில் சிறந்தவற்றைக் கர்த்தருக்கென அர்ப்பணித்தான். அவன் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொடுத்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார். காயீன் நிலத்தின் கனிகளைக் கொண்டுவந்தான். காயீனையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரிக்கவில்லை.

மனுஷன் முகத்தைப் பார்க்கிறான்; காணிக்கைகளின் புறம்பான தோற்றத்தை, மதிப்பை, அளவைப் பார்க்கிறான். கர்த்தரோ, கொடுக்கிற இருதயத்தையும் அர்ப்பணிப்பையும் கவனித்தறிகிறார். இதைப்போன்றே, வஞ்சனையோடு செலுத்தப்பட்ட அனனியா சப்பீராளுடைய காணியாட்சியின் தொகையும், அவர்களும் கர்த்தரால் அங்கீகரிக்கப்படவில்லை.

தேவ மனிதரொருவர் தான் அறிந்த விசுவாசியின் தசமபாகக் காணிக்கையைக்குறித்துச் சற்றுக் கலங்கியிருந்தார். மாதந்தோறும் அந்த விசுவாசி இருபங்கு தசமபாகம் கொடுத்து வந்தபோதும், வேதவாக்கின்படி வாழ்வில் ஆசீர்வாத நன்மைகளைப்

பெறவில்லை. தசமபாகம் தான் சார்ந்திருந்த சபைக்கும், மற்றொரு தசமபாகக் காணிக்கையை, அருகிலிருந்த வாரந்தோறும் ஆராதிக்கும் சபைக்கும் கொடுத்து வந்தார். கர்த்தருடைய வாக்கின்படி நன்மைகளைப் பெற்றுக்கொள்ளாமலிருக்கப் பல காரணங்களும் தடைகளுமிருக்க வாய்ப்பிருக்கிறது. ஆனாலும், சகோதரர் முதலாவது தன்னை மறுபடியும் பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு ஆராய்ந்தறிந்து, கர்த்தருக்குத் தன்னை அர்ப்பணிப்பதே மிகவும் அவசியமானதாக இருந்தது. விசுவாசத்திற்கும் அர்ப்பணிப்புக்கும் புறம்பான காணிக்கை கர்த்தரால் அங்கீகரிக்கப்படுவதில்லை.

எந்தச் சபைக்கு ஊழியத்திற்கு, ஊழியருக்கு தசமபாகம் மற்றும் காணிக்கைகளைக் கொடுக்கவேண்டும் என்பதும் அநேக விசுவாசிகளது வாழ்வில் எழும் கேள்வியாக இருக்கிறது. பலவிதமான ஆலோசனைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும், நிர்ப்பந்தங்களுக்கும் இடையே, கர்த்தரோடுள்ள உறவில் இணைக்கப்பட்டிருக்கும் தேவனுடைய பிள்ளைகள், கர்த்தருடைய தனிப்பட்ட ஆலோசனைக்காக வேண்டிநிற்கும்போது, கர்த்தர் தெளிவாக வழிநடத்த வல்லவராயிருக்கிறார். கர்த்தர் உண்மையுள்ளவர்; அவர் அப்படியே செய்வார். பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல! அல்லேலூயா!

**ஆசீர்வாதத்தின் வழி – காணிக்கை**

கர்த்தருக்கெனக் காணிக்கை செலுத்துவதின் நோக்கம் தேவனுடைய தேவைகளைச் சந்திப்பது அல்ல என்பதை அறிந்து கவனமாய் செயல்பட அழைக்கப்படுகிறோம். இதற்கு முற்றிலும் மாறாக, இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள், ஆசீர்வாத நன்மைகளை நிறைவாகப் பெற்றுக்கொள்ள கர்த்தரால் கொடுக்கப்பட்டிருக்கிற வழியே காணிக்கையாகும்.

நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன்; பூமியும் அதின் நிறைவும் என்னுடையவைகளே (சங்கீதம் 50:12) என்று கர்த்தர் சொல்லுகிறார். மேலும், தசமபாகங்களைக் கொண்டுவாருங்கள்; வானத்தின் பலகணிகளைத் திறந்து இடம் கொள்ளாமற்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோ என்று அதினால் என்னைச் சோதித்துப்

பாருங்கள் (மல்கியா 3:10) என்கிறார். நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவும்: கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார் (லூக்கா 6:38). சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான்; பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான் (2 கொரி. 9:6) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் தன் வாரிசும் ஏகசுதனும் நேசக்குமாரனுமாகிய ஈசாக்கை இழக்க அர்ப்பணித்த வேளையில், அவனைத் திரும்பப் பெற்றுக்கொண்டது மட்டுமல்லாமல், வம்சங்களும் தேசங்களும் அவனுக்கு ஆசீர்வாதமாகக் கொடுக்கப்பட்டது. கர்த்தரின் பர்வதத்திலே பார்த்துக் கொள்ளப்படும் என அர்த்தங்கொள்ளும் யேகோவாயீரே-வாகிய தேவன் இன்றும் நம்மோடிருக்கிறார். அல்லேலூயா!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, இயேசுகிறிஸ்துவின் திருரத்தத்தால் மீட்கப்பட்ட நிலையில், கர்த்தருக்கென்று உற்சாகத்தோடு மனப்பூர்வமாய்க் கொடுக்க அர்ப்பணித்திருக்கிற உன்னைக் கர்த்தர் ஆசீர்வதிப்பார். நிறைவான ஆசீர்வாத நன்மைகளை கர்த்தரிடத்திலிருந்து நீ பெற்றுக்கொள்வாய்! கிறிஸ்துவுக்காய் இழந்தவர் எவரும், கொடுத்தவர் எவரும், தரித்திரரானதில்லை, நஷ்டப்பட்டதில்லை அல்லேலூயா! ஆமென்!

# 8. ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்!

நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய
பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய
தேவனுக்குமுன்பாக நம்மைராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின
அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும்
உண்டாயிருப்பதாக. ஆமென் (வெளி 1 : 6).

## ராஜாக்கள் ஆசாரியர்கள்

இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டு தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிற நமக்கு, நம்முடைய பாவங்களைப் பரிசுத்த ஆவியானவர் உணர்த்துகிறார். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நம்மைவிட்டு நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு இயேசுகிறிஸ்து உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (1 யோவான் 1 : 9).

நம்முடைய அவல பாவ நிலைமையை உணர்ந்து பாவங்களை அறிக்கையிட்டுக் கர்த்தரிடத்தில் நம்மைஒப்புக்கொடுக்கும்போது, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவிச் சுத்திகரிக்கப் படுகிறோம். இயேசு நம்மைராஜாக்களும் ஆசாரியர்களுமாக்குகிறார். நம்மிடத்தில் அவர் அன்புகூர்ந்து, தமது சொந்த இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக்கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்குகிறார்.

ஆம் பிரியமானவர்களே, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவிச் சுத்திகரிக்கப்பட்ட நீங்களும் நானும், பரிசுத்த பிதாவாகிய தேவனுக்கு முன்பாக ராஜாக்களாக ஆசாரியர்களாக அறியப்பட்டிருக்கிறோம், ஏற்படுத்தப்பட்டிருக்கிறோம்.

ஆட்டுக்குட்டியானவர் நம்மைதேவனுக்கென்று தம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டார். எங்கள் தேவனுக்குமுன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்ற புதியபாட்டைப் பாடினார்கள் (வெளி 5 : 10) என்று எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சாட்சியின் வசனத்தினாலும் செய்கையினாலும், உபவாசத்தோடும் ஜெபத்தோடும் துதியோடும், ராஜரீகமான ஆசாரியர்களாக, நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற எல்லைகளிலும் காலங்களிலும் செயல்பட நாம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறோம். அல்லேலூயா!

## நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்

நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் (1 பேதுரு 2:9) என்று பேதுரு எழுதிவைத்திருக்கிறார்.

இங்கு "நீங்களோ" என்று பேதுரு குறிப்பிடுவது,இந்த வசனத்தை இந்நாளிலும் வாசித்து தியானிக்கும்படியான கிருபையைப்பெற்ற உங்களையும் என்னையும் குறிக்கிறது. நாம் கர்த்தர் தயையுள்ளவரென்பதை ருசிபார்த்தவர்கள்; சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும் வஞ்சகங்களையும் பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு கிறிஸ்துவுக்குள்ளாக ஆவியில் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருக்க ஆலோசனை பெற்றவர்கள். மேலும் நாம், ஜீவனுள்ள கல்லாகிய இயேசுகிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள். மூலைக்கல்லாகிய இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசமாயிருக்கிற நாம் வெட்கப்படுவதில்லை. அல்லேலூயா!

## பரிசுத்த ஜாதி, சொந்தமான ஜனம்

தேவஜனம் கர்த்தருடைய வாக்கைக்கேட்டு அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொள்ளும்போது, கட்டளைகளைக்

கைக்கொண்டு அவர் வழிகளில் நடக்கும்போது, கர்த்தர் அவர்களைப் பரிசுத்த ஜாதியாக, சொந்தமான ஜனமாக, நிலைப்படுத்துவார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து பிரயாணப்பட்டு வந்தபோது கர்த்தர் மோசேயைக் கூப்பிட்டு: நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள், பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள் என்றார் (யாத். 19:5,6).

மேலும்: நீ உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவர் வழிகளில் நடக்கும்போது, கர்த்தர் உனக்கு ஆணையிட்டபடியே, உன்னைத் தமக்குப் பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார். அப்பொழுது கர்த்தருடைய நாமம் உனக்குத் தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு, உனக்குப் பயப்படுவார்கள் (உபாகமம் 28:9,10) என்று எழுதப்பட்டிருக்கிறது. அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் (யாக்கோபு 1:22) என்ற ஆலோசனையையும் பெற்றிருக்கிறோம்.

திருவசனத்தைக் கேட்டு அதின்படி செய்கிறவர்கள்; கர்த்தரின் வாக்கைக் கேட்டு அவர் உடன்படிக்கையைக் கைக்கொள்ளுகிறவர்கள்; கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டு அவர் வழிகளில் நடக்கிறவர்கள்; அவருக்குப் பரிசுத்த ஜாதியாயும் பரிசுத்த ஜனமுமாக இருப்பார்கள், கர்த்தருடைய நாமம் நமக்குத் தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு நமக்குப் பயப்படுவார்கள்.

கர்த்தருடைய நாமம் என்ன? ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின் மேலும் அவருடைய தொடையின் மேலும் எழுதப்பட்டிருந்தது (வெளி. 19:16). மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டவர் (எபிரெயர் 5:10). ஆம் பிரியமானவர்களே, ராஜாக்கள் ஆசாரியர்கள் என்ற நாமம்

நமக்கும் தரிக்கப்படுகிறது. ராஜரீகமான ஆசாரிய கூட்டமாயும், தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாகவும், பரிசுத்த ஜாதியாகவும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் நாம் இருக்கிறோம். அல்லேலூயா!

**புண்ணியங்களை அறிவிக்கும் கூட்டம்**

கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக் கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது (சங்கீதம் 33:12) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த பாக்கியமும் சிலாக்கியமும் பெற்ற ராஜாக்களும் ஆசாரியர்களுமான நமக்குக் கர்த்தர் கொடுத்திருக்கும் பணி என்ன? எதற்காகக் கர்த்தர் நம்மைத் தெரிந்துகொண்டார்?

அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படியாகக் கர்த்தர் நம்மைத் தெரிந்துகொண்டிருக்கிறார். புண்ணியங்கள் என்பது இங்கு, நம் வாழ்வில் அற்புதங்களைச் செய்யும் கர்த்தருடைய வல்லமையைக் குறிக்கிறது. ஆங்கிலத்தில் இது "Proclaim Praises- துதிகளைப் பிரஸ்தாபிக்கும்படியாக" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. புண்ணியங்களை அறிவித்தல் என்பது நம் வாழ்வில் கர்த்தர் செய்த அற்புதங்களை, அவருடைய மகத்துவங்களைத் துதியைச் சொல்லி வருவதாகும். இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள் (ஏசாயா 43:21) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

தனிமனிதனின் வாழ்வில் கர்த்தர் நடப்பிக்கிற சிறந்த காரியம், பாவ சாபங்களிலிருந்து அவர் நமக்கருளும் விடுதலையே. கர்த்தரைப் பாடி, அவருடைய நாமத்தை ஸ்தோத்தரித்து நாளுக்கு நாள் - இந்த விடுதலையை - அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள் (சங்கீதம் 96:2) என்று எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தர் தயவுள்ளவரென்பதை ருசிபார்த்து, அவருடைய சொந்த ஜனமாக, பரிசுத்த ஜாதியாக, அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாக இருக்கிற நாம் செய்யவேண்டியது, இயேசுகிறிஸ்துவினால் நாம் பெற்ற விடுதலையை நற்செய்தியாக

அறிவிப்பதேயாகும். நமக்கு இரட்சிப்பைத் தந்து அழைத்தவருக்குத் துதியைச் செலுத்தவும்; அவருடைய புண்ணியங்களையும் துதியையும் அன்பையும், அவருடைய சிறந்த தன்மைகளையும் மற்றவர்களுக்கு அறிவிக்கும்படியாகவும் அழைப்பைப் பெற்றிருக்கிறோம்.

## யோசபாத் ராஜரீகமான ஆசாரியன்

வேதாகமத்தில் இரண்டு நாளாகமம் 17 முதல் 20 அதிகாரங்களில், யோசபாத் ராஜா யூதாவில் ஆட்சிசெய்த விவரங்கள் எழுதப்பட்டிருக்கிறது. யோசபாத் ஒரு ராஜரீகமான ஆசாரியனாகச் செயல்பட்டு, கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச் செய்தான். கர்த்தர் யோசபாத்தோடிருந்தார்; அவன் பாகால்களைத் தேடாமல், தன் தகப்பனாகிய தாவீது முன் நாட்களில் நடந்த வழிகளில் நடந்து, தன் தகப்பனுடைய தேவனைத் தேடி, இஸ்ரவேலுடைய செய்கையின்படி நடவாமல், அவருடைய கற்பனையின்படி நடந்து கொண்டான். ஆகையால் கர்த்தர் அவன் கையில் ராஜ்யபாரத்தைத் திடப்படுத்தினார். கர்த்தருடைய வழிகளில் அவன் இருதயம் உற்சாகங்கொண்டது; அவன் மேடைகளையும் விக்கிரகத்தோப்புகளையும் யூதாவை விட்டகற்றினான் (2 நாளாகமம் 17:4-6).

கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவர் வழிகளில் நடந்த யோசபாத் ராஜாவைக் கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்தினார். கர்த்தருடைய நாமம் அவனுக்குத் தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு அவனுக்கு பயப்பட்டார்கள் (2 நாளாகமம் 17:10).

யோசபாத் ராஜரீகமான ஆசாரியனாகத் தன்னை விளங்கப்பண்ணினான். தேவனைத் தேடினான்; கர்த்தருடைய வழிகளில் அவன் இருதயம் உற்சாகம் கொண்டது. இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் என்ற வாக்கின்படி, தன்னை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கச் செய்தான்; ராஜாவாகிய தானும் அறிவித்தான்.

மேலும் யோசபாத் ராஜா, கர்த்தருடைய சித்தத்தை, வழிநடத்துதலைத் திட்டமும் தெளிவுமாக விசாரித்தறிந்து

அதன்படியே செய்ய தன்னை ஒப்புக்கொடுத்தான். அதற்கு மேலான நிலைகளுக்கும் சென்று, தேவனுக்குப் பிரியமானவை களைச் செய்து தேவனை மகிமைப்படுத்தினான்.

## கர்த்தரின் புண்ணியங்களை அறிவித்தான்

யோசபாத் தன்னோடிருந்த தேவனை, தன்னை இக்கட்டுகளிலிருந்து விடுவித்த தேவனுடைய மகத்துவங்களை ஜனங்களுக்கு அறிவிக்கச் செய்தான்; ராஜாவாகிய தானும் ஜனத்திற்குள்ளே பிரயாணமாய்ப் போய் அறிவித்தான்.

யோசபாத் தான் அரசாண்ட மூன்றாம் வருஷத்தில் யூதாவின் பட்டணங்களிலே உபதேசம்பண்ணும்படிக்கு, அவன் தன் பிரபுக்களையும் லேவியரையும் ஆசாரியரையும் அனுப்பினான். இவர்கள் யூதாவிலே உபதேசித்து, கர்த்தருடைய வேத புஸ்தகத்தை வைத்துக்கொண்டு, யூதாவின் பட்டணங்களி லெல்லாம் திரிந்து ஜனங்களுக்குப் போதித்தார்கள் (2 நாளாகமம் 17:7-9). இவ்விதமாக யோசபாத் யூதா தேசமெங்கும் கர்த்தருடையப் பிரமாணங்களையும் அவருடைய மகத்துவங் களையும் ஜனங்களுக்கு விளங்கப்பண்ணினான்.

இதன் பின்னர் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப், யோசபாத்தைத் தன்னுடனே சீரியாவின் ராஜாவிற்கு விரோதமாக வரும்படி ஏவினான். யோசபாத் கர்த்தருடைய வார்த்தையை இன்றைக்கு விசாரித்து அறியும் என்று அவனிடம் சொன்னான். அப்பொழுது நானூறு தீர்க்கதரிசிகள் தேவன் ராமோத்தை ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றார்கள். யோசபாத் இவர்களின் சொல்லை நம்பாது, கர்த்தருடைய தீர்க்கதரிசி வேறே யாராகிலும் இங்கே இல்லையா என்று கேட்டான். மிகாயா என்ற தீர்க்கதரிசியை அழைத்து ஆணையிட்டு விசாரித்தபோது அவன் நன்மையாக அல்ல, தீமையாகத் தீர்க்கதரிசனம் சொன்னான்.

ஆனாலும் இதைக் கேளாது இஸ்ரவேலின் ராஜாவும் யோசபாத்தும் யுத்தத்தில் பிரவேசித்தார்கள். சீரிய இரதங்களின் தலைவர்கள் யோசபாத்தைச் சூழ்ந்துகொண்டார்கள். அப்பொழுது அவன் கூக்குரலிட்டான். கர்த்தர் அவனுக்கு அநுசாரியாயிருந்தார். அவர்கள் அவனைவிட்டு விலகும்படி தேவன் செய்தார். அன்றையதினம் யுத்தம் அதிகரித்தது; இஸ்ரவேலின் ராஜா

காயப்பட்டு இறந்துபோனான். இந்த சம்பவத்திற்குப் பின்னர் யோசபாத் ராஜா இன்னும் உணர்வடைந்து, கர்த்தருடைய வழிகளில் நடக்கத் தன்னை மறுபடியும் அர்ப்பணித்தான்.

### யோசபாத்தின் சீர்திருத்த முயற்சி

தேவனுடைய மகத்துவங்களை அம்மட்டும் பிரபுக்கள் லேவியர் ஆசாரியர் மூலமாக யோசபாத் ஜனத்திற்குள்ளே அறிவிக்கச் செய்து வந்தான். யுத்தத்தில் துன்மார்க்கனுக்குத் துணை நின்றதினால் கர்த்தருடைய கடுங்கோபம் அவன்மேல் வர இருந்தது. ஆனாலும் அவன் விக்கிரகத்தோப்புகளைத் தேசத்தை விட்டு அகற்றியதினிமித்தம் தப்பினான். இந்தச் சம்பவத்தினால் ராஜா மேலும் உணர்வடைந்து, ராஜரீகமான ஆசாரியனாகத் தானே பிரயாணமாய்ப் போய் ஜனங்களைக் கர்த்தரிடத்தில் திரும்பப்பண்ணினான்.

யோசபாத் எருசலேமிலே வாசமாயிருந்து, திரும்பப் பெயர்செபா தொடங்கி, எப்பிராயீம் மலைத்தேசமட்டுமுள்ள ஜனத்திற்குள்ளே பிரயாணமாய்ப் போய், அவர்களைத் தாங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திரும்பப் பண்ணினான் (2 நாளாகமம் 19:4). மேலும், யூதாவின் அரணான பட்டணங்களில் நியாயாதிபதிகளை நியமித்து நியாயஸ்தலங்களை ஏற்படுத்தினான். எருசலேமிலே மத்திய நியாயஸ்தலத்தையும் உண்டாக்கினான்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமான பரிசுத்த தேவனின் புண்ணியங்களை அறிவிக்கும்படியாக ராஜரீகமான ஆசாரியராக நியமிக்கப்பட்டிருக்கும் உன்னுடைய நிலை என்ன? அனுதினமும் வாழ்வில் நீ கற்றறியும் தேவனைப்பற்றிய உண்மைகள், உனக்குள்ளாக மாற்றங்களை ஏற்படுத்துகிறதா? ராஜாவாகிய யோசபாத் உணர்வடைந்தபோது, தானே பிரயாணப்பட்டுக் கர்த்தரிடத்திற்கு ஜனங்களைத் திரும்பப் பண்ணினான். கள்ளப்போதகர்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஒருபுறம் தேவஜனத்தை வஞ்சித்து திசைத் திருப்புகிறதையும், மறுபுறம் நம்பிக்கைத் துரோகமும் சுய பிரஸ்தாபங்களும் உண்மையற்ற நிலையும் ஊழியங்களில் பெருகிவரும் இந்தக் கடைசி நாட்களில், இன்னும் அர்ப்பணிப்போடு இயேசு

கிறிஸ்துவை அறிவிக்க உன்னை நீ ஒப்புக்கொடுப்பாயா? அர்ப்பணிக்கிற உன்னைக் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

**யோசபாத்தின் ஆசாரியத்துவம்**

யோசபாத் ராஜாவின் நாட்களில் மோவாபியரும் அம்மோனியரும் சீரியாவிலிருந்தவர்களும், யூதாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தார்கள். ராஜரீகமான ஆசாரியனான யோசபாத், ராஜாவாக யுத்தத்திற்குத் தன் ஜனங்களை ஆயத்தப்படுத்துவதற்கு முன்பாக, ஆசாரியனாகக் கர்த்தரைத்தேட ஜனங்களை ஒருமுகப்படுத்துகிறதை 2 நாளாகமம் 20ஆம் அதிகாரத்தில் காண்கின்றோம்.

தன்னுடைய படைபலத்திற்கும் திராணிக்கும் மேலாக சத்துருக்கள் யோசபாத் ராஜாவிற்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தபோது யோசபாத் பயந்து, கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமுகப்பட்டு, யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறி அறிவித்தான். அப்படியே யூதா ஜனங்கள் கர்த்தரிடத்திலே சகாயந்தேடக் கூடினார்கள், யூதாவிலுள்ள எல்லாப் பட்டணங்களிலும் இருந்த அவர்கள் கர்த்தரைத் தேடவந்தார்கள் (2 நாளாகமம் 20:3,4).

அப்பொழுது யோசபாத் கர்த்தருடைய ஆலயத்திலே புதுப்பிராகாரத்து முகப்பிலே, யூதா ஜனங்களும் எருசலேமியரும் கூடின சபையிலே நின்று தேவனிடத்தில் விண்ணப்பித்தான். கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமனப்பட்டு, உபவாசத்துடன் கர்த்தரைத்தேடினான். ராஜா ஜனங்களுக்காக, தேசத்திற்காக ஆசாரியனாகத் தேவனுடைய ஆலயத்திலே நின்று ஜெபித்தான்.

எங்கள் தேவனே, அவர்களை நீர் நியாயந்தீர்க்கமாட்டீரோ? எங்களுக்கு விரோதமாக வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெலனில்லை, நாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை; ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது என்றான் (2 நாளாகமம் 20:12).

அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை வெளிப்பட்டது. நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்; இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது. இந்த யுத்தத்தைப்

பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல, யூதா மனுஷரே, எருசலேம் ஜனங்களே, நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்; நாளைக்கு அவர்களுக்கு எதிராகப் புறப்படுங்கள்; கர்த்தர் உங்களோடே இருக்கிறார் என்றான் (2 நாளாகமம் 20:15,17).

அப்பொழுது யோசபாத் ராஜாவும் குடிகளும் கர்த்தரைப் பணிந்துகொள்ளக் கர்த்தருக்கு முன்பாகத் தாழவிழுந்தார்கள். லேவியர் எழுந்திருந்து இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மகா சத்தத்தோடே கெம்பீரமாய்த் துதித்தார்கள். உபவாசமும் ஜெபமும் துதியும் அவர்களது போராயுதங்களாக இருந்தது. அல்லேலூயா!

## மேலானவைகளையே செய்ய நாடுங்கள்

யோசபாத் கர்த்தருடைய வழிநடத்துதலை விசாரித்தறிந்து அதன்படி செய்ய தன்னை அர்ப்பணித்தான். நாளைக்கு நீங்கள் அவர்களுக்கு விரோதமாய்ப் போங்கள் என்ற வார்த்தை வெளிப்பட்டது. யோசபாத் கர்த்தருடைய வழிநடத்துதலின்படி செய்ய முற்பட்டதுமல்லாமல், கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற இன்னும் மேலானவைகளைச் செய்ய நாடினான்.

யுத்த வீரரையும் ஜனங்களையும் நோக்கி: தேவனாகிய கர்த்தரை நம்புங்கள்; அப்பொழுது நிலைப்படுவீர்கள் என்று சொல்லி உற்சாகப்படுத்தினான். மேலும் பரிசுத்தமுள்ள மகத்துவத்தைத் துதிக்கவும், ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்பாக நடந்துபோய், கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளதென்று கர்த்தரைப் பாடவும், பாடகரை நிறுத்தினான்.

அவர்கள் பாடித் துதிசெய்யத் தொடங்கினபோது, யூதாவுக்கு விரோதமாய் வந்து பதிவிருந்த அம்மோன் புத்திரரையும் மோவாபியரையும் சேயீர் மலைத்தேசத்தாரையும் ஒருவருக்கு விரோதமாய் ஒருவரைக் கர்த்தர் எழும்பப்பண்ணினதால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, உன்னுடைய திறமைக்கும் திராணிக்கும் பலத்துக்கும் மேலான நெருக்கங்கள் வாழ்வில் ஏற்படும்போது நீ

என்ன செய்வாய்? யோசபாத்தைப்போன்று முதலாவது கர்த்தரைத் தேடுகிறதற்கும் உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் கர்த்தரைத் துதிப்பதற்கும் உன்னை அர்ப்பணிப்பாயா? ராஜரீகமான ஆசாரியத்துவம் உன் வாழ்வின் நெருக்கங்களில் வெளிப்பட்டு, கர்த்தருக்கே துதி கனம் புகழ் மகிமையை உண்டாக்கட்டும்.

வாழ்வின் எல்லா நிலைகளிலும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவது என்பது விசுவாசிகளாகிய நம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனாலும் ராஜரீகமான ஆசாரியராக அழைக்கப்பட்டிருக்கிற நாம், தேவசித்தத்தைச் செய்கிறது மட்டுமல்லாமல், தேவனுடைய இருதயத்திற்கேற்ற நற்காரியங்களை, அவர் விரும்புகிற எல்லைகளிலும் காலகட்டங்களிலும் செய்து முடிக்க அழைப்பைப் பெற்றிருக்கிறோம். அல்லேலூயா! ஆமென்.

# 9. இழந்துபோனதைத் தேடி இரட்சிக்கும் இயேசு!

கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு
அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே
கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி,
ஸ்திரப்படுத்தி பலப்படுத்தி நிலைநிறுத்துவாராக.
அவருக்கு மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும்
உண்டாயிருப்பதாக. ஆமென் . (1 பேதுரு 5:10,11).

## இரட்சிப்பின் நிறைவு

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் கர்த்தருடைய பெரிதான கிருபையினாலே, கர்த்தருடைய வார்த்தைக்கும் அழைப்பிற்கும் செவிகொடுத்து, நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டுள்ளோம். மனந்திரும்பின நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, அவருடைய இரத்தத்தினாலே கழுவிச் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறோம். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல (எபேசியர் 2:8,9) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இவ்வண்ணமாக இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், உலகத்தின் முடிவுபரியந்தம் அல்லது வாழ்வின் இறுதிவரை விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும் உண்மையிலும் அன்பிலும் நிலைத்திருந்து, இரட்சிப்பின் நிறைவைப் பெற்றுக்கொள்ள வாஞ்சிக்கிறோம். முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான் (மத்தேயு 24:13) என நம்முடைய இரட்சகர் சொல்லியிருக்கிறார். கிறிஸ்துவுக்குள் நமக்குத் தந்தருளப்பட்ட இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம்

கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம் (எபிரெயர் 2:4) என்று எழுதப்பட்டிருக்கிறது.

கிருபையினாலே இலவசமாக நமக்கருளப்பட்ட இரட்சிப்பில் நிலைத்திருக்கவும், இந்த இரட்சிப்பு பூரணப்பட்டு வாக்கருளப்பட்ட நித்தியஜீவனை நாம் பெற்றுக்கொள்ளவும் அழைக்கப் பட்டிருக்கிறோம். ஆதலால் எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே,... பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள் (பிலிப்பியர் 2:12) என்று பவுல் எழுதியிருக்கிறார்.

## தீமையை உன் நடுவிலிருந்து விலக்கு

கர்த்தருக்குப் பயந்து, தீமையை வெறுத்து, பயத்தோடும் நடுக்கத்தோடும் நமக்கருளப்பட்ட இரட்சிப்பு பூரணப்படும்படி நாம் பிரயாசப்பட வேதாகமம் நம்மைவலியுறுத்துகிறது. தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் என்று எழுதப்பட்டிருக்கிறது. இரட்சிப்பு தேவனுடைய ஈவாக இலவசமாகத் தந்தருளப்பட்டாலும், இரட்சிப்பில் நாம் நிலைத்திருக்க, பரிசுத்தமாக நம்மைக் காத்துக்கொள்ள, மனமுவந்து நம்மைஅர்ப்பணித்து செயல்படுவது அவசியமாக இருக்கிறது. பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும்விட்டு விலகுங்கள் (1 தெச. 5:22) என்று பவுல் எச்சரிக்கிறார்.

தேவமனிதர் ஒருவர் தன் வாலிபப்பருவத்தில் கப்பற்படையில் பணியாற்றி வந்தார். குடும்பத்தைப் பிரிந்து உலகின் கீழ்த்திசைப் பகுதிகளில் கப்பலில் இருந்த அவருக்கு, அதிகமான ஓய்வு நேரமும், பாவ வாழ்வில் சிக்கிக்கொள்ள அதிக வாய்ப்புகளும் இருந்தன. தன்னுடைய சரீர இச்சைகளை முழு மனதோடு ஒடுக்கிக் கீழ்ப்படுத்தாதபட்சத்தில், தானும் பாவத்தில் வீழ்ந்து ஆகாதவனாய்ப் போவேன் என்று உணர்ந்தார். ஓய்வு நேரங்களில் வேதத்தை வாசிக்கவும், வேத வசனங்களை மனப்பாடம் செய்யவும் தன் மனதைக் கீழ்ப்படுத்தினார்.

அனுதினமும் பொல்லாங்காய்த் தோன்றினவற்றைத் தவிர்க்க, கூடுதலான கர்த்தருடைய ஒத்தாசைக்காகவும் கிருபைக்காகவும் ஜெபம்பண்ணினார். தெருக்களில் நடந்துசெல்லும்போது, மாமிச இச்சைகளைத் தூண்டும் காட்சிகளைத் தவிர்க்க, வேகமாக நடந்து

சென்ற நாட்களும் உண்டாம். இது நடைமுறைக்குக் கடினமாக இருந்தாலும், பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள கர்த்தருக்குள் கொண்ட வைராக்கியம், நிறைவான பலனைத் தந்ததாக அந்த தேவமனிதர் எழுதியிருக்கிறார்.

மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் (1 கொரி.9:27) என்று பவுலும் தன் அனுபவத்தை வெளிப்படுத்துகிறார். தீமையை விட்டு விலகி நன்மைசெய். சமாதானத்தைத்தேடி அதைத் தொடர்ந்துகொள் (சங்கீதம் 34:14) என்றும், தீமையை விட்டு விலகி நன்மைசெய், என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய் (சங்கீதம் 37:27) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

## தேடி வந்து இரட்சிக்கும் இயேசு

பாவமான வாழ்விலிருந்து மீட்கப்பட்டுப் பரிசுத்தத்துடன் தேவனுக்குகந்தவர்களாக வாழ தங்களை அர்ப்பணித்திருக்கிற தேவனுடைய பிள்ளைகள், மறுபடியும் பாவ வாழ்விற்குட்பட்டு தேவனுக்கு விரோதமாகச் செயல்படும்போது, கர்த்தரால் கடிந்துரைக்கப்படுகிறார்கள். அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன்னுடைய அக்கிரமங்களில் துணிந்து நடக்கிறவன், கர்த்தருடைய சிட்சைக்குட்படுகிறான். கர்த்தர் கடிந்துகொள்ளும்போது மனம்சோர்ந்து, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணும் போது, சடிதியான நாசத்துக்கும், பேரழிவுக்கும் உட்படுகிறான்.

தேவகிருபையின் நாட்களில் வாழும் நமக்குக் கொடுக்கப்பட்ட பெரிய சிலாக்கியம், பரிசுத்த ஆவியானவர் மூலமாகக் கர்த்தர் நமக்கு அருளும் ஆறுதலும் தேறுதலும் வழிநடத்துதலுமே. பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் (யோவான் 16:8) என்று நம் இரட்சகர் சொல்லியிருக்கிறார்.

மீட்கப்பட்ட தேவஜனம் இரட்சிப்பின் பாதையில் செல்லும்போது, வழிதவறிச் சென்றுவிடாதபடி, ஒவ்வொரு நிலையிலும் க ர்த்தருடைய எச்சரிப்பின் சத்தம் தொனித்துக் கொண்டேயிருக்கிறது. பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப்

போதித்து, நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே என்று இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற உன் மீட்பரான கர்த்தர் சொல்லுகிறார் (ஏசாயா 48:17) என்று எழுதப்பட்டிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார் (1தீமோ. 2:4).

மேலும், இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார் (லூக்கா 19:10) என்று இயேசு சொல்லியிருக்கிறார். நிச்சயமாகவே, இயேசுவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டு அவருடைய பிள்ளைகளாயிருக்கிற எந்த ஓர் ஆத்துமாவையும் தேடி இரட்சிக்கக் கர்த்தர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

முதல் நிலையில், பாதைதெரியாமல் வழி தவறிச் சென்றவர்களுக்குக் கர்த்தர் ஆலோசனை தந்து வழி நடத்துகிறார். அடுத்து, ஆலோசனைகளைப் புறக்கணித்தவர்களைக் கர்த்தர் கடிந்துரைத்துச் சீர்ப்படுத்துகிறார். கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவன் அறியாது பரலோக ராஜ்யத்தின் விதிமுறைகளுக்குப் புறம்பாகச் செயல்படும்போதும், அவனைக் கர்த்தர் சிட்சித்து தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார். இதோ, தேவன் மனுஷனுடைய ஆத்துமாவைப் படுகுழிக்கு விலக்குகிறதற்கும், அவனை ஜீவனுள்ளோரின் வெளிச்சத்தினாலே பிரகாசிப்பிக்கிறதற்கும், அவர் இவைகளையெல்லாம் அவனிடத்தில் பலமுறை நடப்பிக்கிறார் (யோபு 33: 29,30) என்று எழுதப்பட்டிருக்கிறது.

**கர்த்தருடைய ஆலோசனை**

ஆடுகள் மேய்ப்பனின் சத்தத்தை அறிந்திருக்கிறபடியே, மீட்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளும், தங்களை மிகவும் அதிகமாக நேசிக்கிற கர்த்தரின் சத்தத்தை அறிவார்கள். அவர்கள் திசைமாறிச் செல்லுகிற வேளைகளில் கர்த்தருடைய சத்தம் அவர்களை எச்சரிக்கிறது. நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்; வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும் (ஏசாயா 30:21) என்று எழுதப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் இயேசுவின் மார்க்கத்தாரைக் கண்டுபிடித்தால் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்கு பாதையில் செல்லுகையில் கர்த்தர் அவருக்கு இடைப்பட்டார். அப்பொழுது பவுலுடன் கூட இருந்தவர்கள், சடிதியாய் வானத்திலிருந்து உண்டான வெளிச்சத்தைக் கண்டு பயமடைந்தார்கள்; பவுலோடு பேசின கர்த்தருடைய சத்தத்தையோ அவர்கள் கேட்கவில்லை (அப்.22:9). கர்த்தர் பவுலுக்குத் தெளிவாக ஆலோசனையருளி வழிநடத்தினதை வேதாகமத்தில் வாசிக்கிறோம். கர்த்தர் ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவமானவர்!

பின்னர், பவுல் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, தன் பாவங்கள் போகக் கழுவப்பட்டார் (அப். 22:16). பவுல் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இயேசுவின் நாமத்தை அறிவிக்கிறதற்காகக் கர்த்தரால் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருந்தார். தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மில் அநேகரும், நம்முடைய ஆவிக்குரிய வாழ்விலும் ஊழியத்திலும் கர்த்தருடைய ஆலோசனையை அனுதினமும் பெற்று வழிநடத்தப்படுகிறோம். அல்லேலூயா!

## கர்த்தருடைய கடிந்துகொள்ளுதல்

கர்த்தரால் நேசிக்கப்பட்டும், கர்த்தருடைய ஆலோசனைக்குச் செவிகொடாதவர்களையும், செவிகொடுத்தும் அவற்றிற்குக் கீழ்ப்படியாதவர்களையும், கர்த்தர் கடிந்துகொள்ளுகிறார். கர்த்தருடைய கற்பனைகளை விட்டு வழிவிலகின சபிக்கப்பட்ட அகங்காரிகளைக் கர்த்தர் கடிந்துகொள்ளுகிறார் (சங்கீதம் 119:21). அதேவேளையில், கர்த்தருடைய கடிந்துகொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனோ கனமடைவான் (நீதி.13:18) என்றும்; கர்த்தருடைய கடிந்துகொள்ளுதலைக் கேட்கிறவனோ ஞானமடைவான் (நீதி.15:32) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பூமியில் இயேசுகிறிஸ்து தன்னுடைய ஊழியத்தின் நாட்களில், பன்னிருவரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கும்படியாக அவர்களை ஏற்படுத்தினார். இந்தப் பன்னிருவரிலும் மூவர், பேதுருவும் யாக்கோபும் யோவானும், இயேசுவோடு ஊழியத்தில் முக்கியமான நிகழ்வுகளில் பங்குபெற்றார்கள். மறுரூபமலையிலும், மரித்த யவீருவின்

மகளை உயிர்த்தெழச் செய்தபோதும், கெத்சமனே தோட்டத்தில் ஜெபிக்கும்போதும், இவர்கள் இயேசுவோடு இருந்தார்கள். கர்த்தரால் நேசிக்கப்பட்டு அவரோடிருந்த இந்த மூவருமே, கர்த்தரால் கடிந்துகொள்ளப்பட்டதை வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

சமாரியா கிராமத்தினர் இயேசுவை ஏற்றுக்கொள்ளாதபோது, யாக்கோபும் யோவானும், ஆண்டவரே எலியா செய்ததுபோல வானத்திலிருந்து அக்கினியை இறக்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா? என்று கேட்டார்கள். இயேசு அவர்களைத் திரும்பிப் பார்த்து: நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்கள் என்பதை அறியீர்கள் என்று அதட்டினார் (லூக்கா 9:55). கர்த்தர் தாம் நேசிக்கிறவர்கள் எவர்களோ, அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறார்.

மற்றொரு வேளையில், இயேசு தாம் எருசலேமுக்குப் போய் பாடுகள்பட்டுக் கொலையுண்டு மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதைச் சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார். அப்பொழுது பேதுரு இயேசுவைத் தனியே அழைத்துக்கொண்டு போய்; ஆண்டவரே இது உமக்கு நேரிடக் கூடாதே என்று அவரைக்கடிந்துகொள்ளத் தொடங்கினார். இயேசு பேதுருவை நோக்கி; எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே, நீ தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல், மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்று சொல்லி, அவனைக் கடிந்துகொண்டார் (மாற்கு 8:33). இதற்குச் சற்று முன்னரே, இயேசு: நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்று சொல்லியிருந்தார். ஆம், பிரியமானவர்களே, கர்த்தர் தாம் நேசிக்கிறவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறார்.

### கர்த்தருடைய சிட்சை

தேவனுடைய ராஜ்யத்தின் விதிமுறைகளின்படி தவிர்க்க வேண்டிய பாவமான செயல்களைத் தவிர்க்காது, தேவனுடைய சித்தத்திற்குப் புறம்பாகச் செயல்படும்போது, கர்த்தர் தாம் நேசிக்கிறவர்களைச் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டனைக்கு ஒப்புக்கொடுக்கிறார். நான் நேசிக்கிறவர்கள் எவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால், நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு (வெளி. 3:19) என்று கர்த்தர் எச்சரிக்கிறார்.

கர்த்தர் நேசிக்கிற தேவனுடைய பிள்ளைகள், தேவனுக்கு பிரியமில்லாதவற்றைச் செய்ய முற்படும் போதும், செய்யும் போதும், கர்த்தர் தாமேஅவர்கள் வாழ்வில் இடைபட்டு, அவர்களுடைய ஆத்துமாவை அழிவுக்கு விலக்கி மீட்க நடப்பிக்கும் செயல்களைக் கர்த்தருடைய சிட்சை எனலாம். இது தேவனுடைய பிள்ளைகளை அவர்களுடைய தவறுகளைக் குறித்து உணர்வடையச் செய்து, சீர்ப்படுத்தி வழிநடத்துகிறது. உணர்வடையாத பட்சத்தில், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்புகிற கர்த்தர், சிட்சைக்குட்படுத்தி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம் (1 கொரி. 11:32) என்று பவுல் எழுதியிருக்கிறார்.

எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும் என்ற வார்த்தையின்படி, தேவனுடைய பார்வையில் உண்மையுள்ளவர்களென்று எண்ணப்பட்டு, அவரோடு நெருங்கி ஜீவிக்கிறவர்களிடத்தில் கர்த்தர் எதிர்பார்க்கும் பரிசுத்தம், உண்மை, தாழ்மை, சாந்தம், அன்பு மற்றும் கீழ்ப்படிதல் மிகவும் அதிகமே. கர்த்தரின் எதிர்பார்ப்பில் ஏதாவதொன்று குறைவுபடும்போதும், கர்த்தருடைய சிட்சை வெளிப்படுகிறது.

**சோர்ந்து போகாதே**

என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவர் கடிந்துகொள்ளும்போது சோர்ந்துபோகாதே. தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார் (நீதி. 3:11,12) என்று எழுதப்பட்டிருக்கிறது. மேலும், எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத்தரும் (எபிரெயர் 12:11) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய சிட்சையை உணர்ந்து, நம்முடைய வழிகளைச் சீர்ப்படுத்திக் கர்த்தரோடு ஒப்புரவாகும்போது அது நீதியாகிய சமாதானத்தை நமக்கு உண்டுபண்ணும். நாம் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படுவோம். ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும்

பாவத்திற்குட்பட்டபோது, சமாதானத்தை இழந்து, பிதாவாகிய தேவனைச் சந்திக்கப் பயந்து, தங்களை ஒளித்துக் கொண்டார்கள். கர்த்தருடைய சிட்சைக்குட்பட்ட தேவஜனமும், சிட்சைக்குச் செவிகொடுத்து தாங்கள் வழிகளைத் தேவனுக்குகந்தவை களாக மாற்றும்போது, நீதியாகிய சமாதான பலனைப் பெறுகிறார்கள்; கர்த்தரோடுள்ள அவர்கள் உறவு உயிர்ப்பிக்கப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டுச் சீர்ப்படுத்தப்பட்டு ஸ்திரப்படுத்தப்படுகிறது.

## தேவனோடு ஒப்புரவாகு

இதைப்போன்ற சிட்சையை, சங்கீதக்காரன் தன் வாழ்வில், உணர்ந்தபோது: உம்மைவிட்டுப் பின் வாங்கமாட்டோம்; எங்களை உயிர்ப்பியும், அப்பொழுது உமது நாமத்தைத் தொழுதுகொள்ளுவோம் (சங்கீதம் 80:18) என்று விண்ணப்-பிக்கிறார். அதுவரை எல்லா நிலைகளிலும் ஆசீர்வதிக்கப்பட்டுப் பாதுகாவலோடு மிகவும் செழித்திருந்த வாழ்வு, சடிதியாய்ப் பாதிக்கப்பட்டது. இச்சம்பவம் சங்கீதம் 80:8-13 வசனங்களில் உவமானத்தினால் விளக்கப்பட்டிருக்கிறது.

அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்ட திராட்சக்கொடி, இடம் ஆயத்தப்படுத்தப்பட்டு நடப்பட்டது. அது வேரூன்றிச் செழித்துப் படர்ந்தது. இப்பொழுதோ, வழி நடக்கிற யாவரும் அதைப் பறிக்கும்படியாக அதின் அடைப்புகள் ஏன் தகர்க்கப்பட்டது? காட்டுப்பன்றி அதை உழுதுபோடுகிறது, வெளியின் மிருகங்கள் அதை மேய்ந்துபோடுகிறது (சங்கீதம் 80:12,13) என்று சங்கீதக்காரன் அங்கலாய்க்கிறார். திராட்சத்தோட்டத்தின் அடைப்புகள், வேலி பராமரிக்கப்படவில்லை; வழி நடக்கிறவர்கள் அதின் பிரயாசத்தின் பலனைப் பறித்துக்கொண்டார்கள்; காட்டுப்பன்றியும் வெளியின் மிருகங்களும் அதை நாசப்படுத்தியது.

ஆம் பிரியமானவர்களே, தேவனுடைய பிள்ளைகளும் தேவனுக்குப் பிரியமில்லாத செயல்களில் ஈடுபடும்போது, தீமையைப் பார்க்கமாட்டாத கர்த்தர், தம்முடைய முகத்தை மறைத்துக்கொள்ளுகிறார். அவருடைய முகப் பிரகாசம் மறைக்கப்படும்போது, காரிருள் தேவனுடைய பிள்ளைகள் வாழ்வை மூடுகிறது, தேவனுடைய பாதுகாவல் எடுக்கப்பட்டு, இருளின் கிரியைகள் வாழ்வைச் சீர்குலையச் செய்கிறது. இதை உணர்ந்த மாத்திரத்தில், உம்மைவிட்டுப் பின்வாங்கமாட்டோம்

என அவர்கள் அறிக்கையிட்டு மறுபடியும் உயிர்ப்பிக்கப்பட வேண்டுகிறார்கள்.

கர்த்தருக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே, உன்னுடைய வாழ்விலும் குடும்பத்திலும் ஊழியத்திலும், இவ்விதமாக உன்னுடைய பிரயாசத்தின் பலனை அந்நியர் அனுபவிக்கிறார்களா? காரணமில்லாமல் சடிதியான பலவீனங்கள் வாழ்வில் வெளிப்படுகிறதா? தயங்காமல் தாமதிக்காமல் கர்த்தருடைய சமுகத்தில் உன்னைத் தாழ்த்தி ஆராய்ந்தறிந்து சீர்பட உன்னை ஒப்புக்கொடுப்பாயா? ஒப்புக்கொடுக்கிற உன்னைக் கர்த்தர் மறுபடியும் கட்டுவிப்பார் ஆசீர்வதிப்பார்!

## கர்த்தருடைய இருதயத்தைச் சந்தோஷப்படுத்து

கர்த்தருடைய சிட்சையின் நோக்கம் நம்மைத் துன்புறுத்த வேண்டும் என்பது அல்ல. மாறாக, அவருடைய விருப்பம், நாம் உணர்வடைந்து மறுபடியும் கிறிஸ்துவுக்குள் கட்டப்படவேண்டும் என்பதேயாகும். கர்த்தருக்கென்று பரிசுத்தமாக வாழத் தங்களை அர்ப்பணித்திருக்கிற தேவனுடைய பிள்ளைகள், பிசாசானவனுடைய இலக்காக இருக்கிறார்கள். மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்பதைப் போல, சத்துருவானவனும் தேவமனிதர்களையும் சபை மற்றும் ஊழியத்தலைவர்களையும் குறிவைத்துச் செயல்படுகிறான்.

இந்தப் பரிசுத்தவான்களின் செயல்பாடுகளைப் பிசாசானவன் கூர்ந்து கவனித்து, இவர்களைப்பற்றி கர்த்தரிடத்தில் குற்றஞ்சாட்டுகிறவனாய் (வெளி 12:10) இருக்கிறான். இவர்களின் குற்றங்குறைகளின் நிமித்தம் கர்த்தரை நிந்திக்கிறவனாகவும் இருக்கிறான். இதனிமித்தமே கர்த்தர் என் மகனே, என்னை நிந்திக்கிறவனுக்கு நான் உத்தரவு கொடுக்கத்தக்கதாக, நீ ஞானவானாகி, என் இருதயத்தைச் சந்தோஷப்படுத்து (நீதி. 27:11) என்கிறார்.

கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம், தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படுகிற பயம். ஆகவே ஞானவானாகி என்பது,தீமையை வெறுப்பதையே குறிக்கிறது. தீமையை வெறுத்துப் பரிசுத்தராய் நாம் கர்த்தருடைய சன்னிதானத்தில் காணப்படும்போது, குற்றப்படுத்தி, நிந்திக்கிற சத்துருவானவனிடத்தில்

கர்த்தர் நம்மைக் குறித்துச் சாட்சிப்பகருவார். நம் நிமித்தமும் கர்த்தருடைய இருதயம் சந்தோஷப்படும். அல்லேலூயா!

### கிரியைகளுக்கேற்ற பலன்

தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். கர்த்தர் அளிக்கும் பலன் வாழ்வின் இறுதியில் நமக்கருளப்படும் என எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். மிகவும் நல்லது. ஆனால் கிரியைகளுக்கேற்ற பலன் இவ்வுலக வாழ்விலேயும் தந்தருளப்படும் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இயேசுவின் நிமித்தமாகவும், சுவிசேஷத்தின் நிமித்தமாகவும் இழந்தவன் எவனும் இப்பொழுது இம்மையிலே துன்பங்களோடேகூட நூறத்தனையாகப் பெற்றுக்கொண்டு மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான் (மாற்கு 10:29,30) என்று இயேசு வாக்கருளியிருக்கிறார்.

இதோ, நீதிமானுக்கு பூமியிலே சரிக்கட்டப்படுமே; துன்மார்க்கனுக்கும் பாவிக்கும் எத்தனை அதிகம் (நீதி.11:31) என்றும் மெய்யாய் நீதிமானுக்குப் பலன் உண்டென்றும், மெய்யாய் பூமியிலே நியாயஞ்செய்கிற தேவன் உண்டென்றும் மனுஷன் சொல்லுவான் (சங்கீதம் 58:11) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து நியாயத்தீர்ப்புக்கு முந்திக்கொள்ளும், சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின்தொடரும், அப்படியே சிலருடைய நற்கிரியைகளும் வெளியரங்கமாயிருக்கும், அப்படி இராதவைகளும் மறைந்திருக்க மாட்டாது (1 தீமோ. 5:24,25) என்று எழுதப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இவ்வுலக வாழ்விலேயே கர்த்தர் நம்முடைய நற்கிரியைகளுக்கேற்ற பலனைத் தரவிருக்கிறார். அதே சமயம், நம்முடைய கிரியைகள் கர்த்தருடைய சந்நிதானத்தில் ஏற்புடையதாக இல்லாதபட்சத்தில், கர்த்தரால் கடிந்துகொள்ளப்படுகிறோம், சிட்சிக்கப்படுகிறோம். கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாது, கர்த்தருடைய ஆலோசனைக்குச் செவிகொடுத்து, தேவனுக்குப் பிரியமானதையே நாம் வாழ்வில் செய்ய நம்மைஅர்ப்பணிப்போம். கர்த்தர் அப்பேர்ப்பட்ட கிருபைகளை நமக்கு நிறைவாய்த் தந்து நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென். அல்லேலூயா!

# 10. ஆலோசனையில் ஆச்சரியமானவர்!

உன் போதகர்கள் இனி ஒருபோதும் மறைந்திருக்கமாட்டார்கள்; உன் கண்கள் உன் போதகர்களைக் காணும். நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்; வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும். (ஏசாயா 30:20-21)

## கர்த்தர் வழிநடத்துகிறார்!

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்ட நாம் அனைவரும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் பெற்றிருக்கிறோம். இந்த அதிகாரத்தைப் பிரயோகித்து, தேவனுடைய பிள்ளைகள் என்கிற உறவுக்குட்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் ஆலோசனையின்படி பாவங்களை அறிக்கையிடும்போது, நம்முடைய பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்குத் தேவன் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கிறது.

தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிச்சயத்தோடு, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவி சுத்திகரிக்கப் பட்டிருக்கும் தேவஜனம், கர்த்தருடைய ஆலோசனையின்படி, முடிவுபரியந்தம் சத்தியத்திலும் விசுவாசத்திலும் நிலைத்துநின்று இரட்சிக்கப்படுகிறார்கள். இடைப்பட்ட காலத்தில் ஆலோசனையில் ஆச்சரியமும் செயலில் மகத்துவமுமான கர்த்தர் பிரயோஜனமா யிருக்கிறதை மீட்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளுக்குப் போதித்து, அவர்கள் நடக்க வேண்டிய வழியிலே அவர்களை நடத்தி, கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் அவர்களை வெற்றிச் சிறக்கப்பண்ணுகிறார். அல்லேலூயா!

## தடைகளை நீக்கிப்போடுகிற கர்த்தர்!

தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்துபோகிறார்; அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்துக் கடந்துபோவார்கள்; அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப் போவார். கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்துபோவார் (மீகா 2:13) என்று எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் வாழ்நாட்களில் மேய்ப்பர்கள், மந்தைகளின் முன்பாக நடந்து சென்று, பாதையில் காணப்படும் தடைகளை நீக்கி, ஆடுகளைப் பயமும் எந்தவிதமான சேதமுமின்றிப் பாதுகாவலோடு புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டைக்குக் கொண்டுபோய் விடுவார்களாம்.

இதைப்போன்றே, நம்முடைய மேய்ப்பரும் ராஜாவுமான கர்த்தர் நமக்கு முன்பாக நடந்து போகிறார். மீட்கப்பட்டவர்கள் தங்கள் வாழ்க்கைப்பயணத்தின் நிறைவில், நித்தியஜீவனை சுதந்தரித்துக்கொள்ள நல்ல ஆலோசனைகளைத் தந்து அவர் நம்மை வழிநடத்துகிறார். நம்முடைய ஆத்துமாவை அவர் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் நீதியின் பாதைகளில் நடத்துகிறார். கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து அதை வாழ்வில் நடப்பிக்கப் போதித்து நடத்துகிறார். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை நம்மிலும் தோன்றி வெளிப்பட ஆலோசனை அருளி வழிநடத்துகிறார். மேலும், எல்லாவிதத்திலும் நம்மைப் போஷித்து எவ்விதமான சேதமுமின்றிப் பாதுகாக்கிறார்.

## கோணலானவைகளைச் செவ்வையாக்குகிற தேவன்!

நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன். உன்னைப் பெயர்சொல்லி அழைக்கிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நானே என்று நீ அறியும்படிக்கு, வெண்கலக் கதவுகளை உடைத்து, இரும்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன் (ஏசாயா 45:2-4) என்று கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசுக்கு வாக்களித்தார்.

இவ்விதமாக தேவனால் பெயர்சொல்லி அழைப்பைப் பெற்றிருக்கிற ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும், தங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர் என்று அறியும்படிக்கு

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட அவர்கள் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் கோணலானவைகளைச் செவ்வையாக்கி, வெண்கலக் கதவுகளை உடைத்து, இரும்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் கர்த்தர் அவர்களுக்குத் தருகிறார்.

நித்தியஜீவனை அடைவது பிதாவின் சித்தம் என இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார். குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் நித்திய ஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார் (யோவான் 6:40). விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய் (1 தீமோத்தேயு 6:12) என்று அப்போஸ்தலனாகிய பவுலும் எழுதியிருக்கிறார்.

வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்தியஜீவனும், கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசமும், மீட்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளுக்கு, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களுமாய் இருக்கிறது. வெண்கலக் கதவுகளும், இரும்புத் தாழ்ப்பாள்களும், அவற்றைப் பெற்றுக்கொள்ளக் காணப்படும் தடைகளும் வாழ்வின் கோணலானவைகளுமாய் இருக்கிறது.

## விசுவாச வாழ்வின் கோணலானவைகள் எவை?

தேவசித்தத்தின்படி வாக்களிக்கப்பட்ட நித்தியஜீவனைத் தேவனுடைய பிள்ளைகள் பொக்கிஷமாக, புதையலாகப் பெற்றுக்கொள்ள, கோணலானவைகள் வாழ்வில் செவ்வை யாக்கப்பட வேண்டும். வெண்கலக் கதவுகள் உடைக்கப்பட்டு, இரும்புத் தாழ்ப்பாள்கள் முறிக்கப்படவேண்டும்.

நம்முடைய கர்த்தர் அதிசயமானவைகளைச் செய்கிறார். சத்தியமும் உறுதியுமான ஆலோசனைகளை ஏற்றவேளையில் தந்து நம்மைவழிநடத்துகிறார். இவ்விதமாக, தேவன் மனுஷனுடைய ஆத்துமாவைப் படுகுழிக்கு விலக்குகிறதற்கும், நம்மை ஜீவனுள்ளோரின் வெளிச்சத்தினாலே பிரகாசிப்பதற்கும்,

அவர் இவைகளையெல்லாம் நம்மிடத்தில் பலமுறை நடப்பிக்கிறார்.

மீட்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளின் வாழ்வில் காணப்படும் தடைகளையும், கோணலானவைகளையும், வெண்கலக் கதவுகளையும், இரும்புத் தாழ்ப்பாள்களையும் கர்த்தரே நமக்கு அடையாளங்காட்டி, ஆலோசனை அருளுகிறார்; நடக்க வேண்டிய வழியைக் காட்டுகிறார். நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன் (சங்கீதம் 32:8) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இந்தத் தடைகளை, விசுவாச வாழ்வின் கோணலான வைகளை, நான்கு குறிப்புகளாகப் பகுத்தறிந்து, தியானிப்பது நம்முடைய ஆவிக்குரிய வாழ்வுக்குப் பிரயோஜனமாய் இருக்கும். முதலாவது, வெளியரங்கமாயிருக்கிற மாம்சத்தின் கிரியைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை யென்பதை அறிந்துகொள்ளுவோம். அடுத்து, சகல துர்க்குணத்தையும் சகலவித கபடத்தையும் ஒழித்துவிட்டுத், திருவசனத்தின்மேல் வாஞ்சையாயிருக்க ஆலோசனை பெற்றிருக்கிறோம். மூன்றாவதாக கர்த்தருக்குப் பணிவிடைசெய்ய காத்திருக்கவும், நிறைவாகக் கிறிஸ்து இயேசுவின் சிந்தையோடு அன்பிலே பூரணப்பட்டுத் தேவசித்தம் செய்யவும் அழைக்கப் படுகிறோம்.

## 1. வெளியரங்கமாயிருக்கிற மாம்சத்தின் கிரியை!

தேவன் நம்மைஅசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே (எபிரெயர் 12:14) என்று எழுதப்பட்டிருக்கிறது. தேவனைத் தரிசிக்கவும், நித்தியராஜ்யத்தை அடைவதற்கும், நம்மைஅழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நம்முடைய நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருக்க நாம் அழைப்பைப் பெற்றிருக்கிறோம்.

இரட்சிக்கப்பட்ட தேவஜனத்துக்கு தேவனுடைய ஆலோசனை பரிசுத்த ஆவியானவர்மூலம் வெளிப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்

குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் (யோவான் 16:8) என்று இயேசு சொல்லியிருக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் மாம்சத்தின் கிரியைகளை வேதாகமத்தில் பட்டியலிட்டிருக்கிறார். மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன. அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன் (கலாத்தியர் 5:19-21) என்று எழுதிவைத்திருக்கிறார்.

தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவதற்கு, முதலாவது பிரதானமான தடை நம்மைப் பாவங்களுக்குட்படுத்துகிற மாம்சத்தின் கிரியைகளாகும். வேதாகமத்தில் பரிசுத்தம் ஒரு நிலையான, எளிதில் அடையக்கூடிய இலக்காக (Absolute Target) குறிப்பிடப்படாமல், எல்லையற்ற தேவனுடைய பரிசுத்தமேஇலக்கு (Infinite - Relative Target) என்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே (1 பேதுரு 1:15-16).

மேலும், நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும், பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் (வெளி 22:11) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. தேவனுடைய பிள்ளைகளின் நடக்கைகளெல்லாவற்றிலேயும் விவரிக்கக்கூடாத தேவனுடைய பரிசுத்தம் காணப்பட கர்த்தர் விரும்புகிறார்.

## பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்!

இயேசுகிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அநேக வருடங்கள் கர்த்தருக்கு ஊழியஞ் செய்துவந்த ஒரு சகோதரரின் சாட்சி சிந்திக்கவைத்தது. தன் வாழ்வில், ஊழியத்தில் காணப்பட்ட கோணலானவைகளை, தடைகளைக் கர்த்தர் நீக்கிப்போட அவர் கர்த்தரிடத்தில் வேண்டி

நின்றபோது கர்த்தர் மாம்சத்தின் கிரியைகளை விட்டுவிலகி, வாழ்வில் இன்னும் பரிசுத்தமாகவேண்டும் என உணர்த்தினாராம். முந்தின நாட்களைப்போல பாவத்தில் சிக்கிக்கொண்டதற்குக் காரணம் சொல்லி குற்றங்களை நியாயப்படுத்துவதற்கு ஏதுமில்லாது. பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகத் தெளிவாக ஆலோசனை பெற்றார். எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங்கேட்கப்படும்; மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள் (லூக்கா 12:48) என்று இயேசு சொல்லியிருக்கிறார்.

ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம் என்கிற வசனத்தின்படி, அந்தச் சகோதரர் கர்த்தருடைய ஆலோசனையை மனதளவில் ஏற்றுக்கொண்டு செயல்பட ஆரம்பித்தபோதே வாழ்வில், ஊழியத்தில் கோணலானவைகள் செவ்வையாக்கப்படத் துவங்கியது. தடைகள் நீங்கின. அந்த நாள் முதல் இந்தச் சகோதரர் பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு, பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலக அர்ப்பணித்துச் செயல்படுகிறார். மிகவும் ஆச்சரியப்படும் வகையில் அம்மட்டும் தாமதித்திருந்த தடைப்பட்ட நன்மையான நற்காரியங்கள் வாழ்விலும் ஊழியத்திலும் துரிதமாய் நடந்தேறியதைக் கண்டுணர்ந்து சாட்சியாகச் சொல்லி மகிழுகிறார். அல்லேலூயா!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, பரிசுத்தத்திற்கு நம்மைஅழைத்த தேவன், தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணன் என்பதாக வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. நம்மில் காணப்படும் அசுத்தத்தினால் அவர் தம்முடைய முகத்தை நமக்கு மறைத்து, நாம் இருளுக்கும், அந்தகாரத்தின் கிரியைகளுக்கும், தடைகளுக்கும், தாமதங்களுக்கும் கடந்து செல்லும் முன்னரே, பொல்லாங்காய்த் தோன்றுகிற யாவற்றையும் விட்டுவிலக நம்மைஅர்ப்பணிப்போம். காரணமில்லாமல் தடைப்பட்டிருக்கும், தாமதிக்கும் எந்தக் காரியங்கள் ஆனாலும் சீர்பட, முதலாவது நம்மைநாமேஆராய்ந்தறிந்து கர்த்தரிடத்தில் திரும்ப அழைக்கப்படுகிறோம். கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு.

நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன் என்ற கர்த்தர், வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப் போலவும் இருக்கவேண்டாம் (சங்கீதம் 32:9) என்று இதைத் தொடர்ந்து சொல்லியிருக்கிறார். இவ்விதமாக வாழ்வில் காணப்படும் தடைகளும், தாமதங்களும், வார் கடிவாளம் போன்று நமக்கு உள்ளதாக நாம் அறிகிறோம். தடைகளைத் தகர்த்தெறிய, தாமதங்களைத் தவிர்க்க, கர்த்தர் நமக்கு அருளும் ஆலோசனை பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் என்பதே ஆகும்.

## ஊ. சகலவித சுபடத்தையும் ஒழித்துவிடு!

தேவனுடைய பிள்ளைகள் வெளியரங்கமாயிருக்கிற மாம்சத்தின் கிரியைகளைத் தவிர்க்க, பரிசுத்தத்திற்குத் தங்களை மனதளவில் அர்ப்பணித்துச் செயல்படும் வேளைகளில் கர்த்தர், ஆவி ஆத்துமாவும் பரிசுத்தமாயிருக்கும்படி, குற்றமற்ற தாயிருக்கும்படி காக்கப்படும்படியாக ஆலோசனை அருளி வழிநடத்துகிறார். சமாதானத்தின் தேவன் தாமேஉங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக, உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக (1 தெசலோனிக்கேயர் 5:23) என்று பவுல் எழுதியிருக்கிறார்.

கர்த்தருக்குள் மேன்மைபாராட்டாது, சுயசக்தியையும் சுயபக்தியையும் சார்ந்து மேன்மைபாராட்டுவது, உலகத்தைச் சார்ந்ததும் தேவனுக்கு விரோதமான பகையுமாயிருக்கிறது. எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான் (சங்கீதம் 32:2) என்றும்; யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்? கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே (சங்கீதம் 24:3-4) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது. தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம், பெருமையையும், அகந்தையையும், தீய வழியையும் புரட்டு

வாயையும் நான் வெறுக்கிறேன் (நீதிமொழிகள் 8:13) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

**ஓர் உன்னத அனுபவ சாட்சி!**

இராணுவத்திலிருந்து விடுப்புப்பெற்ற மருத்துவர் ஒருவர் தமிழ்நாட்டில் பல ஆண்டுகளுக்கு முன்னர் தேவனுக்கு வல்லமையாய் ஊழியம் செய்துவந்தார். அவரது மனைவி வியாதிப்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் அரசாங்க மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று வந்தார்கள். அவர்களின் நாடித்துடிப்பு மிகவும் குறைந்து மரிக்கும் தருவாயில் இருந்தபோது, தனித்து ஜெபம்பண்ண வேறு இடம் இல்லாததால் அந்த ஊழியர், மருத்துவமனையின் பொது கழிப்பிடத்திற்குச் சென்று தேவனை நோக்கிக் கதறினாராம். இரண்டு சிறு பிள்ளைகள்; ஒரு பிள்ளைப் பிறந்து இரண்டு மாதங்களே ஆகியிருந்த நிலையில், தன்னுடைய ஊழியத்தையும் அர்ப்பணிப்பையும் நினைவூட்டி, கர்த்தரிடத்தில் மனைவியின் சுகத்திற்காக, ஜீவனுக்காக மன்றாடினார்.

ஜீவனுள்ள தேவன் அவருடைய விண்ணப்பத்திற்குச் செவிகொடுத்து அவருக்குப் பதில் அளித்தார். முதலாவது தேவனுடைய கரத்திலிருந்து அந்த ஊழியர் தன் மனைவிக்கு சுகத்தைப் பெற்றுக்கொள்ள தடையாகக் காணப்பட்ட, அவருடைய வாழ்வின் கோணலானவைகளை வெளிப்படுத்தினாராம். ஆயிரக்கணக்கான ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் நடத்தியதாக அந்த ஊழியர் சொன்ன வார்த்தைக்குக் கர்த்தர், அது கர்த்தருடைய வார்த்தையால் நடந்ததே ஒழிய ஊழியருடைய திறமையினால் அல்ல என்பதைத் தெளிவுபடுத்தினார். மேலும், ஆயிரக்கணக் கானோர் அந்த ஊழியத்தின்மூலம் அற்புத சுகம்பெற்றது, கர்த்தர் அவருடனேக்கூடக் கிரியை நடப்பித்து, அவரால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினதே என்பதையும் விளங்கச் செய்தார்.

தன் தவறை உணர்ந்த அந்த ஊழியர் உடனே தன்னுடைய மேட்டிமையான எண்ணத்தையும், பெருமையையும் அறியாமையையும் உணர்ந்து அறிக்கையிட்டுக் கர்த்தரிடத்தில் தன்னைத் தாழ்த்தி அர்ப்பணித்தார். அவ்வேளையிலே நர்ஸ் ஒருவர் ஓடிவந்து மனைவியின் நாடித்துடிப்பு அதிகரிப்பதாகக் கூறி

அவரை அழைக்கும் சத்தம் கேட்டதாம். சென்று பார்த்தபோது சரியாகப் பத்தே நிமிடத்தில் அவருடைய மனைவியின் நாடித்துடிப்பும் மற்ற காரணிகளும் சீரடைந்து, கண்களைத் திறந்து அவருடனே அவர்கள் பேசினார்களாம். அல்லேலூயா!

கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்குப் பவுல் ஆலோசனையாக எழுதியிருக்கிறார். அப்போஸ்தலனாகிய பேதுரு பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு எழுதும்போது: இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங் களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் (1 பேதுரு 2:1-3) என்று எழுதியிருக்கிறார்.

## இ. கர்த்தருக்குப் பணிவிடை செய்யுங்கள்!

வெளியரங்கமாயிருக்கிற மாம்சத்தின் கிரியைகளிலிருந்து தேவனுடைய பிள்ளைகள் விடுபட்டு, அவர்களின் ஆவி ஆத்துமாவும் குற்றமற்றதாய்ப் பரிசுத்தமாயிருக்கும்படி கர்த்தருடைய ஒத்தாசையுடன் காக்கப்படுகையில், இந்தக் கடைசி நாட்களில் கர்த்தருக்குப் பணிவிடை செய்யும்படியாகக் கர்த்தர் நம்மைஅழைக்கிறார். நம்மில் அநேகர் கர்த்தருக்காக ஊழியம் செய்கிறோம். சிலர் அப்போஸ்தலர்களாகவும், சிலர் தீர்க்கதரிசி களாகவும், சுவிசேஷகர்களாகவும், போதகர்களாகவும், மேய்ப்பர்களாகவும் கர்த்தருக்கென ஊழியம் செய்கிறார்கள். இவற்றை அவர்கள் கர்த்தர் தங்களுக்குத் தந்த வாஞ்சையின் படியேயும், தரிசனம், திட்டம், தீர்மானங்களின்படியேயும், இன்னும் சிலர் மற்ற ஊழியங்களைப்போன்றும் செய்து வருகிறதை நாம் காண்கிறோம். மிகவும் நல்லது.

ஆனாலும் எசேக்கியா ராஜாவின் மூலமாகப் பரிசுத்த ஆவியானவர் தந்தருளின வார்த்தைகள் ஊழியத்தைச் சற்று

மாறுபட்ட கோணத்தில் வெளிப்படுத்துகிறதைப் பார்க்கிறோம். என் குமாரரே, இப்பொழுது அசதியாயிராதேயுங்கள்; நீங்கள் கர்த்தருக்குப் பணிவிடை செய்யும்படி அவருக்கு முன்பாக நிற்கவும், அவருக்கு ஊழியஞ்செய்கிறவர்களும் தூபங்காட்டுகிறவர் களுமாயிருக்கவும் உங்களை அவர் தெரிந்துகொண்டார் என்றான் (2 நாளாகமம் 29:11) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கானா ஊரிலே நடந்த கலியாணத்துக்கு இயேசுவும் அவருடைய சீஷரும் அழைக்கப்பட்டிருந்தார்கள். இயேசுவின் தாயும் அங்கே இருந்தார்கள். திராட்சரசங்குறைவுபட்டபோது, இயேசுவின் தாய் வேலைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதின்படி செய்யுங்கள் என்று சொன்னார்கள். கர்த்தருக்கு ஊழியம் என்பதும் இதைப்போன்றே இயேசு என்ன சொல்லுகிறாரோ அதின்படி செய்வது என்பதாக அறியலாம்.

சாமுவேல் கர்த்தரை இன்னும் அறியாதிருந்தான்; கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு இன்னும் வெளிப்படவில்லை (1 சாமுவேல் 3:7) என்று வேதாகமத்தில் சிறுவனாயிருந்த சாமுவேலைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. ஆரம்ப நிலைகளிலே சிறுவன் சாமுவேலைப்போன்று, கர்த்தரை அறியாத, கர்த்தருடைய வார்த்தை இன்னும் பிரத்தியட்சமாக வெளிப்படாத காலங்களில், நம்முடைய மனவிருப்பத்தின்படியோ அல்லது மற்ற ஊழியங்களைப் போன்றோ நம்மில் அநேகர் ஊழியம் செய்து வருகிறோம். ஆனாலும் இந்தக் கடைசி காலங்களில் கர்த்தருக்கு ஊழியம் என்பது, அந்த வேலைக்காரருக்கு இயேசுவின் தாய் சொன்னதுபோல, அவர் நமக்கு என்ன சொல்லுகிறாரோ அதின்படி செய்வதே ஊழியம் என அறிகிறோம். கர்த்தருக்குப் பணிவிடை செய்யும்படி அவருக்கு முன்பாக நிற்க, காத்திருக்க, அவர் சொல்லுகிறதைக் கேட்டு அதின்படி செய்வது மிகவும் அவசியமாயிருக்கிறது.

### கர்த்தருடைய வசனம் புடமிடுகிறது!

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரரொருவர் பல ஆண்டுகளாகக் கர்த்தருக்காக ஊழியம் செய்துவருகிறார். அவ்வப்போது கர்த்தரால் உணர்த்தப்படும் வகையில், வாய்ப்புகள் கிடைத்த எல்லைகளில் காலங்களில் உற்சாகமாக ஊழியம் செய்தது மாத்திரமல்லாமல் திட்டங்களையும் தீர்மானங்களையும்

தொகுத்து அதின் அடிப்படையில் செயல்பட்டும் வந்தார். சில ஆண்டுகளுக்கு முன்னர் கர்த்தருக்குப் பணிவிடை செய்யும்படி அவருக்கு முன்பாக நிற்க, கர்த்தருடைய ஆலோசனை ஒரு ஊழியர்மூலம் அவருக்கு வெளிப்பட்டது. ஆனால் அதின் அர்த்தத்தைக்கூட முழுமையாக விளங்கிக்கொள்ள முற்படாமல் நிர்விசாரமாய் இருந்துவிட்டார்.

பல வேளைகளில் அந்த வசனம் அவருக்கு நினைவூட்டப் பட்டது. இறுதியாக, இந்த ஆண்டு மறுபடியுமாக வெளிப்பட்டபோது, முதலாவதாக அதின் அர்த்தத்தை விளங்கிக்கொள்ள கர்த்தர் கிருபை அருளினார். சமீபத்தில் ஒரு கூட்டத்தில் கர்த்தர் தம்மோடு இடைபடுகிறதை விளக்கிக் கூறும்போது அந்த சகோதரர், தன்னுடைய கீழ்ப்படியாமையையும் அறிக்கையிட வேண்டிய தாயிற்று. அந்த வார்த்தைகளே அவரைப் புடமிடத் துவங்கியது. கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவருடைய வசனம் அவனைப் புடமிட்டது என்று எழுதப்பட்டிருக்கிறது.

தன் இருதயத்தில் குத்துண்டவராக, சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும், அதிகாலையில் கர்த்தருக்குப் பணிவிடை செய்யும்படி அவருக்கு முன்பாக நிற்கத் தன்னை மனதளவில் அர்ப்பணித்தார். ஆச்சரியப்படும்படியாக, கர்த்தர் இம்மட்டும் அதைச் செயல்படுத்தவும் உதவி வருகிறார். முன்னர் சற்றும் அறிமுகமில்லாத ஒரு தேவமனிதர் அந்தக் காலை நேரத்திலும் கர்த்தரால் ஏவப்படும் நாட்களில் தொலைபேசியின் மூலம் அழைக்கிறார். அவர் அழைக்கும்போது அவரோடு இணைந்து ஜெபிக்கவும் கர்த்தர் கிருபை அருளுகிறார். அல்லேலூயா!

### 4.இயேசுவின் சிந்தையோடு அன்பிலே பூரணப்படுங்கள்!

கர்த்தருடைய ஆலோசனையின்படி, முடிவுபரியந்தம் விசுவாசத்திலும் சத்தியத்திலும் நிலைத்துநின்று இரட்சிக்கப்பட அர்ப்பணித்திருக்கும் தேவஜனம், விசுவாசத்திலே துவங்கி அன்பிலே பூரணப்படும்படியாகப் பேதுரு அப்போஸ்தலன் தன்னுடைய நிருபத்தில் ஆலோசனையாகச் சொல்லியிருக்கிறார். இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும் பொறுமையோடே

தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள் (2 பேதுரு 1:5-7) என்று எழுதியிருக்கிறார்.

இந்த வேதப்பகுதியில், விசுவாசம் தைரியம் ஞானம் இச்சையடக்கம், பொறுமைபோன்ற பண்புகள் நம்மில் உண்டாயிருந்து பெருகினால், கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும்பிரவேசம் நமக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும் என்பதாக அறிகிறோம். நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமைஉங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது (எபிரெயர் 10:36) என்று எழுதப் பட்டிருக்கிறது. இந்த பட்டியலின் நிறைவு பண்புகளான தேவபக்தியும், சகோதர சிநேகமும், அன்பும் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூருகிறதையும், பிறனிடத்தில் அன்பு கூருகிறதையும் உள்ளடக்கியுள்ளது.

இதையே அப்போஸ்தலனாகிய பவுலும், ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும், பூரணசற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள் (கொலோசெயர் 3:12-14) என்று எழுதியிருக்கிறார்.

கர்த்தருடைய ஆலோசனையின்படி மாம்சத்தின் கிரியைகளுக்கு விலகி ஆவியிலும் ஆத்துமாவிலும் பரிசுத்தமுள்ளவர்களாய்க் கர்த்தருக்குப் பணிவிடை செய்யும்படி அவருக்கு முன்பாக நிற்கும் தேவஜனம், கிறிஸ்து இயேசுவின் சிந்தையை தரித்துக்கொண்டு ஒருவரையொருவர் தாங்கி, ஒருவருக்கொருவர் மன்னித்து, இவை எல்லாவற்றின் மேலும், பூரணசற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ள வழிநடத்தப்படுகிறது.

கடந்த மாதத்தில், சகோதரரொருவர், பல ஆண்டுகள் நடத்திவந்த உபவாச ஜெபக்கூடுகையில் கலந்துகொள்ள ஆர்வத்தோடு சென்றார். சற்றும் எதிர்பாராதவண்ணமாக,

வழக்கமாகப் பங்குபெறும் ஒருவரேனும் வரவில்லை. ஒவ்வொருவருக்கும் நியாயமான காரணங்கள் இருந்தபோதும் இது சகோதரருக்கு ஏமாற்றத்தையும் சோர்வையும் ஏற்படுத்தியது. மிகவும் பாரத்தோடு தேவனிடத்தில் இந்தச் சூழ்நிலையை ஒப்புக்கொடுத்து ஜெபித்தபோது கர்த்தர் எல்லாச் சூழ்நிலைகளிலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொடுத்தார். மட்டுமல்லாமல், இந்நிலையிலும் கசப்பை வெளிப்படுத்தாமல், கிறிஸ்துவின் அன்பையே பிரதிபலிக்கக் கிருபை அருளினார். அல்லேலூயா!

## காலத்தை பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நம்முடைய கர்த்தர் ஆலோசனையில் ஆச்சரியமானவர்; செயலில் மகத்துவமானவர். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படுவதும், சத்தியத்தை அறிகிற அறிவை அடைவதும் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. இதனிமித்தம், நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் பிரயோஜனமாயிருக்கிறதை நமக்குப் போதித்து, நாம் நடக்க வேண்டிய வழியில் நம்மைநடத்துகிற தேவனாகிய கர்த்தராய் அவர் இருக்கிறார்.

தொகுக்கப்பட்டிருக்கிற நான்கு நிலைகளிலே, பரிசுத்தத்தில் எந்த நிலையிலே நாம் இருக்கிறோம் என்பதை ஆராய்ந்து அறிந்து, தேவனாகிய கர்த்தர் ஏற்கனவே நமக்கு அருளின ஆலோசனைகளுக்குக் கீழ்படிந்து நடக்க அழைக்கப்படுகிறோம். எழுதப்பட்டிருக்கிற சாட்சிகளில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்ற கால அவகாசம், இந்தக் கடைசிக் காலகட்டத்தில் நமக்குக் கிடைப்பது அரிதான ஒன்றாகவே தோன்றுகிறது. ஆகவே காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொண்டு விழித்திருக்க, ஆயத்தமாயிருக்க எச்சரிக்கப்படுகிறோம்.

## செயலில் மகத்துவமானவர்!

துரிதமாய் நம்மைச் சுற்றிலும் நடந்தேறும் நிகழ்வுகளும், வானில் தோன்றும் அடையாளங்களும், கர்த்தருடைய அதிசீக்கிர வருகையை உறுதிச்செய்து நம்மைஎச்சரிக்கிறது. முந்தின நாட்களின் பெருவெள்ளமும், சேதங்களும், பொருளாதாரப் பின்னடைவும், இந்நாட்களின் கொள்ளை நோயும், குழப்பத்தின் உச்சகட்டத்தில் உள்ள அரசியல் அருவருப்புகளும், அனுதின நிகழ்வான உயர்மட்டத்தின் ஒழுக்கக்கேடுகளும் ஒருபுறம் இருக்க,

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு நிகழ்வும், அடையாளங்களும் கூட, அதினதின் காலத்தில் துல்லியமாக நடந்தேறி வருகிறதைக் காண்கிறோம்.

ஆதார் அடையாள அட்டையும் அதனைச் சார்ந்த குறியீடுகளும் எவ்விதமாக, உபத்திரவ காலத்தின் மையப்பகுதியில் நடைபெறவிருக்கும் நிகழ்வுக்கே நம்மையும் நம்முடைய தேசத்தையும் ஆயத்தப்படுத்தியுள்ளது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அப்படியானால் அதற்கு முந்தைய நிகழ்வான இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகை இன்னும் சீக்கிரமாய் இருக்கும் அல்லவா?

முந்தின நாட்களில் பரவலாகப் பேசப்பட்ட வானத்திலே தோன்றின பெரிய அடையாளத்தைக் குறித்தும் நம்மில் அநேகர் அறிந்திருக்கிறோம். அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது. ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள். அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின்மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன அவள் கர்ப்பவதியாயிருந்து, பிரசவ வேதனையடைந்து, பிள்ளைபெறும்படி வருத்தப்பட்டு அலறினாள் (வெளி 12:1-2) என்று எழுதப்பட்டிருக்கிறது.

கடந்த, யூபிலி ஆண்டில் (2017) செப்டம்பர் 23ஆம் நாள் இந்த வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கும் பெரிய அடையாளம் வானத்தில் தோன்றியது என்பதாக வானியல் வல்லுனர்களும், வேதப்பண்டிதர்களும் சொல்லியிருக்கிறார்கள். அந்நாளிலே, கன்னி (VIRGO) என்கிற நட்சத்திரக்கூட்டமும், சூரியனும், சந்திரனும் இவ்விதமாகக் காட்சியளித்ததாம். சிரசின்மேல் உள்ள 12 நட்சத்திரக் கிரீடமாக, சிம்மம் (LEO) என்கிற நட்சத்திரக் கூட்டத்திலுள்ள 9 நட்சத்திரங்களுடன் 3 கிரகங்களும் இணைந்து இந்தக் காட்சியை நிறைவு செய்ததாம்.

எது எப்படியாக இருந்தாலும், நம்மைப் பொறுத்தவரையில் இது நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையை உறுதிசெய்யும் மற்றுமொரு முக்கியமான அடையாளமாகத் தோன்றுகிறது. ஆகையால் வரவிருக்கும், உபத்திரவக்காலத்தின் வேதனைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள உண்மையாய் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிந்து தேவனிடத்தில் திரும்ப அழைக்கப்படுகிறோம். ஆமென். அல்லேலூயா!

# 11. என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்து!

நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்,
ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால்,
அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல்
உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.
(யோவான் 15:4-5).

**வேதாகமத்தில் நிருபங்கள்!**

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் வாழ்வு மற்றும் ஊழியங்களைப்பற்றிய நற்செய்திப் புத்தகங்களும், அப்போஸ்தலருடைய நடபடிகளும், நிருபங்களும், நிறைவாக, இவ்வுலகின் இறுதிக்கால தரிசனாங்களடங்கிய வெளிப்படுத்தின விசேஷமும், வேதாகமத்தில் புதிய ஏற்பாடு பகுதியில் இடம் பெற்றுள்ளன.

நிருபங்களில் பெரும்பாலானவை, அந்நாட்களில் இருந்த சபைகளுக்குப் பரிசுத்த ஆவியானவருடைய ஒத்தாசையுடன் அப்போஸ்தலர்களால் எழுதப்பட்ட கடிதங்கள் ஆகும். ஊழிய அனுபவ சாட்சிகளுடன், இயேசுகிறிஸ்துவின் போதனைகளில் வெளிப்பட்ட சத்திய வார்த்தைகளின் செயல் விளக்க உரைகளைப் போன்று, சபைக்கும் தனிப்பட்ட விசுவாசிகளுக்கும் இவை அமைந்துள்ளன. நிருபங்கள், காலத்தைக் கடந்து எங்கும் வியாபித்து, நமக்கும் இந்நாட்களில் மிகவும் பிரயோஜனமாக உள்ளன.

இந்த நிருபங்களைச் சத்திய வார்த்தைகளின் அடிப்படையில் பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையுடன், அப்போஸ்தலர்கள் ஆதி திருச்சபையின் காலத்திலிருந்த சபையினருக்குத் தேவையான

கருத்துக்களை விளக்கி எழுதியுள்ளார்கள். புதிய ஏற்பாடு பகுதியில் உள்ள இருபத்தொரு நிருபங்களில் அப்போஸ்தலனாகிய பவுல், பதின்மூன்று கடிதங்களையும், யோவான் அப்போஸ்தலன் மூன்றையும், பேதுரு அப்போஸ்தலன் இரண்டு நிருபங்களையும், யாக்கோபு அப்போஸ்தலனும் யூதாவும் ஒரு நிருபத்தையும், எழுதியுள்ளார்கள். எபிரெய நிருப ஆக்கியோனைப்பற்றி வேதாகமத்தில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இதைக்குறித்து வேத ஆராய்ச்சியாளர்களிடமும் ஒத்த கருத்து இல்லை. ஒரு சிலர் எபிரெய நிருபம், பவுலோ அல்லது பர்னபா, அப்பொல்லோ போன்ற அவருடைய உடன் ஊழியரோ எழுதியிருக்கலாம் என்கிறார்கள். இவை எல்லாவற்றிற்கும் எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது (2 கொரிந்தியர் 3:5) என்று பவுல் எழுதி வைத்திருக்கிறார்.

## யார் இந்தப் பவுல்!

யூதகுலத்தின் பென்யமீன் கோத்திரத்தானாகிய இவர், எபிரெய மொழியில் சவுல் என அழைக்கப்பட்டார். ரோமக் குடியுரிமைபெற்றிருந்த சவுல், லத்தீன் கிரேக்க மொழிகளில் பவுல் என்று அறியப்பட்டிருந்தார். அவரால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்ல. நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை. இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார் (கலாத்தியர் 1:12) எனப் பவுல் இதைக் குறித்து சாட்சியாக எழுதி வைத்திருக்கிறார். கனம்பெற்ற நியாயசாஸ்திரியாகிய கமாலியேல் என்னும் பேர்கொண்ட ஒரு பரிசேயனின் பாதத்தருகே பவுல் வளர்ந்து, முன்னோர்களுடைய வேதப்பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டவர். தமஸ்கு பட்டணத்தில் துவங்கிய பவுலின் ஊழியம், ரோமாபுரியில் நிறைவுபெற்றதாக நாம் அறிகிறோம்.

தமஸ்குப் பாதையில் தரிசனம் பெற்ற அப்போஸ்தலனாகிய பவுல் தனக்குத் தரிசனமான இயேசுவை, ஆண்டவரே நீர் யார், எனக் கேட்டறிந்தார். பின்னர் இடைப்பட்ட நாட்களில், நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிவேன் (2 தீமோத்தேயு 1:12)

என்று தேவனை அறிந்த நிச்சயத்தோடு அறிக்கையிட்டார். தன் வாழ்வின் இறுதிக் காலத்தில்: நான் தேகத்தை விட்டுப் பிரியுங்காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார் (2 தீமோத்தேயு 4:6-8) என்று தனது உறுதியான நம்பிக்கையை வெளிப்படுத்தினார். தன்னுடைய நற்சாட்சியின் வாழ்வை நல்ல போராட்டமாகவும், ஓட்டப்பந்தயமாகவும் உருவகப்படுத்தி, விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் எனவும், தான் நீதியின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்ள இருப்பதையும் சாட்சியாக அறிவித்தார்.

புறஜாதியாருக்கு அப்போஸ்தலன் என்று அறியப் பட்டிருக்கிற பவுல் கர்த்தரால் முன்னறியப்பட்டு, முன்குறிக்கப்பட்டு அழைப்பைப்பெற்றார். நான் அந்த அழைப்புக்கு, பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை (அப்போஸ்தலர் 26:19) என்றார். மூன்று நாள் பார்வையில்லாதவனாய்ப் புசியாமலும் குடியாமலும் இருந்த பவுல், பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கு, தமஸ்குப் பட்டணத்தில் அனனியா எனும் ஒரு சீஷனை, இயேசுவாகிய கர்த்தர், அவரிடத்தில் அனுப்பினார். அங்கே ஞானஸ்நானம் பெற்ற பவுல், தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தார் (அப்போஸ்தலர் 9:20).

## இந்த இரகசியம் பெரியது!

கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக்குறித்துப் பேசவேண்டியபிரகாரமாய்ப் பேசி, அதை வெளிப்படுத்துவதற்கு, திருவசனம் சொல்லும்படியான வாசலை தேவன் தந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள் (கொலோசெயர் 4:3,4) என்று பவுல் எழுதியிருக்கிறார்.

அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன்

மாம்சத்திலே வெளிப்பட்டார். ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார். தேவதூதர்களால் காணப்பட்டார். புறஜாதி களிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார். மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார் (1 தீமோத்தேயு 3:16) என்று எழுதியிருக்கிறார்.

இந்த இரகசியத்தை நற்செய்தியாக அறிவியாமல் போனால் எனக்கு ஐயோ என்றவர், தன்னுடைய ஊழியத்தின், சாட்சியின் ஜீவியத்தின் இரகசியத்தையும் தெளிவாக வெளிப்படுத்தியதை வேதாகமத்தில் வாசிக்கிறோம். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு (பிலிப்பியர் 4:13) என்றுரைத்தார். அப்படியே, இயேசுகிறிஸ்துவைச் சார்ந்த அவருடைய சாட்சியின் ஜீவியத்தை வெளிப்படுத்தினார்; விசுவாசத்தைக் காத்துக் கொண்டார். கர்த்தர் அவருக்கு நியமித்த எல்லாவற்றையும் செய்து முடித்தார்.

**பெலப்படுத்துகிற கிறிஸ்து!**

அப்போஸ்தலனாகிய பவுலின் தெரிந்துகொள்ளுதலும் அழைப்பும், அபிஷேகமும், தமஸ்குப் பாதையில் அவர் இயேசுவைச் சந்தித்த ஒரு சில நாட்களிலேயே மிகவும் உன்னதமான முறையில் நடந்தேறியது. இதைத் தொடர்ந்து, என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது என்ற இயேசுகிறிஸ்துவே, பிரசங்கிக்கப்படவேண்டிய சுவிசேஷத்தை அவருக்கு வெளிப்படுத்தினார் என்பதாகப் பார்த்தோம். கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக அவருக்குள் இருந்தார். பவுல் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்.

பவுலின் வாழ்வும், சாட்சியும், ஊழியமும், 'தேவனுக்கென்று எதையாகிலும் செய்யவேண்டும்' என்று வாஞ்சித்துக் காத்திருக்கும் தேவனுடைய பிள்ளைகளுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிச்சயத்தோடு, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவி சுத்திகரிக்கப்பட்டிருக்கும் தேவஜனம், கர்த்தருடைய ஆலோசனையின்படி உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படுவது மிகவும் அவசியமாக இருக்கிறது.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து: என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார் (லூக்கா 24:49).

பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்பதாக கர்த்தரே சொல்லியிருக்கிறார். பிதா வாக்களித்த பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்போது, உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படுகிறோம். பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட நிலையில், கிறிஸ்துவின் சுவிசேஷம் விசுவாசிக்கிறவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது.

இயேசு பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் முன்பாக, நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். மேலும், பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதும் சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார் (அப்போஸ்தலர் 1:8).

அந்த வாக்கை விசுவாசித்து, பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபது பேர் மேலறையில் ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் காத்திருந்தார்கள். காத்திருந்த அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்; புதுப்பெலனடைந்தார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள் (ஏசாயா 40:31) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பரிசுத்த ஆவியின் அபிஷேகமும், கர்த்தரோடுள்ள உறவும், ஊழிய அனுபவங்களும், அப்போஸ்தலனாகிய பவுலை, என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு எனச் சாட்சியாக அறிவிக்க உதவியது.

இயேசுகிறிஸ்துவினால், ஆவியில் தேவபெலனடைந்த பவுல், என்ன செய்தார்? பாவம் செய்யாதிருக்க தேவபெலனைப் பெற்றுக்கொண்டார். பாடுகளைப் பொறுமையுடன் சகிக்க நிறைவான கிருபையைப் பெற்றார். எதிராளிகளை மேற்கொள்ள, பிசாசுக்கு எதிர்த்து நிற்க வல்லமையும், தைரியமும் உடையவரானார். நிறைவாக, எல்லா நிலையிலும் கர்த்தருக்குச் சாட்சியாக எழும்பிப் பிரகாசிக்க தேவபெலத்தினாலும் தேவஞானத்தினாலும் நிரப்பப்பட்டார். அல்லேலூயா!

## 1. பாவம் செய்யாதிருக்க தேவபெலன்!

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் நுகங்களை முறிக்கும் (ஏசாயா 10:27) என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பாவங்களோடும், பிசாசோடும், உலகத்தின் இச்சைகளோடும், பெலவீனங்களோடும் தேவனுடைய பிள்ளைகளுக்குள்ள உறவை அபிஷேகம் முறிக்கும். செய்த பாவங்களைக் குறித்து மனஸ்தாபப் படுகிறவர்களாக இருந்தாலும், பல வேளைகளில், அவற்றை மறுபடியும் செய்யாமலிருக்க சுயபெலத்தையும் சக்தியையும் ஞானத்தையும் சார்ந்து எடுக்கப்படும் முயற்சிகள் தோல்வியிலேயே முடிகிறது.

அம்மட்டும் யூத மத வைராக்கியத்தோடும், கொலை வெறியோடும் எல்லைக்கடந்து சென்று, கிறிஸ்துவின் மார்க்கத்தைச் சேர்ந்தோரை அழிக்கச்சென்ற பவுலின் வாழ்வை மாற்ற கர்த்தரே தேவபெலனானார். யாரைப் பின்பற்றுவோரைக் கட்டியிழுத்து, கொன்றுகுவிக்கச் சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய் நிருபங்களைக் கேட்டு வாங்கினானோ, அந்த இயேசுவே கிறிஸ்துவென்று தான் முன்னர் கற்றறிந்திருந்த வேதவசனங்களின் அடிப்படையில், பின்னர் பெற்ற அபிஷேகத்துடன், அவனே விளங்கச்செய்து கூடியிருந்த யூதர்களைக் கலங்கப்பண்ணினான். அபிஷேகம் சற்றும் எதிர்பாராத, முற்றிலும் மாறுபட்ட மாற்றங்களைத் தேவனுடைய பிள்ளைகளுடைய வாழ்விலே ஏற்படுத்துகிறது. அபிஷேகம் பாவஞ்செய்யாதிருக்க தேவபெலனை அருளுகிறது.

பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்; குமாரனாகிய இயேசுகிறிஸ்து உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் (யோவான் 16:8) என்று எழுதப்பட்டிருக்கிறது. தேவனுடைய பிள்ளைகள், கர்த்தர் நியமித்திருக்கிற நல்வழிகளிலிருந்து விலகிச் செல்லும்போது ஆவியானவர் இடைப்பட்டு வழிநடத்துகிறார். நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்; வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும் (ஏசாயா 30:21) என்று எழுதப்பட்டிருக்கிறது.

மேலும், நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது. ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை, அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக (1 யோவான் 2:27) என்று யோவான் எழுதிவைத்திருக்கிறார். பாவத்துக்கு விலகி, பரிசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்து தேவனைச் சார்ந்து செயல்பட பரிசுத்த ஆவியின் அபிஷேகம் நம்மைநெருக்கி ஏவுகிறது. பவுலின் வாழ்வில் கொலை வெறியையே மாற்றின ஆவியின் அபிஷேகம், இந்நாட்களில் அநேக தேவனுடைய பிள்ளைகளுக்குத் தேவபெலனாக இருந்து பாவம் செய்யாதிருக்கப் பரிசுத்த வாழ்வை அளிக்க வல்லமை உள்ளதாக இருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னர், கிறிஸ்துவை அறியாத நிலையில், வாலிப சகோதரர் ஒருவர் துன்மார்க்கமாய் ஜீவித்து, அவர் வசித்து வந்த பகுதியில் அலைந்து திரிந்து, அநேகரைத் தன்னுடைய செயல்களால் கலங்கடித்து வந்தார். அவருடைய வாழ்வின் நெருக்கத்தில், கர்த்தர் அவருடைய வாழ்வில் இடைப்பட்டார். காவல் கட்டுகளிலிருந்தும், பாவப் பழக்கவழக்கங்

களிலிருந்தும் கர்த்தர் அவரை விடுவித்தார். எந்தப் பகுதியில் அநீதிக்குக் கைகோர்த்து, ஜனங்களைப் பயப்படுத்தினாரோ, அதே எல்லைகளில் சுற்றித் திரிந்து இயேசுவை அறிவித்து அந்த ஜனங்களின் மத்தியில் அநேக ஜெபக்குழுக்கள் உருவாகக் காரணமானார். காவல் துறையினருக்கே சவாலாக இருந்த அப்பகுதியில் இன்று அநேக விசுவாசிகள் உள்ளனர், திருச்சபைகளும் உள்ளன. வாலிபர்களை அபிஷேகத்திற்குள் நடத்த வாஞ்சிக்கும் இந்தச் சகோதரர், ஒரு குழுவினரோடு குறிப்பிட்ட மாதங்களில் தெரு தெருவாக அதிகாலையில் ஜெபநடையாகச் சென்று தேவனுக்கு ஊழியம் செய்து வருகிறார். அல்லேலூயா!

## உ. பாடுகளைச் சகிக்க தேவ பெலன்!

அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்வில், அவர் தன்னை உயர்த்தாதபடிக்கு, மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப் பட்டிருந்ததாக குறிப்பிடுகிறார். மேலும், அது தன்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது என்கிறார். அது தன்னைவிட்டு நீங்கும்படிக்கு மூன்றுதரம் கர்த்தரிடத்தில் அவர் வேண்டிக்கொண்டபோது, கர்த்தர்; என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் (2 கொரிந்தியர் 12:9) என்றார். இந்தக் கிருபை, அந்தப் பாடுகளைப் பொறுமையோடு சகித்துக்கொள்ள கர்த்தர் அவருக்கு அருளின அபிஷேகத்தைக் குறிக்கிறது. கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன் என அந்த அபிஷேகம் அவரை அறிக்கையிடவும் செய்தது.

கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் (2 தீமோத்தேயு 3:12) என்பதாக பவுல் எழுதியிருக்கிறார். கிறிஸ்துவை உறுதியாகப் பற்றிக்கொண்டிருக்கும் தேவனுடைய பிள்ளைகளுக்கு வேதாகமம் எடுத்துரைக்கும் மற்றுமொரு உண்மை; பாடுகளும் உபத்திரவங்களும் கட்டுகளும் நமக்கு உண்டு என்பதாகும். ஆனாலும், அபிஷேகம் பெற்ற

தேவனுடைய பிள்ளைகளுக்குக் கர்த்தர், அவற்றைப் பொறுமையுடன் சகிக்கவும் அவைகளுக்கூடாகக் கடந்துசென்று சாட்சியாக ஜீவிக்கவும் கிருபையருளுகிறார். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும், திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் (யோவான் 16:33) என்று பாடுகளைச் சகித்து சிலுவையிலே வெற்றி சிறந்த இயேசு சொல்லியிருக்கிறார்.

பவுல் இயேசுகிறிஸ்துவினாலே பெற்ற அபிஷேகம்: நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப் பட்டும் கைவிடப்படுகிறதில்லை கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை. ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது (2 கொரிந்தியர் 4:8,9,16) என்று பாடுகளின் மத்தியிலும் சாட்சி பகர வைத்தது.

என்னிமித்தம் உங்களை நிந்தித்துப் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப் பட்டு, களிகூருங்கள், பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியா யிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே (மத்தேயு 5:11-12) என இயேசு மலைப் பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறார்.

மிகவும் பலசாலியான வாலிப சகோதரரொருவர், அநேக ஆண்டுகளுக்கு முன்னர், இயேசுகிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். இதற்கு முன்னர் இவர், கடினமான உடற்பயிற்சியின் மூலமாகவும், சிறந்த உணவினாலும், தன்னுடைய உடலை நன்றாய் பராமரித்து வந்தார் . எளிதில் எவரும் அவரிடத்தில் எதிர்த்து நிற்க தயங்குவார்கள். இயேசுவை தன் இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின்னர், அவருடைய சிந்தையும், சுபாவமும், தன்மைகளும் மாறின. இதை அறிந்த ஒரு மனிதன், இதற்கு முன்னர் எந்த ஒரு

பாதகமான வார்த்தையையும் சகோதரருக்கு முன்பாகப் பேசத் தயங்கினவன், தகாத கெட்ட வார்த்தைகளால் அவரைத் திட்டினான். சகோதரருடைய பழைய சுபாவம் அவரை மேற்கொள்ள முயற்சித்தும், கர்த்தராலே அவர் பெற்றிருந்த அபிஷேகம், அந்த ஏச்சையும் பேச்சையும் பொறுமையோடு சகித்துக்கொள்ள உதவியது எனப் பின்னர் அவர் சாட்சியாகச் சொன்னார். அல்லேலூயா!

## 3. எதிராளிகளை மேற்கொள்ள தேவபெலன்!

அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய ஊழியப் பாதையில், பர்யேசு என்னும் பேர்கொண்ட மாயவித்தைக் காரனும் கள்ளத் தீர்க்கதரிசியுமான ஒரு யூதனைக் கண்டார். அவன் செர்கியுபவுல் என்னும் அதிபதியுடனேகூட இருந்தான். அந்த அதிபதி பர்னபாவையும் சவுலையும் அழைப்பித்து, அவர்களிடத்தில் தேவவசனத்தைக் கேட்க ஆசையாயிருந்தான். ஆனால், அந்த மாயவித்தைக்காரன் அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகைதேடி, அவர்களோடு எதிர்த்து நின்றான்.

அப்பொழுது பவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவராய் அவனை உற்றுப்பார்த்து எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ? இதோ, இப்பொழுதே, கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது, சில காலம் சூரியனைக் காணாமல் நீ குருடனாயிருப்பாய் என்றான் (அப்போஸ்தலர் 13:9-11). உடனே அவன் தடுமாறி, கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான். அப்பொழுது அதிபதி சம்பவித்ததைக் கண்டு, கர்த்தருடைய உபதேசத்தைக் குறித்து அதிசயப்பட்டு, விசுவாசித்தான். பரிசுத்த ஆவியினால் நிறைந்த பவுல், தேவபெலத்தால் சத்தியத்திற்கும் சாட்சிக்கும் எதிர்த்து நின்றவனை மேற்கொண்டார்.

இளைஞனான தாவீது கோலியாத் என்னும் பெலிஸ்தனை மேற்கொண்ட சம்பவத்தை நாம் அறிவோம். சாமுவேல் தீர்க்கதரிசி, தைலக்கொம்பை எடுத்து, தாவீதை அபிஷேகம்

பண்ணியிருந்தார். அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார். தாவீது தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்தான். கர்த்தர் அவனோடேகூட இருந்தார். தாவீது அந்த பெலிஸ்தனை நோக்கி: நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் நான் வருகிறேன். கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல என்று இந்த ஜனக்கூட்டமெல்லாம் அறிந்து கொள்ளும்; யுத்தம் கர்த்தருடையது; அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றான் (1 சாமுவேல் 17:47). தாவீது தேவபெலத்தோடு அந்த பெலிஸ்தனை மேற்கொண்டான். கர்த்தராலே பெற்ற அபிஷேகம், பிசாசுக்கு எதிர்த்து நிற்கவும், எதிராளிகளை மேற்கொள்ளவும் உதவுகிறது.

நியாயாதிபதிகளின் காலத்தில், மீதியானியராலே இஸ்ரவேலர் மிகவும் சிறுமைப்பட்டார்கள். அப்பொழுது, கர்த்தர் கிதியோனோடே இருந்து எதிராளிகளை மேற்கொள்ள உதவின சம்பவத்தையும் நாம் அறிவோம். கர்த்தருடைய தூதனானவர் கிதியோனுக்குத் தரிசனமாகி: பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். அப்பொழுது கிதியோன் அவரை நோக்கி: ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? என்றான். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப்பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார். மேலும் கர்த்தர்: நான் உன்னோடேகூட இருப்பேன்; ஒரே மனுஷனை முறிய அடிப்பதுபோல நீ மீதியானியரை முறிய அடிப்பாய் என்றார்.

கர்த்தரின் ஆலோசனையின்படி கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட முந்நூறு பேர் பாளயத்தின் முன்னணியில் வந்து, எக்காளங்களை ஊதி, தங்கள் கையிலிருந்த பானைகளை உடைத்து, தீவட்டிகளைத் தங்கள் இடது கைகளிலும், ஊதும் எக்காளங்களைத் தங்கள் வலது கைகளிலும் பிடித்துக் கொண்டு, கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம் என்று

சத்தமிட்டு, பாளயத்தைச் சுற்றிலும் அவரவர் தங்கள் நிலையிலே நின்றார்கள். அப்பொழுது பாளயத்தில் இருந்தவர்கள் எல்லாரும் சிதறிக் கூக்குரலிட்டு, ஓடிப்போனார்கள். இவ்விதமாய்க் கர்த்தர் கிதியோனோடே இருந்தபோது, இஸ்ரவேலர் தங்களுக்கு எதிராக எழும்பின மீதியானியரை மேற்கொண்டார்கள்.

தேவனருளும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் தேவபெலனையும் வல்லமையையும் தருகிறது. அந்த அபிஷேகம் பிசாசுக்கு எதிர்த்து நின்று, பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறது. நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார் (அப்போஸ்தலர் 10:38) என்று எழுதப்பட்டிருக்கிறது.

தேவமனிதர் ஒருவருக்கு விரோதமாகத் துணிகரமாய், பணபலத்தோடும், அதிகாரிகளின் துணையோடும், ஆணவத்தோடும், அநேக ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு மனிதர் எழும்பினார். செய்வதறியாது திகைத்த தேவமனிதர் கண்ணீரோடு தேவனிடத்தில் முறையிட்டார். அச்சுறுத்தும் வகையில் அதிகாரிகளோடு அவரை நிர்ப்பந்தித்த வேளையில், கர்த்தரின் ஆலோசனையின்படி அவர்களைப் பார்த்து, தேவனுக்கும், தேவனுடைய இராஜ்ஜியத்திற்கும், தேவனுடைய பிள்ளைகளுக்கும், அவர்களது சாட்சிக்கும் விரோதமாக எழும்பாதீர்கள் என வேண்டினார். அதற்கு அவர்கள் இணங்காது தொடர்ந்து செயல்பட்டபோது, கர்த்தர் அவர்களின் ஆலோசனைகளை அவமாக்கிப்போட்டார். செயல்பாடுகளைச் சிதறடித்தார். தேவனருளும் பெலனும், ஞானமும், ஆலோசனையும் தேவமனிதருடைய சாட்சிக்கு எதிர்த்து நின்றோரை மேற்கொள்ள உதவியது.

## 4. சாட்சியாக ஜீவிக்க தேவபெலன்!

அழைத்த தேவனுக்குச் சாட்சியாக ஜீவிக்க, அவருக்கென்று எழும்பிப் பிரகாசிக்கப் பரிசுத்த ஆவியின் அபிஷேகம், அவசியமாக

இருக்கிறது. என்னைப் பெலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன் (1 தீமோத்தேயு 1:12) என்று பவுல் எழுதியிருக்கிறார். நாம் முன்னரே தியானித்தபடி, நாம் பெலனடைவதற்கு, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் நமக்குத் தேவையாக இருக்கிறது. கர்த்தருக்குள் நாம் பெலனடையும்போது நாம் இயேசுவுக்குச் சாட்சியாக இருப்போம்; தேவனுக்கு ஊழியம் செய்வோம்.

பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் (அப்போஸ்தலர் 1:8) என்று இயேசு சொல்லியிருக்கிறார். கல்வியறிவில்லாத, எளிமையான சீஷர்களும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்ட போது, மிகவும் தைரியத்தோடும், தெளிவோடும் சத்தியத்தை, இரட்சிப்பை சுவிசேஷமாக எடுத்துரைத்தார்கள். பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்றும் அறிந்துகொண்டார்கள் (அப்போஸ்தலர் 4:13) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இதைப்போன்றே, பேதுருவும் யோவானும் ஒருநாள் தேவாலயத்துக்குச் சென்றபோது, நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனைச் சுகப்படுத்தினார்கள். அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான் . இதைக்கண்ட ஜனங்களெல்லாரும் பிரமித்து, அவர்களிடத்திற்கு ஓடிவந்தார்கள். காத்திருந்தபோது அபிஷேகம் பெற்று தேவபெலனடைந்த அப்போஸ்தலர்கள் கைகளினாலே அநேக அற்புதங்கள் நடைபெற்றன. சாட்சிகள் வெளிப்பட்டன. எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன? அவருடைய நாமத்தைப்பற்றும்

விசுவாசத்தினால் அவருடைய நாமமேநீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசம் உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது (அப்போஸ்தலர் 3:16). என்று அவர்கள் சாட்சியாக அறிவித்தார்கள்.

பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டு வந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின, பொல்லாத ஆவிகளும் அவர்களைவிட்டுப் புறப்பட்டன (அப்போஸ்தலர் 19:11,12). ஆதித் திருச்சபையில் ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான். அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்துநிற்க அவர்களால் கூடாமற்போயிற்று (அப்போஸ்தலர் 6:8,10) என்பதாக வாசிக்கிறோம்.

ஒருமுறை, வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான். அவர்கள் கூடியிருந்த மேல்வீட்டிலே அநேக விளக்குகள் வைத்திருந்தது. அப்பொழுது ஐத்திகு என்னும் பேர்கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்திருந்து, பவுல் நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருக்கையில், மிகுந்த தூக்கமடைந்து, நித்திரை மயக்கத்தினால் சாய்ந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து, மரித்தவனாய் எடுக்கப்பட்டான். உடனே பவுல் இறங்கிப்போய், அவன்மேல் விழுந்து, அவனை அணைத்துக் கொண்டு, கலங்காதிருங்கள், இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது என்றான். அந்த வாலிபனை அவர்கள் உயிருள்ளவனாகக் கூட்டிக்கொண்டுவந்து, மிகுந்த ஆறுதலடைந்தார்கள். கர்த்தருக்குள் பெலனடையும்போது இயேசுவுக்கு சாட்சியாக அவருக்கு ஊழியம் செய்வோம்.

## எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலன்!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இந்தச் செய்தியை வாசிக்கிற நாம் இம்மட்டும் இயேசுகிறிஸ்துவின் அன்பை உணராது, அவரால் தந்தருளப்பட்ட விடுதலையை அனுபவிக்காது இருப்போமேயானால், இன்றே இயேசுவுக்கு நம்மை முழுமையாக அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம். அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமேசாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம் (எபிரெயர் 2:4) என்ற எச்சரிப்பு, இன்று மறுபடியும் நமக்குத் தந்தருளப்படுகிறது.

மீட்கப்பட்ட நிலையில், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை குறித்தும், பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகளைப் பற்றியும், ஒருவேளை உணர்வில்லாது இருப்போமேயானால், இன்றே உணர்வடைந்து, இப்பொழுது நம்மோடு இடைப்பட்டுக் கொண்டிருக்கும் ஆவியானவர் நம்மை ஆட்கொள்ளும்படி, நம்முடைய எண்ணங்களை மாற்றி, நம்மைஒப்புக்கொடுப்போம்.

பாவத்திற்கும், தீமைக்கும் எதிராளிகளுக்கும், பிசாசுக்கும் அதன் செயல்பாடுகளுக்கும் எதிர்த்து நிற்பதில் எந்நாளும் தோல்வியே என்ற நிலை மாறி, கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் வெற்றி சிறந்த நற்சாட்சியின் வாழ்வு வாழ, கர்த்தர் இன்று நம்மைஅழைக்கிறார். நாம் அவராலே பெறும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் நம்மில் நிலைத்திருக்கும். ஒருவரும் நமக்குப் போதிக்கவேண்டுவதில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையுங் குறித்து நமக்குப் போதிக்கும். அது சத்தியமாயிருக்கிறது. பொய்யல்ல, அது நமக்குப் போதிக்கிறபடியே அவரில் நிலைத்திருப்போம்.

தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மைநோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும்,

கர்த்தர் சமீபமாயிருக்கிறார் (சங்கீதம் 145:18). கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள். அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள் (ஏசாயா 55:6) என்று நமக்காகவே எழுதப்பட்டிருக்கிறது. எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து தேவனை நோக்கிக்கூப்பிட்ட தேவஜனத்தின் கூக்குரலைக் கர்த்தர்கேட்டு, அவர்களுக்கு ஒரு இரட்சகனை அனுப்பினார். இன்றைக்கும் பாவத்துக்கும், பயத்துக்கும், சூழ்நிலைகளுக்கும் அடிமைத்தனத்திற்குட்பட்டுச் செய்வதறியாது தவிக்கும் நமக்குத் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையே இரட்சகராகத் தந்தருளியிருக்கிறார்.

இந்த வாய்ப்பையும் வேளையையும் இழந்து போகாது இயேசுவை நோக்கிக் கூப்பிடுவோம். தேவபெலனைப் பெற்றுக்கொள்ளுவோம். பாவம் செய்யாதிருப்போம், பாடுகளைத் தேவனுடைய ஒத்தாசையுடன் சகிப்போம். பிசாசுக்கு எதிர்த்து நிற்போம். எதிராளிகளை இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் மேற்கொள்ளுவோம். கிறிஸ்துவுக்கென சாட்சியாக எழும்பிப் பிரகாசிப்போம். இனிக் காலம் செல்லாது. இன்னும் கொஞ்சக்காலம் ஒளி நம்மிடத்தில் இருக்கும்; இருளில் நாம் அகப்படாதபடிக்கு ஒளி நம்மோடிருக்கையில் ஜாக்கிரதையாய் இயேசுவின் கரம்பிடித்து நடப்போம். அல்லேலூயா! ஆமென்.

# 12. இயேசுவின் பிறப்பில் வெளிப்பட்ட இரகசியங்கள்!

அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார் (1 தீமோத்தேயு 3:16).

## இயேசுகிறிஸ்துவின் பிறப்பு!

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் பிறப்பை ஆண்டுதோறும் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நினைவுகூர்ந்து கொண்டாடி மகிழுகிறோம். பாடல்களைப் பாடி தேவனை மகிமைப்படுத்தி, உலா வந்து வீடுகளைச் சந்தித்து, கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை அறிமுகமானவர்களுக்கும் மற்றவர்களுக்கும் மகிழ்வுடன் கூறி அறிவிக்கிறோம். திருச்சபையாகவும், குடும்பங்களாகவும் எளியோரை நினைத்து நம்மால் இயன்ற பொருட்களை, பங்குகளைப் பகிர்ந்தளித்து தேவனை மகிமைப்படுத்துகிறோம்.

அநேகர் புத்தாடைகளை உடுத்தி, இல்லங்களில் சிறப்பு உணவு அருந்தி, உறவினர்களோடும் நண்பர்களோடும் மகிழ்ந்திருக்கிறார்கள். சிலர் பாரம்பரியம் என்ற பெயரில் கிறிஸ்மஸ் மரங்கள், நட்சத்திரங்கள் குடில் போன்ற உருவ அலங்காரங்கள், போட்டிகள், கிறிஸ்மஸ் தாத்தாவின் பரிசுகள், எனக் காலத்தினால் சிதைந்த கொண்டாட்டங்களுக்கும் உட்பட்டுப் பண்டிகையாக அனுசரிப்பதையும் நாம் அறிவோம்.

ஆனால், இயேசுகிறிஸ்துவைத் தாங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட நம்மில் அநேகர், இயேசுவின் மகிமையையும் வல்லமையையும் வாழ்வில் கண்டுணர்ந்திருக்கிறோம். இந்தப் பண்டிகை நாட்களில், இயேசுகிறிஸ்துவினால் அடைந்த ஆத்தும

இரட்சிப்பையும், மற்ற பல ஆசீர்வாத நன்மைகளையும் நாம் நன்றியோடு நினைவுகூர்ந்து தேவனை மகிமைப்படுத்துகிறோம்.

இந்நிலையில், இயேசுகிறிஸ்துவின் பிறப்பில் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட பரமஇரகசியங்களை அறிந்துகொள்வது, விசுவாசிகளாகிய நம் வாழ்வில், இன்னும் அதிகமாக உள்ளத்தின் ஆழத்திலிருந்து தேவனைத் துதித்து ஸ்தோத்திரிக்க, மகிமைப்படுத்த நம்மை நெருக்கி ஏவுகிறதாயிருக்கிறது.

**வெளியாக்கப்பட்ட இரகசியம்!**

தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு அருளப்படுகிறது. மற்றவர்களுக்கோ, அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கத்தக்கதாக, அவைகள் உவமைகளாகச் சொல்லப்படுகிறது (லூக்கா 8:10) என்று நம்முடைய இரட்சகர் சொல்லியிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து, முதலாம் வருகையைப்பற்றி, வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள சம்பவங்களும், அவற்றைச் சார்ந்த தனிப்பட்டோர் ஒவ்வொருவரும், நம்முடைய இரட்சகரின் பிறப்பில் மறைந்துள்ள இரகசியங்களை வெளிப்படுத்துகிறதை நாம் அறிந்திருக்கிறோம்.

இயேசுகிறிஸ்துவின் பிறப்பின்போது, வானம் திறக்கப்பட்டு, தேவதூதரின் வாக்கினால், தேவகுமாரனின் தெய்வீக பிறப்பு முன்னறிவிக்கப்பட்டது. வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்த மேய்ப்பர்களுக்கு, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. ஏரோது ராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்தபொழுது, கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்து கொண்டார்கள்.

வெளியாக்கப்படாத மறைபொருளுமில்லை, அறியப்படாத இரகசியமுமில்லை (லூக்கா 12:2) என்றும், கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செ ய்யார் (ஆமோஸ் 3:7) என்றும்; கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது (சங்கீதம் 25:14) என்றும்; நீதிமான்களோடே அவருடைய இரகசியம் இருக்கிறது (நீதிமொழிகள் 3:32) என்றும் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

## தேவாலயத்தில் வானம் திறக்கப்பட்டது!

கர்த்தர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்கும், தமக்குப் பயந்தவர்களுக்கும், கர்த்தருடைய பார்வைக்கு நீதிமான்களாயிருப்போருக்கும், வானத்தைத் திறந்து, தேவதூதர்கள் மூலம் இரகசியங்களை, தாம் செய்யவிருந்த காரியங்களை வெளிப்படுத்தினார். இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகையைச் சார்ந்த பல நிகழ்வுகளில் வானம் திறக்கப்பட்டதாக வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வுலகில் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் மனிதனாக இயேசுகிறிஸ்து பிறந்த நாட்களில், நடைபெற்ற முக்கியமான பல சம்பவங்களில் இவ்வாறு தேவதூதர்மூலம் பரலோகத்தின் இரகசியம் வெளிப்பட்டதை நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

ஆசாரிய வகுப்பில் சகரியாவும், அவன் மனைவி எலிசபெத்தும், கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள் (லூக்கா 1:6). நீதிமான்களோடே கர்த்தருடைய இரகசியம் இருக்கிறது என்ற வாக்கின்படி, சகரியா தேவாலயத்தில் தூபங்காட்டுகிற வேளையில் அவருக்கு வானம் திறக்கப்பட்டு இரகசியம் வெளிப்பட்டது. கர்த்தருடைய தூதன் ஒருவன் தூபபீடத்தின் வலதுபக்கத்திலே நின்று அவருக்குத் தரிசனமானான். அந்த தேவதூதன், கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணும்படி அவருக்கு முன்பாக நடந்துபோகும் உன்னதமானவருடைய தீர்க்கதரிசியாகிய யோவான்ஸ்நானனுக்கு, அவர் தகப்பனாவார் என்றுரைத்தான்.

இயேசு தேவகுமாரன் என்கிற உண்மை, மிகவும் முக்கியம் வாய்ந்த அவருடைய பிறப்பு, எல்லோரும் விளங்கிக் கொள்ளும் வகையில், தேவனால் தேவசந்நிதானத்தில் நிற்கிற காபிரியேல் என்னும் தேவதூதன் மூலம் சகரியாவுக்கு நற்செய்தியாக அறிவிக்கப்பட்டது. கர்த்தர் யோவான்ஸ்நானனை உன்னதமான தேவனுடைய குமாரனுக்கு முன்பாகச் சென்று அவரை அடையாளப்படுத்த ஏற்படுத்தியிருந்தார். ஆசாரியனாகிய சகரியா தேவஜனத்துக்காக தேவசமுகத்தில் தூபங்காட்டுகிற வேளையில், தேவனோடுள்ள உறவை சுகந்தவாசனையாக நினைப்பூட்டின நேரத்திலே கர்த்தர், இயேசு உன்னதமானவராகிய தேவனுடைய குமாரன் என்ற இரகசியத்தை வெளிப்படுத்தினார்.

## மரியாளுக்கு திறக்கப்பட்ட வானம்!

மரியாள் தன் முதற்பேறான குமாரனைப்பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள் (லூக்கா 2:7) என்று எழுதப்பட்டிருக்கிறது. இதில் முன்னணை என்பது மாட்டுத் தொழுவங்களில் தீவனம் வைக்கும் தொட்டி என்பதாக அறிகிறோம். தேவனாகிய கர்த்தர் தம்முடைய குமாரன் மிகவும் எளிமையான, தாழ்மையான சுற்றுப்புறத்தில், யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்னும் சிற்றூரிலே முன்னணையில் பிறக்கும்படியாக முன் குறித்திருந்தார். எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார் (மீகா 5:2) என்று இது மீகா தீர்க்கதரிசியினாலே முன்னறிவிக்கப்பட்டிருந்தது.

பெத்லகேம் சிற்றூரும், பிறப்பின் சூழ்நிலையும் எளிமையான பெற்றோரும், முன்னணையும் இயேசுகிறிஸ்து மெய்யாகவே தேவகுமாரன் என எவ்விதத்திலும் வெளிப்படுத்த வில்லை. மிகவும் பாதகமான சூழ்நிலையில், சாதாரணமான பிள்ளைப்பேற்றினாலே, எளிமையான பெற்றோர் ஒரு குமாரனைப்பெற்று முன்னணையிலே கிடத்தினார்கள். ஆனால், அது எந்தவிதத்திலும் சாதாரணமான நிகழ்வு அல்லவென்றும், இயேசுகிறிஸ்துவும் சாதாரணமானவர் அல்ல என்றும் நாம் அறிந்திருக்கிறோம்.

இயேசுகிறிஸ்துவின் பிறப்பும் சூழ்நிலைகளும் சம்பந்தப் பட்டோரும் மிகவும் சாதாரணமானவர்களாக இருக்கும்போது, எவ்விதமாகக் கர்த்தர் அந்த நிகழ்வின் தெய்வீகத்தைச் சாட்சியோடு வெளிப்படுத்தக்கூடும்? கர்த்தர் பரலோகத்திலுள்ள தூதர்களை இதற்கென சாட்சியாக ஏற்படுத்தினார். இந்த இரகசியம் வானம் திறக்கப்பட்டு தேவதூதர்களால் அறிவிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டது. அல்லேலூயா!

## காபிரியேல் தூதன் அறிவித்த இரகசியம்!

காபிரியேல் என்னும் தூதன், கலிலேயாவிலுள்ள நாசரேத்தென்னும் ஊரில், மரியாள் இருந்த வீட்டில் பிரவேசித்து:

கிருபை பெற்றவளே வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார். ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான் (லூக்கா 1:28). அதற்கு மரியாள், இதோ நான் ஆண்டவருக்கு அடிமைஎன்றும், கர்த்தர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார் என்றும் அறிக்கையிட்டாள். கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது என்ற வாக்கின்படி, கர்த்தரிடத்தில் கிருபைபெற்ற மரியாளுக்கு வானம் திறக்கப்பட்டது, இரகசியம் வெளிப்பட்டது.

அந்த தேவதூதன் மரியாளை நோக்கி: இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் என்றான். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக என்று தேவனுடைய சந்நிதானத்திலிருந்து கட்டளை பிறப்பிக்கப்பட்டது. மேலும், அந்தக் குமாரனின் அடையாளம் மரியாளுக்கு வெளிப்படுத்தப்பட்டது. காபிரியேல் தூதன், இயேசுகிறிஸ்துவினுடைய தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தி அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார் என்றான்.

ஏசாயா தீர்க்கதரிசியினால் முன்னறிவிக்கப்பட்டதைப் போன்று தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்துவார் (ஏசாயா 9:7) என்ற உண்மையும் வெளிப்பட்டது. புருஷனுடைய சித்தத்தினால் அல்லாமல் பரிசுத்த ஆவி உன்மேல் வருவதாலும், உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடுவதாலும், நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும் என்றான்.

## யோசேப்புக்கு இரகசியம் வெளிப்பட்டது!

இயேசுகிறிஸ்துவினுடைய தாயாராகிய மரியாள் யோசேப்புக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கையில் அவர்கள் கூடி வருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான். நீதிமான்களோடே அவருடைய இரகசியம் இருக்கிறது என்ற வசனத்தின்படி, யோசேப்பு இப்படிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், வானம் யோசேப்புக்குத் திறக்கப்பட்டது.

கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: இரகசியங்களைத் தெளிவுபடுத்தினான். தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே அவளிடத்தில் உற்பத்தியா யிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்.

யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டு, அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான். கர்த்தர் தம்முடைய தூதர்களை அனுப்பி, தேவனுடைய குமாரனாம் இயேசுகிறிஸ்து தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்று தேவ தூதர்களுடைய சாட்சியின் வசனத்தினால் வெளிப்படுத்தினார்.

தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப் பட்டிருக்க, முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சிகொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம் (எபிரெயர் 2:2-4) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்கிற உண்மையை, மிகவும் முக்கியம் வாய்ந்த அவருடைய பிறப்பில் வெளிப்பட்ட இரகசியங்கள் மூலமாக, தெளிவாக எந்தவித சந்தேகங்களுக்கும் ஏதுவின்றித் தேவதூதர்கள் முன்னறிவித்தார்கள். தேவனாகிய கர்த்தர் இயற்கைக்கு அப்பாற்பட்டவர்களாக தேவதூதர்களை சிருஷ்டித்தார். ஆகவே தம்முடைய சொந்தக் குமாரனையே மனித ரூபத்தில் அனுப்ப

சித்தம் கொண்டபோது, தம்முடைய தூதர்களை அனுப்பி தம்முடைய குமாரனின் பிறப்பை, இரகசியத்தை அறிவித்தது ஆச்சரியமல்லவே!.

## மேய்ப்பர்களுக்குக் கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி!

முதலாவது, சகரியா தேவாலயத்தில் தூபங்காட்டுகிற வேளையில் அவருக்கு வானம் திறக்கப்பட்டுத் தேவதூதன் மூலம் இரகசியம் வெளிப்பட்டது. அந்த தேவதூதன், கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணும்படி தீர்க்கதரிசியாகிய, யோவான் ஸ்நானனைத் தகுந்த காலத்திலே தருவேன் என வாக்கருளினார். அந்தப்படியே அவன் மனைவியான எலிசபெத், யோவானைப் பெற்றெடுத்தாள். அடுத்து, காபிரியேல் தூதன், மரியாளுக்குத் தேவக்குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் பிறப்பை முன்னறிவித்தார். அப்படியே அதுவும் குறிப்பிட்டவேளையில் நிறைவேறியது. மரியாளுக்கு அருளின வாக்கு நிறைவேறின அதே இரவில் வானம் திறக்கப்பட்டுத் தேவதூதர்கள் பிரத்தியட்சமாக மேய்ப்பர்களுக்குத் தோன்றினார்கள்.

பெத்லகேம் ஊரின் வயல்வெளியில் மேய்ப்பர்கள் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்த வேளையில் அவர்களுக்கு வானம் திறக்கப்பட்டு, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி தேவதூதர்களால் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. பெத்லகேம் என்னும் சிற்றூர் யூதேயாவின் மலைப்பிரதேசத்தில் எருசலேம் நகருக்கு தெற்கே சுமார் 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இந்தப்பகுதியின் வயல்வெளிகளில் தாவீது தன் இளம் வயதில், தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்து வந்தார் எனவும், தாவீது பின்னர் சாமுவேல் தீர்க்கதரிசியினால் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டதும் இந்த ஊரில்தான் என்பதாகவும் அறிகிறோம்.

கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி ராஜாக்களுக்கும், பிரபுக் களுக்கும் ஆசாரியர்களுக்கும், மேன்மக்களுக்கும் முதலில் அறிவிக்கப்படாமல், சமுதாயத்தில் அந்நாட்களில் தாழ்த்தப் பட்டோராக எண்ணப்பட்ட மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்பட்டது. கர்த்தர் எளிய சாதாரணமானவர்களுக்குத் தம்முடைய குமாரனின் பிறப்பின் நற்செய்தியை வெளிப்படுத்த பிரியமாயிருந்தார். இயேசுகிறிஸ்துவும் தமது ஊழிய நாட்களில் இதைப்போன்றே

சொன்னதை நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம். அந்த வேளையில் இயேசு ஆவியிலே களிகூர்ந்து: பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்; ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது (லூக்கா 10:21) என்றார் என்று எழுதப்பட்டிருக்கிறது.

மேய்ப்பர்களுக்குக் கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை அறிவிக்க கர்த்தருடைய தூதன் அவர்களிடத்திலே வந்து நின்றான். கர்த்தருடைய மகிமைஅவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையில் கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான் (லூக்கா 2:9-12). கர்த்தருடைய மகிமைமேய்ப்பர்களைச் சுற்றிலும் பிரகாசித்தபோது, அவர்கள் கர்த்தருடைய பிரசன்னத்தையும் வல்லமையையும் உணர்ந்தார்கள்.

இயேசுகிறிஸ்துவின் பிறப்பின் நிகழ்வுகளை நினைவு கூரும்போது, தேவதூதர்களின் பங்கையும், இரட்சகர் பிறப்பின் நற்செய்தியை அவர்கள் அறிவிக்கையில் அவர்களது உற்சாகத்தையும் மனமகிழ்வையும் நம்மால் உணரமுடிகிறது. அந்தக்ஷணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள் (லூக்கா 2:13-14) என்று எழுதப்பட்டிருக்கிறது. எல்லாவற்றைக் காட்டிலும், அவர்கள் நன்றாய் அறிந்திருந்த பரலோகத்தின் மேன்மைகளைத் துறந்து, மனிதனாகப் பூமியில் தோன்றி, பாடுகளனுபவிக்க, நிந்தைகளுக்குட்பட்டுத் துன்பத்தைச் சகிக்க, தன்னையே அர்ப்பணித்த இயேசுவின் தியாகத்தையும், அதனால் வரும் மனுக்குல இரட்சிப்பையும் முழுமையாக அறிந்து உணர்ந்து அவர்கள் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

## அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டி!

மேய்ப்பர்கள் என்ற சொல் வேதாகமத்தில், பல இடங்களில், ஆவிக்குரிய வாழ்வில் வழிநடத்துபவர்களையும் ஆவிக்குரிய தலைவர்களையும் குறிப்பதற்காக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இதைப்போல, ஆடுகள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் குறிக்கிறதாகவும் உள்ளது. பேதுருவும் தன் நிருபத்தில் இயேசுவைப் பிரதான மேய்ப்பர் எனக் குறிப்பிடுகிறதைப் பார்க்கிறோம் (1 பேதுரு 5:4). நம்முடைய இரட்சகர் இயேசுவும், நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான் (யோவான் 10:11) என்று சொல்லியிருக்கிறார்.

மேலும், இரட்சிக்கப்பட்ட தேவஜனம், சுத்திகரிக்கப்பட்டு, தேவனுடைய சந்நிதானத்தில் ஏற்றுக்கொள்ளப்பட, இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டியானவராக (வெளி 5:6-7) தம்முடைய சொந்த இரத்தத்தினால் நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவரா யிருக்கிறார் (1 யோவான் 2:1) என்று எழுதப்பட்டிருக்கிறது. மனுக்குல மீட்பின் பணியை நிறைவுசெய்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இயேசுகிறிஸ்துவின் புதிய பொறுப்புகளை நினைவூட்டும்படியாக அவர் ஆட்டுக்குட்டியானவர் என்று வெளிப்படுத்தின விசேஷத்தில் அழைக்கப்படுகிறார்.

இயேசுகிறிஸ்து நம்முடைய எல்லாப் பாவங்களுக்காகவும் பாடுபட்டுக் கோரச் சிலுவையில் அடிக்கப்பட்டு, இரத்தம் சிந்தி, தம்முடைய சொந்த ஜீவனை ஜீவபலியாக ஈந்தளித்ததை நினைவு கூரும்படியாக அவர் தேவ ஆட்டுக்குட்டி என யோவான் ஸ்நானனால் அழைக்கப்பட்டார். இயேசுவின் ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் யோவான், இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி (யோவான் 1:29) எனச் சொன்னார். அப்போஸ்தலனாகிய பவுலும், தன்னுடைய நிருபத்தில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே (1 கொரிந்தியர் 5:7) என்று எழுதியிருக்கிறார். ஆனாலும் மேய்ப்பர்களுக்கு முதலாவதாக நற்செய்தி அறிவிக்கப்பட்டதன் காரணம், பிரதான மேய்ப்பர், ஆட்டுக்குட்டியானவர் தேவஆட்டுக்குட்டி என்பவற்றைக் காட்டிலும் அதிக இரகசியங்களை உள்ளடக்கி இருப்பதைப்போன்று தோன்றுகிறது.

## மேய்ப்பர்களுக்கு வெளிப்பட்டதின் இரகசியம்!

ஏன் மேய்ப்பர்களுக்கு, அதுவும் பெத்லகேம் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்தவர்களுக்கு, முதலாவதாக இயேசுகிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்தி அறிவிக்கப்பட்டது?

எருசலேம் தேவாலயத்தில் அந்நாட்களில் பலியாகச் செலுத்தப்பட்ட ஆடுகள், தேவாலயத்துக்கு சமீபத்திலுள்ள பெத்லகேமின் சுற்றுப்புறத்திலிருந்த வயல்வெளிகளில் வளர்க்கப் பட்டதாக யூத வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் குறிப்பிடப்படுகிற மேய்ப்பர்களும், இதேப் பகுதிகளில் தேவாலயத்தில் பலியாகச் செலுத்தப்படவே ஆடுகளை வளர்த்து வந்தார்கள் என்பதாக அறிகிறோம். யூதேயாவில் மற்ற ஆடுகளை அவர்கள் வனாந்தரத்திலே வளர்த்து வந்தார்கள்.

பெத்லகேம் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே மந்தையைக் காத்துக்கொண்டிருந்த மேய்ப்பர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதன் நோக்கம், இயேசுகிறிஸ்து பலிஆட்டைப் போன்று, பெத்லகேமிலே பிறந்து, ஜீவபலியாக எருசலேமில் தன் ஜீவனைக் கொடுக்கவிருந்த இரகசியத்தை வெளிப்படுத்தவேயாகும். இதனிமித்தமே தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி, மனுக்குலத்துக்கு இரட்சிப்பை அருள, பஸ்காவாக, பலியிடப்படும் தேவ ஆட்டுக்குட்டியாகப் பிறந்த இயேசுகிறிஸ்துவின் பிறப்பு, பெத்லகேம் மேய்ப்பர்களுக்கு முதலாவதாக அறிவிக்கப்பட்டது என்பதாக அறிகிறோம்.

தேவ ஆட்டுக்குட்டியானவர், தேவாலய பலி ஆடுகளைப் போன்று, எருசலேமிலே பலியாக அடிக்கப்படுவதற்காகப் பெத்லகேமிலே பிறந்தார். இந்த இரகசியம் அவருடைய பிறப்பிலேயே வெளிப்பட்டது. இயேசுகிறிஸ்துவினுடைய வாழ்வின் முழு நோக்கமும் அவர் தன்னையே ஜீவபலியாகத் தந்து தேவனுடைய அன்பை விளங்கப்பண்ணுவதாகும். பிறப்பிலிருந்து அவருடைய முழு வாழ்வும், தேவனுடைய அன்பையே பிரதானப்படுத்துகிறதாயிருந்தது.

## கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள்!

ஏரோது ராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்தபொழுது, கிழக்கிலிருந்து வந்த

சாஸ்திரிகள் கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தார்கள். அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்கு மேல் வந்து நிற்கும்வரைக்கும் அவர்களுக்கு முன் சென்றது. அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்டபோது, மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள். அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள் (மத்தேயு 2:9-11).

சாஸ்திரிகள் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்த வழியில் யூதேயா தேசத்தில் எருசலேம் நகருக்குள் வந்த மாத்திரத்தில் யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் இங்கேதான் இருக்க வேண்டும் என எண்ணி விசாரிக்கத் துவங்கினர். பின்னர் மீகா தீர்க்கதரிசியின் வாக்கின்படி, இன்னும் பயணத்தைத் தொடர்ந்தபோது, நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்கு மேல் வந்து நிற்கும்வரைக்கும் அவர்களுக்கு முன் சென்றது. அவர்களுக்கு உணர்த்தபட்டபடியே, அநேக நாட்களுக்குப் பின்னர் ஆவலோடு எதிர்பார்த்த பிள்ளையைக் கண்டபோது, அவர்கள் மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது.

அவர்கள் பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்து கொண்டார்கள். சாஸ்திரிகளை ஞானிகள் என்றும் குறிப்பிடுகிறார்கள். அந்தப் பிள்ளை யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறார் என்று அவர்கள் உறுதியாக நம்பினதின் நிமித்தமே, இவ்விதமாக, சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கினார்கள் என அறிகிறோம். யூதர் கடைப்பிடிக்கும் பிரமாணங்களின்படி, தேவனாகிய கர்த்தர் ஒருவரைத் தவிர, வேறொன்றையும் நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம் என்று அவர்கள் அறிந்திருந்தும், இவ்விதமாக இயேசுகிறிஸ்துவை அவர்கள் பணிந்துகொண்டது, பிள்ளையின் தெய்வீகத் தன்மையையும் அவர்கள் திட்டமாய் அறிந்திருந்ததையும் வெளிப்படுத்துகிறது. மற்றொரு பரிமாணத்தில், தூர

தேசத்திலிருந்து வந்த சாஸ்திரிகள் இயேசுவின் பிறப்பின் நிகழ்வுகளில் இடம் பெற்றது. அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்ற உண்மையை வெளிப்படுத்துகிறது.

இந்த சம்பவத்தில் நட்சத்திரத்தைப் பார்த்து வந்த சாஸ்திரிகள் இந்நாட்களில் நாம் நினைக்கிறபடி வானசாஸ்திரிகள் என்றோ அல்லது குறிசொல்லுகிறவர்கள் என்றோ எவ்விதத்திலும் நினைக்க ஏதுவில்லை. ஏனென்றால் மத்தேயு சுவிசேஷத்தை யூதருக்கென்றே அவர் எழுதியிருக்கிறபடியால், யூதருடைய பிரமாணங்களின்படி தடைசெய்யப்பட்டிருந்த குறிசொல்லுகிறவர்களை அவர் தன்னுடைய சுவிசேஷத்தில் குறிப்பிட்டிருக்கிற வாய்ப்பே இல்லை என்று சொல்லப்படுகிறது. ஞானிகளாகிய அந்த சாஸ்திரிகள் ஒரு தெய்வீக வெளிப்பாட்டின் மூலமாகவே நட்சத்திரத்தைப் பின்தொடர்ந்து வந்து இயேசுவை ராஜாவாகவும் தேவனாகவும் அறிந்து வணங்கித் தொழுதார்கள்.

**காணிக்கைகள் வெளிப்படுத்தின இரகசியங்கள்!**

அந்நாட்களில் கிழக்கத்திய தேசங்களில் , ராஜாக்கள் போன்ற கனத்துகுரியவர்களைச் சந்திக்கும்போது, விலை உயர்ந்த பொருட்களைக் காணிக்கையாகக் கொடுப்பது வழக்கமாக இருந்தது. சாஸ்திரிகளாகிய இந்த ஞானிகள் தங்கள் பிரயாணத்தைத் துவக்கினபோதே அவர்கள் தேடிச் செல்லவிருந்த ராஜரீக ஆசாரிய பிள்ளையைப்பற்றி நன்றாக அறிந்திருக்க வேண்டும். இதனிமித்தமே அவர்கள் இயேசுவுக்கு அளித்த காணிக்கைகள் ஒவ்வொன்றும் அவருடைய தன்மையையும், அவர் பிறந்த நோக்கத்தையும் வெளிப்படுத்தி உறுதிச்செய்கிறது. அவர்கள் தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் பிள்ளைக்குக் காணிக்கையாக வைத்தார்கள்.

பொன் ராஜாக்களைக் கனப்படுத்த அவர்களுக்கு அளிக்கப்படும் வெகுமதியாக எண்ணப்பட்டது. அது இயேசுவின் ராஜரீகத்தை அறிக்கைப்பண்ணி இயேசுவே ராஜா எனப் பிரகடனப்படுத்தியது. தூபவர்க்கம், தேவாலயத்தில் ஆசாரியர்களால் நெருப்பிலே போடப்பட்டு, அதில் எழும்பும் சுகந்த வாசனைப் புகை தேவனுக்குச் செலுத்தப்பட்டது. இது இயேசுவை ஆண்டவர் என்று மட்டுமல்லாமல், அவரை ஆசாரியராகவும் அடையாளப்படுத்தி, மனிதருக்கும், தேவனுக்கும், இடையே உள்ள பிளவை இணைக்கும்

பாலமாக, தேவக்குமாரனாக, பிரதான ஆசாரியராக விளங்கச்செய்தது. வெள்ளைப்போளம், பொன்னைப்போல விலை உயர்ந்த வாசனைப்பொருள். இது இருக்கும் இடத்தை இனிமையான வாசனையால் நிரப்பக்கூடியது. இயேசுகிறிஸ்துவின் நாட்களில் மரித்தோர் உடலைப் பதப்படுத்திப் பாதுகாக்கவும், அடக்கம்பண்ணவும் வெள்ளைப்போளம் உபயோகப்படுத்தப்பட்டது.

சாஸ்திரிகளால் காணிக்கையாகச் செலுத்தப்பட்ட விலை மதிப்புள்ள பொருட்கள், பொன்னும் தூபவர்க்கமும் வெள்ளைப் போளமும், இயேசுகிறிஸ்துவை ராஜாவாகவும், தேவனாகவும், ஆசாரியராகவும் வெளிப்படுத்தி, அவர் தம்முடைய மரணத்தினால் ஏற்படுத்தின இரட்சிப்பைத் தீர்க்கதரிசனமாக முன்னுரைத்தது.

## இயேசுவின் பிறப்பில் வெளிப்பட்ட இரகசியங்கள்!

இயேசுகிறிஸ்துவின் பிறப்பின்போது, வானம் திறக்கப்பட்டு, தேவதூதரின் வாக்கினால், தேவகுமாரனின் தெய்வீகப் பிறப்பு முன்னறிவிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட்டது. வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்த மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தி, இயேசு தேவாலய பலி ஆடுகளைப் போன்று, எருசலேமிலே பலியாக அடிக்கப் படுவதற்காகப் பெத்லகேமிலே பிறந்தார் என்ற இரகசியத்தை வெளிப்படுத்தியது.

பெத்லகேமிலே இயேசு பிறந்தபொழுது, வந்த சாஸ்திரிகள், அவரைப் பணிந்துகொண்டு, காணிக்கைகளைச் செலுத்தி, இயேசுவை ராஜாவாகவும், ஆசாரியராகவும் வெளிப்படுத்தினார்கள். அவர் தம்முடைய மரணத்தினால் நிறைவேற்றவிருந்த இரட்சிப்பைத் தீர்க்கதரிசனமாகப் பிறப்பிலேயே முன்னறிவித்தார்கள்.

இவ்விதமாக, இயேசுகிறிஸ்துவின் பிறப்பில் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட இரகசியங்களை அறிந்துகொள்வது, விசுவாசிகளாகிய நம் வாழ்வில், பண்டிகை நாட்களில், இன்னும் அதிகமாக உள்ளத்தின் ஆழத்திலிருந்து தேவனைத் துதித்து ஸ்தோத்திரிக்க, மகிமைப்படுத்த நம்மைநெருக்கி ஏவுகிறதாயிருக்கிறது. அல்லேலூயா!

## உன் வாழ்வின் இரகசியங்களை நீ அறிவாயா?

இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகையில், தேவனுடைய இரகசியம், நற்செய்தியாக ஒரு சிலருக்கு வெளிப்பட்டதாக நாம்

அறிந்தோம். இந்நற்செய்தி, பின்னர் உலகெங்கும் பரவி எண்ணிலடங்காதோரை இரட்சிப்பிற்குள் நடத்தியது. இந்தக் கடைசி நாட்களில் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் நம்மில் அநேகரும், இந்த எண்ணிக்கைக்குட்பட்டிருக்கிறோம்.

முதலாம் வருகையில் எங்கும் வியாபித்து பரவிய தேவசித்தத்தைப்பற்றிய இரகசியங்கள், இந்தக் கடைசி நாட்களில் கர்த்தருக்குப் பயந்து தீமையை வெறுத்து, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவிச் சுத்திகரிக்கப்பட்டு நீதிமான்களாக்கப் பட்டிருக்கிற தேவஜனத்துக்கும், தீர்க்கதரிசிகளாகிய அவருடைய ஊழியக்காரருக்கும் வெளிப்படுத்தப்படுகிறது. தேவனுடைய சித்தத்தை அறிகிற இந்த அறிவு, தேவனுடைய பிள்ளைகளை அவருடைய வருகைக்கு விழித்திருந்து ஆயத்தமாயிருக்க உதவுகிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் வெளிப்பட்ட இரகசியங்கள், மனுக்குல இரட்சகரை வெளிப்படுத்தியது. இவ்விதமாக நம் வாழ்வில் இம்மட்டும் அறியப்படாத இரகசியங்கள், இந்நாட்களில் தேவசித்தத்தை நாம் அறிந்து, பூரண இரட்சிப்பைப்பெற்று ஆயத்தப்பட்டவர்களாய், நம்முடனேகூட அநேகரை, இயேசுவின் இரண்டாம் வருகைக்கென, ஆயத்தப்படுத்த நம்மை அழைக்கிறது.

எழுதியிருக்கிறபடி, கடைசிநாட்களில் மாம்சமான யாவர்மேலும் கர்த்தர் தம் ஆவியைப் பின்மாரியாக ஊற்றவிருக்கிறார். இந்தக் கடைசிக் காலங்களில் மீட்கப்பட்ட நம் ஒவ்வொருவருக்கும் நியமிக்கப்பட்டிருக்கும் இரகசியம், நம் ஒவ்வொருவராலும் அறியப்பட்டுச் செயல்படுத்தப்படும்போது, வெகுத்திரளானோர் தேவசித்தத்தின்படி கர்த்தருடைய வருகையில் அவருக்கு எதிர்கொண்டுபோக, ஆகாயத்தில் கூட்டிசேர்க்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் ஒருங்கிணைக்கப்பட, வழியை ஏற்படுத்தும். அல்லேலூயா!

இந்தக் கடைசிக் கால அழைப்பையும், எச்சரிப்பின் வார்த்தைகளையும் ஏற்றுக்கொண்டு எதிரொலிக்கவும், எங்கும் அவற்றைத் துரிதமாய் எடுத்துச்செல்லவும் நம்மையே அர்ப்பணித்துச் செயல்படுவோம். ஆமென்.

# 13. கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உன் பெலன்!

இந்த நாள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான நாள்;
நீங்கள் துக்கப்படவும் அழவும் வேண்டாம்... நீங்கள் போய்க்
கொழுமையானதைப் புசித்து, மதுரமானதைக் குடித்து
ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்புங்கள்;
இந்த நாள் நம்முடைய ஆண்டவருக்குப் பரிசுத்தமான நாள்,
விசாரப்பட வேண்டாம்; கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே
உங்களுடைய பெலன் என்றான்.
(நெகேமியா 8:9,10).

## பண்டிகை நாட்கள்

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டு, பாவங்களற இயேசுகிறிஸ்துவின் திருஇரத்தத்தால் கழுவிச் சுத்திகரிக்கப் பட்டிருக்கிற நாம், தேவனுடைய பிள்ளைகள் என்பதாக அறியப்பட்டிருக்கிறோம். வேதாகமத்தைச் சார்ந்தும், இவ்வுலக வழக்கின்படியும், நம்முடைய வாழ்வில் சில நாட்களை நாம் விசேஷமாக எண்ணுகிறோம்; அந்நாட்களில் குடும்பத்தாரோடும் உறவினரோடும், சில வேளைகளில் சபையோடும் சமுதாயத்தோடும் ஒன்று கூடி மகிழ்ந்து கொண்டாடுகிறோம்.

பிறந்த நாளையும், திருமண நாளையும், இரட்சிக்கப்பட்ட நாளையும், தேவனுடைய சந்நிதானத்தில் நன்றியோடு நினைவுகூர்ந்து கொண்டாடி மகிழுகிறோம். இதைப்போன்றே சபையாகவும் சமுதாயமாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மைப் போலொத்தவராக இவ்வுலகில் பிறந்த நாளையும், நமக்காகப் பாடுபட்டு மரித்து உயிர்த்தெழுந்த நாளையும், வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்ட

பெந்தெகொஸ்தே நாளையும் நன்றியோடு நினைவுகூர்ந்து, கொண்டாடி மகிழுகிறோம். மிகவும் நல்லது.

### விசேஷித்த நாட்கள்

இயேசுகிறிஸ்துவின் பிறந்தநாளையோ அல்லது இயேசு மரித்து உயிர்த்த நாளையோ அல்லது மற்றப் பண்டிகை நாட்களையோ திட்டமாக அறியாத பட்சத்தில், அந்த பண்டிகைகளை ஆசரிப்பதில் நம்மில் சிலர் தயங்கி நிற்பதை நாம் அறிவோம். இதனிமித்தமே அப்போஸ்தலனாகிய பவுல்: அன்றியும், ஒருவன் ஒருநாளை மற்றொரு நாளிலும் விசேஷமாக எண்ணுகிறான்; வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான். அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன். நாட்களை விசேஷித்துக் கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக்கொள்ளுகிறான்; நாட்களை விசேஷித்துக் கொள்ளாதவனும் கர்த்தருக்கென்று விசேஷித்துக்கொள்ளாதிருக்கிறான்... (ரோமர் 14 : 5,6) என்று எழுதியிருக்கிறார்.

இதைத் தொடர்ந்து, விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே(ரோமர் 14:23) என்று இந்த விளக்கங்களைப் பவுல் நிறைவு செய்கிறார். பண்டிகை நாட்களைக் குறித்துத் தெளிவில்லாமல் இருக்கும் விசுவாசிகளுக்கு இது விளக்கமளிக்கிறது. குறிப்பிட்ட விசேஷித்த நாட்களின் முக்கியத்துவங்களை எந்நிலையிலும் குறைத்து மதிப்பிடாது, நாட்களைத் திட்டமாக அறியாத பட்சத்தில், சபையாகக் கூடிவந்து, அவருக்கு நன்றி செலுத்தி, முன்குறிக்கப்பட்ட நாட்களில் கர்த்தருக்குப் பண்டிகையைக் கொண்டாடி மகிழ அழைக்கப்படுகிறோம்.

### தேவனுடைய வாக்குத்தத்தங்களும் கட்டளைகளும்

எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம், இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே (2 கொரி. 1:20) என்று எழுதப்பட்டிருக்கிறது. வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கும் வாக்குத்தத்த வசனங்களை நாம் வாசித்து விசுவாசித்து அவைகள் நம் வாழ்வில் நிறைவேற ஜெபித்துக் காத்திருக்கிறோம். பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குறுதிகளையும், விசுவாச மார்க்கத்தார்கள் எவர்களோ

அவர்கள் ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக (கலாத்தியர் 3:7) என்ற பவுலின் வார்த்தையின்படி நாம் தேவனுடைய பிள்ளைகளாக, நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுகிறோம். மிகவும் சரியானதே!

பழைய ஏற்பாட்டின் வாக்குத்தத்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளத் தீவிரிக்கிற நம்மில் சிலர், பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டிருக்கும் கர்த்தருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் சற்றுத் தயங்கி நிற்பதை நாம் அறிவோம். தேவனுடைய பிள்ளைகளாக வாக்கருளின நன்மைகளைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளுகிற நாம், தேவஜனத்திற்குத் தலைமுறைதோறும் கடைப்பிடிக்க வேண்டிய நித்திய கட்டளைகளாகக் கொடுக்கப்பட்டிருக்கிற கற்பனைகளைக் கடைப்பிடித்து, அவற்றால் வரும் ஆசீர்வாத நன்மைகளையும் நிறைவாகப் பெற்றுக்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

### கர்த்தர் அருளின நித்திய கட்டளை

கர்த்தராகிய தேவன், தேவனுடைய பிள்ளைகள் நித்திய கட்டளையாகத் தலைமுறைதோறும் அனுசரிக்கவேண்டிய பண்டிகை நாட்களை முன்குறித்து, தம்முடைய தாசனாகிய மோசே மூலம் எழுதி வைத்திருக்கிறார். யாத்திராகமம் 23:14-17, லேவியராகமம் 23ஆம் அதிகாரம் போன்ற வேதப்பகுதிகளில் இதை நாம் வாசிக்கிறோம். மேலும் இந்தப் பண்டிகைகளைக் குறித்துக் கர்த்தர்: இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை (லேவியராகமம் 23:14,21,31,41) என்று கட்டளையிட்டிருக்கிறார்.

நியாயப்பிரமாணங்களும், தீர்க்கதரிசனங்களும், வரவிருந்த காரியங்களின் நிழலாட்டமாகவே இருக்கிறது. நியாயப் பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன் (மத்தேயு 5:17) என்று இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

மேலும் இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: பரலோக ராஜ்யத்துக்கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டெஜமானாகிய

மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான் என்றார் (மத்தேயு 13:52). பழைய ஏற்பாட்டின் கற்பனைகளும் தீர்க்கதரிசனங்களும், இயேசு கிறிஸ்துவின் வாழ்வு மற்றும் போதனைகளால் தெளிவும் விளக்கமும் பெற்று, இன்றைய நாட்களில் விசுவாசிகளாகிய நம்முடைய ஆவிக்குரிய வாழ்வின் அடித்தளமாகவும் ஆதாரமாகவும் அமைய எடுத்துரைக்கப்படுகிறது. அல்லேலூயா!

மேலும் அப்போஸ்தலனாகிய பவுல்: ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வு நாட்களையும் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது. அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது (கொலோசெயர் 2:16,17) என்று எழுதியிருக்கிறார். இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது (1 கொரிந்தியர் 10 : 11).

## கர்த்தருடைய பண்டிகை நாட்கள்

தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனம் சபையாகக் கூடி வந்து பரிசுத்த நாட்களாக ஆசரிக்கும்படி நியமித்த நாட்கள் கர்த்தருடைய பண்டிகை நாட்களாகும். கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கினார். ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக என்று கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். ஓய்வுநாட்களும் பண்டிகை நாட்களும் கர்த்தருடையது. கர்த்தரே அந்நாட்களில் தேவஜனத்தோடு இடைப்பட்டு, தேவனுடைய பிள்ளைகள், கர்த்தர் தங்கள் வாழ்வில் செய்த நன்மைகளை நன்றியோடு நினைவுகூர்ந்து, அவர்கள் செலுத்தும் துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் அவர்களையும் கர்த்தர் ஏற்றுக்கொண்டு ஆசீர்வதிக்கிறார்.

கர்த்தர் சீனாய் மலையிலுள்ள கொடுமுடியில் இறங்கின போது, கர்த்தர் தம்முடைய தாசனாகிய மோசேயை மலையின் கொடுமுடியிலே வரவழைத்தார்; மோசே ஏறிப்போனார். தேவன் பேசிச் சொல்லிய சகல வார்த்தைகளையும், மோசே இறங்கி ஜனங்களிடத்தில் போய், அதை அவர்களுக்குச் சொன்னார். கர்த்தருக்கு ஆசரிக்க வேண்டிய பண்டிகைகளைக் குறித்து

மோசே: வருஷத்தில் மூன்றுதரம் எனக்குப் பண்டிகை ஆசரிப்பாயாக. புளிப்பில்லா அப்பப்பண்டிகையைக் கொண்டாடி, நான் உனக்குக் கட்டளையிட்டபடியே ஆபிப் மாதத்தின் குறித்த காலத்தில் ஏழுநாள் புளிப்பில்லா அப்பம் புசிப்பாயாக; அந்த மாதத்தில் எகிப்திலிருந்து புறப்பட்டாயே, என் சந்நிதியில் வெறுங்கையாய் வரவேண்டாம். நீ வயலில் விதைத்த உன் பயிர் வேலைகளின் முதற்பலனைச் செலுத்துகிற அறுப்புக்கால பண்டிகையையும், வருஷ முடிவிலே நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்ந்தபோது, சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசரிப்பாயாக (யாத்திராகமம் 23: 14 – 16) என்று எழுதி வைத்திருக்கிறார்.

யாத்திராகமபுஸ்தகத்தில் தேவஜனம் வருஷந்தோறும் ஆசரிக்கும்படியாகக் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பண்டிகைகளும், லேவியராகமத்தில் இன்னும் தெளிவும் விளக்கமும் பெற்று, மூன்று பிரிவுகளான, ஏழு பண்டிகைகளாக விவரிக்கப்பட்டுள்ளன.

## பண்டிகை நாட்கள் வெளிப்படுத்தும் சத்தியம்

பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு இந்தப் பண்டிகைகளையும், அவற்றின் பிரமாணங்களையும் கூர்ந்து கவனிப்போமேயானால், இந்த மூன்று பிரிவான ஏழு பண்டிகைகளும், அக்காலத்தில் வரவிருந்த நாட்களில் நடந்தேறவேண்டிய சம்பவங்களின் நிழலாட்டமாகவும், இன்றைய நாட்களின் விசுவாசிகளின் வாழ்வின் அடித்தளமாகவும், ஆதாரமாகவும் அமைந்திருப்பதையும் காண முடிகிறது. மேலும் இப்பண்டிகைகள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் பண்டிகையாகவும், பரிசுத்த ஆவியானவரின் பண்டிகையாகவும், பிதாவாகிய தேவனின் பண்டிகையாகவும் அமைந்துள்ளதைக் கண்டுணர்ந்து தேவனை மகிமைப்படுத்துகிறோம்.

முதல் மாதத்தில் அடுத்தடுத்து ஆசரிக்கும்படியாக நியமிக்கப்பட்டிருக்கிற பஸ்கா பண்டிகையும், புளிப்பில்லா அப்பப்பண்டிகையும், முதற்கனிகளின் பண்டிகையும், மனுக்குல இரட்சிப்பின் நிழலாட்டமாக, நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் வாழ்வில் நடந்தேறியது. அறுப்புக்கால பண்டிகை அல்லது வாரங்களின் பண்டிகை என்றழைக்கப்படும் பெந்தெகொஸ்தே நாள், இயேசுகிறிஸ்துவின் பாடு மரணம்

உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் ஐம்பதாம் நாளில் அருளப்பட்ட பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் நிழலாட்டமாக இருந்தது. இதையே இந்நாளில் பரிசுத்த ஆவியானவரின் பண்டிகை என்றும் பெந்தெகொஸ்தே பண்டிகை என்றும் கொண்டாடி மகிழுகிறோம்.

இதையடுத்து ஏழாம் மாதத்தில் அடுத்தடுத்து கொண்டாடும்படியாக நியமிக்கப்பட்ட பண்டிகைகள், எக்காளப் பண்டிகை, பாவநிவிர்த்தியின் பண்டிகை மற்றும் கூடாரப் பண்டிகையாகும். இவைகள் தேவ எக்காளத்தோடு கர்த்தர் தாமே வானத்திலிருந்து இறங்கி வரவிருப்பதையும், பரிசுத்தவான்களின் கூட்டமாகிய சபை பாவநிவிர்த்தியடைந்து சுத்திகரிக்கப்பட்ட நிலையில் மறுரூபப்பட்டு எடுத்துக்கொள்ளப்படுவதையும், தொடர்ந்து பரிசுத்த பிதாவோடு வாழும் காலங்களையும் நினைவூட்டி எச்சரிக்கிறது. பரிசுத்த பிதாவாகிய தேவன் முன்குறித்திருக்கிற நாட்களில் நிச்சயமாக நடந்தேறவிருக்கும் இப்பண்டிகைகளைப் பரிசுத்த பிதாவாகிய தேவனின் பண்டிகை எனக் கொண்டாடி மகிழ அழைக்கப்படுகிறோம்.

### நிஜமாகும் நிழலாட்டமான பண்டிகைகள்

பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவனுடைய பிள்ளைகள் வாழ்வில் நடந்தேறிய நிகழ்வுகள், தேவஜனம் தலைமுறை தோறும் பண்டிகை நாட்களாக ஆசரிக்கும்படி, பிதாவாகிய தேவனால் நித்திய கட்டளையாகப் பிறப்பிக்கப்பட்டது.

இவற்றில் முதல் நான்கு பண்டிகைகளும், இயேசு கிறிஸ்துவின் வாழ்விலும் பரிசுத்த ஆவியானவரின் கிருபையின் காலத்திலும் நடந்தேறின; நிழலாட்டமாக ஆசரிக்கப்பட்ட பண்டிகைகள் நிஜமாயின. இதைத் தொடர்ந்து, அதிசீக்கிரத்தில் வரவிருக்கும் இயேசுகிறிஸ்துவின் வருகையிலும் கடைசிக்கால நிகழ்வுகளிலும் எஞ்சிய மூன்று பண்டிகைகளும் பிதாவாகிய தேவனால் முன்குறிக்கப்பட்ட காலத்தில் நிறைவுபெற இருக்கின்றன.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இந்நாளிலும் தேவனுடைய பிள்ளைகளாகிய நம் வாழ்விலுங்கூட இதைப் போன்றே, நிழலாட்டமாய்ப் பண்டிகைகளாக ஆசரிக்கப்பட்ட சரித்திர நிகழ்வுகள், இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் இரட்சிப்பின் திட்டமாக நிறைவேறி, நம்முடைய ஆத்துமமீட்பின் நற்சாட்சியாக வெளிப்படுகிறது.

நம்முடைய ஆவிக்குரிய வாழ்விலும், துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போட்டு; நம்முடைய பஸ்காவாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட்டு; பாவத்திற்கு மரித்து முதற்பலனான கிறிஸ்து இயேசுவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாக ஞானஸ்நானத்தினால் சாட்சிபகர்ந்து தேவனை மகிமைப்படுத்த நியமிக்கப்பட்டிருக்கிறோம்.

பெந்தெகொஸ்தே பண்டிகை, இரட்சிக்கப்பட்ட நமக்கு அருளப்படுகிற பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை நினைவூட்டுகிறது. இயேசுகிறிஸ்துவின் கடைசிக் கால பொறுப்புகளோடு, இயேசுவோடு இசைந்து இணைந்துள்ள பரிசுத்தக்கூட்டமாகிய விசுவாசிகளின் எஞ்சிய மூன்று பண்டிகைகளின் நிகழ்வுகளும், பிதாவாகிய தேவனுடைய முன்தீர்மானத்தின்படி நிறைவுபெற இருக்கிறது. அல்லேலூயா!

## முதலாம் மாதப் பண்டிகைகள்

புளிப்பில்லாத அப்பப்பண்டிகையோடு இணைந்து தொடர்ச்சியாக முதலாம் மாதத்தில் ஆசரிக்கும்படியாக மூன்று பண்டிகைகள் கர்த்தரால் இஸ்ரவேலருக்கு நியமிக்கப்பட்டது. முதலாம் மாதம் பதினாலாம் தேதி கர்த்தரின் பஸ்கா பண்டிகை இருக்கிறது. அந்த மாதம் பதினைந்தாம் தேதியிலே, கர்த்தருக்குப் புளிப்பில்லா அப்பப்பண்டிகையாக இருக்கும். இதன்பின் கர்த்தருக்குப் புதிய போஜன பலியாக முதற்கனிகளைச் செலுத்தும் பண்டிகை உள்ளது.

## பஸ்கா பண்டிகை

எகிப்தின் அடிமைத்தனத்தில் வாழ்ந்த தேவஜனம் கர்த்தரால் மீட்கப்பட்டதை நினைவுகூர்ந்து தேவனுக்கு நன்றி செலுத்த பஸ்கா பண்டிகை ஏற்படுத்தப்பட்டது. இது அவர்கள் வாழ்வில் பெற்ற விடுதலையையும், புதிய ஆரம்பத்தையும் வருங்கால வாழ்வைக் குறித்த நம்பிக்கையையும் வெளிப்படுத்தி மகிழும் நாளாகும். இதுவே பின்னர் மேசியாவாம் இயேசுகிறிஸ்து மனுக்குலத்தைப் பாவத்திலிருந்து மீட்கும்படியாகத் தன்னையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்ததை நினைவூட்டும் நிழலாட்டமாக அமைந்ததை நாம் இந்நாளில் அறிந்திருக்கிறோம்.

பஸ்கா பண்டிகை இந்நாட்களில், விசுவாசிகளாகிய நம்முடைய பாவங்களுக்காக, இயேசுகிறிஸ்து மரித்து, நமக்குப் பாவ வாழ்விலிருந்து இரட்சிப்பை அருளினதை நினைவூட்டுகிறது. நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப் பட்டிருக்கிறாரே (1கொரி. 5:7) என்று பவுல் குறிப்பிடுகிறார்.

## புளிப்பில்லா அப்பப்பண்டிகை

தேவஜனம் அடிமைத்தனத்திலிருந்தும், பாவ வாழ்விலிருந்தும் விலகி விடுவிக்கப்பட வேண்டியதின் அவசியத்தையும் அவசரத்தையும் நினைவூட்டும்படியாக புளிப்பில்லா அப்பப்பண்டிகை ஏற்படுத்தப்பட்டது. பஸ்கா பண்டிகையின் அடுத்த நாளான, முதலாம் மாதம் பதினைந்தாம் தேதி துவங்கி ஏழு நாட்களுக்குப் புளிப்பில்லா அப்பத்தை ஜனங்கள் புசித்தார்கள். முதல் நாளில் வேறு வேலை ஏதும் செய்யாது ஓய்ந்திருந்து தேவனை ஆராதித்தார்கள். ஏழுநாளளவும் தேவனை நோக்கிப்பார்த்து, பாவமன்னிப்பைப் பெற்றுச் சீர்பொருந்தவும், சுத்திகரிக்கப்படவும், சாதாரணமான யாதொரு வேலையும் செய்யாமலுமிருந்தார்கள். ஏழாம் நாளில் சபைகூடி தேவனை ஆராதித்தார்கள்.

நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில், நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல. துப்புரவு உண்மைஎன்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம். (1கொரி. 5: 7,8) என்று பவுல் எழுதியிருக்கிறார்.

## முதற்கனிகளின் பண்டிகை

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர் கொடுக்கும் தேசத்தில் போய்ச்சேர்ந்து, அதின் வெள்ளாண்மையை அறுக்கும்போது, அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டு சென்றனர். அது அங்கீகரிக்கப்படும்படி, ஆசாரியன் அதை ஓய்வுநாளுக்கு மறுநாளில் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டுவான் (லேவியராகமம் 23 : 10,11). வாரத்தின் முதலாம் நாள் ஆசரிக்கப்பட்ட இந்தப் பண்டிகை பின்னர் நம்முடைய

இரட்சகராகிய இயேசுகிறிஸ்து வாரத்தின் முதல் நாளன்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தவர்களின் முதற்பலனானதின் நிழலாட்டமாக அமைந்துள்ளது.

இதுவே விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வில், அவர்கள் இயேசுகிறிஸ்துவின் திரு இரத்தத்தால் பாவமறக் கழுவி சுத்திகரிக்கப்பட்டு, புளிப்புள்ள மாவான பாவங்களிலிருந்து விலகி விடுவிக்கப்பட்டு, ஞானஸ்நானம் மூலம் சாட்சிப்பகருகிறதாக இருக்கிறது. நாம் ஞானஸ்நானத்தில் பாவத்திற்கு மரித்தவர் களாகவும், இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைக்கிறவர்களுமாய் இருக்கிறோம் (ரோமர் 6:4,5,10). அல்லேலூயா!

### இயேசுகிறிஸ்துவின் பண்டிகை

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பாவ வாழ்விலிருந்து நம்மைமீட்டெடுத்து நற்சாட்சியாக ஏற்படுத்திய அந்த மாபெரும் நிகழ்வுகளையே பஸ்கா பண்டிகையும், புளிப்பில்லா அப்பப் பண்டிகையும், முதற்கனிகளின் பண்டிகையும் நிழலாட்டமாகச் சித்தரிக்கிறது. இஸ்ரவேலரை அடிமைத்தனத்திலிருந்து கர்த்தர் மீட்டெடுத்த செயலை நன்றியோடு தேவனுடைய சந்நிதானத்தில் நினைவுகூர ஏற்படுத்தப்பட்ட பண்டிகைகள், நம்முடைய இரட்சகர் பாவமறியாதவராக துப்புரவு உண்மைஎன்னும் புளிப்பில்லாத அப்பம் போன்று, நம்முடைய பஸ்காவாகக் கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டதற்கும், வாரத்தின் முதலாம் நாள் மரித்தோரின் முதற்பலனாய் உயிர்த்தெழுந்ததற்கும் இந்தப் பண்டிகைகள் நிழலாட்டமாக இருக்கின்றன.

இயேசுகிறிஸ்துவின் இந்தப் பண்டிகைகளின் நோக்கங்களும் தன்மைகளும் நம்முடைய வாழ்விலும் வெளிப்பட்டு, இயேசுவோடு நம்மைஅடையாளப்படுத்துகிறது. பழைய புளித்தமாவாகிய துர்க்குணம் பொல்லாப்புக்கு விலகி, நம்முடைய வாழ்வில் பாவமற இயேசுவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டு, ஞானஸ்நானத்தின் மூலம் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த இயேசுவோடு நாம் இணைக்கப்படுகிறோம். அல்லேலூயா!

## அறுப்புக்காலப் பண்டிகை

வாரங்களின் பண்டிகை என்றும், அறுப்புக்காலப் பண்டிகை என்றும் பெந்தெகொஸ்தே நாள் என்றும் அழைக்கப்படுகிற பண்டிகை, முதற்கனிகளின் பண்டிகைக்குப் பின்னர் ஏழு வாரங்கள் நிறைவேறின பின்பு, ஏழாம் ஓய்வுநாளுக்கு மறுநாளாகிய ஐம்பதாம் நாள் அன்று ஆசரிக்கப்படுகிறது. இது வயலில் விதைத்த பயிர் வேலைகளின் முதற்பலனைச் செலுத்துகிற அறுப்புக்காலப் பண்டிகையாகும்.

பெந்தெகொஸ்தே நாளன்று கொண்டாடப்படும் இந்தப் பண்டிகை நாளன்று, இயேசுவின் சீஷர்களும் அப்போஸ்தலர்களும் ஒருமனப்பட்டுக் கூடி வந்திருந்தார்கள். இயேசுகிறிஸ்து மரித்து உயிர்த்துப் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் முன்னர், நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் (அப். 1:4) என்று சொல்லியிருந்தார். அப்படியே அந்நாளில் அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, ஆவியானவர் தாங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள் (அப். 2:4). இதுவே விசுவாசிகளுடைய ஆவிக்குரிய வாழ்வில் அவர்களுக்கு அருளப்படுகிற பரிசுத்த ஆவியின் அபிஷேகமாக இருக்கிறது.

## பரிசுத்த ஆவியானவரின் பண்டிகை

கிருபையின் நாட்களில் பரிசுத்த ஆவியானவரின் காலத்தில், பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா (லூக்கா 11:13) என்று இயேசு சொல்லியிருக்கிறார். மேலும் இயேசு: என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் (யோவான் 14 : 26) என்றார்.

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள், மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகத் தேவனுடைய பரிசுத்த ஆவியைப் (எபேசியர் 4:30) பெற்றுக்கொள்ளுகிறார்கள். அறுப்புக் காலத்தில், களங்கள்

தானியத்தினால் நிரம்பும்; ஆலைகளில் திராட்சை ரசமும் எண்ணெயும் வழிந்தோடும் (யோவேல் 2:24) என்று எழுதப்பட்டிருக்கிறது. இதைப்போன்றே இந்நாட்களில் பெந்தெகொஸ்தே அனுபவத்திற்குட்பட்டு, மீட்கப்படும் நாளுக்கென்று தேவனுடைய பரிசுத்த ஆவியை முத்திரையாகப் பெற்றுக்கொண்ட பரிசுத்தவான்களின் கூட்டம், சபையாகச் சேர்க்கப்படுகிறது. எனவே அறுப்புக்காலப் பண்டிகை பரிசுத்த ஆவியானவரின் பண்டிகை எனவும் அறியப்பட்டிருக்கிறது. அல்லேலூயா!

## ஏழாம் மாதப் பண்டிகைகள்

நிறைவாக, வருஷத்தின் முடிவிலே வயலில் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்ந்தபோது சேர்ப்பின் பண்டிகையையும் ஆசரிப்பாயாக என்று எழுதப்பட்டிருக்கிறது. புளிப்பில்லா அப்பப் பண்டிகையைப் போன்றே, சேர்ப்பின் பண்டிகையோடும் சேர்ந்து அடுத்தடுத்து தொடர்ச்சியாக ஆசரிக்கும்படியாக மூன்று பண்டிகைகள் உள்ளன. ஏழாம் மாதம் முதலாம் தேதி எக்காளப் பண்டிகையாகவும், அதே மாதம் பத்தாம் நாள் பாவநிவிர்த்தியின் நாளாகவும், ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி முதல் ஏழு நாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் கூடாரப் பண்டிகையாகவும் இருக்கிறது.

## எக்காளப் பண்டிகை

எக்காளம் ஊதி ஜனங்களை ஒன்று சேர்ப்பதை எக்காளப்பண்டிகை ஞாபகப்படுத்துகிறது. எக்காளச் சத்தம் மகத்துவமுள்ள கர்த்தருடைய மகிமையுள்ள பிரசன்னத்தையும் வெளிப்படுத்துகிறது. கர்த்தர் மோசேயிடம்: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால் உங்களுக்கு ஏழாம் மாதம் முதலாந்தேதி எக்காளச் சத்தத்தால் ஞாபகக்குறியாகக் கொண்டாடுகிற பண்டிகை என்கிற சபை கூடும் பரிசுத்த ஓய்வுநாளாய் இருப்பதாக (லேவியராகமம் 23 : 24) என்று சொன்னார்.

கர்த்தர் சீனாய் மலையின் மேல் அக்கினியில் இறங்கினபடியால்... மலை முழுவதும் மிகவும் அதிர்ந்தது. எக்காள சத்தம் வரவர மிகவும் வலுவாய்த் தொனித்தது; மோசே பேசினான்; தேவன் அவனுக்கு வாக்கினால் மறுமொழி கொடுத்தார் (யாத்திராகமம் 19 : 18,19) என்று எழுதப்பட்டிருக்கிறது. வலுவாய்த்

தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் ... கூட்டிச் சேர்ப்பார்கள் (மத்தேயு 24:31) என்றும் கர்த்தர் சொல்லியிருக்கிறார். கர்த்தர் தாமேஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும், வானத்திலிருந்து இறங்கி வருவார் (1 தெச. 4:16) என்றும்; எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம் (1 கொரி. 15 : 52) என்றும் பவுல் எழுதியிருக்கிறார்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவும் அப்போஸ்தலனாகிய பவுலும் குறிப்பிட்டிருக்கிறதுபோல, எக்காளப் பண்டிகையின் வலுவாய்த் தொனிக்கும் எக்காளச் சத்தம் கேட்கவிருக்கும் காலங்களை நாம் எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம். எக்காளப் பண்டிகை இயேசுகிறிஸ்துவின் கடைசிக்காலப் பொறுப்புகளுக்குட்பட்டு, பிதாவாகிய தேவனால் முன் தீர்மானிக்கப்பட்ட வேளையில் நடந்தேறவிருக்கிறது.

### சுத்திகரிப்பின் பண்டிகை

அந்த ஏழாம் மாதம் பத்தாம் தேதி உங்களுக்குப் பாவநிவிர்த்தி செய்யும் நாளும் சபை கூடும் பரிசுத்தநாளுமாயிருப்பதாக; அப்பொழுது நீங்கள் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தி, கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக்கடவீர்கள். அந்தநாள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் உங்களுக்காகப் பாவ நிவிர்த்தி செய்யப்படும் பாவநிவாரண நாளாயிருக்கிறபடியால் அதிலே யாதொரு வேலையும் செய்ய வேண்டாம் (லேவியராகமம் 23 : 27,28) என்று கர்த்தர் மோசேயிடம் சொன்னார்.

இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு என்று சொல்லப்பட்டிருக்கிறதுபோல நமக்காகக் கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவிர்த்தி செய்யப்பட்டு நம்முடைய ஆத்தும இரட்சிப்பு பூரணப்பட இருப்பதின் நிழலாட்டமேஇது. இதற்கென நாம் நம்முடைய ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தி நம்மையே அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம். எக்காளம் ஊதி ஒன்று சேர்க்கப்படுகிற தேவ ஜனத்தின் பாவங்கள் நிவிர்த்திச் செய்யப்பட்டு ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். அல்லேலூயா!

எக்காளப் பண்டிகையைப் போன்றே, சுத்திகரிப்பின் பண்டிகையின் நிகழ்வுகளும் கடைசிக் காலத்தில், அதிசீக்கிரத்தில் நடந்தேறவிருக்கிறது. இதுவும் இயேசுகிறிஸ்துவின் கடைசிக்காலப் பொறுப்புகளின் ஓர் அங்கமாக, பிதாவாகிய தேவன் தமது ஆதீனத்தில் நிர்ணயித்த காலங்களில் நடந்தேறும். அல்லேலூயா!

## கூடாரப் பண்டிகை

சேர்ப்புக்காலப் பண்டிகை, வயலில் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்ந்தபோது கர்த்தருடைய கட்டளையின்படி ஆசரிக்கப்படுகிறது. இதுவே கூடாரப் பண்டிகை எனவும் அழைக்கப்படுகிறது. பயிர் விளைவின் பலனைச் சேர்த்துத் தீர்ந்த பின், இவ்வுலக வாழ்வு எவ்வளவு நிலையற்றது என்பதை உணர்த்தும்படியாகவும், வாக்களிக்கப்பட்ட தேசத்தை நினைவுகூர்ந்தும், இப்பண்டிகை மகிழ்ந்து கொண்டாடப்படுகிறது.

ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி முதல் ஏழுநாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் கூடாரப்பண்டிகையாயிருப்பதாக. முதலாம் நாள் சபை கூடும் பரிசுத்த நாள்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது. ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலி செலுத்தக்கடவீர்கள்; எட்டாம் நாள் உங்களுக்குச் சபை கூடும் பரிசுத்த நாள். நான் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின போது, அவர்களைக் கூடாரங்களில் குடியிருக்கப்பண்ணினதை உங்கள் சந்ததியார் அறியும்படிக்கு, ஏழுநாள் கூடாரங்களில் குடியிருக்கக்கடவீர்கள் (லேவியராகமம் 23:34,35,36, 42,43) என்று கர்த்தர் மோசேயிடம் சொன்னார்.

கூடாரப்பண்டிகை, ஆத்துமஇரட்சிப்பின் நிச்சயத்தோடு, பொறுமையுடன் காத்திருக்கும் தேவனுடைய பிள்ளைகளுக்கு, வாக்களிக்கப்பட்ட நித்திய வாழ்வின் நிழலாட்டமாக இருக்கிறது. எக்காளப் பண்டிகை மற்றும் சுத்திகரிப்பின் பண்டிகையைப் போன்றே, விசுவாசிகள் வாழ்வின் கூடாரப்பண்டிகையின் நிறைவேறுதலும் பிதாவாகிய தேவனால் முன்தீர்மானிக்கப்பட்ட காலங்களில் நடந்தேறவிருக்கிறது. அல்லேலூயா!

## பரிசுத்த பிதாவாகிய தேவனின் பண்டிகை

ஏழாம் மாதத்தில் சேர்ப்பின் பண்டிகை என்று குறிப்பிடப்பட்டிருக்கிற, எக்காளப்பண்டிகை பாவநிவிர்த்தியின்

பண்டிகை மற்றும் கூடாரப்பண்டிகைகள், அதிசீக்கிரத்தில் விசுவாசிகளாகிய நம்முடைய வாழ்வில் நிகழவிருக்கும் கடைசிக்கால சம்பவங்களின் நிழலாட்டமாக இருக்கிறது எனப் பார்த்தோம்.

உலகத் தோற்றமுதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது (அப்போஸ்தலர் 15:18). அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம் (ரோமர் 8:23). இந்தச் சம்பவங்கள் யாவும் பிதாவாகிய தேவன் முன் குறித்திருக்கிற காலத்தில் அடுத்தடுத்து நடைபெறவிருக்கிறது. அதற்கான கடைசிக்கால அடையாளங்களை அங்கும் இங்கும் நம்மைச் சுற்றிலுமெங்கும் காணும் நாட்களுக்குள் இருக்கிறோம். ஆனாலும், அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான். பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள். குமாரனும் அறியார் (மாற்கு 13 : 32) என்று இயேசு தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

மீட்கப்பட்ட தேவஜனம், பிதாவாகிய தேவனிடத்தில் கூட்டிச் சேர்க்கும்படியாக நிறைவுபெறவிருக்கும் இந்தப் பண்டிகை, பிதாவாகிய தேவனுடைய பண்டிகை என்பதாக அறியப் பட்டிருக்கிறது. அந்த நாளையும் நாழிகையையுங்கூட பிதா ஒருவர் தவிர வேறொருவனும் அறியான். அல்லேலூயா !

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நம்முடைய வாழ்வில் நடைபெறும் அனைத்துக் கிரியைகளும் உலகத் தோற்றமுதல் தேவனால் அறியப்பட்டு வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அதனதன் காலத்தில் இவைகளெல்லாம் நிறைவேறி வருகிறதை இப்பொழுது நாம் அறிந்திருக்கிறோம். உலகெங்கும் இந்நாட்களில் பரவலாகப் பேசப்படும் இப்பண்டிகைகளோடு இணைந்த வரலாற்றுச் சம்பவங்களையும் அடையாளங்களையும் நம்மில் சிலர் அறிவோம். எது எப்படியாக இருந்தாலும், இம்மட்டும் விசுவாசத்தைக் காத்துக்கொண்ட நாம் முடிவு பரியந்தம் விசுவாசத்தில் நிலைத்திருந்து இரட்சிக்கப்பட அழைக்கப்படுகிறோம். ஆமென். அல்லேலூயா!

# 14. தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது !

காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார் (மாற்கு 1:15).

## தேவனுடைய ராஜ்யம்!

தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று, பரிசேயர் இயேசுவினிடத்தில் கேட்டபொழுது, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக, தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது. இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது; இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார் (லூக்கா 17:20 - 21). தேவனுடைய ராஜ்யம் என்பது விசுவாசிகளின் ஆவிக்குரிய ராஜ்யமாயிருக்கிறது.

தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார் (யோவான் 1:18) என்பதைப்போன்றே தேவனுடைய ராஜ்யமும் நம்முடைய மாம்சீக கண்களால் காணக்கூடாததாய் இருக்கிறது. அவருடைய குமாரனாகிய இயேசுவே தேவனுடைய ராஜ்யத்தின் தன்மைகளை நமக்கு வெளிப்படுத்தினார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் (யோவான் 4:24). என்று நம் நாதர் இயேசு சொல்லியிருக்கிறார்.

தேவனுடைய ராஜ்யமும் ஆவிக்குரியதே. தேவனுடைய ராஜ்யம் நாம் காணும் சமூக பொருளாதார அரசியல் போன்ற கட்டமைப்புகளுக்கு அப்பாற்பட்டு எங்கும் வியாபித்து இருக்கிறது.

தேவனுடைய ராஜ்யம் நித்தியமானது. இது நம்மால் இந்தக் காலகட்டத்திலே காணக்கூடாமல் இருந்தாலும், இயேசு கிறிஸ்துவை, ராஜாதி ராஜாவாக, கர்த்தாதி கர்த்தராக, எங்கெல்லாம் விசுவாசித்து ஏற்றுக்கொண்டு கனப்படுத்துகிறார்களோ, மகிமைசெலுத்துகிறார்களோ அங்கெல்லாம் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டுச் செயல்படுகிறது. நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மறுபடியுமாக வந்து தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கையில், அந்த ராஜ்யத்தின் குடிகளாக நாம் அதன் தன்மைகளைக் கண்டுணர்ந்து செயல்படுவோம்.

## தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது!

இம்மையிலே இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்போது பிள்ளைகளாகும்படியான அதிகாரத்தைப் பெறுகிறோம். அந்த அதிகாரத்திற்குட்பட்டுச் செயல்படும்போது ஸ்தாபிக்கப்படுகிற உறவின் நிமித்தம், தேவனுடைய ராஜ்யத்தின் குடிகளாக ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். இவ்வுலகிலேயே பரலோக ராஜ்யத்தின் அங்கங்களாக இருப்போம். இதையே சங்கீதக்காரன்: சீயோனைக் குறித்து, இன்னான் இன்னான் அதிலே பிறந்தானென்றும் சொல்லப்படும்; உன்னதமானவர்தாமே அதை ஸ்திரப்படுத்துவார் (சங்கீதம் 87:5) என்று பாடியிருக்கிறார். சீயோனைக்குறித்து, மீட்கப்பட்ட தேவஜனத்தைக்குறித்து, குறிப்பிட்ட இந்த நாட்டில் பிறந்தவன், பரலோக ராஜ்யத்திலும் பிறப்புரிமைபெற்றிருக்கிறான் என்று சொல்லப்படுமாம். இதையும் உன்னதமானவர்தாமே உறுதிப்படுத்துவாராம். அல்லேலூயா!

அப்போஸ்தலனாகிய பவுல்: நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் (பிலிப்பியர் 3:20) என்று எழுதியிருக்கிறார். இந்நாட்டின் குடிமக்களாக இருக்கும்போதே இரட்சிக்கப்பட்ட நிலையில் ஆவிக்குரிய பரலோக ராஜ்யத்தின் அங்கமாக இருக்கிறோம். இன்னும் ஒரு படி மேலே சென்று பவுல் இதையே நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம் (2 கொரிந்தியர் 5:20) என்கிறார்.

பரலோக ராஜ்யத்தின் பிரதிநிதியாக அதின் மேன்மைகளை எடுத்துரைப்பதும், தன்மைகளை விவரித்துச் சொல்லுவதும் அலுவல்களைக் கவனித்துக்கொள்ளுவதும், இன்னும் அநேகரைத் தேவனோடே ஒப்புரவாக்கிப் பரலோக ராஜ்யத்தின் பிரஜைகளாக, குடிமக்களாக மாற ஊக்குவிப்பதும் ஸ்தானாபதிகளின் பொறுப்பாக இருக்கிறது. இவர்களைப்போன்ற அநேகர், பூமியின்மேல் தாங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள் (எபிரெயர் 11:13) என்று எழுதப்பட்டிருக்கிறது.

## நம்முடைய குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறது!

நம்முடைய குடியிருப்பு, பரலோகத்தில் இருக்கிறது. இவ்வுலகில் நாம் அந்நியரும் பரதேசிகளுமாய், இயேசு கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாயிருக்கிறோம். இதையே இயேசு பரிசேயரிடத்தில், தேவனுடைய ராஜ்யம் ஏற்கெனவே உங்களுக்குள்ளாக இருக்கிறது என்றார். இப்படியாக நாம் தேவனுடைய ராஜ்யத்தின் குடிகளாக இருக்கையில், அதன் தகவுகளும், தன்மைகளும் நமக்குள் தோன்றி வெளிப்படுகிறது. நாமும் பரலோக ராஜ்யத்தின் விதிமுறைகளுக்கும் எதிர்பார்ப்பு களுக்கும் கீழ்ப்படிந்து செயல்படுகிறோம். கர்த்தர் மறுபடியும் வரும்பொழுது, இவ்வுலகத்தின் அதிகாரங்களையும், ஆளுகைகளையும் நிர்மூலமாக்கி, அவருடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். நம்முடைய பணி, முடிவுபரியந்தம் விசுவாசத்தில் நிலைத்திருந்து, ராஜ்யத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்று கிறவர்களாக, சத்துருவின் சகலவிதமான வல்லமைகளையும் வஞ்சகங்களையும் மேற்கொள்ளுவதேயாகும்.

இயேசுகிறிஸ்துவின் ஊழிய நாட்களில் தேவஜனத்தின் மத்தியிலே தேவனுடைய ராஜ்யம் தோன்றிச் செயல்பட்டதை நாம் அறிவோம். இயேசு: மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். அதுமுதல் ராஜ்யத்தின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. அற்புதங்களும், அடையாளங்களும் வசனத்தை உறுதிச் செய்யும்படியாகத் தேவகிருபையுடன் வெளிப்பட்டது. இது பாவிகள் தாங்களது தீய வழிகளிலிருந்து மனந்திரும்பி மீட்கப்படும்படியாக உதவியது. அநேகர் சத்தியத்தைக் கேட்டு

விசுவாசித்து, கிருபையினாலே இரட்சிக்கப்பட்டு, தெய்வீக சாயலுக்கு மறுரூபப்பட்டார்கள்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குக் கற்பித்த ஜெபமும், "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்கிற முன்னுரையோடு துவங்கி, "ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்" என்று நிறைவு பெறுகிறது. நாம் காணக்கூடிய இவ்வுலகில், காணக்கூடாத தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படும்போது, தேவனுடைய ராஜ்யம் நம்மிடையே வரும் என்பதாக இதை எடுத்துக்கொள்ளலாம். தேவனுடைய ராஜ்யத்தில் சகலமும் தேவனுடைய வல்லமைக்கும் மகிமைக்கும் ஆளுகைக்கும் உட்பட்டே செயல்படுகிறது.

## தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல!

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமா யிருக்கிறது (ரோமர் 14:17). சில போஜனங்களைப் புசிப்பதாலேயோ பானங்களைக் குடிப்பதாலேயோ அல்லது புசியாமலும் குடியாமலும் இருப்பதாலேயோ தேவனுடைய ராஜ்யம் நமக்கு அருளப்படுவது இல்லை. மாறாக, தேவனுடைய ராஜ்யம், பாவங்களற சுத்திகரிக்கப்படுவதினால் உண்டாகும் தேவநீதியாக இருக்கிறது. இவ்விதமாக, நாம் விசுவாசித்ததினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் (ரோமர் 5:1) என்று பவுல் எழுதியிருக்கிறார்.

தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது (1 கொரிந்தியர் 4:20). பெருமையான வீண் பேச்சும், ஆடம்பரமான நயவசனிப்பும், வெறுமையான மேன்மை பாராட்டுதலும், பரியாசமும் தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டுவதில்லை. இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த

வல்லமையினாலும், பரிசுத்த ஆவியானவர் அருளும் ஆவிக்குரிய வரங்களினாலும், அப்போஸ்தலரின் அற்புதங்களை நடப்பிக்கும் பெலத்தினாலும், தேவனுடைய ராஜ்யம் உண்டாயிருக்கிறது. வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும் (எபேசியர் 5:4) என்றும்; இவைகளைச் சிலர் நோக்காமல் வீண் பேச்சுக்கு இடங்கொடுத்து விலகிப்போனார்கள்(1 தீமோத்தேயு 1:6) என்றும் எழுதப் பட்டிருக்கிறது.

**தேவனுடைய ராஜ்யத்தின் மேன்மை!**

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் இவ்வுலக ஊழிய நாட்களில், எளிமையான மனிதர்களையே அவர் தம்முடைய சீஷர்களாகத் தெரிந்துகொண்டார். மற்ற மனிதர்களைப்போன்றே அவர்களும் உலக மேன்மையை நாடித்தேடினார்கள். ஒருமுறை செபதேயுவின் குமாரருடைய தாய் இயேசுவினிடத்தில் வந்து அவரைப் பணிந்துகொண்டு: இயேசுவை நோக்கி: உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டுபேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்யவேண்டும் என்றாள். இயேசு பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. என் வலது பாரிசத்திலும் இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தப்பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார் (மத்தேயு 20:20-23).

இன்னொருமுறை சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து: பரலோகராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்று கேட்டார்கள். இயேசு ஒரு சிறுபிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து: அதை அவர்கள் நடுவே நிறுத்தி: நீங்கள் மனந்திரும்பி பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இந்தப்பிள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான் (மத்தேயு 18:1-4) என்றார்.

மற்றொரு முறையும் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று சீஷர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று. இயேசு அவர்களை நோக்கி புறஜாதியாரின் ராஜாக்கள் அவர்களை ஆளுகிறார்கள்; அவர்கள்மேல் அதிகாரம் செலுத்துகிறவர்களும் உபகாரிகள் என்னப்படுகிறார்கள். உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது; உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப்போலவும் இருக்கக்கடவன் (லூக்கா 22:24-26) என்றார்.

இந்த தேவனுடைய ராஜ்யத்திற்கடுத்த பிரமாணம் இந்நாளிலும் நமக்குப் பொருந்துகிறது. கட்டுண்டவர்களுக்கும், காயப்பட்டவர்களுக்கும் பிணியாளிகளுக்கும் தேவையில் உள்ளவர்களுக்கும் ஊழியஞ்செய்கிறவர்கள், மற்றவர்கள் நலம்கருதி தங்களையே அர்ப்பணித்துச் செயல்படுகிறார்கள். இயேசுவே இதில் நமக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவை களையும் நோக்குவானாக கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது என்று எழுதப்பட்டிருக்கிறது. சிறுபிள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்.

### தேவனுடைய ராஜ்யத்தின் சிறந்த பண்பு!

மனத்தாழ்மைதேவனுடைய ராஜ்யத்தின் சிறந்த பண்பாக எண்ணப்படுகிறது. இயேசு: நான் சாந்தமும் மனத்தாழ்மையு மாயிருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் (மத்தேயு 11:29) என்றார். மனத்தாழ்மை, தேவன் சர்வலோகத்தின் அதிபதி என்றும், அந்த தேவனே என் வாழ்வின் ஆண்டவர், இரட்சகர் என்றும் அறிக்கையிட்டு நம்மைஅவருக்கு அர்ப்பணிக்கச் செய்கிறது. இந்தத் தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம் (நீதிமொழிகள் 22:4) என்றும்; தேவன் பெருமையுள்ளவர்களுக் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்றும் சொல்லியிருக்கிறது (யாக்கோபு 4:6).

தேவனுடைய ராஜ்யத்தில் ஜீவனத்தின் பெருமைகொடிய பாவமாக எண்ணப்படுகிறது. அழிவுக்கு முன்னானது அகந்தை விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமைஎன்றும்; மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும்; மனத்தாழ்மை யுள்ளவனோ கனமடைவான் (நீதிமொழிகள் 16:18, 29:23) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. தேவனுக்கு விரோதமாக எழும்பிய சாத்தான் கீழேதள்ளப்பட, பெருமைகாரணமாயிருந்தது. தேவனைக்காட்டிலும் தான் சிறப்பாகச் செயல்படமுடியும் என சாத்தான் பெருமைகொண்டிருந்தான். நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே. ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டுபோனாய் (ஏசாயா 14:14-15) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பெருமைஒரு மாயையான தன்னிறைவைத் தந்து மேலும் நாம் தேவனைப்பற்றி அறிந்துகொள்ளவோ, கர்த்தரிடத்திலிருந்து நன்மையான நற்காரியங்களைப் பெற்றுக்கொள்ளவோ தடையாக ஒரு விருப்பமில்லாமையை நமக்குள் உண்டாக்குகிறது. ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது (மத்தேயு 5:3) என்றும் இயேசு சொல்லியிருக்கிறார். கர்த்தாவே, என் இருதயம் இறுமாப்புள்ள தல்ல, என் கண்கள் மேட்டிமையுள்ளவைகளுமல்ல பெரிய காரியங்களிலும், எனக்கு மிஞ்சின கருமங்களிலும் நான் தலையிடுகிறதுமில்லை (சங்கீதம் 131:1) என்று சங்கீதக்காரன் எழுதிவைத்திருக்கிறார். ஒருவன் இறுமாப்பும் மனமேட்டிமையும் உள்ளவனாய் இருந்தால், தன்னிலேதானே திருப்தி அடைந்தவனாய், எதையும் கற்றுக்கொள்ளாதவனாக இருக்கிறான். சிறுபிள்ளைகள், எளிமையுள்ளவர்களாய்ச் சொல்லிக் கொடுப்பவைகளைத் தயக்கமின்றிக் கற்றுக்கொள்ளுகிறவர்களும், அவற்றைச் சந்தேகமின்றி நம்பிச் செயல்படுகிறவர்களுமாய் இருக்கிறார்கள். அல்லேலூயா!

### தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள்!

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும் (மத்தேயு 6:33) என்று இயேசு

சொல்லியிருக்கிறார். உலகத்திற்கடுத்த அன்றாடத் தேவைகளைக் குறித்துக் கவலைப்படுகிறதைப் பற்றியதான விளக்கத்திற்குப் பின்னர், கர்த்தர் இந்த ஆலோசனையை நமக்கு அருளுகிறார். அற்ப விசுவாசிகளே, என்று கடிந்துரைத்து, என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள்; இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார் என்று சொல்லி இந்த வசனத்தை ஒரு உடன்படிக்கையாகக் கர்த்தர் தந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேட மனதளவில் தீர்மானித்து அர்ப்பணிக்கும்போதே, இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும் என்று வாக்கருளியிருக்கிறார்.

அநேக ஆண்டுகளுக்கு முன்னர் சகோதரர் ஒருவர் வேலையின் நிமித்தம் அயல்நாட்டிற்குச் சென்றார். புதிய சூழ்நிலை கலாச்சாரம் மொழி மக்கள் போன்றவற்றைத் தவிர வேலை ஸ்தலத்தின் சவால்களையும் எதிர்பார்ப்புகளையும் அவர் சந்திக்க வேண்டியிருந்தது. கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்து வளர்க்கப் பட்டிருந்தாலும் கிறிஸ்துவை அவர் அறியாது, இரட்சிப்பின் நிச்சயம் இல்லாதவராகவே இருந்தார். தன் வாழ்வின் நெருக்கத்தில் கர்த்தரைத் தேடினார். வாக்குமாறாத தேவன் அவருடைய விண்ணப்பத்தின் சத்தத்தையும் கேட்டுப் பதிலளித்தார்.

அன்றைய தினம் வாசித்த வேதாகமப் பகுதியில் காணப்பட்ட வசனம் அவருக்கென்றே கொடுக்கப்பட்டதாக உணர்த்தப்பட்டார். அந்த வார்த்தை: பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா? (எண்ணாகமம் 23:19) என்பதாகும். தன் மனைவியோடு அந்த வேலையில் சேரும் முன்னர் ஜெபம்பண்ணினபோது விண்ணப்பித்தவைகளை மறந்துவிடுகிறதற்குத் தேவன் ஒரு மனிதன் அல்ல என்பதாக உணர்த்தப்பட்டார். கர்த்தருடைய ஒத்தாசையோடு அந்தநாள் துவங்கி வேதம் வாசிப்பதிலும், ஜெபிப்பதிலும் உறுதியாய் தரித்திருந்தார். சூழ்நிலைகளும்

எதிர்ப்புகளும் முற்றிலுமாய் மாறினது. மேலும், தேவனுடைய ஊழியத்தை அந்த வெளிநாட்டிலேயே செய்யவும், அவரைப்போன்று தவித்துநின்ற அநேகரை இயேசுவினிடத்தில் வழிநடத்தவும் கர்த்தர் கிருபை செய்தார்.

ஏழாவது ஆண்டின் இறுதியில், வேலையிலிருந்து விடுபடும் முன்னர், கடைசிப் பணிநாள் அன்று தன்னோடு பணியாற்றிய அதிகாரிகளுக்கு ஈமெயில் மூலம் சாட்சியாக ஒரு செய்தி அனுப்பினார். அந்தப் பட்டணத்தையும் அவர்களையும் ஒருபோதும் தான் மறக்கமுடியாது; ஏனென்றால் அங்குதான் கர்த்தரின் ஆலோசனையின்படி ஒவ்வொருவரும் முதலாவதாகத் தேவனுடைய ராஜ்யத்தைத் தேடவேண்டும் என்ற வெளிப்பாட்டைத் தான் பெற்றதாக எழுதியிருந்தார். எவ்வளவு உண்மை! இந்நாளிலும் எல்லாவற்றிற்கும் மேலாக அவரது வாழ்விலும் ஊழியத்திலும் அந்த முதல் வாக்குத்தத்தமும் அனுபவமும் அவரைப் பெலப்படுத்தி வருகிறது. அல்லேலூயா!

## பரலோக ராஜ்யத்தைப் பற்றின ஏழு உவமைகள்!

வேதாகமத்தில் மத்தேயு எழுதின சுவிசேஷத்தின் 13ஆம் அதிகாரத்தில் திரளான ஜனங்களுக்கும், தம்முடைய சீஷர்களுக்கும், இயேசு அநேக விசேஷங்களை, பரலோக ராஜ்யத்தின் இரகசியங்களை, உவமைகளாகச் சொன்னார். இந்த வேதப்பகுதியில் எழுதப்பட்டிருக்கும் ஏழு உவமைகளில், முதல் நான்கும் கடலோரத்திலிருந்த ஜனங்கள் மத்தியில் கர்த்தர் சொன்னதாக அறிகிறோம். இவைகளையெல்லாம் இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார். உவமை களினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை. என் வாயை உவமைகளால் திறப்பேன், உலகத்தோற்றமுதல் மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. அப்பொழுது இயேசு ஜனங்களை அனுப்பிவிட்டு வீட்டுக்குப் போனார் (மத்தேயு 13:34-36). இதைத் தொடர்ந்து சொல்லப்பட்ட பரலோகராஜ்யத்தைப் பற்றின மூன்று உவமைகளும், சீஷர்களுக்கு வீட்டிலே சொல்லப்பட்டதாக அறிகிறோம்.

நாம் நன்கு அறிந்த ஓர் பொருளையோ அல்லது நிகழ்வையோ, நாம் அறியாத ஒன்றோடு ஒப்பிட்டுப் புரிந்து

கொள்வதற்கு கடினமானவைகளை விளக்கிச் சொல்வதை உவமையென்கிறோம். அநேக ஆவிக்குரிய சத்தியங்களையும் மறைபொருள்களையும் வரவிருக்கும் காரியங்களைப் பற்றியதான தீர்க்கதரிசனங்களையும் கர்த்தர் இவ்விதமாக உவமைகள் மூலமாகத் தெளிவுப்படுத்தியிருக்கிறார்.

பரலோகராஜ்யத்திற்கடுத்த காரியங்களில் சபை முக்கியமானதொரு பங்கை வகிக்கிறது. முதல் நான்கு உவமைகளும், சபைக்கும், சபைக்கான தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்கும் விரோதமான சாத்தானின் வஞ்சக திட்டங்களைப் பற்றின ஓர் எச்சரிப்பாகச் சொல்லப்பட்டுள்ளது. சபையில் கர்த்தர் நடப்பிக்கவிருக்கும் கிரியைகளை அடுத்த மூன்று உவமைகளும் விளக்குகிறது. உலகத்தோற்றமுதல் மறைபொருளானவைகளைக் கர்த்தர் இந்த உவமைகள் மூலம் வெளிப்படுத்துகிறார். பூர்வகாலத்து மறைபொருள்களை உவமைகளால் வெளிப்படுத்துவேன் (சங்கீதம் 78:2) என்று எழுதப்பட்டிருக்கிறது.

**1. விதைக்கிறவன் உவமை!**

விதைக்கிறவன் ஒருவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது; பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது. சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது. அது சீக்கிரமாய் முளைத்தது. வேரில்லாமையால் உலர்ந்து போயிற்று. சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது. முள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டது. சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து, சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது (மத்தேயு 13:3-8) என்று கர்த்தர் சொன்னார்.

விதைக்கிறவனைப்பற்றிய உவமையைக் கர்த்தர் அவர்களுக்கு விளங்கச்செய்தார். விதை தேவனுடைய வசனம். வழியருகே விதைக்கப்பட்டவன் ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் (சாத்தான், பிசாசானவன்) வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக் கொள்ளுகிறான்; கற்பாறையான இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக்கேட்டு, உடனே அதை ஏற்றுக்கொண்டாலும்,

வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான். முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப்போடுகிறதினால், அவனும் பலனற்றுப்போவான். நல்ல நிலத்தில் விதைக்கப் பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமா யிருந்து, நூறாகவும் அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான் என்றார் (மத்தேயு 13:19-23).

ஒரே வகையான விதை நான்கு விதமான நிலங்களில் விதைக்கப்பட்டது. நான்கில் ஒன்றே பலனைத் தந்தது. விதைக்கிறவன் எதிர்பார்க்கிற பலனைத் தர மற்ற மூன்று நிலங்களும் பண்படுத்தப்படவேண்டியிருந்தது. இது தேவனுடைய வார்த்தை பகிர்ந்தளிக்கப்படும்போது, நான்கு வகையான ஜனங்களின் மத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்களுக்கு ஒப்பானதாகும். இந்த உவமையை சபையோடும், சபை சரித்திரத்தின் காலங்களோடும் ஒப்பிட்டுப்பார்த்தால், எபேசு சபையைப்போன்று ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டுப் பரலோகராஜ்யத்தைச் சென்றடைய மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்ய வேண்டியதை உணர்த்துகிறது.

## 2. களைகளைப்பற்றிய உவமை!

வேறொரு உவமையை இயேசு அவர்களுக்குச் சொன்னார். பரலோகராஜ்யம் நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரை பண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான். பயிரானது வளர்ந்து கதிர் விட்டபோது, களைகளும் காணப்பட்டது. வேலைக்காரரைக் களைகளைப் பிடுங்கிப்போடவேண்டாம். களைகளை பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு இரண்டையும் அறுப்பு மட்டும் வளரவிடுங்கள் என்றார். அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது களைகளைப்பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார் (மத்தேயு 13:24-30).

சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து, களைகளைப்பற்றிய உவமையைத் தங்களுக்கு வெளிப்படுத்தவேண்டுமென்று கேட்டார்கள். அவர் பிரதியுத்தரமாக: நல்ல விதையை விதைக்கிறவன் மனுஷகுமாரன். நிலம் உலகம்; நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர்; களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்; அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு; அறுப்பு உலகத்தின் முடிவு; அறுக்கிறவர்கள் தேவதூதர்கள். ஆதலால், களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறதுபோல, இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும். மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ்செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள் (மத்தேயு 13:36-43) என்றார்.

மனுஷகுமாரன் கோதுமையை விதைத்த நிலத்தில் பிசாசு களைகளை விதைத்தான். இவ்வாறே சபையிலும் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தை மனுஷகுமாரன் அறிந்திருந்தபோதிலும், நீதிமான்களுக்கு எந்த ஒரு சேதமும் ஏற்படாதவகையில், இவ்வுலகத்தின் முடிவுவரை அவர்களின் அழிவைத் தாமதிக்கிறார். இந்த உவமையைச் சபையோடும், சபை சரித்திரத்தின் காலங்களோடும் ஒப்பிட்டுப்பார்த்தால், தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன். நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே இதோ, நீங்கள் உபத்திரப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன் (வெளி.2:10) என்று வெளிப்படுத்தின விசேஷத்தில் சிமிர்னா சபைக்குச் சொல்லப்பட்டதைப் போன்று இது இருப்பதைக் காணலாம்.

### 3. கடுகு விதையின் உவமை!

பரலோகராஜ்யத்தைக்குறித்து வேறொரு உவமையையும் இயேசு அவர்களுக்குச் சொன்னார். பரலோகராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன்

நிலத்தில் விதைத்தான். அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகுமென்றார் (மத்தேயு 13:31-32). பரலோகராஜ்யத்தைக் குறித்த முதல் இரு உவமைகளுக்கும் விளக்கங்களைத் தந்த இயேசு, மற்ற உவமைகளுக்கு வெளிப்படையான விளக்கம் தராமல், அதைப்போன்றே குறியீடுகளுக்கு அர்த்தங்கொள்ள விட்டுவிட்டதைப்போன்று தோன்றுகிறது. முடிவிலே இயேசு சீஷர்களை நோக்கி: இவைகளையெல்லாம் அறிந்து கொண்டீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம், அறிந்துகொண்டோம், ஆண்டவரே, என்றார்கள் (மத்தேயு 13:51).

மனுஷகுமாரனாகிய இயேசு கடுகு விதையை, வசனத்தை தன் நிலம் எனப்படும் உலகத்தில் விதைக்கிறார். அது வளர்ந்து பெரிதாகி, செடியின் சுபாவத்திற்கு, தன்மைக்கு மாறாக, ஆகாயத்துப்பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகிறது. விதைக்கிறவன் உவமையின் குறியீடுகளைப் போன்றே இங்கும் ஆகாயத்துப்பறவைகள், பொல்லாங்கனை (சாத்தான், பிசாசானவன்) குறிக்கிறது.

இந்த உவமையைச் சபையோடும், சபை சரித்திரத்தின் காலங்களோடும் ஒப்பிட்டுப்பார்த்தால், எளிமையாகத் துவக்கப்பட்ட சபை, கிறிஸ்துவின் சிந்தைக்கேற்றபடி அவருடைய பண்புகளான மனத்தாழ்மையையும் சாந்தத்தையும் வெளிப்படுத்தாது உலகப் பிரகாரமான மேன்மைக்கும் வளர்ச்சிக்கும், கிறிஸ்துவைப்பற்றின கொள்கை விபரீதங்களுக்கும் உட்பட்டு வஞ்சிக்கப்படுகிறதைக் காண்கிறோம்.

சபை சரித்திரத்தில் நான்காம் நூற்றாண்டின் துவக்கத்தில் கிறிஸ்தவம், ரோமசாம்ராஜ்யத்தின் மார்க்கமாக அறிவிக்கப்பட்டு எண்ணிக்கை அளவில் மிகவும் பெருகி பலவிதமான கொள்கை விபரீதங்களுக்குட்பட்டது. இதைப்போன்றே வெளிப்படுத்தின விசேஷத்தில் பெர்கமு சபைக்கு எழுதின செய்தியில் இவ்வுலகைச் சார்ந்த வளர்ச்சியினால் ஈர்க்கப்பட்டு, போதகத்தால் வஞ்சிக்கப்படுவோரைக் கர்த்தர் எச்சரிக்கிறார். நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம்பண்ணுவேன் (வெளி 2:16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

## 4. புளித்த மாவின் உவமை!

பரலோகராஜ்யத்தைப்பற்றின வேறொரு உவமையையும் இயேசு அவர்களுக்குச் சொன்னார். பரலோகராஜ்யம் புளித்த மாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு ஸ்திரீ எடுத்து, முழுவதும் புளிக்கும் வரைக்கும், மூன்றுபடி மாவிலே அடக்கி வைத்தாள் என்றார் (மத்தேயு 13:33). இந்த உவமைக்கும் இயேசு, வெளிப்படையான விளக்கம் தராமல், முந்தின உவமையின் குறியீடுகளைப் போன்றே வேதாகமத்தைச் சார்ந்து அர்த்தங்கொள்ள விட்டுவிடுகிறதாகப் பார்க்கிறோம்.

மூன்று பங்கு மாவு என்பது வேதாகமத்தில் போஜனப்பலியிலும், ஆபிரகாமின் வாழ்வில் தேவமனிதருக்கு ஆயத்தம்பண்ணின ஆகாரத்திலும் குறிப்பிடப்படுகிறது. மூன்றுபடி மாவு என்பது, தேவமனிதர்களுக்கு தேவனோடுள்ள உறவையும் ஐக்கியத்தையும், புளித்தமாவு தவறான கள்ள உபதேசத்தையும் குறிக்கிறது. பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும் என்று நான் சொன்னது அப்பத்தைக்குறித்துச் சொல்லவில்லை என்று நீங்கள் உணராதிருக்கிறது எப்படி என்றார். அப்பொழுது இயேசு பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் உபதேசத்தைக் குறித்தே அப்படிச் சொன்னார் என்று சீஷர்கள் அறிந்து கொண்டார்கள் (மத்தேயு 16:11-12).

இந்த உவமையைச் சபையோடும், சபை சரித்திரத்தின் காலங்களோடும் ஒப்பிட்டுப்பார்த்தால், மூன்றுபடி மாவு போன்று தியத்தீரா சபை கிரியைகளிலும் அன்பிலும் ஊழியத்திலும் விசுவாசத்திலும் பொறுமையிலும் முன்பு செய்த கிரியைகளிலும் பின்புசெய்த கிரியைகள் அதிகமாயிருப்பதிலும் சாட்சியாக இருந்தது. ஆனாலும் சிறிது புளித்த மாவு மூன்றுபடி மாவையும் புளிக்கச் செய்வதுபோன்று கள்ளப்போதனை சபையைக் கெடுத்துப்போட்டது.

உன்பேரில் எனக்குக் குறை உண்டு; என்னவெனில், தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரரர் வேசித்தனம் பண்ணவும் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு

இடங்கொடுக்கிறாய் (வெளி. 2:20) என்று எழுதப்பட்டிருக்கிறது. அப்பொழுது நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்து கொள்ளும்; அன்றியும் உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின்படியே பலனளிப்பேன் என்று கர்த்தர் சொன்னார். சபை சரித்திரத்தில் இந்தக் காலகட்டத்தைச் சபையின் இருண்டகாலம் என்கிறார்கள்.

## 5. புதைந்திருக்கிற பொக்கிஷத்தின் உவமை!

அன்றியும் பரலோகராஜ்யம் நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப் பற்றிய சந்தோஷத்தினாலே போய் தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான் (மத்தேயு 13:44) என்று இயேசு சொன்னார். இயேசு இந்த உவமைக்கும், விளக்கம் தராமல், முந்தின உவமையின் குறியீடுகளைப் போன்றே வேதாகமத்தைச் சார்ந்து அர்த்தங்கொள்ள சீஷர்களை விட்டுவிடுகிறதாகப் பார்க்கிறோம்.

முதல் நான்கு உவமைகளும், சபைக்கும், சபைக்கான தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்கும் விரோதமான சாத்தானின் வஞ்சகத் திட்டங்களைப்பற்றின ஒரு எச்சரிப்பாக இருந்தது. அவை திரளான ஜனங்களுக்குக் கடலோரத்தில் சொல்லப்பட்டது. சபையில் கர்த்தர் நடப்பிக்கவிருக்கும் கிரியைகளை அடுத்த மூன்று உவமைகளும் விளக்குகிறது. இவை மூன்றும் சீஷர்களுக்குத் தனியே வீட்டினுள் சொல்லப்பட்டதையும் நாம் அறிவோம். முதல் நான்கு உவமைகளில் சொல்லப்பட்ட சாத்தானின் செயல்பாடுகளினால் சீஷர்கள் சோர்ந்து போயிருந்தார்கள். அவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் தேவனுடைய திட்டத்தை சித்தத்தை அடுத்த மூன்று உவமைகளில் கர்த்தர் வெளிப்படுத்தினார்.

இந்த உவமையிலும் மனுஷன் என்பது மனுஷ குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறது. நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷம், மீட்கப்படவிருக்கிற தேவஜனங்களை, இன்னும் சிறப்பாக இஸ்ரவேல் ஜனத்தைக் குறிக்கிறது. இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச்

சொந்த சம்பத்தாயிருப்பீர்கள் (பொக்கிஷமாயிருப்பீர்கள்) யாத்திராகமம் 19:5 - என்று இஸ்ரவேல் புத்திரருக்குக் கர்த்தர் சொன்னார். அம்மட்டும் நிலத்தில் புதைந்திருந்த பொக்கிஷத்தை மனுஷன் கண்டு மறைத்து, அதைப் பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான். நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷம் என்பது மாம்சத்தின்படி இஸ்ரவேலரின் இரட்சிப்பைப் பற்றினதாகும். காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல (மத்தேயு 15:24) என்று இயேசு சொன்னார். தனக்கு உண்டான எல்லாவற்றையும் என்பது தன்னையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்த இயேசுவைக் குறிக்கிறது.

இந்த உவமையைச் சபையோடும், சபை சரித்திரத்தின் காலங்களோடும் ஒப்பிட்டுப்பார்த்தால், இருண்டகாலத்திலிருந்து சபை மீண்டு, சீர்திருத்தங்கள் துவங்கும் காலமாக இது எண்ணப்படுகிறது. உலகத்தோற்றமுதல் மறைபொருளானவைகளைக் கர்த்தர் வெளிப்படுத்தினார். செத்த சபையென்று பெயர்பெற்ற சர்தை சபையிலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் உனக்குண்டு. அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள் (வெளி. 3:4) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் காலகட்டத்தைச் சீர்திருத்தச் சபையின் காலம் என்கிறார்கள். சபை சரித்திரத்தின் திருப்புமுனையாக இது அமைந்துள்ளது. மார்ட்டின் லூத்தர் போன்ற மதச்சீர்த்திருத்தவாதிகள் இக்காலங்களிலேயே தோன்றி செயல்பட்டார்கள்.

## 6. விலையுயர்ந்த முத்து உவமை!

மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய் தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான் (மத்தேயு 13:45-46) என்று இயேசு சொன்னார். கர்த்தர் சபையில் நடப்பிக்கவிருந்த கிரியைகளைப் பற்றின அடுத்த உவமையும் சோர்ந்துபோயிருந்த சீஷர்களை உற்சாகப்படுத்தும் வகையில் இரட்சிப்பைக்குறித்த தேவனுடைய திட்டத்தை, சித்தத்தை வெளிப்படுத்துகிறது.

இந்த உவமையில் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரி இயேசுவேயாகும். இயேசு விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய் தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறார். முத்து சமுத்திரத்தின் தாழ்விடங்களில் சிப்பியினுள்ளே சென்ற மணல்போன்ற தூசிகளை அழிக்கும் படியாக உருவாகிறது. இது இங்கே சபையை இன்னும் சிறப்பாக இஸ்ரவேலர் அல்லாத ஜனத்திரளிலிருந்து, சமுத்திரத்திலிருந்து மீட்கப்படுவோரைக் குறிக்கிறது. யூதனென்றும் கிரேக்கனென்று மில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றும் இல்லை; ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள் (கலாத்தியர் 3:28). விலையுயர்ந்த ஒரு முத்து, உடைக்கப்பட்டால் சிதறி தன் மதிப்பை இழந்துவிடும். இதைப்போன்றே, சபையும் ஐக்கியத்திலே நிலைத்திராவிட்டால் மதிப்பை இழந்துபோகும். கிரயத்துக்கு கொள்ளப்பட்டீர்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய மீட்பிற்காகத் தன் ஜீவனையே இயேசு தந்தார். அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷ சாயலானார் (பிலிப்பியர் 2:6,7).

இந்த உவமையைச் சபையோடும், சபை சரித்திரத்தின் காலங்களோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சபை மறுமலர்ச்சியின் காலத்தைச் சார்ந்ததாக இது போற்றப்படுகிறது. கொஞ்சம் பெலன்கொண்ட அற்ப சிப்பியில் பழுதற்ற முத்து உருவாவதைப் போல உண்மையுள்ள பிலதெல்பியா சபை எந்தப் பழுதும், குறைவும் இல்லாத சாட்சியின் சபையாக அறியப்பட்டிருந்தது. மெதடிஸ்ட் நற்செய்தி இயக்கத்தின் மூலம் ஜான் வெஸ்லி போன்றோரும், பெந்தெகொஸ்தே இயக்கத்தின் எழுப்புதல் அக்கினியும் இக்காலத்தில் சபைகளைப் பற்றிப்பிடித்தது. உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அதை ஒருவனும் பூட்டமாட்டான் (வெளி. 3:8) என்று கர்த்தர் சொன்னார்.

## 7. கடலிலே போடப்படும் வலை உவமை!

அன்றியும் பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. அது நிறைந்தபோது, அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள். இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார் (மத்தேயு 13:47-50). இந்த உவமையில் வலை சுவிசேஷத்திற்கும், கடல் தேசங்களுக்கும், மீன் பிடிப்பவர்கள் தேவனுடைய ஊழியக்காரருக்கும் அடையாளமாய் இருக்கிறார்கள். வலையை வீசுவதும், அது நிறையும்போது கரைக்கு இழுத்து நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து ஆகாதவைகளை எறிந்து போடுவதும் அவர்களுடைய வேலையாய் இருக்கிறது.

இவ்வுலகம் முழுவதும் சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. சத்தியத்தை அறிந்து விடுவிக்கப்பட்டவர்களும், அறிந்து ஏற்றுக்கொள்ளாதவர்களும் இருக்கிறார்கள். அவர்களை அடையாளங்கண்டு, பிரித்தெடுப்பார்கள். என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும் (மத்தேயு15:13) என்று இயேசு சொன்னார். அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன் (ரோமர் 16:17) என்று பவுல் எழுதியிருக்கிறார். இனங்கண்டு பிரித்தெடுப்பதும், அவர்களை விட்டு விலகுவதுமே ஊழியக்காரர்களுக்கு நியமிக்கப்பட்டிருந்தது. நியாயத்தீர்ப்பும், பழிவாங்குதலும் தேவனுக்குரியது. பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள் (ரோமர் 12:19) என்று எழுதியிருக்கிறது.

இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார். இந்த உவமையைச் சபையோடும், சபை சரித்திரத்தின் காலங்களோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பெருமையும் அகங்காரமும் கொண்ட லவோதிக்கேயா சபைக்காலத்தைச் சார்ந்ததாக இது இருப்பதைக் காண்கிறோம். இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான் (வெளி.3:20) என்று இயேசு லவோதிக்கேயா சபைக்குச் சொன்னார்.

## பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது!

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தின் ஆரம்பநாட்களில், இயேசு: மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். இடைப்பட்ட ஊழியநாட்களில், மீட்கப்பட்ட விசுவாசிகளின் கூட்டமைப்பான சபை, பரலோகராஜ்யத்தைச் சுதந்தரிக்கக் கடந்து செல்லவிருந்த ஏழு நிலைகளை உவமைகள் மூலமாகவும் விளக்கியிருக்கிறார்.

ஆதித்திருச்சபையின் நாட்கள் துவங்கி இயேசுகிறிஸ்துவின் வருகை வரையிலான காலத்தைக் கிருபையின் நாட்கள் என்றும் சபையின் காலம் என்றும் குறிப்பிடுகிறார்கள். இந்தச் சபையின் காலம், சபை சரித்திரத்தின் ஏழு காலக்கட்டங்களாக வெளிப்படுத்தின விசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிற ஏழு சபைகளின் தன்மைகளையும் ஆவிக்குரிய நிலைகளையும் அதே வரிசையில் ஒத்திருப்பதாக வேத ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். பரலோகராஜ்யத்தைப் பற்றினதான ஏழு உவமைகளுங்கூட, இந்தச் சபைகளைப் போன்றே, சபை சரித்திரத்தின் ஏழு காலக்கட்டங்களை விவரிப்பதாகவே காணப்படுகிறது.

உவமைகளைப்பற்றினதான இந்த நீண்ட விளக்கத்தின் பிரதான நோக்கம், நாம் இயேசுகிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கியிருக்கும் கடைசிக்காலத்தில் இருக்கிறோம் என்பதை விளங்கிக்கொள்ளவேயாகும். மேலும், வேதாகமத்தில்

இயேசுகிறிஸ்துவின் வருகையைக் குறித்து எச்சரிப்பாக எழுதப்பட்டிருக்கும் சகல வார்த்தைகளும் தீர்க்கதரிசனங்களும் இயேசு சீக்கிரமாய் வரவிருக்கிறார் என்கிற உண்மையை உறுதிசெய்கிறதைக் காண்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள். இதோ இயேசு வாசற்படியிலே நின்று தட்டுகிறார். அவர் மிகவும் சீக்கிரமாய் வரவிருக்கிறார். நம்மைச் சுற்றிலும், சபையிலும் சமுதாயத்திலும், நாட்டிலும், தேசங்களிலும் துரிதமாய் தோன்றி வெளிப்படும் போராட்டங்களும், வஞ்சகங்களும் இதற்கு அடையாளங்களாய் இருக்கிறது. ஆகையால், விழித்திருங்கள், ஆயத்தமாயிருங்கள்!

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். மாரநாதா!

# 15. எழும்பிப் பிரகாசி உன் ஒளிவந்தது!

ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார். ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.
(எபேசியர் 5:14-16).

## ஏசாயா புத்தகத்தின் தேவனுருளும் நல்வாக்கு!

வேதாகமத்தில் ஏசாயா தீர்க்கதரிசன புத்தகம், கிறிஸ்து பிறப்புக்கு சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது. இந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகளின் பிரதான நோக்கம், வாழ்வின் நெருக்கங்களினாலும் சிறையிருப்பினாலும் சிதறடிக்கப்பட்டு சோர்வுற்று மீதியாயிருந்த தேவஜனத்துக்கு, தேவனுடைய வாக்குத்தத்தங்களை அருளி நம்பிக்கையூட்டி உற்சாகப் படுத்துவதாகும். அவர்கள் வாழ்வில் தேவன் செய்யவிருந்த நன்மையான காரியங்களை இது முன்னறிவித்தது. இந்தப் புத்தகம் தேவஜனம் மீட்கப்பட்டு, மறுபடியும் கட்டப்படுவதற்கேற்ற வாக்குத்தத்தங்களால் நிறைந்திருக்கிறது. மேசியாவாம் இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகையைக் குறித்துத் தெளிவும் நிச்சயமுமான வார்த்தைகளையும், அவர் அருளும் மீட்பையும், நிறைவில் உபத்திரவங்களுக்கு மத்தியிலே, தேவனுடைய திட்டங்கள் தீர்மானங்கள் நோக்கங்கள் நிறைவேறுவதையும் முன்னறிவிக்கிறது.

அந்நாட்களில் தேவஜனத்துக்கு வாக்களிக்கப்பட்ட விடுதலையை மாத்திரம் ஏசாயாவின் தீர்க்கதரிசனம்

அறிவிக்காமல், மேசியாவாம் இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகையால் மனுக்குலத்துக்கு அருளப்படவிருந்த மீட்பையும், அவருடைய ஊழியத்தையும் வெளிப்படுத்துகிறது. மேலும், இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும், தேவனுடைய மகிமைவிளங்கும்படியாக, அவர் சகல ஜாதியாரையும் பாஷைக்காரரையும் சேர்க்கும் காலத்தைப் பற்றியும், அவர்களுக்கருளப்படும் மேன்மைகளையும் விவரிக்கிறது.

ஏசாயா ஏழு மற்றும் ஒன்பதாம் அதிகாரங்கள், இயேசுகிறிஸ்துவின் பிறப்பைப்பற்றின தரிசன வார்த்தைகளையும், 53ஆம் அதிகாரம், அவருடைய பாடு மரணத்தையும் வெளிப்படுத்துகிறது. ஏசாயா 60ஆம் அதிகாரம் முதல் மூன்று வசனங்களில், எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமைஉன்மேல் உதித்தது. இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமைஉன்மேல் காணப்படும். உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் நடந்துவருவார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது.

## எழும்பிப் பிரகாசி!

இருண்ட காலத்தில், மிகுந்த விரக்தியினால் தேவஜனம் சோர்வுற்றிருந்தபோது, அவர்களுக்கு ஒளி வந்ததையும், கர்த்தருடைய மகிமைஅவர்கள்மேல் உதித்ததையும் நினைவூட்டி, எழும்பிப் பிரகாசிக்க அவர்கள் அழைப்பைப்பெற்றார்கள். தேவனுடைய ராஜ்யத்தின் மீட்பின் பலனைப் பூரணமாய் பெற்றுக்கொள்ள முதலாவது, தேவஜனம் அவர்கள் இருக்கும் கட்டப்பட்ட நிலையிலிருந்து எழும்பி செயல்பட ஆலோசனை தரப்பட்டிருக்கிறது. சரீரப்பிரகாரமாகவும், உணர்வுப்பூர்வமாகவும், ஆவிக்குரிய நிலையிலும், கர்த்தர் ஒவ்வொருவருக்கும் நியமித்திருக்கிற பணிகளைச்செய்ய அழைப்பைப் பெற்றார்கள்.

இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும் என்ற வார்த்தையின்படி, தேசமும் குடிகளும் அடிமைத்தனத்தின் இருளுக்கும், இருளின் கிரியைகளுக்கும் உட்பட்டிருந்தபோது,

கர்த்தருடைய மகிமைஅவர்கள்மேல் உதித்தது. நீங்கள் திடன்கொள்ளுங்கள், வேலையை நடத்துங்கள் என்கிற கர்த்தருடைய வார்த்தையைத் தொடர்ந்து, நான் இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பேன் (ஆகாய் 2:19) என்ற வார்த்தைகள் அவர்களுக்கு வெளிப்பட்டது. தேவஜனத்தின் வாழ்வில் இது நிறைவேறி, இரட்டிப்பான ஆசீர்வாத நன்மைகளை (சகரியா 9:12) அவர்கள் பெற்றுக்கொண்டதாக அறிகிறோம்.

இந்த தீர்க்கதரிசன வார்த்தைகள் இயேசுகிறிஸ்துவின் வருகையிலும் நிறைவேறினதை நாம் அறிந்திருக்கிறோம். நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் பிறப்புக்கு முன்னர் சுமார் 400 ஆண்டுகளுக்கு, கர்த்தருடைய வார்த்தையொன்றும் தேவஜனத்துக்கு பிரத்தியட்சமாக வெளிப்படவில்லை. இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடியிருந்ததைப்போன்ற நிலை காணப்பட்டது. நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்ற கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர், அந்த நாட்களில், புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், தேவனுடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும் தாவீதின் ஊரிலே பிறந்தார்.

அப்போஸ்தலனாகிய பவுலும் தன்னுடைய ஊழிய நாட்களில், இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படும்படியாகவும், மரித்தோரை விட்டு எழுந்து, ஜாக்கிரதையாய் செயல்படும் படியாகவும் தெளிவாய் எழுதிவைத்திருக்கிறார். எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள் (பிலிப்பியர் 2:12) என்று பவுல் எழுதி எச்சரித்திருக்கிறார். ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார் (எபேசியர் 5:14). பேதுரு அப்போஸ்தலனும், ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை (2 பேதுரு 1:10) என்று எழுதியிருக்கிறார்.

இதைப்போன்றே, இந்தக் கடைசி நாட்களில் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கும், இயேசுகிறிஸ்துவின் திருஇரத்தத்தால் மீட்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரையும் எழும்பிப் பிரகாசிக்க கர்த்தர் அழைக்கிறார். எழும்பிப் பிரகாசி, உன் ஒளி வந்தது என்பது வாக்குத்தத்தமாக மட்டுமல்லாமல், தெரிந்துகொள்ளப்பட்டு அழைப்பைப் பெற்றிருக்கிற நம் ஒவ்வொருவருக்கும் கட்டளையாகவும் வெளிப்படுகிறது. இனிக் காலம் செல்லாது என்ற வார்த்தையின்படி நம்மைச் சுற்றி துரிதமாய் நடைபெறும் சம்பவங்களும், வெளிப்படும் அடையாளங்களும் அவருடைய அதிசீக்கிரமான வருகையை உறுதிசெய்து எச்சரிப்பதாக இருக்கிறது.

## உன் ஒளி வந்தது!

எருசலேம் பாழாய்கிடந்தது; தேவாலயமும், பட்டணமும் மறுபடியும் கட்டப்படுவதை அவர்களைச் சுற்றியிருந்தோர் எதிர்த்தார்கள். எருசலேமின் குடிகள் பாபிலோனிய சிறையிருப்பின் நாட்களில், நீண்ட இருண்ட காலத்திற்கும் துன்பங்களுக்கும் உட்பட்டிருந்த வேளையில், எழும்பிப் பிரகாசி; உன் ஒளிவந்தது. கர்த்தருடைய மகிமைஉன்மேல் உதித்தது என்ற கர்த்தருடைய வார்த்தை, அவர்களுக்கு நம்பிக்கையூட்டி உற்சாகப்படுத்தும் வகையில் வெளிப்பட்டது. மீட்கப்பட்டு மறுபடியும் கட்டப்படுவதற்கேற்ற வாக்குத்தத்தங்களாக அவை இருந்தன.

ஜனங்கள் இருளுக்கும் இருளின் கிரியைகளுக்கும் உட்பட்டிருந்தார்கள். இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமைஉன்மேல் காணப்படும் (ஏசாயா 60:2) என்று எழுதப்பட்டிருக்கிறது. பூமியையும் ஜனங்களையும் மூடியிருந்த காரிருளைக்குறித்த வெளிப்பாட்டைக் கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்தார். இது இயற்கையாக இரவில் தோன்றும் இருள்படர்ந்த நிலையை வெளிப்படுத்தாமல், ஆவிக்குரிய காரிருளையும் அதன் கிரியைகளான நெருக்கங்களையும்

துன்பங்களையும் போராட்டங்களையும் குறிக்கிறது. சுற்றத்தாரின் எதிர்ப்புகளுக்கிடையே பாதகமான சூழ்நிலையில், உன் ஒளி வந்தது, கர்த்தர் உன்மேல் உதிப்பார்; கர்த்தருடைய மகிமை உன்மேல் காணப்படும் என்ற நம்பிக்கையூட்டும் வார்த்தைகள் வெளிப்பட்டு அவர்களை விடுவித்தது.

இயேசுகிறிஸ்துவே நம்முடைய வாழ்வின் ஒளியா யிருக்கிறார். இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார் (யோவான் 8:12). மேலும், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன் (யோவான் 12:46) என்றார்.

இயேசுகிறிஸ்து பாவத்திலிருந்தும் சாபத்திலிருந்தும் அதன் விளைவாகிய ஆத்துமமரணத்திலிருந்தும் நமக்கு மீட்பையருளும்படியாக இவ்வுலகத்தின் ஒளியாக வந்து, தன்னையே சிலுவையிலே ஜீவபலியாக அருளினார். மரித்து அடக்கம்பண்ணப்பட்ட இயேசு மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து வெற்றி சிறந்தார். தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இயேசு தம்முடைய சொந்த ஜீவனையே நமக்காகத் தந்தருளி, இருள் சூழ்ந்த நம்முடைய வாழ்வில் தம்முடைய மகிமையான ஒளியை வீசச்செய்கிறார். அவருடைய பிரசன்னம் நமக்குள்ளும் நம்மோடும் இருக்கிறது. இயேசுவல்லால் நம்மால் வாழ்வில் பிரகாசிக்கவே முடியாது. என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது (யோவான் 15:5) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். நம்முடைய சுயபெலத்தையும் சுயசக்தியையும் சுய மேன்மைகளையும் நம்பி வாழும்போது, பரிதாபமாக வாழ்வில் தோல்வியடைகிறோம். ஆனால், இயேசு நம்மோடு இருக்கையில் அவருடைய மகிமைநம்மேல் உதிக்கும்போது, நாம் வாழ்வில் பிரகாசிக்கிறோம். எழும்பிப்

பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது.

**மரித்தோரை விட்டு எழுந்திரு!**

ஆவிக்குரிய வாழ்வில் உணர்வற்ற நிலையில் தூங்கிக்கொண்டு, மரணத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஒவ்வொருவரையும் கர்த்தர் உயிர்ப்பிக்க வல்லவராயிருக்கிறார். ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார். ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள் (எபேசியர் 5:14-17) என்று பவுல் எச்சரிக்கிறார்.

கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் கூடுமானால் எவ்விதத்திலாகிலும் வஞ்சிக்கும்படியாக ஒரு கூட்டம் எழும்பியிருக்கிறதை நாம் அறிவோம். ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் (மத்தேயு 24:24) என இயேசுகிறிஸ்து நம்மைஎச்சரித்திருக்கிறார். சரீர மரணம் என்பது யாவருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (எபிரெயர் 9:27) என்று எழுதப் பட்டிருக்கிறது. கர்த்தருடைய வருகை மிகவும் சமீபமான இந்தக் கடைசி நாட்களில், நம்முடைய வாழ்வின் எஞ்சிய நாட்களும் எவ்வளவு என்று அறியாத நிலையில், காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, மரித்த நிலையில் உங்களுடைய ஆவிக்குரிய வாழ்வு காணப்படுமேயானால், முதலாவது அது உயிர்ப்பிக்கப்படவேண்டும்.

இந்நாட்களில் அநேக பிரசங்கங்கள் பாவத்தைக்குறித்து நம்மைஉயிர்ப்பித்து உணர்வடையச்செய்யாது. இருக்கிற பாவ நிலையிலேயே நம்மைப் பாராட்டி சீராட்டி வஞ்சிக்கிறவைகளாக இருக்கிறது. ஆவிக்குரிய நிலையில் எவ்வளவேனும் நம்மைப் பாதிக்காத போதனைகளையும் உபதேசங்களையும் தவிர்த்து, நம்மை உயிர்ப்பிக்கவல்ல வார்த்தைகளுக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும் மனமுவந்து செவிகொடுத்து, அதின்படி செய்கிறவர்களாயும் இருக்க அழைக்கப்படுகிறோம்.

பரிசுத்த ஆவியானவர் கண்டித்து உணர்த்தும் பாவங்களை, இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்ட தேவனுடைய பிள்ளைகள் அறிக்கையிடும்போது, அவற்றை அவர்களுக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கிச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவரா யிருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் (யோவான் 16:8) என்றும், நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவரா யிருக்கிறார் (1 யோவான் 1:9) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வாறு மரித்தோரைவிட்டு எழுந்திருக்க தங்களை ஒப்புக்கொடுக்கிற தேவனுடைய பிள்ளைகளை, இயேசுகிறிஸ்துவின் இரத்தம் அவர்களின் சகல பாவங்களையும் நீக்கி சுத்திகரிக்கிறது. அல்லேலூயா!

## தூசியை உதறிவிட்டு எழுந்திரு!

மரித்தோரைவிட்டு எழுந்திருக்க ஒப்புக்கொடுக்கிற தேவஜனம், தங்களுடைய ஆவி ஆத்துமா சரீரத்தில் கறைப்படாது காத்துக்கொள்ள, தூசியை உதறிவிட்டு, அசுத்தத்தைக் களைந்துவிட்டு, பரிசுத்தத்தை அணிந்துகொள்ள ஆலோசனை யருளப்பட்டிருக்கிறது. மேலும், பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு தூசிபடிவதற்கு ஏதுவான சூழ்நிலைகளிலிருந்து

விடுவிக்கப்படவேண்டியதும் அவசியமாயிருக்கிறது. தூசியை உதறிவிட்டு எழுந்திரு; எருசலேமே, வீற்றிரு; சிறைப்பட்டுப்போன சீயோன் குமாரத்தியே, உன் கழுத்திலுள்ள கட்டுகளை அவிழ்த்து விடு (ஏசாயா 52:2) என்று எழுதப்பட்டிருக்கிறது.

மரித்தோரைவிட்டு தூசியை உதறிவிட்டு எழுந்து கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள், முடிவுபரியந்தம் விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும் உண்மையிலும் நிலைத்திருந்து இரட்சிக்கப்பட, தீட்டான இடங்களைவிட்டும் எழுந்திருந்துபோக ஆலோசனை அருளப்பட்டிருக்கிறது. எழுந்திருந்து போங்கள், இது நீங்கள் இளைப்பாறும் இடம் அல்ல, இது தீட்டுப்பட்டது, இது உங்களை நாசப்படுத்தும், அந்த நாசம் மிகவும் கொடியதாயிருக்கும் (மீகா 2:10) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. தீட்டான இடங்களில் இளைப்பாறுகிறவர்கள், நாசமடைவார்களாம்; அந்த நாசம் மிகவும் கொடியதாயிருக்குமாம். தீட்டான இடங்கள் என்பவை, தேவனுடைய சித்தத்திற்கும், கட்டளைகளுக்கும் கற்பனைகளுக்கும் விரோதமாக செயல்பட தூண்டும் தேவனுடைய தன்மைகளுக்கும் பண்புக்கும் உகந்ததல்லாத இடங்களாகும்.

தேவன் விரும்பாத செயல்களைச் செய்யத்தூண்டும் இடங்களும், தேவன் அருவருக்கும் செயல்களான விக்கிரக வழிபாடு, வேசித்தனம்போன்ற மாம்சீக இச்சைகளுக்கடுத்த இடங்களும், சாபக்கேடான எல்லைகளும் குடியிருப்புகளும், பாவம் உலகம் பிசாசின் கிரியைகளை நடப்பிக்கும் ஸ்தலங்களும் இவற்றில் அடங்கும். மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ள அழைக்கப்படுகிறோம். இதனிமித்தமே, தங்கி தாபரிக்கும் குடியிருப்புகளையும், பணி செய்யும் இடங்களையும், ஊழிய ஸ்தலங்களையும் செல்லும் ஊர்களையும் தேசங்களையுங்கூட, தேவனுடைய சித்தத்தை அறிந்து, அவருடைய வழிநடத்துதலின்படியே தேர்வுசெய்ய ஆலோசனை பெற்றிருக்கிறோம்.

இன்பச் சுற்றுலா என்ற பெயரில், குடும்பமாகவும், ஏன் சபையாகவுங்கூட தீட்டான இடங்களுக்குச் சென்று வாழ்வில் நாச

மோசங்களுக்குட்பட்டோரும், ஆசீர்வாதங்களை இழந்துப் போனவர்களும் உண்டு. வாழ்வில் தாமதிக்கிற தடைப்பட்டிருக்கிற ஆசீர்வாத நன்மைகளினிமித்தம் விரக்தியடைந்து தடுமாறி, பாரம்பரியம், நாட்டு வைத்தியம், பரிகாரம் என்கிற போர்வையில் மறைந்து செயல்படும் கர்த்தர் அருவருக்கிற மாந்திரீகம், விக்கிரகத்தின் கிரியைகள், ஜோதிடம், குறிசொல்லுதல்போன்ற தீட்டான காரியங்களுக்கும் இடங்களுக்கும் சென்று கொடிதான நாச மோசங்களுக்குட்படுவோரும் உண்டு. ஆகவே, ஞானமற்றவர் களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ள பவுல் எச்சரிக்கிறார்.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமே இனி பாவம் செய்யாதிருக்கவும், பாவத்தோடும் உலகத்தோடும் பிசாசோடும் உள்ள நுகத்தை, உறவை முறிக்க வல்லமையுடையதாகவும்; கட்டுகளை அவிழ்க்கத்தக்கதாகவும் உள்ளது. தனிப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் வாழ்வில், கர்த்தரிடத்திலிருந்து ஒளியைப்பெற்று, கர்த்தருடைய மகிமைஅவர்கள்மேல் உதிக்க, அவர்கள் மனமுவந்து அர்ப்பணிக்கவும், கிறிஸ்துவுக்குள் பிரயாசப்படவும் செயல்படவும் வேண்டியது அவசியமா யிருக்கிறது.

இருளிலிருந்தும் அதன் கிரியைகளிலிருந்தும் விடுவிக்கப் பட்டு, இயேசுகிறிஸ்துவின் ஒளியைப்பெற்று பிரகாசிக்க, கர்த்தருடைய மகிமைநம்மேல் உதிக்க, மனதளவில் கர்த்தருக்கென்று எழும்பிப் பிரகாசிக்கத் தீர்மானித்துச் செயல்பட கர்த்தர் அழைக்கிறார். மரித்தோரைவிட்டு தூசியை உதறிவிட்டு எழும்ப, பாவத்தோடும் உலகத்தோடும் பிசாசோடுமுள்ள கட்டுகளை அவிழ்த்துவிட்டு தீட்டான இடங்களைவிட்டும் எழுந்திருந்துபோக, இந்தக் கடைசி நாட்களில் கர்த்தர் எச்சரிக்கிறார்.

## சீயோனே உன் வல்லமையை தரித்துக்கொள்!

எழும்பு, எழும்பு, சீயோனே, உன் வல்லமையைத் தரித்துக்கொள்; பரிசுத்த நகரமாகிய எருசலேமே, உன் அலங்கார வஸ்திரங்களை உடுத்திக்கொள்; விருத்தசேதனமில்லாதவனும் அசுத்தனும் இனி உன்னிடத்தில் வருவதில்லை (ஏசாயா 52:1)

என்று ஏசாயா தீர்க்கன் எழுதிவைத்திருக்கிறார். சீயோனும் எருசலேமும் திருச்சபையை, மீட்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளையும் அவர்களுடைய கூட்டமைப்பையும் குறிக்கிறது. கட்டுகளை அவிழ்த்து தூசியை உதறிவிட்டு எழும்ப மனதளவில் தீர்மானித்துச் செயல்படும் தேவனுடைய பிள்ளைகளுக்கு, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தஜனத்துக்கு, சர்வவல்லமையுள்ள தேவன் வல்லமையைத் தருகிறார்.

எழும்பிப் பிரகாசி என்ற வார்த்தைகளை வாக்குத்தத்தம் என்பதைக் காட்டிலும் கட்டளையாக ஏற்றுக் கீழ்ப்படிந்து செயல்படுகிறவர்கள்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமைஅவர்கள்மேல் காணப்படும். மேலும் அவர்களுக்குச் சர்வவல்லமையுள்ள தேவன் வல்லமையைத் தருகிறார். இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப்பார்க்க ஆசையாயிருந்து, உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன் (சங்கீதம் 63:2) என்று தாவீது ராஜா தேவனுடைய வல்லமையையும் மகிமையையும் கண்டதைச் சாட்சியாகக் குறிப்பிடுகிறார். இவ்விதமாக தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, எழும்பிச் செயல்படுபவர்களுக்கு, கர்த்தருடைய மகிமைவெளிப்பட்டு, வல்லமைத் தரிப்பிக்கப்படுகிறது. அல்லேலூயா!

தானியேலுக்கு மறைபொருள் வெளிப்பட்டபோது, என் பிதாக்களின் தேவனே, நீர் எனக்கு ஞானமும் வல்லமையும் கொடுத்து, நாங்கள் உம்மிடத்தில் வேண்டிக்கொண்டதை இப்பொழுது எனக்கு அறிவித்து, ராஜாவின் காரியத்தை எங்களுக்குத் தெரிவித்தபடியினால் உம்மைத் துதித்துப் புகழுகிறேன் என்றான் (தானியேல் 2:23). பாபிலோனிய சிறையிருப்பின் நாட்களில் தானியேலுக்கு அருளப்பட்ட ஞானமும் வல்லமையும், அடிமைத்தனத்திற்குட்பட்டிருந்த அவருக்கு மேன்மையையும் மகிமையையும் கனத்தையும் ராஜாவினிடத்திலிருந்து பெற்றுத்தந்தது. மேலும் தானியேலின் இந்தச் செய்கையினால், மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்கு தேவனும், ராஜாக்களுக்கு ஆண்டவரும், மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறார்

(தானியேல் 2:47) என்று பாபிலோன் தேசத்து ராஜாவினால், தேவனுடைய நாமம் புகழப்பட்டது.

அப்போஸ்தலரான பேதுரு மற்றும் யோவானின் வாழ்விலும் ஊழியத்திலும் தேவனுடைய மகிமையும் வல்லமையும் வெளிப்பட்டது. பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்றும் அறிந்து கொண்டார்கள் (அப்போஸ்தலர் 4:13). தேவனுடைய வல்லமையைத் தரித்துக்கொள்ளும்போது, படிப்பறியாதவர்களும் பேதமையுள்ளவர்களும், பலவீனரும் குறைவுற்றோரும், இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சாட்சியைத் தெளிவாக எடுத்துரைக்கிறார்கள்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, தேவனுடைய இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையை ஆவலுடன் எதிர்நோக்கி ஆயத்தமாய் காத்திருக்கும் நமக்கும் அவர் தம்முடைய வல்லமையையும் மகிமையையும் தரிப்பிக்கிறார். ஏசாயா தீர்க்கதரிசியின், எழும்பு, எழும்பு, சீயோனே, உன் வல்லமையைத் தரித்துக்கொள்; பரிசுத்த நகரமாகிய எருசலேமே, உன் அலங்கார வஸ்திரங்களை உடுத்திக்கொள்; விருத்தசேதனமில்லாதவனும் அசுத்தனும் இனி உன்னிடத்தில் வருவதில்லை என்கிற வார்த்தைகளின் நிறைவேறுதல் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முந்தின காலகட்டத்திலேயே முழுமைபெறும் என்பதாகச் சொல்லப்படுகிறது.

அதாவது, இயேசுகிறிஸ்துவின் வருகையைக் குறித்ததான அடையாளங்களும், சம்பவங்களும் துரிதமாய் அதனதன் காலத்திலே, வேளையிலே நிறைவேறிவரும் இந்த நாட்களிலேயே எழும்பு, சீயோனே, உன் வல்லமையைத் தரித்துக்கொள் எனும் தீர்க்கதரிசனம் முழுமைப்பெற இருக்கிறது. இதுவே, நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும்

காண்பார்கள். ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள்மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன் (யோவேல் 2:28-29) என்ற வார்த்தையின் நிறைவேறுதலாக இருக்கும் என அறிகிறோம்.

இன்னும் சற்றுத் தெளிவாகச் சொல்லவேண்டுமானால், தேவனுடைய வல்லமையையும் மகிமையையும் தரித்துக் கொண்டு கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தப்பட்டு, மற்றவர்களையும் ஆயத்தப்படுத்த நியமிக்கப்பட்டவர்களின் பட்டியலிலே, தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து எழும்பிப் பிரகாசிக்க அர்ப்பணித்திருக்கிற நீங்களும், நானும் இடம்பெற்றிருக்க அதிக வாய்ப்பு உண்டு என்பதாக அறிகிறோம். ஆகவே, உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள். நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத்தேயு 24:42,44) என்கிற வார்த்தைகள் நமக்கு எச்சரிக்கையாக அருளப் பட்டிருக்கிறது.

## உன் அலங்கார வஸ்திரங்களை உடுத்திக்கொள்!

தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காகக் காத்திருக்கும் தேவனுடைய பிள்ளைகளுக்குக் கர்த்தர் தம்முடைய வல்லமையையும் மகிமையையும் தரிப்பிக்கிறார் எனப் பார்த்தோம். மேலும், கர்த்தர் பரிசுத்த நகரமாகிய எருசலேமே, உன் அலங்கார வஸ்திரங்களை உடுத்திக்கொள் (ஏசாயா 52:1) என்கிறார். பரிசுத்த நகரமாகிய எருசலேம் என்பது, மீட்கப்பட்டோரின் கூட்டமைப்பான திருச்சபையைக் குறிக்கிறது. அலங்கார வஸ்திரங்களை உடுத்திக்கொள் என்பது, விசுவாசிகள் பெற்றுக்கொள்ளும் இரட்சிப்பைக் குறிப்பதாக இருக்கிறது. கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன்; என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது. மணவாளன் ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக்கொள்ளுகிறதற்கும், மணவாட்டி நகைகளினால் தன்னைச் சிங்காரித்துக்கொள்ளுகிறதற்கும்

ஒப்பாக, அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார் (ஏசாயா 61:10) என்று எழுதப்பட்டிருக்கிறது.

அபாத்திரராய் இருந்தாலும், தேவனுடைய அளவற்ற கிருபையினாலே, அவருடைய பிள்ளைகளாகும்படியான அதிகாரத்தைப் பெற்றிருக்கிற நாம், அதைப் பிரயோகித்து, அந்த உறவின் நிலைகளுக்குள்ளே கடந்து செல்லுகிறோம். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (எபேசியர் 2:8) என்று பவுல் எழுதியிருக்கிறார். பிள்ளைகள் என்கிற உறவிற்குட்பட்டபின்னரும், விசுவாசத்தில் நிலைத்திருந்து அவருடைய கிருபையினாலே இரட்சிப்பை அடைவதற்கு மாறாக அந்த அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும், உதாசீனப்படுத்தி நிர்விசாரமாய் உள்ளவர்களைக் கர்த்தர் ஆக்கினைக்குட்படுத்துகிறார்.

பரலோகராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது என்று இந்த நிலையை உவமையாக நம்முடைய இரட்சகர் சொல்லியிருக்கிறார். அழைக்கப்பட்டவர்கள் கல்யாணத்திற்கு வர மனதில்லாதிருந்தார்கள். ஆகையால், ராஜா வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக்கொண்டு வாருங்கள் என்றான். விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு: சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டார். அதற்கு அவன் பேசாமலிருந்தான். அப்பொழுது, ராஜா பணிவிடைக்காரரை நோக்கி: இவனைக் கையுங்காலும் கட்டிக்கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான். அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப் பட்டவர்களோ சிலர் என்றார் (மத்தேயு 22:11-14).

ஒருபுறம் எவ்வளவேனும் தகுதியற்ற நம்மையும் தம்முடைய அளவற்ற கிருபையினாலே மீட்டெடுத்து வல்லமையைத் தரிப்பிக்கிறார். அலங்கார வஸ்திரங்களை

அணிவித்து, இரட்சிப்பின் வஸ்திரங்களை உடுத்துகிறார். மறுபுறம் அவருடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் புறக்கணிப்போரை, அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளுக்குட்படுத்துகிறார்.

## அசுத்தன் இனி உன்னிடத்தில் வருவதில்லை!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இந்தக் கடைசிக் காலக்கட்டத்தில் அடியெடுத்துவைத்திருக்கும் நாம், எழும்பிப் பிரகாசிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். கர்த்தருடைய மகிமைநம்மேல் உதித்ததால் உண்டாகும் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற நம் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் நடந்து வருவார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது.

மரித்தோரைவிட்டு தூசியைவிட்டு எழுந்து, வல்லமையை தரித்துக்கொண்டு இரட்சிப்பின் அலங்கார வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளும் தேவஜனத்தின் வாழ்வில் கர்த்தருடைய மகிமைஉதிக்கிறது. விருத்தசேதனமில்லாதவனும் அசுத்தனும் இனி உன்னிடத்தில் வருவதில்லை (ஏசாயா 52:1) என்கிற வார்த்தைகள் அவர்களின் வாழ்வில் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முந்தின காலகட்டத்திலே நிறைவேறி முழுமைபெறும் என்பதாகச் சொல்லப்படுகிறது.

கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள். உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள், உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள் (அப்போஸ்தலர் 2:17) என்று எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமான இந்நாட்களில், எழுதப்பட்டிருக்கிறபடி, பரிசுத்த ஆவி நம்மிடத்தில் வரும்போது நாம் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், கர்த்தருக்கு சாட்சிகளாயிருப்போம்.

மேலும், கர்த்தருடைய ஒத்தாசையுடன் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், எழும்பி வல்லமையைத் தரித்துக்கொண்டு

இரட்சிப்பின் அலங்கார வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளும்போது. விருத்தசேதனமில்லாதவனும் அசுத்தனும் இனி நம்மிடத்தில் வருவதில்லை என்று நமக்கு வாக்கருளியிருக்கிறார். இதோ சமாதானத்தைக் கூறுகிற சுவிசேஷகனுடைய கால்கள் மலைகளின்மேல் வருகிறது; யூதாவே, உன் பண்டிகைகளை ஆசரி; உன் பொருத்தனைகளைச் செலுத்து; துஷ்டன் இனி உன் வழியாய்க் கடந்து வருவதில்லை, அவன் முழுதும் சங்கரிக்கப் பட்டான் (நாகூம் 1:15) என்று எழுதப்பட்டிருக்கிறது.

## எழும்பிப் பிரகாசி உன் ஒளிவந்தது!

இந்தக் கடைசி நாட்களில் மாம்சமான யாவர்மேலும் கர்த்தர் தம் ஆவியை ஊற்றவிருக்கிறார். பின்மாரி காலத்தைப்போன்ற இந்த அபிஷேகத்தினால், களங்கள் தானியத்தினால் நிரம்பும்; ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும் (யோவேல் 2:24) என்கிற வார்த்தையின்படி, அபிஷேகம் பெற்ற அநேக விசுவாசிகளும் ஊழியரும், கர்த்தருடைய மகிமைஅவர்கள்மேல் உதித்ததால் ஒளியைப்பெற்று எழும்பிப் பிரகாசிப்பார்கள். அவர்கள் எழும்பி, திரளான ஜனங்களை இரட்சிப்பிற்குள் நடத்துவார்கள். சபைகள் இப்படியாக மீட்கப்படுகிறவர்களால் நிரம்பி வழியும். அல்லேலூயா.

இக்காலத்தில் அக்கிரமக்காரன் என்று குறிப்பிடப்படுகிற அந்திக்கிறிஸ்துகள் அநேகர் இருப்பதாக யோவான் சொல்லியிருக்கிறார். பிள்ளைகளே, இது கடைசிக்காலமா யிருக்கிறது. அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக்காலமென்று அறிகிறோம் (1 யோவான் 2:18) என்று சொல்லியிருக்கிறார். ஆனாலும், தடைசெய்கிறவன் என்று குறிப்பிடப்படுகிற பரிசுத்த ஆவியானவர், நம் மத்தியிலே இந்த கிருபையின் நாட்களில், சபையின் காலத்தில் இருக்கும்வரை, அந்திக்கிறிஸ்துகளின் கிரியைகள் வெளிப்படாமல் தடைசெய்யப்பட்டிருக்கிறது.

கர்த்தர் தாமேஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி

வரும்போது, கிறிஸ்துவுக்குள் மீட்கப்பட்ட நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள் மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவோம் (1 தெசலோனிக்கேயர் 4:16-17). அந்தவேளையில் தடைசெய்கிறவன் என்று குறிப்பிடப்படுகிற பரிசுத்த ஆவியானவரும் நீக்கப்படுவாராம். மீட்கப்பட்ட பரிசுத்தவான்களின் கூட்டமாகிய சபையும், பரிசுத்த ஆவியானவரும் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர், அக்கிரமக்காரன் என்று அறியப்பட்டிருக்கிற அந்திக்கிறிஸ்து வெளிப்படுவான். அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்.

அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது. ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார் (2 தெசலோனிக்கேயர் 2:7-8) என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியிருக்கிறார்.

மீட்கப்பட்ட தேவஜனமே, எழும்பிப் பிரகாசி; உன் வல்லமையைத் தரித்துக்கொள்; உன் இரட்சிப்பின் அலங்கார வஸ்திரங்களை உடுத்திக்கொள்; அந்த அசுத்தன் இனி உன்னிடத்தில் வருவதில்லை. அல்லேலூயா. ஆமென்.

# 16. கனத்துக்குரிய பாத்திரம்!

ஆகையால் ஒருவன் இவைகளை (கள்ளப்போதகங்களை) விட்டு,
தன்னைச் சுத்திகரித்துக் கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும்
எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும்
ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்
(2 தீமோத்தேயு 2:21).

## தமஸ்குப் பாதையில் பரமதரிசனம்!

சவுல் என்பவன் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்தி, அவர்கள்பேரில் மூர்க்கவெறி கொண்டவனாய் அவர்களைத் துன்புறுத்தி வந்தான். இந்த மார்க்கத்தாரைக் கண்டுபிடித்தால் அவர்களைக் கட்டி எருசலேமுக்கு கொண்டுவரும்படி அவன் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரம் பெற்று தமஸ்குவுக்குப் போனபோது, கர்த்தர் அவனுக்கு இடைப்பட்டார். அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். கர்த்தருடைய வார்த்தையின்படி, பின்னர் அவன் பட்டணத்துக்குள்ளே போனான்.

அங்கு அனனியா என்னும் பேருள்ள சீஷனுக்குக் கர்த்தர் தரிசனமாகி சவுலைச் சந்திக்க அவனை அனுப்பினார். அப்பொழுது அனனியா: இங்கேயும் உம்முடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற யாவரையுங் கட்டும்படி அவன் பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்றிருக்கிறானே என்றான். அதற்குக் கர்த்தர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான் (அப்போஸ்தலர் 9:14,15) என்றார்.

கர்த்தர் தெரிந்துகொண்ட பாத்திரம் என்பதாக கர்த்தராலேயே முன்னறிவிக்கப்பட்ட சவுல் புறஜாதிகளுக்கு

அப்போஸ்தலன் என்பதாக அறியப்பட்டிருக்கிறார். இந்தப் பவுல் கர்த்தருடைய நாமத்திற்கென மிகவும் பக்திவைராக்கியமாய் செயல்பட்டதை நாம் அறிவோம். அவரே தன்னுடைய வார்த்தையில்: மகா பிரதான அப்போஸ்தலரிலும், நான் ஒன்றிலும் குறைவுள்ளவனல்லவென்று எண்ணுகிறேன் (2 கொரிந்தியர் 11:5) என்கிறார்.

மேலும், நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன், யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன் (2 கொரிந்தியர் 11:23-25) என்று எழுதியிருக்கிறார்.

வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டில் 13 நிருபங்களை எழுதும் கிருபை பெற்ற இந்தப் பவுல் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட கனத்துக்குரிய பாத்திரமாயிருந்தார்.

## கனத்துக்குரிய பாத்திரமாயிருக்க என்ன செய்வது?

அப்போஸ்தலனாகிய பவுல், பரிசுத்தமாக்கப்பட்டதும் தன்னுடைய எஜமானாகிய தேவனுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருந்தார். தன்னுடைய நடத்தையையே போதகமாக அவர் தீமோத்தேயு என்னும் சீஷனுக்கு எழுதியிருப்பதை வேதாகமத்தில் வாசிக்கிறோம். ஆகையால் ஒருவன் இவைகளைவிட்டு, தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும் எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான் (2 தீமோத்தேயு 2:21) என்று எழுதியிருக்கிறார்.

அப்படியானால், விசுவாசமார்க்கத்தார் ஒவ்வொருவரும் அப்போஸ்தலனாகிய பவுலைப்போல கனத்துக்குரிய பாத்திரமாயிருக்க என்ன செய்ய வேண்டும்?

முதல் நிலையில் நாம் விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும். சகலமும் கிறிஸ்துவின் அன்போடும், ஒருமனதோடும் செய்யப்படவேண்டும். விசுவாசத்தைவிட்டு விலகிப்போகச் செய்யும், அர்ப்பணிப்பைத் திசைத்திருப்பும், கள்ளப்போதகங்களுக்கு, பிசாசுகளின் உபதேசங்களுக்கு விலக்கிக் காத்துக்கொள்ளுவதும் அவசியமாகும். அன்பிலே பூரணப்பட்டு, சாட்சியின் வாழ்வில் பரிசுத்தமாக நிலைத்திருப்பது முக்கியம். எஜமானாகிய கர்த்தருக்கு உபயோகமுள்ளவர்களாய் தேவசித்தம் செய்யவேண்டும். எல்லாவித நற்கிரியைகளையும் எப்பொழுதும் செய்ய ஆயத்தமாயிருப்பது கனத்துக்குரிய பாத்திரமாயிருக்க உதவுகிறது.

## 1. விசுவாசத்தில் நிலைத்திரு!

அப்போஸ்தலனாகிய பேதுரு தம்மைப்போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களாகிய நமக்கு, நம்முடைய வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டிய நற்காரியங்களைத் தனது இரண்டாவது நிருபத்தில் எழுதிவைத்திருக்கிறார் (2 பேதுரு 1:5-11). இந்த நற்பண்புகள் நமக்கு உண்டாயிருந்து பெருகினால், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் நமக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும். இவைகளைச் செய்தால் நாம் ஒருக்காலும் இடறி விழுவதில்லை.

இவைகள் இல்லாதவன் எவனோ அவன் முன் செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண் சொருகிப்போன குருடனாயிருக்கிறான் என்ற எச்சரிப்பைப் பெற்றிருக்கிறோம். விசுவாசமுடையவர்களாய் பாவங்களற சுத்திகரிக்கப்பட்டும், வாழ்வில் பலவிதமான நெருக்கங்களினிமித்தம் விசுவாசத்தில் இடறி விழுந்து தவித்துக்கொண்டிருக்கும் அநேகருக்கு இந்த வேதப்பகுதி ஆலோசனையாகவும் எச்சரிப்பாகவும் எழுதப்பட்டிருக்கிறது. விசுவாசிகளின் வாழ்வில் கடைபிடிக்கவேண்டிய நற்பண்புகளை ஆவிக்குரிய வளர்ச்சியின் ஏழு நிலைகளாக பேதுரு இதில் எழுதி வைத்திருக்கிறார்.

மேலும் இவைகளைக்குறித்து பேதுரு: ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை (2 பேதுரு 1:10) என்றும் எழுதியிருக்கிறார்.

**விசுவாசத்தோடே தைரியம்!**

ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன் (யோவான் 17:3) என்று கர்த்தர் சொல்லி யிருக்கிறார். அறிதல் என்பது இங்கு அறிந்து விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுதலைக் குறிக்கிறது. கிறிஸ்தவ வாழ்வு முறையின் துவக்கநிலை விசுவாசம் ஆகும். தேவனுடைய கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்படு கிறோம். இது நம்மால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு.

ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார் (எபேசியர் 2:8-10).

இந்தத் துவக்க நிலையிலேயே நிலைத்திராமல், ஆவிக்குரிய வாழ்வில் பூரணராகும்படி கடந்துச்செல்ல ஆலோசனைப்பெற்றிருக்கிறோம். கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது. விசுவாசத்தோடே தைரியம் நம்மில் காணப்படவேண்டும். ஆங்கில வேதாகமத்தில் தைரியம் என்னும் வார்த்தை, நற்கிரியைகளை, நற்பண்புகளுடன் கூடிய சாட்சியின் வாழ்வைக் குறிப்பதாக - Goodness, Moral excellence, Virtue என்று - எழுதப்பட்டிருக்கிறது.

**உ. கள்ளப்போதகங்களுக்கு விலகியிரு!**

சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு; அவைகளால் (கள்ளப்போதகர்களான) அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர் களாவார்கள் (2 தீமோத்தேயு 2:16) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இப்படியான கள்ளப்போதகங்களை விட்டு ஒருவன் தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் தன் எஜமானுக்கு உகந்த, கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான் என்பதாக பவுல் எழுதி வைத்திருக்கிறார்.

இந்தக்கடைசி நாட்களில் கிறிஸ்துவை அறிந்த அநேகர், கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்றவர்களாய், அவருக்கு சித்தமானவைகளைத் தாங்கள் வாழ்வில் செய்யாமல், கள்ளப்போதகங்களினால் வஞ்சிக்கப்பட்டு மோசம்போகிறதைக் காண்கிறோம். கிறிஸ்தவ வாழ்வுமுறையின் வெளிப்படையான எதிர்பார்ப்புகளான ஜெபம்பண்ணுதல், வேதம் வாசித்தல், சபை ஒழுங்கு, காலந்தவறாமை, காணிக்கை, உபசரிப்பு, கண்டிப்பு போன்றவற்றை கைக்கொண்டு வெளிப்படுத்துவதில் அவர்கள் கவனமாக செயல்படுகிறார்கள். மிகவும் நல்லது.

ஆனால் ஏனோ அறியாமல், அநேகர் விசுவாச வாழ்வில் கர்த்தர் எதிர்பார்க்கிற மனந்திரும்புதல், பாவமன்னிப்பின் நிச்சயம், ஜெபத்துடன் வேதவாசிப்பினால் உண்டாகும் தேவனோடுள்ள உறவு, நித்திய ராஜ்ஜியத்தின் நிச்சயம் போன்றவை இல்லாமல், வெளிப்பூச்சான கிரியைகளினால் தாங்களையே ஏமாற்றிக்கொள்ளுகிறார்கள்.

இதையே இயேசு: மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்; இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டும் (மத்தேயு 23:23) என்றார். ஆகையால் ஒருவன் கள்ளப்போதகங்களைத் தவிர்த்து, தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும் எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்.

நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது. நாங்கள் அனைவரும் இலைகளைப்போல்

உதிருக்ிறோம்; எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டுபோகிறது (ஏசாயா 64:6) என்று எழுதப்பட்டிருக்கிறது. இவ்விதமாக, அநேகர் தேவநீதியைத் தரித்துக்கொள்ளாமல், பாரம்பரியமான சுயநீதியைச் சார்ந்து உலகப்பிரகாரமான நல்லொழுக்கம், நல்நடக்கையிலே திருப்தியடைந்தவர்களாய் வஞ்சிக்கப்பட்டு இரட்சிப்பை இழந்து நிற்கிறார்கள்.

அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது (ரோமர் 1:21) என்று பவுல் எழுதியிருக்கிறார். தாங்கள் எல்லாவற்றிலும் சரியாக செயல்படுகிறோம்; பரலோகம் தங்களுக்கு வாக்களிக்கப் பட்டிருக்கிறது என்பதாக அவர்கள் எண்ணிக் கடைசியில் ஏமாற்றத்திற்குள்ளாகிறார்கள்.

### 3. அன்பிலே பூரணப்படுங்கள்!

கர்த்தருடைய ஆலோசனையின்படி, முடிவுபரியந்தம் விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும், உண்மையிலும், அன்பிலும் நிலைத்துநின்று இரட்சிக்கப்பட அர்ப்பணித்திருக்கும் தேவஜனம், விசுவாசத்திலே துவங்கி அன்பிலே பூரணப்படும்படியாக பேதுரு ஆலோசனையாக சொல்லியிருக்கிறார்.

இந்த வேதப்பகுதியில், விசுவாசம் தைரியம் ஞானம் இச்சையடக்கம், பொறுமைப்போன்ற பண்புகள் நம்மில் உண்டாயிருந்து பெருகினால், கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும்பிரவேசம் நமக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும் என்பதாக எழுதப் பட்டிருக்கிறது. இந்தப் பட்டியலின் நிறைவு பண்புகளான தேவபக்தியும், சகோதர சிநேகமும், அன்பும், தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூருகிறதையும், பிறனிடத்தில் அன்பு கூருகிறதையும் (2 பேதுரு 1:5-7) உள்ளடக்கியுள்ளது.

இதையே அப்போஸ்தலனாகிய பவுலும்: ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும்

பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும், பூரணசற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள் (கொலோசெயர் 3:12-14) என்று எழுதியிருக்கிறார்.

கர்த்தருடைய ஆலோசனையின்படி மாம்சத்தின் கிரியைகளுக்கு விலகி, ஆவியிலும் ஆத்துமாவிலும் பரிசுத்தமுள்ளவர்களாய், கர்த்தருக்கு பணிவிடைச்செய்யும்படி அவருக்கு முன்பாக நிற்கும் தேவஜனம், கிறிஸ்து இயேசுவின் சிந்தையை தரித்துக்கொண்டு ஒருவரையொருவர் தாங்கி, ஒருவருக்கொருவர் மன்னித்து, இவை எல்லாவற்றின்மேலும், பூரணசற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ள வழிநடத்தப்படுகிறோம்.

சகோதரரொருவர் பல ஆண்டுகள் நடத்திவந்த உபவாச ஜெபக்கூடுகையில் கலந்துக்கொள்ள ஒருமுறை ஆர்வத்தோடு பிரயாணப்பட்டுச்சென்றார். வழக்கமான அந்தக் கூடுகையில் பங்குபெறும் ஒருவரேனும் அன்று வரவில்லை. ஒவ்வொரு வருக்கும் நியாயமான காரணங்கள் இருந்தபோதும், அந்தச் சகோதரருக்கு அது ஏமாற்றத்தையும் சோர்வையும் ஏற்படுத்தியது. மிகவும் பாரத்தோடு தேவனிடத்தில் அந்தச் சூழ்நிலையை ஒப்புக்கொடுத்து ஜெபித்தார். கர்த்தர் எல்லா சூழ்நிலைகளிலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொடுத்தார். மட்டுமல்லாமல், அந்நிலையிலும் கசப்பை வெளிப்படுத்தாமல், கிறிஸ்துவின் அன்பையே நற்கிரியைகளாக பிரதிபலிக்க கிருபை அருளினார். கிறிஸ்து இயேசுவின் சிந்தையோடு அன்பிலே பூரணப்படுவோம். அல்லேலூயா!

## 4. நற்கிரியைகளைச்செய்ய ஆயத்தமாயிருங்கள்!

பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமா யிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப்

போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி, புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப் படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர் களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன் (1 பேதுரு 2:11,12) என்று பேதுரு எழுதியிருக்கிறார்.

நற்கிரியைகள் கிறிஸ்தவ வாழ்வுமுறையின் ஒரு முக்கியமான அங்கமாக இருந்து வருகிறது. நற்கிரியைகள் பலரால் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ளும் ஒரு வழியாக அறிந்து செய்யப்படுகிறது. ஆனால் எபிரெய நிருப ஆக்கியோன்: விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் (எபிரெயர் 11:6) என்று தெளிவாக எழுதியிருக்கிறார்.

இதனால், கிறிஸ்துவின்பேரிலுள்ள அடிப்படையான விசுவாசத்துடன், கிறிஸ்துவின் அன்பிலே பூரணப்படாமல் செய்யப்படும் நற்கிரியைகள், வாக்களிக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாத நன்மைகளைத் தராது என அறியமுடிகிறது. கள்ளர்கள் பரவி அங்குமிங்கும் கர்த்தரின் வார்த்தையைப் புரட்டுகின்றார் என்கிறப் பாடல் வரிகளை நாம் அறிவோம். இதைப்போன்றே, நற்கிரியைகளைச் செய்ய ஊக்குவிக்கும் போதகங்களும், அதன் அடிப்படைத் தேவையான விசுவாசத்தை தவறுதலுக்கு ஏதுவாக தந்திரமாக மறைத்து, வஞ்சகமாக போதிக்கப்படுகிறதோ என எண்ணத்தோன்றுகிறது.

கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபை யென்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும் (ரோமர் 4:4) என்று எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர்பேரில் விசுவாசம் இல்லாமல், கிறிஸ்துவின் அன்பில்லாமல் செய்யப்படும் நற்கிரியைகள் நிமித்தம் பெறுகிற ஆசீர்வாதங்கள், அதற்கு

கொடுத்துத் தீர்க்கும்படியாக நிர்ணயிக்கப்பட்ட கூலி என்பதாகவே எண்ணப்படும்.

அதே நற்கிரியைகள், மீட்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளால், கிறிஸ்துவின் அன்போடு செய்யப்படும்போது, அவைத் தேவனுடைய கிருபையினால் வரும் நற்பலன்களை நிறைவாய்ப் பெற்றுத்தரும். ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே (எபிரெயர் 6:10) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது (மத்தேயு 5:16) என்று நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவும் சொல்லியிருக்கிறார். தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார் (ரோமர் 2:6,7).

## கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது!

கிறிஸ்துவின்பேரிலுள்ள விசுவாசத்துடன், கிறிஸ்துவின் அன்பிலே பூரணப்பட்டு செய்யப்படும் நற்கிரியைகள், வாக்களிக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாத நன்மைகளைப் பெற்றுத்தரும் என அறிந்தோம். மற்றொரு கண்ணோட்டத்தில், கர்த்தர்பேரில் விசுவாசமுடையவர்களாக இருந்தும், நற்கிரியைகளினால் அதை வெளிப்படுத்தாதவேளையில், அவைகள் கடிந்துரைக்கப்படுவதைக் காண்கிறோம். யாக்கோபு அப்போஸ்தலன்: கிரியைகளினாலே விசுவாசம் பூரணப் படுகிறதென்றும், ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது (யாக்கோபு 2:26) என்றும் சொல்லியிருக்கிறார்.

தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன. வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறியவேண்டுமோ? நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்? விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே (யாக்கோபு 2:19-22) என்று எழுதப்பட்டிருக்கிறது.

உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். நன்மை செய்யுங்கள். கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள், அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள், அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே (லூக்கா 6:35) என்று நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

## நன்மைசெய்ய அறிந்தும் செய்யாதது பாவம்!

ஆதித்திருச்சபையின் காலங்களில் இதையே அப்போஸ்தலனாகிய பவுல் கர்த்தருடைய ஒத்தாசையுடன் சற்று விளக்கம் அளிக்கும்வகையில்: நன்மைசெய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக, நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம். ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம் (கலாத்தியர் 6:9,10) என்று எழுதிவைத்திருக்கிறார்.

அன்றியும் நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும், மறவாதிருங்கள், இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார் (எபிரெயர் 13:16) என்று எழுதப்பட்டிருக்கிறது. யாக்கோபு அப்போஸ்தலன் இதற்கு இன்னும் ஒருபடி மேலே சென்று: ஆதலால், ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்

போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும் (யாக்கோபு 4:17) என்று எழுதிவைத்திருக்கிறார்.

நன்மைசெய்ய பணமோ, பொருளோ இல்லாதபோதும் கர்த்தருடைய அன்பினால் வெளிப்படும் ஆறுதலளிக்கும் வார்த்தைகளும், ஜெபங்களும் உண்மையாய் தேவையில் உள்ளவர்களுக்கு பெரிய ஆறுதலையும் நம்பிக்கையையும் அளிப்பதாக இருக்கும். மனுஷனுடைய இருதயத்திலுள்ள கவலை அதை ஒடுக்கும்; நல்வார்த்தையோ அதை மகிழ்ச்சியாக்கும் (நீதிமொழிகள் 12:25) என்றும்; ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம் (நீதிமொழிகள் 25:11) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

சாமுவேல் தீர்க்கதரிசியும் மற்றவர்களுக்காக ஜெபம் பண்ணுவதைக் குறித்து, நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன்; அது எனக்குத் தூரமா யிருப்பதாக, நன்மையும் செவ்வையுமான வழியை நான் உங்களுக்குப் போதிப்பேன் (1 சாமுவேல் 12:23) என்று சொல்லியிருக்கிறார்.

### நன்மை செய்ய கர்த்தரின் ஆலோசனை!

கிறிஸ்தவ வாழ்வுமுறையில், நற்கிரியைகளைச் செய்ய வாஞ்சிக்கிற அநேக விசுவாசிகள் வாழ்வில், இந்த வார்த்தைகள் ஒரு சவாலாக அமைந்துள்ளதாக அறிகிறோம். கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டு, கர்த்தரின்பேரில் உதவி ஒத்தாசைப் பெற்றுக்கொள்ள விரும்புகிற அநேகரைக் காணமுடியும். இதில் எந்தத் தவறும் இல்லை என்றாலும், இவர்களில் சிலர், கர்த்தருக்கென உண்மையாய் ஊழியம் செய்யாமல், அதே நேரத்தில் தாங்கள் பிழைப்புக்கென வேறெந்த வேலையும் செய்யாமல், தாங்களுடைய சுயலாபத்திற்கென இவ்விதமாய் செயல்படுகிறதைக் காண்கிறோம். இப்படியாக, வசனங்களில் தஞ்சம்புகுந்து துணிந்து வஞ்சிப்போரை எவ்வாறு அடையாளங் கண்டு தவிர்ப்பது?

அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் (மத்தேயு 7:20) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். ஒருவனுடைய செய்கை சுத்தமோ செம்மையோ என்பது அவனுடைய நடக்கையினால் விளங்கும். கள்ளப்போதகர் களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும் (2 பேதுரு 2:2) என்று எச்சரிக்கப்படுகிறோம். இப்படியான கேட்டுக்குப் போகிற வாசல் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகராய் இருப்பார்கள். ஆதலால், அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய போதகத்தை, விசுவாசத்தைப் பின்பற்ற அழைக்கப்படுகிறோம்.

வேதாகமத்தின் சத்திய வார்த்தைகளின்படி நற்கிரியைகள் செய்ய விரும்புவோர் அநேகருண்டு. உண்மையும் உத்தமத்தோடும் எளிமையாய் தேவைகளுடன் தேவ சித்தத்தையே ஊழியமாக செய்து வருகிற பலருமுண்டு. இவர்களுக்கு மத்தியில், தேவசித்தத்தின்படி, தேவனுடைய பிள்ளைகள் மனிதர்களையோ அல்லது தேவனுடைய ஊழியர்கள் என்ற தாங்களே சொல்லிக்கொள்ளுகிறவர் களையோ நம்பாமல், கர்த்தரையே சார்ந்து செயல்பட ஆலோசனைப்பெற்றிருக்கிறோம்.

கிரியைகள் இல்லாத விசுவாசம் செத்தது என்பதும்; நன்மைசெய்யாமல் இருப்பது பாவம் என்பதும் முற்றிலும் உண்மை. அதே நிலையில், கர்த்தர் தம்முடைய மந்தையை வஞ்சித்து அட்டூழியம் செய்பவர்களையும் நாம் அடையாளங் கண்டு ஜாக்கிரதையாய் செயல்படவும் உதவிச்செய்வார் என்பதும் உண்மையாயிருக்கிறது.

ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் (மத்தேயு 24:24) என்கிற வார்த்தைகள், இயேசுகிறிஸ்துவின் வருகையைச் சார்ந்த சம்பவங்களின் எச்சரிப்பாக கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், தனிப்பட்ட வாழ்வில் வஞ்சிப்போரையும், கள்ளத்தீர்க்கதரிசி

களையும் அடையாளங்கண்டு தவிர்ப்பதற்கும் இவை எச்சரிப்பாக அமைந்துள்ளன.

## நீங்கள் கனத்துக்குரிய பாத்திரமாயிருக்கிறீர்கள்!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, கிறிஸ்தவ வாழ்வுமுறையின் எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும், செழிப்பின் உபதேசங்களாகவும், நித்திய இரட்சிப்பெனவும், மாம்சீக இச்சைகளுக்கேற்ற வாழ்வு முறையாகவும், உறவின் நிலைகளுமாக உருமாறி வெளிப்பட்டுக்கொண்டிருக்கும் இந்தக் கடைசிக்காலங்களில் ஜாக்கிரதையாய் செயல்பட எச்சரிக்கப்படு கிறோம்.

சத்தியத்தைவிட்டு விலகச்செய்யும் கள்ளப்போதகங்களை அடையாளங்கண்டு அவைகளை விட்டோடி சுத்திகரிக்கப்பட ஆலோசனைப்பெற்றிருக்கிறோம். ஆராதனையின் தாறுமாறுகள், இயேசுகிறிஸ்துவின் வருகையைக் குறித்த முரண்பாடான கருத்துக்கள், செழிப்பின் உபதேசங்கள், ஒருமுறை இரட்சிப்பு கடைசிவரை பாதுகாப்பு போன்ற சத்தியத்திற்கு புறம்பான, கடைபிடிப்பதற்கு இலகுவாக வெளிப்பட்டிருக்கும் கள்ளப் போதகங்களை விட்டு பரிசுத்தமாய் காத்துக்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்ட நிலையில், நம்முடைய எஜமானாகிய இயேசுகிறிஸ்துவுக்கு உபயோகமான கனத்துக்குரிய பாத்திரமாக தெரிந்துக்கொள்ளப்பட அர்ப்பணிப்போம்.

மேலும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப் பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருக்க நம்மை ஒப்புக்கொடுப்போம். கர்த்தருடைய பார்வையில், பிரதானமான நற்கிரியை, கிறிஸ்துவுக்குள்ளான விடுதலையை நற்செய்தியாக அறிவிப்பதேயாகும். இதைத் தொடர்வது கட்டுண்டவர்களை விடுவிப்பது என அறிந்திருக்கிறோம்.

நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய

இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணின சமாதானத்தின் தேவன், இயேசுகிறிஸ்துவைக் கொண்டு தமக்குமுன்பாகப் பிரியமானதை நம்மில் நடப்பித்து, நாம் தம்முடைய சித்தத்தின்படிசெய்ய நம்மைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக. அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

# 17. நான் உம்மை மகிமைப்படுத்துவேன்!

பூமியிலே நான் உம்மைமகிமைப்படுத்தினேன்.
நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து
முடித்தேன் (யோவான் 17:4)

**யோவான் நற்செய்தி நூல்!**

வேதாகமத்தில், யோவான் எழுதின சுவிசேஷம், இயேசுகிறிஸ்துவை அவர் நேரில் கண்டு கேட்டு, தொட்டுப்பார்த்த அனுபவ சாட்சியின் மிகச்சிறந்த சரித்திரப் பதிவாகும். தன்னுடைய அனுபவங்களை,பின்வரும் சந்ததியாருக்கென, யோவான் விவரித்து எழுதியுள்ளார். ஆதிமுதலாய் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டுப் பார்த்ததுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம் (1 யோவான் 1.1) என்று எழுதியிருக்கிறார், இந்த வசனங்கள், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வாழ்வு மற்றும் ஊழியங்களை முழுமையாக விவரிக்கிறது.

மத்தேயு, மாற்கு, லூக்கா எனும் முதல் மூன்று நற்செய்தி நூல்களில் விவரிக்கப்பட்டுள்ள சத்திய வசனங்களை, சபையின் ஆரம்பக்கால விசுவாசிகள் வாசித்து அறிந்திருந்தனர். இந்த நற்செய்தி நூல்களுக்கு, சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின்னர், யோவான் சுவிசேஷம் கி.பி. 85 ஆம் ஆண்டு எழுதப்பட்டது. அந்தக் காலத்தில், எழுதப்பட்டிருந்த விவரங்களையே மறுபடியும் அவர் எழுதாமல், ஆரம்ப நிலையில் விடுபட்ட சம்பவங்களைச் சேர்த்தும், சபையில் எழுந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையிலும், பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு அவர் இதை எழுதியுள்ளார்.

அப்போஸ்தலனாகிய யோவான் இயேசுவுக்கு அன்பானவராயிருந்தார் (யோவான் 13:23). மேலும், அவர் இயேசுவுக்கு மிகவும் நெருங்கின சீஷர்களில் ஒருவரா யிருந்தார். மறுரூபமலையிலும், யவீருவின் மகளை உயிரோடெழுப்பினபோதும், கெத்செமனே தோட்டத்தின் ஜெபவேளையிலும், இயேசுவோடிருந்த மூவர்களில் அவர் ஒருவராயிருந்தார். இயேசுகிறிஸ்துவின் பாடுமரணத்தின்போது, கொல்கொதா சிலுவையருகில் இருந்த ஒரே சீஷன் யோவான் ஆவார். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தப் பின்னர் சிலகாலம் யோவான் எருசலேமில் இருந்தார். பின்னர் எபேசு சபையில் மூப்பராயிருந்த நாட்களில், கி.பி. 85ஆம் ஆண்டில், யோவான் சுவிசேஷத்தை அவர் எழுதினார்.

ஆரம்ப நிலையிலுள்ள விசுவாசிகளை கிறிஸ்துவுக்குள் வழி நடத்தும்போது, அநேக தேவமனிதர்கள் இதனிமித்தம், யோவான் சுவிசேஷத்தை வாசிக்கும்படியாக ஊக்குவிக்கிறார்கள். இன்னும் சிறப்பாக யோவான் 14 முதல் 17 ஆம் அதிகாரம் வரையிலான வேதப்பகுதி, தேவனுடைய பிள்ளைகளுக்கு அநேக சத்தியங்களை வெளிப்படுத்தி, வாக்குத்தத்தங்களையும் ஆறுதலான வார்த்தைகளையும் தந்து, உற்சாகப்படுத்துகிறது. தேவமனிதர் ஒருவர் இந்த அதிகாரங்களைப் பலமுறை வாசித்து தியானித்து, பயனடைந்ததாக சாட்சி அளித்திருக்கிறார்.

**மகா பிரதான ஆசாரியர் ஜெபம்!**

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய பாடு மரணத்திற்கு முந்தின இரவில், தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியில், தம்முடைய சீஷர்களுடன் ஒலிவமலைக்குப் போனார். அந்த மலையடிவாரத்திலுள்ள கெத்செமனே என்னப்பட்ட தோட்டத்தில் ஜெபம்பண்ணும்படியாகச் சென்றார். அதே நாளில் இயேசுகிறிஸ்துவினுடைய இவ்வுலக வாழ்வின் இறுதி மணி வேளைகளில் நடைபெற்ற சம்பவங்களும், கர்த்தர் வெளிப்படுத்தின வார்த்தைகளும் யோவான் 14 முதல் 17ஆம் அதிகாரங்களில் எழுதப்பட்டுள்ளன.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய சீஷர்களுக்கு தந்தருளின சத்திய வார்த்தைகளும்,

ஆலோசனைகளும், வாக்குத்தத்தங்களும், பிதாவினிடத்தில் கர்த்தர் ஏறெடுத்த ஜெபமும், இந்தப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. இதில் யோவான் எழுதின சுவிசேஷம் 17ஆம் அதிகாரம் கர்த்தருடைய ஜெபம் என்றும், மகா பிரதான ஆசாரியர் ஜெபம் என்றும் குறிப்பிடப்படுகிறது. ஜான் நாக்ஸ் (John Knox) என்னும் தேவ மனிதர், ஜெப வீரர், 1572ஆம் ஆண்டு தான் மரிக்கும் தருவாயில் இந்த வேதப்பகுதியை வாசிக்கச் சொன்னார் என்பது வரலாறு.

இந்த ஜெபத்தில் இடம்பெறும் விண்ணப்பங்கள், மூன்றுப் பகுதிகளாக அமைந்திருக்கின்றன. முதல் ஐந்து வசனங்களில், பிதாவின் நாமம் மகிமைப்படும்படியாக, பிதா தமக்கு நியமித்த கிரியைகளைச் செய்து முடித்தேன் என இயேசுகிறிஸ்து அறிக்கையிடுகிறார். அடுத்து ஆறுமுதல் 19ஆம் வசனங்களில் பிதா தமக்குத் தந்த சீஷர்களுக்கு தேவனுடைய நாமத்தை வெளிப்படுத்தி, தேவன் கொடுத்த வார்த்தைகளைக் கொடுத்தேன் எனச் சொல்லி, அவர்களைத் தீமையினின்று காக்கும்படி ஒப்புக்கொடுக்கிறார். நிறைவாக 20 முதல் 26 வசனங்களில், அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும், சபையார் ஒருமனப்பாட்டில் தேறினவர்களாய் இருக்கவும் வேண்டுகிறார்.

## இயேசு தாம் செய்யவேண்டியதை அறிந்திருந்தார்!

இயேசுகிறிஸ்து தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி நமக்கு மாதிரியைப் பின்வைத்துப்போயிருக்கிறார் (1 பேதுரு 2:21). அவருடைய வாழ்வில் வெளிப்பட்ட வார்த்தைகளும் செயல்களும் நமக்கு முன்மாதிரியாக அமைந்துள்ளன, கர்த்தருடைய ஜெபம் என்று அறியப்பட்டிருக்கிற இந்த விண்ணப்பத்தின் வார்த்தைகள் ஒவ்வொன்றையும் நாம் வாசித்து அறிந்து கைக்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தாம் செய்யும்படி பிதாவாகிய தேவன் நியமித்த பணியைத் தெளிவாக அறிந்திருந்தார். இதையே கர்த்தர்: ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன் (யோவான் 17:3) என்றார். இது தேவனுடைய தன்மைகளையும் நம்மைக்

குறித்த தேவனுடைய சித்தம், அவருடைய திட்டங்கள், தீர்மானங்கள், எதிர்பார்ப்புகளை அறிந்து செயல்படுவதைக் குறிக்கிறது.

தேவனுடைய பிள்ளைகளும், தங்களுடைய வாழ்வில், இவ்விதமாக அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற கிரியையை அறிந்து குறிப்பிடப்பட்ட காலத்தில் செய்துமுடிக்க அழைக்கப்படு கிறார்கள். நாம் ஒவ்வொருவரும் முதலாவதாக இதற்கு, நமக்கு நியமிக்கப்பட்ட கிரியை இன்னதென்று அறிந்துக்கொள்ளுவது அவசியமாகும். அறிந்த பின்னரே. அதைச் செய்துமுடிக்க அர்ப்பணிப்பதும், செய்துமுடிப்பதும் சாத்தியமாகும்.

### தேவனுடைய சித்தம் என்ன?

தேவன் நமக்கு நியமித்திருக்கும் பணி கிரியை இன்னதென்று அறிந்துகொள்ள அப்போஸ்தலனாகிய பவுல்: நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:2) என்று எழுதிவைத்திருக்கிறார்.

கர்த்தருக்குள் நமக்கருளப்பட்டிருக்கும் பணியை, கிரியையை அறிந்துகொள்ள இந்த உலகத்திற்கு ஏற்றபடி நடவாமல், அந்தகாரத்தின் கிரியைகளைத் தவிர்த்து, அசுத்தங்களை நடப்பிக்கும் வீணான எண்ணங்களை வெறுத்து, நம்முடைய மனம் புதிதாகிறதினாலே, தேவனுடைய சாயலாக மாறும்படி ஆலோசனைப்பெற்றிருக்கிறோம். இதையே பவுல் எபேசியருக்கு எழுதும்போது மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல இனி நடவாமலிருங்கள் (எபேசியர் 4:17) என்கிறார்.

வீணான சிந்தையின் விளைவுகளையும் அவரே தொடர்ந்து எழுதி வைத்திருக்கிறார். புத்தியில் அந்தகாரம், இருதய கடினம், அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து; உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள் (எபேசியர் 4:18,19) என்றும் சொல்லியிருக்கிறார்.

மோசம்போக்கும் வீணான சிந்தையைக் களைந்து, சிந்தைச் சுத்தகரிக்கப்பட்டு, மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. உள்ளத்தின் அசுத்தமான அந்தகார எண்ணங்கள் மாறி, புதிதான ஆவியுள்ளவர்களாய் தேவனுடைய சாயலாக மறுரூபப்பட அழைக்கப்படுகிறோம். அந்தப்படி முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள் (எபேசியர் 4:22-24) என்று எழுதப்பட்டிருக்கிறது.

## பவுல் தான் செய்யவேண்டியதை அறிந்திருந்தார்!

பவுலும் தன்னுடைய வாழ்வின் இறுதிக் காலத்தில் நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் (2 தீமோத்தேயு 4:7,8) என்று அறிக்கையிடுகிறார்.

தமஸ்கு பாதையில் சென்றபோது கர்த்தர் சவுல் என்னப்பட்ட பவுலைச் சந்தித்தார். அப்பொழுது அவர் நடுங்கித் திகைத்து ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றார். அதற்குக் கர்த்தர்; நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார் (அப்போஸ்தலர் 9:6). இப்படியாக அனனியா எனும் சீஷன் மூலம் பவுல் செய்யவேண்டியதைக் கர்த்தர் அவருக்கு வெளிப்படுத்தினார்.

அம்மட்டும் கர்த்தருக்கும், அவருடைய மார்க்கத்தமைந்த வர்களுக்கும் எதிர்த்து நின்ற பவுல், தன் மனதளவில் அவரை ஏற்றுக்கொண்டு, அவருடைய ஆளுகைக்குத் தன்னை அர்ப்பணித்த வேளையில், கர்த்தருடைய சித்தம் வெளிப்பட்டது. பவுலுடைய ஊழியத்தின் நாட்களில் கர்த்தர் பவுல் செய்ய

விரும்பினதைச் சொப்பனத்தின் மூலமாகவும், ஊழியர்கள் மூலமாகவும் பிரத்தியட்சமான தரிசனங்கள் மூலமாகவும் தெரியப்படுத்தினார்.

இராத்திரியிலே ஒருமுறை பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று. அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தானொருவன் வந்து நின்று நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக்கொண்டதாக இருந்தது. அந்தத் தரிசனத்தை அவன் கண்டபோது, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக் கொண்டு உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப்போகப் பிரயத்தனம் பண்ணினோம் (அப்போஸ்தலர் 16:9,10) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இதை வாசித்து தியானிக்கிற தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவரும், கர்த்தர் நமக்கு நியமித்திருக்கும் பணிகளை முதலாவதாக அறிந்துகொள்ள முற்படுவோம். கர்த்தருடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக மோசம்போக்கும் வீணான சிந்தையைக் களைந்து, சிந்தைச் சுத்திகரிக்கப்பட்டு, மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. தேவசித்தத்தை நம்முடைய தனிப்பட்ட வாழ்விலும், குடும்பத்திலும், ஊழியங்களிலும், செய்துமுடிக்க நம்மையே அர்ப்பணிப்போம்.

**இயேசு செய்ய நியமித்ததைச் செய்துமுடித்தார்!**

பூமியிலே நான் உம்மைமகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன் (யோவான் 17:4) என்கிற அறிக்கையில் கர்த்தர் செய்து முடித்தக் கிரியைகளின் விளக்கம்போல் எஞ்சிய ஜெபத்தின் வார்த்தைகள் அமைந்துள்ளன. பிதா தமக்குத் தந்த சீஷர்களுக்கு தேவனுடைய நாமத்தை வெளிப்படுத்தி தேவன் கொடுத்த வார்த்தைகளைக் கொடுத்தேன் எனச் சொல்லி அவர்களைத் தீமையினின்று பரிசுத்தமாய் காக்கும்படி ஒப்புக்கொடுக்கிறார்.

தேவனுடைய சித்தம் செய்வது கர்த்தருடைய ஊழியம் என அறிந்திருக்கிறோம். தேவன்: ஈசாயின் குமாரனாகிய

தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக்குறித்துச் சாட்சியுங் கொடுத்தார் (அப்போஸ்தலர் 13:22).

தேவசித்தம் அறிந்து அதைச் செய்ய ஒப்புக்கொடுக்கும் போது, தேவன் உலகத்தில் தெரிந்தெடுத்த மனுஷரிடத்தில் நம்மைஅனுப்புகிறார் அல்லது அவர்கள் நம்மிடத்தில் வருவார்கள். நமக்கு முன்மாதிரியான இயேசுவின் ஊழிய அனுபவம் இப்படியாக இருந்தது. அவருடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து செயல்பட நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள் (எசேக்கியேல் 18:4) என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லியிருக்கிறார். நாம் கர்த்தருடைய சித்தம்செய்ய ஒப்புக்கொடுத்து காத்திருக்கும் வேளையில் கர்த்தர் நமக்கு ஆத்துமாக்களைத் தருகிறார். எப்படித் தருகிறார்?

நம்முடைய அர்ப்பணிப்பு ஆற்றல் அனுபவங்களின் அடிப்படையில் ஆத்துமாக்களை, அதாவது ஊழியங்களையும் சபையையும் அவரே தருகிறார். அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக (மத்தேயு 25:15) தருகிறார் என்று எழுதப்பட்டிருக்கிறது. இதைப்போலவே அவர் ஆவிக்குரிய கிருபைகளையும் வரங்களையும் பகிர்ந்தளிக்கிறார். ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது (1 கொரிந்தியர் 12:7).

நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள் (யோவான் 17:6) என அறிக்கையிடுகிறார்.

## 1. உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்!

இயேசுவின் நாமத்தில் கிருபையினாலே விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை தேவனுடைய ஈவாக பெற்றுக்கொள்ளுகிறோம். இவ்விதமாக இரட்சிக்கப்பட்ட

தேவனுடைய பிள்ளைகள் வாழ்வில், இயேசுவின் நாமத்தில் அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கிறது. பிணியாளிகள் குணமாக்கப்படுகிறார்கள், ஊழியக்காரர் தேவனுடைய வசனத்தை முழு தைரியத்தோடு சொல்லுகிறார்கள்.

இந்நிலையில், கர்த்தர் நம்மிடத்தில் அனுப்புகிறவர்களுக்கு அவருடைய நாமத்தை வெளிப்படுத்துவது நமக்குக் கொடுக்கப்படுகிற ஊழியமாயிருக்கும்.

இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன் (யோவான் 14:13,14) என்று சொல்லியிருக்கிறார். என் நாமத்தினாலே என்பது இங்கு இயேசுவின் நாமத்தின்மேலுள்ள விசுவாசத்தையும் அதனால் அருளப்படும் இரட்சிப்பையும் உள்ளடக்கியுள்ளது.

ஜெபவேளையில் பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள். சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷன் தேவாலய வாசலண்டையிலே அவர்களைக் கண்டு பிச்சைகேட்டான். அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை. என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி வலதுகையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான் (அப்போஸ்தலர் 3:6-8). உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது. அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான். நடந்து குதித்து தேவனைத் துதித்துக்கொண்டு அவர்களுடனேகூட தேவாலயத்திற்குள் பிரவேசித்தான் என்று எழுதப்பட்டிருக்கிறது. அப்பொழுது, இயேசுகிறிஸ்துவின் நாமத்தின் மேன்மை வெளிப்பட்டு, பிதாவாகிய தேவன் மகிமைப்பட்டார்.

## உம்முடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறார்கள்!

பிதாவாகிய தேவன் தந்த மனுஷருக்கு தேவனுடைய நாமமும், அவருடைய தன்மைகளான நீதியும், பரிசுத்தமும், உண்மையும், இரக்கமும், சாந்தமும், மனத்தாழ்மையும் வெளிப்படுத்தப்படும்போது, அவர்கள் அவற்றை ஏற்றுக்கொண்டு,

வசனத்தைக் கைக்கொள்ளுகிறார்கள். அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள் (யோவான் 17:6) என்று கர்த்தர் சாட்சியாக அறிவித்தார். இதனிமித்தம், அவர்கள் மறுரூபமடைந்து தேவசித்தத்தை ஊழியமாகச் செய்ய தங்களை அர்ப்பணிக்கிறார்கள். ஆண்டவர் வசனம் தந்தார். அதைப் பிரசித்தப்படுத்துகிறவர்களின் கூட்டம் மிகுதி (சங்கீதம் 68:11) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இப்படியாக பேதுருவும் யோவானும் தேவனுடைய வசனத்தைக் கைக்கொண்டு மறுரூபமடைந்து நற்சாட்சிப் பெற்றார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்றும் அறிந்துகொண்டார்கள் (அப்போஸ்தலர் 4:13). அல்லேலூயா!

கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான் (ரோமர் 10:13). அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப் படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவும் இல்லை (அப்போஸ்தலர் 4:12) என்றும்; கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான் (நீதிமொழிகள் 18:10) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

## இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோம்!

ஆத்துமாக்களையும் ஊழியங்களையும் பெற்றுக் கொள்ளுவதில் மாத்திரம் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாக இல்லாமல், பரிசுத்த ஜெப ஜீவியத்திலும் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற அழைக்கப்படுகிறோம். பிதாவாகிய தேவனிடத்தில் உள்ள உறவு எந்த வேளையிலும், நிலையிலும் குறைந்துப்போகாதபடி ஜெபத்திலும், உபவாசத்திலும், பரிசுத்தத்திலும், அவர் நிலைத்திருந்தார்.

இயேசு அதிகாலையில், இருட்டோடே எழுந்து ஜெபம் பண்ணினார் (மாற்கு 1:35) என்றும், தனித்து ஜெபம்பண்ண ஒரு மலையின்மேல் ஏறி, சாயங்காலமானபோது அங்கே

தனிமையாயிருந்தார் (மத்தேயு 14:23) என்றும், இராமுழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார் (லூக்கா 6:12) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இந்த ஜாதிப்பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது என்றார் (மத்தேயு 17:21). இயேசு இரவும் பகலும் வனாந்தரத்திலே நாற்பது நாள் உபவாசமாயிருந்த பின்பு (மத்தேயு 4:2) தம்முடைய ஊழியத்தைத் துவக்கினார்.

இயேசு பிறப்பிலேயே பரிசுத்தமுள்ளவராய் இருந்தார் (லூக்கா 1:35). அவர் யோர்தானில் ஞானஸ்நானம் பெற்று கரையேறினவுடனே, பரிசுத்த ஆவியானவர், ரூபங்கொண்டு புறாவைப்போல் அவர்மேல் இறங்கினார் (லூக்கா 3:22). இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானைவிட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப் பட்டார் (லூக்கா 4:1) என்று எழுதப்பட்டிருக்கிறது. நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார் (அப்போஸ்தலர் 10:38).

## ஐ. உம்முடைய வார்த்தைகளைக் கொடுத்தேன்!

நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன் என்கிற அறிக்கையில், கர்த்தர் செய்து முடித்தக் கிரியைகளின் விளக்கமாக பிதா தமக்குத் தந்த மனுஷருக்கு, தேவனுடைய நாமத்தை வெளிப்படுத்தினேன் என்றுரைத்தார் எனப் பார்த்தோம். மேலும் அவர்களுக்கு, தேவன் கொடுத்த வார்த்தைகளைக் கொடுத்தேன் எனச் சொல்லி, அவர்களுக்காக பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்கிறார்.

நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள் (யோவான் 17:8) என்றார்.

இயேசுகிறிஸ்துவே தேவனுடைய வார்த்தை. ஆதியிலே தேவனிடத்திலிருந்த வார்த்தை தேவனாயிருந்தது. காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்திற் பிறந்தவராகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார் (கலாத்தியர் 4:5).

ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது (யோவான் 1:1,14) என்று எழுதப்பட்டிருக்கிறது.

## தேவ வார்த்தையால் நடக்கும் அடையாளங்கள்!

தேவனுடைய வார்த்தை பாவத்திலிருந்தும் அக்கிரமத்திலிருந்தும் நம்மைவிடுவிக்கிறது. சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார் (யோவான் 8:32). தேவனுடைய வசனமேசத்தியம். தேவன் தம்முடைய சத்தியத்தினாலே நம்மைப் பரிசுத்தமாக்குகிறார் (யோவான் 17:17).

தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாய் இருக்கிறது. கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7). இதனிமித்தமேபேதுரு, நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் (1 பேதுரு 2:3) என்கிறார். கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் (சங்கீதம் 1:2) என்று சங்கீதக்காரன் தேவனுடைய வசனமருளும் ஆசீர்வாதமான வாழ்வை சாட்சியாக அறிவிக்கிறார்.

தேவனுடைய வார்த்தை வாழ்வில் வெளிச்சமாயிருந்து வழி நடத்துகிறது. உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (சங்கீதம் 119:105). கர்த்தருடைய வசனம் கால்களுக்குத் தீபம்போன்று வாழ்வில் ஒவ்வொரு அடி எடுத்துவைக்கும் போதும் ஒளி வீசி தீங்கு நம்மை அணுகவொட்டாமல் பாதுகாக்கிறது. வேத வசனம் நம் பாதைக்கு வெளிச்சமாயிருந்து நீண்டதூரங்கூட தொலை நோக்குடன் தெளிவாகப் பார்த்து நிதானத்துடன் ஞானமாய் நம் வாழ்வின்

பயணத்தைத் தொடர உதவுகிறது. தீர்க்கதரிசனம் இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள். வேதத்தைக் காக்கிறவனோ பாக்கியவான் (நீதிமொழிகள் 29:18) என்று எழுதப்பட்டிருக்கிறது.

தேவனுடைய வசனம் வல்லமைஉள்ளதாய் அற்புதங்களை நடப்பிக்கிறது. நம்மைஅழிவிலிருந்து தப்புவிக்கிறது. தேவனுடைய வார்த்தை தேவன் விரும்புகிறதை நம் வாழ்வில் செய்து நம்மைச் சாட்சியாக நிறுத்துகிறது. அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார் (சங்கீதம் 107:20). ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும் அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என வேண்டி நின்ற நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தைக் கண்டு இயேசு: நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான் (மத்தேயு 8:8-13).

## 3. அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்!

நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன் என்கிற அறிக்கையில் கர்த்தர் செய்து முடித்தக் கிரியைகளின் விளக்கமாக பிதா தமக்குத் தந்த மனுஷருக்கு, தேவனுடைய நாமத்தை வெளிப்படுத்தினேன் என்றும்; தேவன் கொடுத்த வார்த்தைகளைக் கொடுத்தேன் என்றும் சொல்லி, அவர்களுக்காக பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்கிறார் எனப் பார்த்தோம்.

அவர்கள் அந்த வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு, இயேசு தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தார் என்று நிச்சயமாய் அறிந்து, விசுவாசித்திருக்கிறார்கள். நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக் கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறேன்; அவர்கள் உம்முடையவர்களாயிருக் கிறார்களே (யோவான் 17:9) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

மனுஷருக்கு, தேவனுடைய நாமத்தை வெளிப்படுத்தி, தேவன் கொடுத்த வார்த்தைகளை அவர்களுக்கு கொடுத்ததின்

நிமித்தம், இயேசுவை பிதா அனுப்பினார் என்று அவர்கள் நிச்சயமாய் அறிந்து விசுவாசித்திருக்கிறார்கள். அவர்களுக்காக இங்கு கர்த்தர் வேண்டிக்கொள்ளுகிறார். எதற்காக கர்த்தர் பிதாவினிடத்தில் வேண்டுகிறார்?

## அவர்கள் ஒன்றாயிருக்கும்படி வேண்டுகிறார்!

முதலாவதாக, தம்மாலே தேவனுடைய நாமத்தை அறிந்து தேவனுடைய வார்த்தையில் போதிக்கப்பட்டவர்கள், இயேசுகிறிஸ்து பரத்துக்கேறி பிதாவினிடத்திற்கு சென்ற பின்னர் பிதா குமாரனைப்போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படிக்கு அவர்களை தேவனுடைய நாமத்தினாலே காத்துக்கொள்ள வேண்டுகிறார். நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும் (யோவான் 17:11) என்கிறார்.

சபைகளிலே இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அற்புதங்கள் அடையாளங்களை நடப்பித்து பிணியாளிகளைக் குணமாக்கி, கர்த்தருடைய வார்த்தை முழு தைரியத்தோடும் சொல்லப்படுகிறது. இப்படியாக மீட்கப்படும் ஆத்துமாக்கள், ஞான ஆகாரத்தால் போஷிக்கப்பட்டு கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கும்படிக்கு காத்து பராமரிக்கப்படுவது அவசியமாகும். ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் (அப்போஸ்தலர் 20:28) என்று எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல, சபை ஊழியரும் கண்காணியானவர்களும் பொறுப்புடன் செயல்பட அழைக்கப்படுகிறார்கள். ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும்

விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்? எஜமான் வரும்போது அப்படிச் செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான் (மத்தேயு 24:45,46) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

இதற்கு மாறாக, தங்களையே மேய்த்துக்கொள்ளும் மேய்ப்பரைக்குறித்துக் கர்த்தர் மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள் (மத்தேயு 23:15) என்கிறார். எவ்வளவு உண்மை!

## தீமையினின்று காக்கும்படி வேண்டுகிறார்!

நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தான் அல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவான் 17:14,15) என்று கர்த்தர் விண்ணப்பிக்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு கற்பித்த ஜெபத்திலும் எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே ஆமென் (மத்தேயு 6:13) என்று ஜெபம்பண்ண சொல்லிக்கொடுத்திருக்கிறார்.

ஒருபுறம் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை பிதாவாகிய தேவன் தீமையினின்று காக்கும்படி வேண்டுகிறார். மறுபுறம் சீஷர்களையும் விசுவாசிகளையும் பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள் என வார்த்தை எச்சரிக்கிறது. தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை

விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான் (1 பேதுரு 5:8) என்று எச்சரிக்கப்படுகிறோம்.

கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து தம்முடைய பரமராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார். அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமைஉண்டாவதாக ஆமென் (2 தீமோத்தேயு 4:18) என்று பவுல் தன்னுடைய வாழ்வின் இறுதியில் எழுதிவைத்திருக்கிறார். அல்லேலூயா!

**உம்முடைய சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கும்!**

மேலும், அவர்கள் தேவனுடைய ராஜ்யப்பணிக்கென பிரித்தெடுக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட: உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமேசத்தியம். நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன் (யோவான் 17:17) என வேண்டி அறிக்கையிடுகிறார்.

தேவனுடைய நாமத்தினால் உண்டாகும் இரட்சிப்பையும் விடுதலையையும் வெளிப்படுத்தி தேவனுடைய வார்த்தையைக் கொடுத்து அது தேவன் விரும்புகிறதை நம் வாழ்வில் செய்து நம்மைச் சாட்சியாக நிறுத்துகிறதை விளங்கச் செய்கிறார். இதைத் தொடர்ந்து அவர்கள் ஒன்றாயிருக்கும்படியாகவும், தீமையினின்று பாதுகாக்கப்படவும், சத்திய வசனத்தினாலே புடமிட்டுப் பரிசுத்தமாக்கப்படவும் தேவனிடத்தில் அர்ப்பணித்து உலகத்தில் அனுப்புகிறேன் என்கிறார்.

இது சீஷர்களை, ஊழியர்களை உருவாக்கும் செயல்முறையைப்போன்று நமக்காக எழுதிவைக்கப் பட்டிருக்கிறது. நாம் இவ்விதம் உருவாக்கப்பட நம்மை ஒப்புக்கொடுத்து, பின்னர் மற்ற விசுவாசிகளையும் சீஷர்களாக்க அழைக்கப்படுகிறோம். கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து (லூக்கா 23:31,32) என்கிறார்.

## அவர்கள் நம்மில் ஒன்றாயிருக்க வேண்டுகிறேன்!

நிறைவாக, 20 முதல் 26 வசனங்களில், அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும், சபையார் ஒருமனப்பாட்டில் தேறினவர்களாய் இருக்கும்படிக்கும் கர்த்தர் வேண்டுகிறார். நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவான் 17:20,21) என்றார்.

பின்வரும் சந்ததியினரின் ஐக்கியத்திற்காகவும், அவர்கள் பிதாவாகிய தேவனுக்குள்ளும், கிறிஸ்து இயேசுவுக்குள்ளும் ஒன்றாயிருக்கவும் வேண்டுகிறார். இங்கு கர்த்தர், ஸ்தாபனங்களின் கட்டமைப்பில், ஒருங்கிணைந்து செயல் படுவதைக் குறிப்பிடாமல், விசுவாசிகளும் சபையும் ஸ்தாபனங்களும் ஆவியிலே ஒன்றாயிருக்க ஒரே சிந்தையோடு செயல்பட வேண்டுகிறார்.

ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும் படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவான் 17:23) என்றார். இதையே இயேசு: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார், நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம் (யோவான் 14:23) என முன்னர் சொல்லியிருக்கிறார்.

இந்த ஒருமனம் ஒற்றுமை, சபையின் வாழ்வு மற்றும் ஊழியங்களில், அன்பின் செயல்களாகத் தோன்றி வெளிப்படும். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும்,

அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப்போஸ்தலர் 2:42) என்று சாட்சியாக எழுதப்பட்டிருக்கிறது. சபை ஒருமனம் ஒற்றுமையின் முழுமை, சபை மறுரூபப்பட்டு எடுத்துக்கொள்ளப் பட்டப் பின்னர். நித்திய ராஜ்யத்தில் சாட்சியாக வெளிப்பட்டு விளங்கும். அல்லேலுயா!

## நான் உம்மைமகிமைப்படுத்துவேன்!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன் என்ற வாக்கின்படி, நித்தியராஜ்யத்தின் நிச்சயம் உடையவர்களாய், பிதாவின் நாமம் மகிமைப்படும்படியாக, பிதா நமக்கு நியமித்த கிரியைகளை அறிந்து அவற்றைச் செய்து முடிக்க நம்மைஅர்ப்பணிப்போம்.

கர்த்தருக்குள் நமக்கருளப்பட்டிருக்கும் பொறுப்புகளை அறிந்துகொள்ள, நம்முடைய மனம் புதிதாகிறதினாலே தேவனுடைய சாயலாக மாற ஒப்புக்கொடுப்போம். உலகத்தைச் சார்ந்து செயல்படாமல், அந்தகாரத்தின் கிரியைகளைத் தவிர்த்து, அசுத்தங்களை நடப்பிக்கும் வீணான எண்ணங்களை வெறுத்துவிடுவோம். தேவனுடைய ஆளுகைக்கு உட்பட்டவர்களாய் நம் வாழ்வில் தேவனை மகிமைப்படுத்த கர்த்தர் செய்ய விரும்புகிறதை அவரிடத்தில் இருந்து கேட்டுப் பெற்றுக்கொள்ளுவோம்.

இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி பிதாவாகிய தேவனிடத்தில் உள்ள உறவில் வளர்ந்தோங்க, ஜெபத்திலும் உபவாசத்திலும் தரித்திருக்கவும், பரிசுத்தத்திலும் உண்மையிலும் அன்பிலும் பூரணப்படவும் ஒப்புக்கொடுப்போம்.

தேவன் முன்குறித்த மனுஷரிடத்தில் தேவனுடைய நாமத்தையும் அதன் மேன்மையையும் வெளிப்படுத்துவோம்; தேவன் கொடுக்கும் வார்த்தைகளையும் அது தேவன் விரும்புகிறதை நம் வாழ்வில் செய்து நம்மைச் சாட்சியாக நிறுத்துகிறதையும் விளங்கச் செய்வோம்.

நம் மூலமாக தேவனுடைய நாமத்தை அறிந்து தேவனுடைய வார்த்தையில் போதிக்கப்பட்டவர்கள், கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கும்படிக்கும் தேவனுடைய நாமத்தினாலே தீமையினின்று காத்துக்கொள்ளப்படவும் அவர்களுக்காக ஜெபிக்க அர்ப்பணிப்போம்.

பின்வரும் சந்ததியினரின் ஐக்கியத்திற்காகவும் அவர்கள் பிதாவாகிய தேவனுக்குள்ளும், கிறிஸ்து இயேசுவுக்குள்ளும் ஐக்கியப்பட்டு ஒன்றாயிருக்கவும்; இந்த ஒருமனம் ஒற்றுமைசபையின் வாழ்வு மற்றும் ஊழியங்களில் அன்பின் செயல்களாகத் தோன்றி வெளிப்படவும் ஜெபித்துக் காத்திருப்போம்.

கர்த்தர் தாமேஇந்த வசனங்களை நமக்கு ஆசீர்வதித்து தருவாராக. நாம் எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய நாமமகிமைக்கென்று செய்வோம். ஆமென். அல்லேலூயா!

# 18. கர்த்தர் உன் வீட்டைக் கட்டுவார்!

கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா;
கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா
(சங்கீதம் 127 : 1,2).

## ஆரோகண சங்கீதங்கள்

சங்கீதங்களின் புத்தகத்தில் 120 முதல் 134 வரையிலான 15 சங்கீதங்கள் ஆரோகண சங்கீதங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளன. ஆரோகணம் என்பதற்கு மூலமொழியில் ஏறுதல் என்று அர்த்தமாம். எருசலேம் நகரம் மலைப்பாங்கான உயரமான இடத்தில் இருப்பதினால், எருசலேம் தேவாலயத்திற்கு சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து வருகிறவர்கள், தாழ்வான இடங்களிலிருந்து ஏறிவருவார்கள். பண்டிகைக்காக எருசலேமுக்கு வரும் தேவஜனம், குழுக்களாக ஏறிவரும்போது, தங்கள் சந்தோஷத்தை வெளிப்படுத்தி, பிரயாணக் களைப்பை உணராதிருக்க பாடும் பாடல்கள், ஆரோகண சங்கீதங்களாகும்.

இந்தச் சங்கீதங்கள், தேவனுடைய குணாதிசயங்களையும் தன்மைகளையும், மகிமைமாட்சிமையையும், எருசலேமையும் நினைவுகூர்ந்து பாடும் பாடல்களாகும். இசையில், சுரவரிசையில் ஏறுவதையும் ஆரோகணம் எனும் சொல் குறிக்கிறது.

இவற்றில் 127 மற்றும் 128ஆம் சங்கீதங்கள், குடும்ப சங்கீதங்கள் என்று அழைக்கப்படுகின்றன. சங்கீதம் 127, கர்த்தர் குடும்பத்தை, வீட்டைக் கட்டுகிறதையும், சங்கீதம் 128, கர்த்தர் குடும்பத்தை ஆசீர்வதிப்பதையும் விவரிக்கிறது.

ராஜாவாகிய சாலொமோன் எழுதின ஆயிரத்து ஐந்து (1 இராஜாக்கள் 4:32) பாடல்களில் சங்கீதம் 72,

சாலொமோனைப்பற்றிய சங்கீதம் என வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 127ஆம் சங்கீதத்தின் தலைப்பு, சாலொமோன் பாடின ஆரோகண சங்கீதம் என்றுள்ளது.

## இயேசு அல்லாமல் ஒன்றும் செய்யக்கூடாது!

சாலொமோன் ராஜா சங்கீதம் 127இல், கர்த்தருடைய பிரசன்னமும் அபிஷேகமும் இல்லாது நம்முடைய திறமைகளும் முயற்சியும் பிரயாசமும் பிரயோஜனமற்றதாக இருக்கும் என்கிற உண்மையை வெளிப்படுத்துகிறார். காரியசித்தியோ கர்த்தரால் வரும்; நாம் என்ன முயற்சி எடுத்தாலும் வழிநடத்துதலுக்காக, கையிட்டுச் செய்யும் காரியம் நிறைவுபெற்று ஆசீர்வதிக்கப்பட, கர்த்தரைச் சார்ந்து செயல்படுவது மிகவும் அவசியம் என அறிக்கையிடுகிறார்.

கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா; கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா (சங்கீதம் 127:1,2) என்று எழுதியிருக்கிறார். வீடு கட்டுதல், நகரத்துக் காவல் என்பவை, குடும்பத்தையும் அதன் சமாதானத்தையும், கர்த்தர் அருளும் பிள்ளைகள் கர்த்தரால் பாதுகாக்கப்பட்டு போதிக்கப்படுவதையும், அவர்களால் வரும் ஆசீர்வாதங்களையும் குறிக்கிறது.

இதையே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது (யோவான் 15:5) என்று சொல்லியிருக்கிறார்.

தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் உண்டாக்கு கிறவராயிருக்கிறார். எனவே கர்த்தருக்குள், கர்த்தரால் உணர்த்தப்பட்ட பணிகளைச் செய்யும்போதும், பொறுப்புகளை நிறைவேற்றும்போதும், எல்லா நிலையிலும் கர்த்தரைச் சார்ந்தே செயல்பட அழைக்கப்படுகிறோம்.

வீட்டைக் கட்டுவதானாலும், குடும்பத்தைக் கட்டி பராமரிப்பதானாலும், ஊழியங்கள் சபையை உருவாக்கி

நடத்துவதானாலும், கர்த்தரின் நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னது என்று அறிந்து செயல்படவேண்டியது மிகவும் அவசியமாகும். இப்படியாக நாம் கர்த்தரைச் சார்ந்து செயல்படும்போது, நாம் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் நமக்கு உண்டாயிருக்கும்.

## கர்த்தர் குடும்பத்தைக் கட்டுகிறார்!

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார். எனவே, கிறிஸ்தவ வாழ்வு முறையில், தனிமனிதனின் இரட்சிப்பு என்பது பிரதானமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. சிருஷ்டிக்கப்பட்ட தனிமனிதன் குடும்பமாக இணைக்கப்படுகிறான். இரட்சிக்கப்பட்ட குடும்பங்களின் ஐக்கியம் திருச்சபையாக உருபெருகிறது. எனவே தனிமனிதனின் இரட்சிப்பை முதலில் தொடருவது குடும்பத்தின் மீட்பு என்றும், அதனை அடுத்து உண்டாவது சபையின் எழுப்புதல் எனவும் அறியலாம்.

ஆதியிலே மனுஷனைச் சிருஷ்டித்த நம் தேவன், அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார். இதனிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான் (மத்தேயு 19:5) ஐக்கியப்பட்டிருப்பான் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

தேவனுடைய சபையின் கண்காணிப்பை விரும்புகிறவன், தன் சொந்தக் குடும்பத்தை, நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான் (1 தீமோத்தேயு 3:4,5) என்று பவுல் எழுதியிருக்கிறார்.

அநேக பிசாசுகள் பிடித்திருந்த லேகியோன் என்பவன் சுகமடைந்த உடன், இயேசுவோடே கூட இருக்கும்படி தனக்கு உத்தரவுகொடுக்க அவரை வேண்டிக்கொண்டான். நம்முடைய

இரட்சகர் இயேசு அவனுக்கு உத்தரவு கொடாமல்: நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார் (மாற்கு 5:19).

எனவே, கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் என்கிற வசனத்தில், குடியிருக்கும் வீட்டைக் காட்டிலும், இது குடும்பத்தையும், அதன் கூட்டமைப்பான சபையையும் கட்டி எழுப்புவதைக் குறிப்பதைப்போல் தோன்றுகிறது. இந்நாட்களில், இந்தக் கண்ணோட்டம் இன்னும் வலுபெற்றிருப்பதை அறிந்திருக்கிறோம். தேவையானப் பொருளாதார வசதி இருக்கையில், அனைத்தும் ஆயத்த நிலையில் கட்டப்பட்டுள்ள வீடுகளை வாங்குவது எளிதாக உள்ளது.

## கிறிஸ்துவுக்குள் இணைக்கப்படுகிற குடும்பம்!

இதற்கு முற்றிலும் மாறாக, குடும்பத்தைக் கட்டி அதைச் சமாதானத்தோடும், பரிசுத்த ஆவியினால் வரும் சந்தோஷத்தோடும், அனைவரது மனநிறைவோடும் ஐக்கியமாக பேணிக் காப்பதே பெரிய சவால் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

இவ்வாறாக கிறிஸ்துவுக்குள் இணைக்கப்படுகிற குடும்பம், நம்மில் அநேகருக்கு சிறப்பாக அமைந்துள்ளது. கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள். பிள்ளைகளைப் பெற்று கர்த்தருக்குள் வளர்க்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவுக்குள் நற்சாட்சியின் குடும்பமாக கட்டப்படுகிறார்கள். மிகவும் நல்லது.

ஆனால் சிலர், தேவனுடைய சித்தத்தினாலே அமையப்பட்ட வாழ்விலும், உறவில் குற்றம், வாழ்க்கைத் துணையில் குறை என்கிற தங்கள் நினைவினாலோ அல்லது தங்கள் பாவமான பழக்க வழக்கங்களினாலோ, கர்த்தரை நம்பி ஜீவிக்காமல் சுயபெலத்தையும் திறமைகளையும் சுயஞானத்தையும் நம்பி செயல்படுகிறார்கள். இதனால், தங்களையும், குடும்பத்தினரையும் அழித்துக்கொண்டிருக் கிறார்கள்.

குடும்பத்தில் நேசம் பாசம் சமாதானம் என்பவை மாறி, சந்தேகம் சண்டை சச்சரவு வெறுப்பு என்று ஆகிவிடுகிறது.

இதனிமித்தம் அறியாமையினால் தங்களையே மாய்த்துக் கொள்ளுகிறவர்கள் உண்டு. அநேகர் இப்படியாக வேதனையே தங்கள் வாழ்வு என தவறாக எண்ணி, அமைதலாக பொறுமையுடன் அவற்றைச் சகித்துக்கொள்ளவும் பழகிக்கொள்ளுகிறார்கள்.

குறைவான இத்தகைய சமாதானமற்ற சந்தேகத்துடனான வாழ்வில், கிறிஸ்துவுக்குள் எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள, வேதாகமம் காட்டும் வழிமுறைகள் என்ன?

### தனிமையானவர்களுக்கு வீடுவாசல்!

இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது என்று திருமண அழைப்பிதழ்களில் சாட்சியாக அச்சிடுவதைப்போன்று, விசுவாசமார்க்கத்தார்கள் கிறிஸ்துவுக்குள் நற்சாட்சியின் குடும்பமாக இணைக்கப்படுகிறார்கள். தேவன் தனிமையான வர்களுக்கு வீடுவாசல் ஏற்படுத்தி, கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார் (சங்கீதம் 68:6) என்று எழுதப்பட்டிருக்கிறது. வீடுவாசல் என்பது இங்கு குடும்பத்தைக் குறிக்கிறது. தேவனே தனிமையாய் உள்ள மனிதரை குடும்பமாய் ஏற்படுத்தி, அன்பையும், ஆதரவையும், பாதுகாவலையும் தருகிறார்.

இதனிமித்தமே, குடும்பத்தில் கிடைக்கக்கூடிய அன்பையும், ஆதரவையும், பாதுகாவலையும் இழந்து நிற்கும் விதவைகளுக்கும், திக்கற்ற பிள்ளைகளுக்கும்,தேவனே தகப்பனாகவும், குடும்பத் தலைவராகவும் இருந்து நியாயஞ்செய்கிறவராய் இருக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது. உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தரும், மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனுமாயிருக்கிறார்; அவர் பட்சபாதம் பண்ணுகிறவரும் அல்ல. பரிதானம் வாங்குகிறவரும் அல்ல. அவர் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் நியாயஞ்செய்கிறவரும், அந்நியன்மேல் அன்புவைத்து அவனுக்கு அன்னவஸ்திரம் கொடுக்கிறவருமாய் இருக்கிறார் (உபாகமம் 10:17,18) என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஒருவேளை, நம்மில் யாராவது, குடும்பத்தில் காணப்படும் பிரச்சனைகள் நிமித்தம் பிரிந்து வாழும் எண்ணம் கொண்டிருந்தால், அந்த எண்ணத்தை இன்றே மாற்றிக்கொள்ள அழைக்கப்படுகிறோம். தேவனே உங்களைக் குடும்பமாக ஏற்படுத்தினார். அவரை அண்டிக்கொள்ளும்போது உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.

கர்த்தர் திருமண உடன்படிக்கையின் சாட்சியாக இருந்து, தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படியாக, குடும்ப உறவைப் பாதுகாக்கிறவராக இருக்கிறார் (மல்கியா 2:14,15). கணவனும் மனைவியும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தவர்களாய், திருமண வாக்குறுதிகளுக்கு உட்பட்டவர்களாய் நடக்கும்போது, கர்த்தர்தாமே வாக்குமாறாதவராய் அந்தக் குடும்பத்தை பாதுகாக்கிறார். சத்துருவின் எல்லாவித பிரிவினை சக்திகளிலிருந்தும், அவருடைய வல்லமையுள்ள புயம் அவர்களை விடுவிக்கும்.

இதற்கு மாறாக, தேவசித்தத்தை அறியாது, தங்கள் சுயவிருப்பத்தின்படி செயல்படும் அநேக விசுவாசிகள், தேவனுடைய அன்பையும் ஆதரவையும் பாதுகாவலையும் இழந்து தவிக்கிறதை அறிவோம். இன்னும் மேலாக, விசுவாசத்திற்கு புறம்பானவர்களை நாடிப் பின்பற்றுகிறவர்களுக்கு வேதனைகள் பெருகும். ஆகவே மிகவும் கவனமாய் தேவசித்தத்திற்கு உட்பட்டு, தேவனே தனிமையானவர்களுக்கு குடும்பத்தை அமைத்துத்தர ஒப்புக்கொடுத்து செயல்படுவது மிகவும் அவசியமாய் இருக்கிறது.

**குடும்பம் ஞானத்தினாலே கட்டப்படும்!**

வீடு ஞானத்தினாலே கட்டப்பட்டு, விவேகத்தினாலே நிலைநிறுத்தப்படும். அறிவினாலே அறைகளில் அருமையும் இனிமையுமான சகலவிதப் பொருள்களும் நிறைந்திருக்கும் (நீதிமொழிகள் 24:3,4) என்று எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். ஞானம் உன் இருதயத்தில் பிரவேசித்து, அறிவு உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்போது, நல்யோசனை உன்னைக் காப்பாற்றும், புத்தி உன்னைப் பாதுகாக்கும் (நீதிமொழிகள்

2:10,11) என்று எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தருக்கு பயப்படுதலினால் உண்டாகும் ஞானத்தை, புத்தியை உடைய ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள் (நீதிமொழிகள் 14:1).

குடும்பம் கிறிஸ்துவுக்குள் கட்டப்பட மனைவியானவளின் பங்கு முதன்மையாக உள்ளது. குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது (நீதிமொழிகள் 31:10) என்று எழுதப்பட்டிருக்கிறது. கோத்திரத் தலைவனாகிய ஆபிரகாமின் குமாரன் ஈசாக்கின் மனைவி ரெபெக்காளின் செயல், இதை விளக்குவதைப்போன்று அமைந்துள்ளது.

ரெபெக்காள் கர்ப்பந்தரித்தாள். அவள் கர்ப்பத்திலே பிள்ளைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருந்தன; அப்பொழுது அவள்: இப்படியானால் எனக்கு எப்படியோ என்று சொல்லி, கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி போனாள். அதற்கு கர்த்தர்: இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது; இரண்டுவித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும், அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப்பார்க்கிலும் பலத்திருப்பார்கள், மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்றார் (ஆதியாகமம் 25:22,23).

மூத்தவனாகிய ஏசாவைப்பற்றி, ஒருவனும் ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போலச் சீர்கெட்டவனாக இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள் (எபிரெயர் 12:16) என்று எழுதப்பட்டிருக்கிறது. மேலும், ஏசா விவாகம்பண்ணின அந்நிய ஜாதியாரான ஸ்திரீகள் ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் மனநோவாயிருந்தார்கள் (ஆதியாகமம் 26:35).

ரெபெக்காள் மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்று கர்த்தரிடத்தில் விசாரித்து அறிந்திருந்தாள். ஏசா தன்னுடைய சேஷ்டபுத்திரபாகத்தை அலட்சியம்பண்ணி அதை விற்றுப்போட்டதையும் அறிந்திருப்பாள். மேலும், ஏசாவின் மனைவிகளான அந்நிய ஜாதியாரான ஸ்திரீகள் தாங்களுக்கு மனநோவாயிருந்ததின் நிமித்தமும், ரெபெக்காள் துணிகரமான ஒரு செயலைச் செய்ததாக வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது.

ஈசாக்கு தான் வயதானபோது, மூத்தக்குமாரனாகிய ஏசாவுக்கு கொடுக்கவிருந்த ஆசீர்வாதத்தைத் தந்திரமாக ஏமாற்றி, இளையகுமாரனாகிய யாக்கோபு பெற்றுக்கொள்ளச் செய்தாள் (ஆதியாகமம் 27). நாம் புரிந்துகொள்ள முடியாத வகையில், தேவனுடைய சித்தம் ரெபெக்காளின் இந்தச் செய்கையால் நிறைவேறியது. யாக்கோபு தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியின் தகப்பன் ஆனான். தேவனுடைய தெரிந்து கொள்ளுதலின்படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியைகளினாலே நிலைநிற்காமல் அழைக்கிறவராலே நிலைநிற்கும்படிக்கு, மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ் செய்வான் என்று அவளுடனே சொல்லப்பட்டது (ரோமர் 9:12).

ரெபெக்காள் ஞானமாய் செயல்பட்டு, தேவசித்தம் குடும்பத்தில் நிறைவேறக் காரணமாயிருந்தாள். குடும்பமும் விசுவாசத் தலைமுறையும் சிதைக்கப்படாமல் ஒருங்கிணைந்துக் கட்டப்பட அவளுடைய பங்கு மிகவும் முக்கியமானதாக இருந்தது.

### குடும்பம் விவேகத்தினாலே நிலைநிறுத்தப்படும்!

தேவன் சிருஷ்டிப்பிலே, குடும்பத்தில் கணவன் மனைவியின் உறவை, தமக்கும் தேவஜனத்துக்கும் உள்ள உறவை பிரதிபலிக்கும்படியாக வடிவமைத்துள்ளார். மனைவியானவள் கணவனுடைய பொறுப்பையும் எதிர்பார்ப்பையும் அறிந்து, சாந்தமும் அமைதலோடும் கணவனுக்கு கீழ்ப்படிந்திருக்க ஆலோசனைப்பெற்றிருக்கிறாள்.

அப்படியே கணவன், மனைவிக்கு கொடுக்க வேண்டிய கனத்தைக் கொடுத்து, கணவனும் மனைவியும் உடன் சுதந்தரவாளிகளாக நித்தியராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ளும் படியாக நியமித்திருக்கிறார். கணவன் தன்னுடைய ஆவிக்குரிய ஜெபவாழ்வுக்கு தடைவராதபடிக்கு, மனைவியானவளின் சரீர மன நிலைகளை அறிந்து, மென்மையான அன்பை வெளிப்படுத்தி, மனைவியுடன் விவேகத்தோடு வாழ ஆலோசனை அருளப்பட்டிருக்கிறது.

அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத்

தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனே கூட அவர்களும் நித்தியஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்கள் ஆனபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள் (1 பேதுரு 3:7) என்று அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதியிருக்கிறார்.

இருதயத்தில் ஞானமுள்ளவன் விவேகியென்னப்படுவான். விவேகத்துடன் காரியத்தை நடப்பிக்கிறவன் நன்மைபெறுவான்; கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான் (நீதிமொழிகள் 16:20). இதனால், அன்புடன் கூடிய சாதுரியத்தால், கணவன் தன் மனைவியோடு இசைந்து வாழ முடியும் என அறிகிறோம். தேவமனிதர் ஒருவர் இப்படியாக தன் மனைவியை ஆதாயப்படுத்திக் கொண்டதைச் சாட்சியாகச் சொன்னார்.

ஒருமுறை தன்னுடைய மனைவியோடு ஏற்பட்ட சிறு மனஸ்தாபத்தினால்,அவர் மனைவி தன்னுடைய தாய் வீட்டிற்குச் செல்ல புறப்பட்டுவிட்டார்களாம். அவரே மனைவியை பஸ் ஏற்றிவிடச் சென்றிருந்தார். பஸ் புறப்பட இருந்த வேளையில், அந்த ஊழியர் தன்னுடைய உண்மைநிலையை தயக்கமின்றி மனைவியிடம் தெரிவித்தாராம். அம்மா, நீ சென்று விட்டால் நான் சாப்பிடுவதற்கு என்ன செய்வேன் என்று சொன்ன மாத்திரத்தில், அவர் மனைவி பெட்டியை எடுத்துக்கொண்டு பஸ்ஸில் இருந்து இறங்கி, அவருடன் வீடு வந்தடைந்தார்களாம். இருதயத்தில் ஞானம், அன்புடன் கூடிய சாதுரியம், வாழ்வை நிலைநிறுத்தி வளமாக்குகிறது. ஞானத்தினால் கட்டப்படும் வீடு விவேகத்தினால் நிலைநிறுத்தப்படுகிறது.

## அறிவினாலே அறைகள் நிறைந்திருக்கும்!

அறிவினாலே அறைகளில் அருமையும் இனிமையுமான சகலவிதப் பொருள்களும் நிறைந்திருக்கும் (நீதிமொழிகள் 24:4). கிறிஸ்துவுக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது (கொலோசெயர் 2:3). குடும்பத்தில் நிறைந்திருக்கும் அருமையும் இனிமையுமான பொருள்கள் என்ன?

ஐசுவரியமும், கனமும், நிலையான பொருளும், நீதியும் என்னிடத்தில் உண்டு. பொன்னையும் தங்கத்தையும் பார்க்கிலும் என் பலன் நல்லது; சுத்த வெள்ளியைப் பார்க்கிலும் என் வருமானம் நல்லது. என்னைச் சிநேகிக்கிறவர்கள் மெய்ப்பொருளைச் சுதந்தரிக்கும்படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும்படிக்கும், அவர்களை நீதியின் வழியிலும், நியாயபாதைகளுக்குள்ளும் நடத்துகிறேன் (நீதிமொழிகள் 8: 18-21) என்று எழுதப்பட்டிருக்கிறது.

வீட்டின் அறைகள், அருமையும் இனிமையுமான சகலவிதப் பொருள்களினால் நிறைந்திருப்பதைப்போன்று; குடும்பம், கணவன் மனைவி பிள்ளைகள், ஐசுவரியம், கனம் போன்ற நிலையான பொருள்களினால் நிறைந்திருப்பார்கள். அவர்கள் நீதியின் வழியிலும், நியாயபாதைகளுக்குள்ளும் நடத்தப்படுவார்கள்.

### பிரியமானவனுக்கு நித்திரை!

கர்த்தரே தமக்கு பிரியமானவனுக்கு இளைப்பாறுதலையும் சமாதானத்தையும் சரீர சுகத்தையும் பாதுகாவலையும் அருளுகிறார். கர்த்தரை அல்லாமல் நம்முடைய திறமைகளும் பிரயாசங்களும், நாம் வேண்டி விரும்பி முயற்சிசெய்கிற எல்லாவற்றிலும் நிறைவான வாழ்வைத் தராது. நீங்கள் அதிகாலையில் எழுந்து, நேரப்பட வேலையிலே தரித்து, வருத்தத்தின் அப்பத்தைச் சாப்பிடுகிறதும் விருதா; அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார் (சங்கீதம் 127:3) என்று எழுதப்பட்டிருக்கிறது.

சரீரமுயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்கு பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிற்கும் பிரயோஜன முள்ளது (1 தீமோத்தேயு 4:8). இங்கு கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு பிரியமானதைச் செய்வது தேவபக்தி எனப்படுகிறது.

குடும்பம் கிறிஸ்துவுக்குள் கட்டப்பட்டு, விவேகத்தினால் நிலைநிறுத்தப்பட்டு, கைகளின் பிரயாசம் ஆசீர்வதிக்கப்பட,

கர்த்தரைச் சார்ந்து அவருக்கு பிரியமானதைச் செய்ய அழைக்கப்படுகிறோம். அப்பொழுது அவர் சரீரத்திற்கும், ஆத்துமாவிற்கும் இளைப்பாறுதலைக் கட்டளையிடுவார். வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் (மத்தேயு 11:28,29) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

## பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்!

இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன் (சங்கீதம் 127:4) என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆதியிலே மனுஷரைச் சிருஷ்டித்த தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார். இதனிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்; இவ்விதமாய் அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார் (மாற்கு 10:6-9).

இவ்விதமாக முதல் குடும்பத்தை தேவன் ஏற்படுத்தி குடும்ப வாழ்வை கனப்படுத்தினார். தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார் (ஆதியாகமம் 1:28).

இந்நாட்களில் கிறிஸ்துவுக்குள் நற்சாட்சியின் குடும்பங்களாக இணைக்கப்படுகிற தேவனுடைய பிள்ளைகளும், பிள்ளைகளைப்பெற்று பலுகிப்பெருகவும், ஆண்டுகொள்ளவும் கட்டளையாகப் பெற்று ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். இதற்கு இணங்கி விசுவாசிகள், பிள்ளைகளை கர்த்தரால் அருளப்படும்

சுதந்தரமாக, அவரால் கிடைக்கும் பலனாகப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். பிள்ளைகள் கர்த்தருடையவர்கள் என்றும்; அவர்களைக் கர்த்தருக்குள் வளர்த்து தரும் பொறுப்பே பெற்றோருக்கு கொடுக்கப்படுகிறது என்பதாக அறிய முடிகிறது.

இதனிமித்தமே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து: இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 18:10) என்றார்.

திருமண உடன்படிக்கைக்குள்ளாக செல்லும் தேவனுடைய பிள்ளைகள், அடுத்த தலைமுறையினருக்காக, முடிவுபரியந்தம் ஒருவரையொருவர் நேசிக்கவும், காப்பாற்றவும், பராமரிக்கவும் அர்ப்பணிக்கிறார்கள். பிள்ளைகளை நேசித்து, அவர்களைக் கிறிஸ்துவுக்குள் வளர்ப்பது, கர்த்தரைக் கனம்பண்ணி, அவருடைய ராஜ்யபணியில் நம்முடைய பங்களிப்பை வெளிப்படுத்துவதாகும்.

உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப் பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும் (ஏசாயா 54:13) என்றும்; என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை (3 யோவான் 1:4) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

## வாலிபர்கள் பலவான் கையிலுள்ள அம்புகள்!

வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அவைகளால் தன் அம்பறாத்துணியை நிரப்பின புருஷன் பாக்கியவான்; அவர்கள் நாணமடையாமல் ஒலிமுகவாசலில் சத்துருக்களோடே பேசுவார்கள் (சங்கீதம் 127:5,6) என்று எழுதப்பட்டிருக்கிறது.

கர்த்தருக்குள் வளர்க்கப்படுகிற பிள்ளைகள், வாலிபர்களாக பெற்றோருக்கும் கர்த்தருக்கும் மேன்மையாகவும், அவர்களுடைய இருதயங்களைச் சந்தோஷப்படுத்துகிறவர்

களாகவும் இருப்பார்கள். தாங்கள் பிள்ளைகளினிமித்தம் எந்த நிலையிலும் வெட்கமும் இலச்சையும் அடையாமல், பிள்ளைகள் ஞானவான்களாய் கர்த்தருக்கு பயந்து பாவத்துக்கு விலகி ஜீவிப்பதினால், தைரியமாய் தாங்கள் எதிராளிகளுடனும் பொதுவான இடங்களிலும் பேசுவார்கள்.

என் மகனே, என்னை நிந்திக்கிறவனுக்கு நான் உத்தரவுகொடுக்கத்தக்கதாக நீ ஞானவானாகி என் இருதயத்தைச் சந்தோஷப்படுத்து ( நீதிமொழிகள் 27:11) என்று எழுதப் பட்டிருக்கிறது. இங்கு நிந்திக்கிறவன் என்பது சத்துருவானவனும், நம்மேல் பிதாவினிடத்தில் குற்றம் சுமத்துகிறவனுமாகிய பிசாசானவனைக் குறிக்கிறது (வெளி. 12:10). தீமையை வெறுப்பதே கர்த்தருக்கு பயப்படுகிற பயம் என்றும்; கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இதன்படி, கர்த்தருக்கு பயந்து தீமையை விட்டு விலகும்போது, தேவனுடைய இருதயத்தைச் சந்தோஷப்படுத்துகிறோம்.

என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா; உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக (நீதிமொழிகள் 23:26) என்றும்; என் மகனே, உன் இருதயம் ஞானமுள்ளதாயிருந்தால், என்னிலே என் இருதயம் மகிழும் (நீதிமொழிகள் 23:15) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

**கர்த்தர் உன் வீட்டைக் கட்டுவார்!**

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, கர்த்தர்தாமே, உங்கள் வீட்டை, குடும்பத்தை, சபையை, ஊழியத்தைக் கட்டுவாராக. கிறிஸ்துவுக்குள் கட்டப்படும் உங்கள் வீடும் குடும்பமும் சபையும் ஊழியங்களும், விவேகத்தால், அன்புடன் கூடிய சாதுரியத்தால், வரும் நாட்களில் நிலைநிறுத்தப்படுவதாக.

இவ்விதமாக கட்டப்படும் குடும்பத்தில் சபையில் ஊழியத்தில், பங்காளர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் பங்களிப்பை, தீமையை விட்டு விலகி, கர்த்தருக்கு பயப்படும் பயத்தோடு, ஞானத்தோடு வெளிப்படுத்துவார்களாக. குடும்பத்திலும், ஊழியங்களிலும், சமுதாயத்திலும், சாந்தமும் மனத்தாழ்மையும் கீழ்ப்படிதலும், சாட்சியாகத் தோன்றி வெளிப்படுவதாக.

கிறிஸ்துவுக்குள் கட்டப்பட்டு, விவேகத்தினால் நிலைநிறுத்தப்பட்ட நிலையில், கைகளின் பிரயாசம் ஆசீர்வதிக்கப்பட, கர்த்தரைச் சார்ந்து அவருக்கு பிரியமானதைச் செய்ய கர்த்தர் கிருபை அருள்வாராக. அதனால் வரும் பலனான இளைப்பாறுதலைக் கர்த்தர் நிறைவாக, இன்றும் என்றும் சதாகாலங்களிலும் கட்டளையிடுவாராக.

குடும்பத்தில் கர்த்தரால் அருளப்படும் கர்ப்பத்தின் கனியை, பிள்ளைகளை ஈவாகப்பெற்று கிறிஸ்துவுக்குள் அவர்களை வளர்த்திட கர்த்தர் கிருபை அருள்வாராக. சபை, ஊழியங்களில் ஒத்தாசையான விசுவாசிகளை கர்த்தருடைய வழிநடத்துதலின்படி அடையாளங்கண்டு, சீஷர்களாக, உடன் ஊழியர்களாக உருவாக்குவோமாக.

கர்த்தருடைய வருகை மிகவும் சமீபமான இந்தக் கடைசிக்காலத்தில் கிறிஸ்துவுக்குள் நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற பணிகளை அடையாளங்கண்டு தாமதமின்றி துரிதமாய் செய்ய நம்மைஅர்ப்பணிப்போம்.

முதலாவதாக அது என்னில், நம்மில் துவங்கட்டும். குடும்பம், கணவன் மனைவி பிள்ளைகள் பெற்றோர் உறவினர்களை, கிறிஸ்துவுக்குள் ஆதாயப்படுத்திக்கொள்ள ஜெபம்பண்ணுவோம்; செயல்படுவோம். சபையும் சமுதாயமும் துரிதமாய் எழுப்புதலுக்குட்பட, பின்மாரி அபிஷேகத்தின் நிறைவைப்பெற்று செயல்பட, ஜெபத்தோடு நம்முடைய பங்களிப்பை வெளிப்படுத்துவோம். கர்த்தர் தாமேஅப்பேர்பட்ட கிருபைகளை நமக்கு நிறைவாய் தந்தருள்வாராக. ஆமென். அல்லேலூயா!

# கடைசிக்கால வெளியீடுகள்!

**புத்தகங்கள் (Books) :**

- **நீங்கள் எந்தச் சபை? –**

  ஏழு சபைகளுக்கான தரிசனம் (ELS - ஜனவரி 2016)

- **இதன் விரிவான ஆங்கிலப் பதிப்பு –**

  **Revelation to the Churches** (ELS - மார்ச் 2018)

- **கடைசிக்கால இரகசியங்கள்! –**

  இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தும் சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டிய விசேஷங்கள்

  (Word of Christ - மார்ச் 2020)

**சிறு புத்தகங்கள் (Booklets) :**

- **கடைசிக்கால வெளிப்பாடுகள் –**

  இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தும் விசேஷம்

  – ஓர் அறிமுகம்! (ஜீவத்தண்ணீர் – ஜனவரி 2020)

- **கடைசிக்கால ஊழியங்கள்! –**

  உபத்திரவக்காலத்தில் பிதாவாகிய தேவனின் அன்பு! (ஜீவத்தண்ணீர் – ஜூலை 2020)

- **கடைசிக்கால எச்சரிப்புகள்! –**

  நினையாத நாழிகையில் இயேசுகிறிஸ்து!

  (ஜீவத்தண்ணீர் - டிசம்பர் 2020)

**மற்றப் புத்தகங்கள் (Other Books) :**

- **ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்கள் –**

  சங்கீதங்களில் புதைந்துள்ள சாட்சியின் வசனங்கள் (Word of Christ - ஜூன் 2018)

- **நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்!**

  இம்மையில் ஆசீர்வாதம், மறுமையில் நித்தியஜீவன் பெற வேதாகமம் காட்டும் மாதிரி அடிச்சுவடுகள் (ஜனவரி - 2021)

http://www.livingwaterrevivalministry.org/e-book-tamil

**ஜீவத்தண்ணீர் எழுப்புதல் ஊழியங்கள் (94443 13658)**

## புத்தகத்தைப் பற்றி ......

இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்ட தேவனுடைய பிள்ளைகளை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியமாயிருக்கிறது. இந்த விசுவாசமார்க்கத்தார் விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.

தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவர்களாய் அவருக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்து கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்திருந்தால் ஆசீர்வாதம் நிறைவாக வரும் என்பதும்; கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல், அவர் காட்டின மாதிரி அடிச்சுவடுகளை விட்டு விலகி, செயல்படும்போது ஆசீர்வாதங்களை இழக்க நேரிடும் என்பதும் நாமறிந்த உண்மை.

இயேசுகிறிஸ்துவுக்காக வாழ அர்ப்பணித்திருக்கும் இந் நூலாசிரியரின் வாழ்வில் கடினமான சூழ்நிலைகளில் காலங்களில், கர்த்தரே இடைபட்டு இவ்வகையான சத்திய வார்த்தைகளைத் தெளிவுபடுத்தி அவரை வழிநடத்திவருகிறார். அவ்வேளைகளில் இருதயத்தைத் தேற்றி ஆறுதல் அளித்து, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் ஸ்திரப்படுத்தி ஆசீர்வதித்த, தேவனுடைய பிரத்தியேகமான வார்த்தைகளைச் சார்ந்த செய்திகளின் தொகுப்பே இந்தப் புத்தகமாகும்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இந்தப் புத்தகத்தை வாசித்து, பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு தியானித்துப் பயன்பெறுங்கள். உங்களால் கூடுமானால் வாஞ்சையாயிருப்பவர்களுக்கு இதைப் பகிர்ந்து உதவுங்கள், அறிமுகப்படுத்துங்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!